1228

உ

சாந்தலிங்கர் தாள்மலர் வாழ்க

சிவஞான போதத் திருநெறியுரை

(இரண்டாம் தொகுதி)

உரையாசிரியர்

முனைவர், மகாவித்வான், சித்தாந்தக் கலைமணி

சைவத்திரு சி. அருணை வடிவேலு முதலியார்

கயிலை மாமுனிவர்

தவத்திரு சாந்தலிங்க இராமசாமி அடிகளார்

பவழ விழா வெளியீடு

1996

சத்வித்யா சன்மார்க்க சங்கம்

பேரூராதீனம்

பேரூர், கோவை-641 010.

உ

சாந்தலிங்கர் தாள்மலர் வாழ்க

சிவஞான போதத் திருநெறியுரை

(இரண்டாம் தொகுதி)

உரையாசிரியர்

முனைவர், மகாவித்வான், சித்தாந்தக் கலைமணி

சைவத்திரு சி. அருணை வடிவேலு முதலியார்

கயிலை மாமுனிவர்

தவத்திரு சாந்தலிங்க இராமசாமி அடிகளார்

பவழ விழா வெளியீடு

1996

சத்வித்யா சன்மார்க்க சங்கம்

பேரூராதீனம்

பேரூர், கோவை-641 010.

சிவஞானபோதத் திருநெறியுரை

(இரண்டாம் தொகுதி)

முதற் பதிப்பு 1996

விலை ரூ. 50-00

வெளியீடு

சத்வித்யா சன்மார்க்க சங்கம்
பேரூராதீனம்
பேரூர் கோவை-641 010

அச்சிட்டோர் :

கதிரவன் அச்சகம்
14, எல். பீ. ரோடு,
சென்னை-600 041.

தொலைபேசி : 4919801.

73-4

அன்பளிப்பு:
தஞ்சாவூர்
நடராஜ பிள்ளை உலகநாதன் M.A.B.T

பதிப்புரை

தமிழகத்தின் தனிப்பெரும் தத்துவ நூலாகத் திகழும் சிவஞானபோதம் சைவ சித்தாந்தக் கோட்பாடுகளை விளக்கும் தமிழ் முதல் நூல். திருமுறையின் அடிப்படையில் இவ்வுரையை வழங்கியவர் முனைவர் மகாவித்துவான், சித்தாந்தக் கலைமணி சி. அருணை வடிவேலு முதலியார் ஆவார் அவர்கள் சைவ சித்தாந்தக் கருத்துக்களை எளிமையாகவும், தெளிவாகவும் எடுத்துச் சொல்வதில் பேராற்றல் பெற்றவர். சிதம்பரம் மௌன சுவாமிகள் மடம் தவத்திரு சுந்தரமூர்த்தி சுவாமிகளின் வேண்டு கோளுக்கும் சைவத்திரு க. வெள்ளைவாரணனார் அவர்களின் தூண்டுதலுக்கும் இணங்கி இவ்வுரையை எழுதினார்கள். இவ்விரண்டாம் தொகுதியை அன்பர்களின் வேண்டுகோளுக் கிணங்கக் கயிலைமாமுனி தவத்திரு சாந்தலிங்க இராமசாமி அடிகளார் அவர்களின் பவழவிழா நினைவாக வெளியிடுவதில் பெருமகிழ்ச்சி அடைகின்றோம்.

இவ்வுரை நூல் திருமுறைகளின் துணையோடு மிக விரிவாக ஆராய்ந்து எழுதப்பட்டதாகும். பிரம்மசூத்திரத்திற்குப் பேருரை எழுதியவர்கள் ஒவ்வொரு சூத்திரமும் எந்தெந்த உபநிடத வாக்கியங்களின் பொருளை விளக்குகின்றன என்பதை எடுத்துக் காட்டி விளக்கம் எழுதும் முறையை மேற்கொண்டனர். அன்றியும் அதிகரணங்களுக்குப் பெயரிடும் முறையும் அப்பேருரை களில் காணப்படுகின்றன. அதுபோலவே இவ்வுரையும் சூத்திரக் கருத்துக்கள் எந்தத் திருப்பாடலின் விளக்கமாக அமைகின்றன என்று எடுத்துக்காட்டி விளக்கம் கூறிச் செல்கின்றன. அதிகரணங் களும் மூவினை அதிகரணம், அத்துவித அதிகரணம் என்பன போலப் பெயரிடப்பட்டுள்ளன. திருநெறியுரை ஒரு பேருரை என்னும் அளவிற்கு மிக விரிவாகச் செய்யப்பட்டுள்ளமை இவ் வுரையின் தனிச் சிறப்பாகும்.

சித்தாந்த சைவக் கோட்பாட்டுக்குச் சிவஞான முனிவரின் விளக்கங்களே வரையறையான ஆதாரமாகக் கருதப்படுகின்றன. ஆதலின் இவ்வுரையும் முனிவரின் கோட்பாடுகளுக்கு மாறு படாமலே எழுதப்பட்டுள்ளது. எனினும் கால இயல்பு காரணமாக முனிவர் ஏற்றுக் கொண்ட சில கருத்துக்களை இவ்வுரை மிகவும் பக்குவமாக மறுத்துச் செல்கிறது. மேலும் தமிழ்ச் சிவஞான போதம் வடமொழியிலிருந்து மொழி பெயர்க்கப்பட்டதன்று;

தமிழில் எழுந்த தனி முதல் நூலே என்னும் கொள்கையும் வற்புறுத்தப் படுகின்றது. தமிழ்ச் சிவஞான போதத்திற்கும் வட மொழி சிவஞான போதத்துக்குமிடையே சொல்லாட்சி கருத் தமைதி ஆசியவற்றில் காணப்படும் வேற்றுமையும் ஆங்காங்கே விளக்கப்படுகின்றது.

தொல்காப்பியம், திருக்குறள், திருமுறைகள் ஆகியவற்றைக் கொண்டே சைவ சித்தாந்தக் கோட்பாடுகள் விளக்கப்படுகின்றன. தேவையான இடங்களில் ஆகமத் தொடர்களும், அடிக்குறிப்பு களாகத் தரப்பட்டுள்ளன. மெய்ப் பொருளியலில் வழங்கும் வட மொழிக் கலைச் சொற்களுக்குப் பொருத்தமான எளிய தமிழ்ச் சொற்கள் தெளிவான விளக்கத்துடன் தரப்பட்டுள்ளன, அவ்வாறே தமிழில் விளக்கப்படும் கருத்துக்கு மரபாகப் பயின்று வரும் வடமொழிச் சொற்களும் தரப்பட்டுள்ளன. இன்றி யமையாத இலக்கணக் குறிப்புக்கள் தெளிவாக விளக்கப் பட்டுள்ளன. இவ்வகையில் இவ்வுரை நூல் அரிய கோட்பாடுகளை முற்காலத்துச் செறிந்த நடையிலிருந்து சற்று நெகிழ்ந்து எளிய நடையில் தெளிவாக விளக்குகின்றது. இவ்வரிய உரையை வழங்கிய அறிஞர் முனைவர் சி. அருணைவேலு முதலியார் அவர் கட்குத் தமிழ் கூறு நல்லுலகத்தின் நன்றி உரியது.

சத்வித்யா சன்மார்க்க சங்கத்தின் முத்துவிழா நாளில் கயிலை மாமுனி தவத்திரு சாந்தலிங்க இராமசாமி அடிகளாரின் பவளவிழா வெளியீடாக வரும் இந்நூலைத் தமிழகம் ஏற்றுப் போற்றும் எனப் பெரிதும் நம்புகின்றோம்.

பேரூர்
2—3—96

சத்வித்யா சன்மார்க்க சங்கம்

உ

உரையாசிரியர் முன்னுரை

புறச்சந்தானாசிரியர் நால்வருள் முதல்வராகிய திருவெண்ணெய்நல்லூர் மெய் கண்ட தேவ நாயனார் அருளிச் செய்த, 'சிவஞான போதம்' - என்னும் சீரிய நூல், சைவ சித்தாந்தத்தின் தலைமணி நூல் என்பதும் அதற்குச் சில உரைகள் இருப்பினும் மாதவச் சிவஞான யோகிகள் செய்த சிற்றுரையும், 'திராவிட மா பாடியம்' — எனச் சிறப்பித்துச் சொல்லப்படுகின்ற பேருரையுமே உரைகளாய்த் திகழ்கின்றன என்பதும் நாடறிந்த உண்மைகள். ஆகவே சைவ சித்தாந்தத்தை உணர விரும்புவோர் யாவரும் அவ்வுரைகளையே சிறப்பாகப் பற்றி உணர்ந்துவருகின்றனர்.

சிவஞான யோகிகள், ''வடநூற் கடலும் தென்றமிழ்க் கடலும் நிலை கண்டுணர்ந்த நுண்மாண் நுழை புலத்தவர்'' - என அறிஞர் பலராலும் போற்றப் பெற்றவர். அவரைப் பற்றிப் 'பாணடித் துரைத் தேவர்' என்பார் ஒரு கருத்தைச் சிறப்பாகக் கூறினார். அது, ''மலையா தருளும் முனிவர் சிகாமணி'' என்பது (சிவஞான சுவாமிகள் பிள்ளைத் தமிழ்) நூல்களின் பொருளை ஒன்றோடொன்று முரணாதவாறு ஒருமைப்படுத்தி உரை காண வல்லவர் என்பது அதன் பொருள்.

இங்ஙனமாயினும் யோகிகள் உரைகளில் அங்கொன்றும் இங்கொன்றுமாகச் சில இடங்களில் போந்த பொருள் பற்றிக் கருத்து வேறுபடுகின்றவர்களும் இல்லாமல் இல்லை. அவ்வேறுபாடு காரணமாக யோகிகள் கருத்துப் பற்றிச் சில ஆராய்ச்சிகள் இக்காலத்தில் வெளிவந்துள்ளன.

இந்நிலையில், மேற்குறித்த சிவஞான போத நூற்கும், அதன் வழி நூலாகிய சிவஞான சித்தியில் அவ்யோகிகள் உரையோடு கூடிய சுபக்கத்திற்கும் ஓர் உரை செய்தல் வேண்டும் என்ற எண்ணம் எனக்கு இருந்து வந்தது. அதற்கு வாய்ப்பாக நான் அண்ணாமலை பல்கலைக் கழகத்தில் திருக்குறள் இருக்கையில் இருந்து பணி புரிந்த காலத்தில், (1978-82) சிதம்பரம் சபாநாயகர் வீதியில் உள்ள ஸ்ரீ மௌன சுவாமிகள் மடத்து அதிபராய், அடியேனிடத்தில் ஏறக்குறைய நாற்பதாண்டுகள் மிக்க அருள்

உள்ளங் கொண்டு பல நலங்களைச் செய்து வந்த ஸ்ரீலஸ்ரீ மௌன சபாபதி சுவாமிகள் அவர்கள் இறைநிலை எய்தியதை முன்னிட்டு, அச் சுவாமிகட்குப் பின் அத்திருமடத்தின் அதிபராய் வீற்றிருந்தருளும் ஸ்ரீலஸ்ரீ மௌன சுந்தரமூர்த்தி சுவாமிகள், ''தம் ஞானத் தந்தையராகிய சுவாமிகளது முதற் குருபூசை விழாவில் அவர்களது நினைவாக நீங்கள் ஏதாவது ஒன்றை எழுதித் தர வேண்டும்'' - என்று அடியேனுக்குப் பணித்தருளினார்கள். அதற்கு விடையாக நான் சிவஞான போதத்திற்கு ஓர் உரை செய்ய விரும்பியுள்ள எனது கருத்தை விண்ணப்பித்தேன். அவர்கள் உடனே மனம் உவந்து, ''நல்லது அதனை உடனே விரைந்து செய்யுங்கள்'' — எனப் பணிக்க நான் உடனே தொடங்கி ஏழு நூற்பாக்களுக்கு உரை எழுதி முடித்தேன்.

சுவாமிகள் உடனே ஆவன செய்து, பதிப்பு வேலையைத் தொடங்குவித்து நடைபெறச் செய்தார்கள். வேண்டுங் காலத்து வேண்டியபடி பொருள் வழங்கினார்கள். எனினும் அச்சு வேலை முற்ற முடியுமுன் நான் காஞ்சித் தத்துவ மையப் பணியை ஏற்று, 1983 ஜூன் திங்களில் காஞ்சிக்கு வந்து விட்டேன். என்றாலும் அஞ்சல் வழித் தொடர்பால் உரை ஏழு நூற்பாக்களுக்கு அச்சாகி முடிந்து விட்டது. ஆயினும் குறித்த நாளில் உரை வெளிவரும் நிலை அமையவில்லை. குறித்த நாள் கடந்து விட்டது. அதனால் தானோ என்னவோ சுவாமிகள் அச்சாகி உள்ள உரை வெளி வருவதற்கு ஆவன செய்யத் திருவுளம் கொள்ளவில்லை.

ஆண்டுகள் சில கழிந்தன. பின்பு, அச்சாகி உள்ள உரைப் படிகள் பேரூர் ஆதீனத்திற்கு அனுப்பப்பட்டிருப்பதாக அறிவித்தார்கள். அவர்கள் அறிவித்தபடி பேரூர் ஆதீனத் திருமடத்து அதிபர் ஸ்ரீலஸ்ரீ சாந்தலிங்க இராமசாமி அடிகளார் அவர்கள் தங்கள் ஆதீனச் சார்பில் உரை வெளியிடப்பட்டதாக அறிவித்துச் சில படிகளைத் தக்கவர் வழியாக எனக்கு அனுப்பி வைத்தார்கள்.

உரை ஏழு நூற்பாக்களுக்கு வெளி வந்து விட்டமையால், மற்றை நூற்பாக்களுக்கும் எழுதி நிறைவு செய்தல் வேண்டும். எனக்கருதி எழுதி முடித்து அடிகளாருக்கு விண்ணப்பித்தேன். அவர்கள் முன்பு முதற் பகுதியை வெளியிட்டது போலவே இரண்டாம் பகுதியையும் உவகையுடன் ஏற்று ஆவன செய்ய, உரை சென்னையில் அச்சாகி இது பொழுது வெளி வருகின்றது.

எனது உரையையும் உரையாக ஏற்று, இரண்டு பகுதிகளையும் நன்கு வெளியிட்டருளத் திருவுளம் பற்றிய பேரூர் ஆதீனத் திரு மடத்து அதிபர் ஸ்ரீல ஸ்ரீ சாந்தலிங்க இராமசாமி அடிகளார் அவர் களது பெருங் கருணைக்கு அடியேன் எனது என்றும் மறவா நன்றியை வணக்கத்துடன் தெரிவித்துக் கொள்கிறேன்.

முதற் பகுதியை அச்சிடுவித்து வெளிவர ஆவன செய்தருளிய ஸ்ரீல ஸ்ரீ மௌன சுந்தரமூர்த்தி சுவாமிகட்கும் எனது நன்றி என்றும் உரியது

இவ் இரண்டாம் பகுதி அச்சாகி வெளி வருதற்குப் பெரிதும் உறுதுணையாய் இருந்து உதவிய சென்னைப் பல்கலைக் கழகத்துத் தமிழ்ப் பேராசிரியர் டாக்டர் இ. சுந்தரமூர்த்தி அவர் களுக்கு நன்றி உரியது.

"கடவுட் கொள்கையுடைய சமயங்கள் யாவும் வேதத்தின் வழித் தோன்றியனவே' - என்னும் கருத்து, வரலாற்றுணர்வு தோன்றாத அக்காலத்து இந்திய மக்களிடையே நிலவி வந்தது. அவ்வாறே அக்காலத் தமிழரிடையேயும், சைவ வைணவ சமயங்கள் வேதாகமங்களின் வழித் தோன்றியனவே' என்னும் கருத்து இருந்து வந்தது. ஆயினும் பல்வேறு சான்றுகளால் வரலாற்றுணர்வு வளர்ந் துள்ள இக்காலத் தமிழரிடையயே சைவ வைணவ சமயங்கள் தமிழர் பண்பாட்டிலே தோன்றித் தொன்று தொட்டு விளங்கி வருவன' என்னும் கருத்தே நிலவி வருகின்றது. அதனால், சைவாகமங்கள் சொல்லால் வட மொழியாய் இருப்பினும், பொருளால் தமிழே' - என்னும் கருத்தும் அறிஞரிடையே உள்ளது. ஆகவே, 'சைவத்தின் சிறப்பு மறையாக அக்காலத்தில் விளங்கியன சைவாகமங்கள்' என்றும், பிற்காலத்தில் அவ்வாறு அமைந்தன பன்னிரு திருமுறைகளே' என்றும் கருதப்படுகின்றன, ஆகவே, "சிவஞான போதத்திற்குச் சிவஞான யோகிகள் செய்த உரைகள் முற்காலக் கருத்தை வலியுறுத்துவனவாய் விளங்க, இவ் வுரை இக்காலக் கருத்தை வலியுறுத்துவதாய் உள்ளது" என்னும் கருத்து இவ்வுரையை நோக்குவார் உள்ளங்களில் தோன்றுமாயின் அஃதே இவ்வுரை தோன்றியதன் பயனாகும் என்னும் கருத் துடையேன்.

இத்தகைய கருத்துடன் சைவ சித்தாந்தத் துறையில் சில பணி களைச் செய்தவர் காலம் சென்ற, அண்ணாமலைப் பல்கலைக்

கழகத் தமிழ்ப் பேராசிரியர் வித்துவான் க வெள்ளை வாரணனார் அவர்கள். சிறப்பாகத் ''திருவருட் பயன்'' — நிரம்ப அழகிய தேசிகர் உரை வெளியீட்டை இங்குக் குறிப்பிடலாம்.

திருமுறைகளின் நெறி, 'திருநெறி' என்று சொல்லப் படுகின்றது. அப்பெயரையே இவ்வுரையும் கொண்டுள்ளது.

பல உரைகளுக்கிடையே எனது உரையும் புத்தகமாகி வெளி வரச் செய்த திருவருளை யான் என் உளமார எண்ணி இறைஞ்சு கின்றேன்:

வணக்கம்

இங்ஙனம்

சித்தாந்தக் கலைமணி, மகா வித்துவான், முனைவர்

சி அருணை வடிவேலு முதலியார்

காஞ்சிபுரம்
12—2—1996

சிவஞான போதத் திருநெறியுரை

எட்டாம் நூற்பா

இனி ஆசிரியர் எட்டாம் நூற்பாவைப் பாடமாக
ஓதியது வருமாறு :

ஐம்புல வேடரின் அயர்ந்தனை வளர்ந்தெனத்
தம்முதல் குருவுமாய்த் தவத்தினில் உணர்த்தவிட்(டு)
அன்னியம் இன்மையின் அரன்கழல் செலுமே.

இனி அவர் சூத்திரத்தைச் சுட்டிக் கருத்துரைத்தது வருமாறு:

என்பது சூத்திரம்
என் நுதலிற்றோ எனின்,

ஞானத்தினை உணரும் முறைமையினை உணர்த்துதல் நுதலிற்று.

விளக்கம்

முன்னை நூற்பாவில், "சத்தாகிய பதியும், அசத்தாகிய பாசமும் என்னும் இருபொருளும் தம்முள் ஒன்றனை ஒன்று உணராதாக, இரண்டினாலும் விளங்கி, இரண்டையும் அறிந்தும் இரண்டிலும் அழுந்துவது அவற்றின் வேறாய்ச் சத சத்தாயுள்ள உயிரே" எனக் கூறியதனால், அவ்வுயிர் இயற்கையில் சத்தாகிய பதியின் கண்ணதாகாது, பாசத்தின் கண்ணதாய், அதனால் விளங்கி, அதனையே அறிந்து, அதன்கண் அழுந்தி நிற்றலையும், அஃது அதனினின்றும் விடுபட்டுப் பதியை அடைதற்குரிய வழியையும், அவ்வழியை அஃது அடையு மாற்றினையும் உணர்த்துதல் இந்நூற்பாவின் கருத்து என்றபடி.

இந்நூற்பாவின் திரண்ட பொழிப்பு : (தவத்தினில்) - உயிர் முன் பிறப்புக்கள் பலவற்றில் செய்த தவம் காரணமாக.

(தம் முதல் குருவுமாய்) - பக்குவம் வாராத வரையில் உயிர்க்கு உயிராய் உள்நின்று அறிவைத் தந்துவந்த முதல்வன், (பக்குவம் வந்தவுடன்) ஆசிரியனாயும் வெளிப்பட்டுத் தோன்றி,

(ஐம்புல வேடரின் வளர்ந்து அயர்ந்தனை என உணர்த்த) "மன்னவனாகிய எமக்கு மகனாகிய நீ, கருவிக் கூட்டமாகிய வேடரிடையே அகப்பட்டு வேடர் மகனாகவே மயங்கினாய்" என்று உண்மையை அறிவுறுத்த (அதனைக் கேட்ட உயிர் பக்குவம் பெற்றிருந்ததால், உடனே)

(விட்டு)- அக்கருவிக் கூட்டத்தைவிட்டு நீங்கி,

(அரன் அன்னியம் இன்மையின்—) அவ்வாறு உணர்த்திய முதல்வன் அவ்வுயிரின் வேறாய் இராது, அவ்வுயிரேயாய் உடனாய் இருத்தலின்,

(கழல் செலும்) அவனது திருவடியிலே போய்ச் சேர்ந்து விடும்,

விளக்கம்

"ஐம்புலன்"—என்றதில் புலம் ஆகுபெயராய், அவற்றை அறியும் பொறிகளை உணர்த்திற்று.

"ஐம்பொறி"—என்றது இனம் தழுவி நின்றது ஆதலின், அதனானே பிற கருவிகளும் கொள்ளப்பட்டன.

வேடர் தொழில் வழிப் பறி செய்தல் ஆதலின், அவரைப் போல உயிரினது அறிவை அது செல்லும் நெறியிடைக் கவர்தல் பற்றி ஐம்பொறிகள் வேடராக உருவகம் செய்யப்பட்டன. ஏனைக் கருவிகளும் அவற்றிற்குத் துணையாவனவே.

இழிவுடைய கருவிகளை வேடராக உருவகம் செய்ததனானே, உயர்வுடைய இறைவன் மன்னவனாதலும், உயிர் அவன் மகனாதலும் விளங்கின,

"மன்னவன்றன் மகன் வேடரிடத்தே தங்கி வளர்ந்து அவ்வனையறியாது மயங்கி நிற்ப."[1] என, வழிநூல் ஆசிரியர் இவ்வுருவகத்தை இனிது விளங்க ஓதினார்.

---

1. சிவஞான சித்தியார் சுபக்கம் எட்டாம் சூத்திரம்—1

''குருவுமாய்'' என்னும் உம்மை, இதுகாறும் உயிர்க்குயிராய் உள்நின்று உணர்த்தியதே யன்றி'' என இறந்தது தழுவிச் சிறப்புப் பொருளும் உடன் தோற்றி நின்றது.

''தவத்தினில்''—என்பதில் இல். ஏதுப் பொருளதாகிய ஐந்தன் உருபு.

'கருவிகளின் நீங்கிய உயிர் முதல்வனை எவ்வாற்றால் அடையும்' என்னும் ஐயத்தை நீக்குதற்கு, ''அன்னியம் இன்மையின்'', என்றார்.

அரன் - உயிர்களது பாசத்தை அரிப்பவன்.

திருவருளைக் கழலாக (திருவடியாக)க் கூறுதல் மரபு. ''விட்டுச் செலும்'' என்னும் பயனிலைக்கு ''ஆன்மா'' என்னும் எழுவாய் முன்னை நூற்பாவினின்றும் வந்து இயைந்தது.

முன்னை நூற்பாவில் உண்மை யியல்பு கூறப்பட்ட ஆன்மாவின் செய்தி இந்நூற்பா முதலாகத் தொடர்ந்து வருதலின். முன்னை நூற்பாவில் ''இரண்டலா ஆன்மா''—என்றதனை இனிவரும் நூற்பாக்களில் எல்லாம உய்த்துக்கொண்டு உணர்க.

ஆசிரியர் இந்நூற்பாவை நான்கு அதிகரணங்களாகக் கண்ணழித்துரைப்பார்.

முதல் அதிகரணம்

''தவத்தினில் உணர்த்த''

முன்னுரை

உயிர் பக்குவத்தை அடைதற்குச் சில வழிகளை வேறு வேறு கூறும் சமய வாதிகளது வழக்குரைகளை யெல்லாம் விலக்கி, ''உயிர் பக்குவம் அடைதற்கு வழி தவமே'' என நிறுவுவது இவ் வதிகரணம். அதனால் இது தவநிலை யதிகரணமாகும்,

மேற்கோள்

ஈண்டு, இவ்வான்மாக்களுக்கு முன்செய் தவத்தான் ஞானம் நிகழும் என்றது.

ஏது

மேற் சரியை கிரியா யோகங்களைச் செய்துழி நன்னெறியாகிய ஞானத்தைக் காட்டியல்லது மோட்சத்தைக் கொடா ஆகலான்.

மேற்கோள் விளக்கம்

ஈண்டு—இவ்வதிகரணத்துள். இவ் வான்மாக்கள் - முன்னை நூற்பாவில் கூறிய இயல்புடைய உயிர்கள். முன் - முன் பிறப்புக்கள். 'ஒரு பிறப்பில் செய்யும் தவம் போதாது; பல பிறப்புக்களில் செய்த தவம் திரண்டு வரல்வேண்டும்' - என்பதற்கு, ''முற்செய் தவத்தான் ' - என்றார்,

''தவத்தான் ஞானம் நிகழும்''—என்றது, ''தவம் இன்றி ஞானத்தை உணர்தற்குரிய பக்குவம் எய்தாது'' என்பது பற்றியேயாம். பக்குவமாவது, ஆசிரியர் அறிவுறுக்கும் அறிவுரையை விளக்கம் இன்றியும், பொருள் மாறுபடவும் உணராது, உள்ளவாறு உணரும் நிலையாம்.

நிகழ்தல்—ஐயம் திரிவின்றி விளங்குதல், எனவே, 'அது பக்குவம் எய்தியவழியன்றி இயலாது' என்பதாம்.

ஏது விளக்கம்

மேல், முன் பிறப்பில். மேற்கோளில் ''தவம்'' எனப் பொதுவாகக் கூறியதனை இங்கு, 'சரியை கிரியா யோகம்'' என இனிது விளங்கச் சிறப்பாகக் கூறினார்.

ஞானத்தை, ''நன்னெறியாகிய ஞானம்'' எனக் கூறியது ''அதனை அங்ஙனம் கூறுதல் சிவநெறி வழக்கு' — என்பது உணர்த்துதற்கு, நன்மையாவன பலவற்றினும் மேலான நன்மையாம் வீடுபேற்றினைத் தரும் நெறி' என்பது அதன் பொருள்.

ஞானத்தை 'நன்னெறி' என்பது போலவே, சரியை முதலிய மூன்றும் வேறு வேறு வகை நெறிகளாகக் கூறப்படும். அவற்றை வழிநூல் ஆசிரியர் முறையே ''தாத மார்க்கம், சற்புத்திர மார்க்கம், சகமார்க்கம்''[1] —என எடுத்தோதினமை யறிக.

'நன்னெறி' - என்பதை அவர், ''சன்மார்க்கம்'' என்றார்.[1]

---

1. சிவஞான சித்தியார்—சுபக்கம் - 8-ம் சூத்திரம். 18-22.

தாத மார்க்கம் - தொண்டர் ஒழுகும் நெறி போலும் நெறி. அது புறம்படித் தொண்டர் புறப்பணி செய்தல் போலத் திருக்கோயில் எடுத்தல், திருநந்தவனம் வைத்தல், வளர்த்தல் திருக்கோயிலை அழகுபடுத்தல், திருக்கோயிலில் உள்ள திருவுருவங்களது அன்றாட வழிபாடு, சிறப்பு விழா இவற்றிற்கு ஆவன செய்தல், திருக்கோயில் திருச்சுற்றுத் தேவர்களைத் தீண்டி வழிபடல், திருக்கோயில் வழிபாடு செய்தல். சிவ முதல் மறையைக் கணித்தல், சிவ நூல் களைக் கேட்டல், சிவன் அடியார்களைச் சிவனாகவே கருதி வழிபடுதல் முதலியனவாம்.

சற்புத்திர மார்க்கம்-மகன்மை நெறி. அஃதாவது, ஒருவருடைய மகன் அவருக்கு அண்மையிலே இருந்து அகம்படிப் பணிகள் செய்தல் போலத் திருக்கோயிற் கருவறையுள்ளும், தம் தம் இல்லங்களிலும் சிவக்குறியில் சிவனை அகத்தும், புறத்தும் மறை மொழிகளால் வழிபடல்.

சக மார்க்கம் - தோழமை நெறி. அஃதாவது, ஒருவர்க்குக் கெழுதகை நண்பராயினார் அவர்தம் மக்களினும் பேருரிமை உடையவராய், அவரோடு ஒன்றியிருத்தல் போலச் சிவபெருமானை அகக் காட்சியிற் கண்டு, அவனோடு ஒன்றுதலைச் செய்தல்.

இவற்றுள் தொண்டர் நெறி,
''நிலைபெறுமாறு எண்ணுதியேல் நெஞ்சே நீவா''
''எவரேனும் தாமாக இலாடத் திட்ட''[1]

என்னும் திருத்தாண்டவம் முதலியவற்றிலும், மகன்மை நெறி, ''காயமே கோயிலாக''[2] என்னும் திருநேரிசை, ''சலம் பூவோடு தூபம் மறந்தறியேன்''[3] என்னும் தொடர் முதலியவற்றிலும் தோழமை நெறி,

''ஊனில் உயிர்ப்பை ஒடுக்கி ஒண்சுடர்
ஞான விளக்கினை யேற்றி, நன்புலத்து
ஏனை வழிதிறந்து ஏத்து வார்க்(கு) இட
ரான கெடுப்பன அஞ்செ ழுத்துமே''[4]

என்னும் பாடல் முதலியவற்றிலும் திருமுறைகளில் பலவாறு எடுத்தோதப்பட்டன.

1 திருமுறை—6, 31, 1—61, 3.
2 திருமுறை — 4, 76, 4,
3 திருமுறை — 4, 1, 6,
4 திருமுறை — 3, 22, 3

'ஞானத்தைக் காட்டி, மோட்சத்தைக் கொடுக்கும்' — என உடன்பாட்டு வகையிற் கூறாமல், ''ஞானத்தைக் காட்டியல்லது மோட்சத்தைக் கொடா'' என எதிர்மறை வகையிற் கூறியது, 'வீட்டினை ஞானம் அல்லாத பிறவும் கொடுக்கும்' — என்பார்து கூற்றுக்களை மறுத்து, 'ஞானம் ஒன்றே வீட்டிற்கு நேர்வாயில்; அதனால், அது வழியாக அன்றிப் பிற வழியால் வீட்டினை அடைதல் இயலாது' என யாப்புறுத்தற் பொருட்டு, பிற வழியாலும் வீட்டினைப் பெறலாம், எனக் கூறுவோருள், ''இங்குக் கூறிய சரியை முதலிய தவங்களே வீட்டைத் தரும்'' என்பவர் சிலர்,

''அருளாசிரியர் செய்யும் திருநோக்கம் முதலிய அருட் செய்கையே வீட்டைத் தரும்'' என்பவர் சிலர்.

'இவையெல்லாம் பொருந்தா'-என்பதை வழிநூல் ஆசிரியர்

''ஞானத்தால் வீடென்றே நான்மறைகள் புராணம்
நல்லஆ கமம் சொல்ல, 'அல்லவாம்' என்னும்
ஊனத்தார் என்கடவர்'' 1

என்னும் செய்யுளில் இனிது விளங்க விளக்கினார்.

புராணம் முதலியவற்றில் சில இடங்களில் 'சரியை முதலியனவே வீட்டைத் தரும்' எனக் கூறுதற்கு, அவை வழி முறையால் ஞானத்தைத் தந்து. வீட்டைத் தரும்' என்பதே கருத்தாவதன்றி. 'அவை தாமே வீட்டைத் தரும்' என்பது கருத் தன்று. ஆகவே, ஞானம் வீட்டிற்கு வாயிலாக, சரியை முதலிய மூன்றும் ஞானத்திற்கு வாயில் என்பது விளங்கிற்று

தோற்றுவாய்

'சரியை முதலிய மூன்றும் ஞானத்தைக் காட்டி அது வழியாக வீட்டைத் தரும்' — என்றதனால், 'அவை ஞானத்தைக் காட்டு மாறு எங்ஙனம்' என அவாய் நிற்றலின், அவ் அவாய் நிலையை எடுத்துக்காட்டால் நிரப்புகின்றார்.

---

1. சிவஞான சித்தியார் — சுபக்கம் 8ம் சூத்திரம் 27

வெண்பா—1

தவம் செய்தார் என்றும் தவலோகம் சார்ந்து.
பவம் செய்து பற்றறுப்பா ராகத் — தவம் செய்த
நற்சார்பில் வந்துதித்து ஞானத்தை நண்ணுதலைக்
கற்றார்சூழ் சொல்லுமாம் கண்டு.

இதன் பொருள்

தவம் செய்தார் - சரியை முதலிய முச்செயல்களைச் செய்தவர். என்றும் தவலோகம் சார்ந்து - எக்காலத்திலும் அவற்றின் பயனாகிய சிவலோகத்தை அடைந்து, அங்குள்ள இன்பங்களை நுகர்ந்து, பற்று பவம் செய்து அறுப்பாராக - முன்பு தவம் செய்த உடம்பு நீங்கும் காலத்தில், அடுத்த வினையின் தூண்டுதலால் எழுந்த அந்த அவாவினை மீட்டும் நிலத்தில் வந்து பிறந்து நுகர்ந்து ஒழித்தற் பொருட்டு. தவம் செய்த நற்சார்பில் வந்து உதித்து. வழி வழியாகச் சரியை முதலியவற்றைச் செய்து வரும் நல்ல குடியிற் பிறந்து, ஞானத்தை நண்ணுதலை - (முன் பிறப்பிலே செய்த சரியை முதலியவற்றின் பழக்கத்தால் இப பிறப்பிலும் அவற்றைச் செய்து, அனைத்துத் தவங்களின் பயனாகவும்) ஞானத்தைப் பெறுவர். அவர் அங்ஙனம் பெறும் முறையை. கற்றார் சூழ் கண்டு சொல்லும் - உண்மை நூலைக் கற்றவரது ஆராய்ச்சி, தெளிவுபடுத்தும்.

விளக்கம்

'இந்நிலவுலகத்தில் உடம்பு கொண்டு செய்யப்படும் செயல்கள் யாவும் அறமும், மறமுமாகி, மேல் கீழ் உலகப் பயன்களைத் தருதல் எவ்வாற்றானும் தப்புதல் இல்லையாகலின், தவச் செயல்களும் அவ்வாற்றால் அவ்வுலகப் பயனைத் தப்பாது தந்தேவிடும்' என்பது தோன்ற, ''என்றும் தவ லோகம் சார்ந்து'' என்றார்.

'வானுலகம்'-என்னாது ''தவலோகம்'' எனக் கூறியதனால், 'தவத்திற்குப் பயன் தேவர் உலகம் ஆகாது, அதற்கு மேற்பட்ட சிவனுலகம்' என்பது போந்தது, ''கொன்றைத் தொங்கலான் அடியவர்க்குச் சுவர்க்கங்கள் பொருளலவே''[1] எனும் திருமுறையைக் காண்க.

---

1 திருமுறை - 2, 41, 7.

சரியை செய்தோர் சிவலோகத்தில் சாலோக நிலையையும், கிரியையினைச் செய்தோர் சாமீப நிலையையும், யோகத்தைச் செய்தோர் சாரூப நிலையையும் அடைதலை வழி நூலாசிரியர், ''இச்சரியை செய்வோர் ஈசன் உலகிருப்பர்'' எனவும், ''இக் கிரியையினை இயற்றுவோர்கள் நின்மலன்றன் அருகிருப்பர்'' எனவும், ''யோகம் முற்றும் உழந்தவர்கள் ஈசன்றன் உருவத்தைப் பெறுவர்'' எனவும் விளக்கிக் கூறினார்.[1]

சரியைத் தொண்டு ஒருவரிடந்துப் பணி புரிவோர் தொண்டு போல்வது ஆதலின் அப்பணியாளர் தம் தலைவர் இல்லத்தில் எங்கும் செல்லும் உரிமை வுடையர் ஆதல் போல, சரியையில் நின்றோர் சிவலோகத்தில் எங்கும் சென்று வாழும் உரிமை யுடையராவர். இதுவே சாலோக பதவியாம்.

கிரியை வழிபாடு, ஒருவர்க்கு மகனாய் உள்ளவன் அவருக்கு மிக அணுக்கமாய் இருந்து அவருக்கு வேண்டும் பணிவிடைகளைச் செய்தல் போல்வது ஆதலின், மகன் தந்தையை அணுகியிருக்கும் உரிமையுடையன் ஆதல் போலக் கிரியையில் நின்றோர் சிவ லோகத்தில் சிவனை அணுகியிருக்கும் உரிமை உடையராவர். இதுவே சாமீப பதவியாம்.

யோகம் ஒருவருக்குக் கெழுதகை நண்பரானார் அவரிடத்து அவர் மகனிலும் மேலான உரிமை உடையராய் அவரது ஆடை, அணிகலம் முதலியவற்றைத் தாமும் கொள்ளும் உரிமையுடையர் ஆதல் போல, அகக் காட்சி சிவனோடு ஒன்றியிருப்பது ஆதலான் அதன்கண் நின்றார் சிவலோகத்தில் சிவன் உருவத்தைத் தாமும் பெறும் உரிமையுடையராவர். இதுவே சாரூப பதவியாம்.

இவை முறையே 'சாலோக்கியம், சாமீப்பியம், சாரூப்பியம்' என்றும் சொல்லப்படும் என்பதையும், இப்பதவிகளே 'பதமுத்தி' எனப்படும் என்பதையும் வழி நூலாசிரியர்,

> ''சன்மார்க்க முத்திகள்சா லோக்கிய, சா மீப்பிய,
> சாரூப்பியம்''[1]

எனவும்,

---

1 சிவஞான சித்தியார் — சுபக்கம் 8ம் சூத்திரம் - செய்யுள் 19, 20, 21.

(சரியை முதலிய) "மூன்றினுக்கும் முத்திபதம் என்பர்" — எனவும் கூறி,

"முன்மார்க்க ஞானத்தால் எய்தும் முத்தி
முடிவு என்பர்" [1]

என, 'ஞானத்தால் அடையப்படும் முத்தியே முடிநிலை முத்தி' எனவும் கூறினார். முடிநிலை முத்தி - பரமுத்தி. அது 'சாயுச்சியம்' எனப்படும் என்பதை அதற்கு முன்பே அவர் அச் செய்யுளில் கூறினார்.

"பற்றறுப்பாராக வந்துதித்து"—என்றமையால், 'நில வுலகில் தவம் செய்த உடம்பு நீங்குங்காலத்தில், வினைத் தூண்டுதலால் யாதானும் ஒன்றில் அவாவுடையராயினாரே பத முத்தியினின்றும் மீண்டு இவ்வுலகத்தில் பிறப்பார்'—என்பது போந்தமையின். 'அப்பொழுது யாதோர் அவாவும் இன்றி, சிவ சிந்தனையோடு சென்றவர் மீளப் பிறவாது, பதமுத்தியிற்றானே சிவன் உண்மை ஞானத்தை அருளப் பெற்று, முடிநிலை முத்தியை அடைவர், - என்பது பெறப்பட்டது. இதனையும் வழி நூலா சிரியர்,

"அங்கு நாதனே முன்னிற்கின்
நணுகுவர்நற் றாளே" [2]

எனக் கூறினார்.

"காமன் பொடிபடக் காய்ந்த கடல்நாகைக் காரோண, நின்
நாமம் பரவி நமச்சிவா யவ்வென் றுன் அஞ்செழுத்தும்
சாம்அன் றுரைகாக்கத் தருதிகண்டாய், எங்கள் சங்கரனே'

என்னும் திருமொழி இக்கருத்தே பற்றி எழுந்தது.

"மரிக்கும்போது உன்னும் வடிவமதை ஆவி
பரிக்கும் நினைவு பரித்து"

---

1 சிவஞான சித்தியார்—சுபக்கம் 8ம் சூத்திரம் செய்யுள் 18,25.
2 திருமுறை—4. 103 - 3.

"ஆதலினாற் சுற்றத் தவரைநினை யாதுஅமலன்
பாதம் நினைக பரிந்து"

என்பன சைவ சமய நெறி.

அறுபான் மும்மை நாயன்மார்களுள் பலர் பத முத்தியையே அடைந்தாராக அறியப்படினும், 'அந்நிலை அவர் நிலவுலகிற் செய்த தொண்டின் பயனாக ஆயிற்று' என்பதும், 'உரிய காலத்தில் அவர் அங்குநின்றே முடிநிலை முத்தியை அடைவர்' என்பதும் இதனால் அறியற்பாலன.

"நல்லினத்தி னூங்கும் துணையில்லை; தீயினத்தின்
அல்லற் படுப்பதூஉம் இல்"[1]

என்றார் ஆகலின், ஞானத்தை எய்துதற்கு நற்சார்பு வேண்டப் படுகின்றது.

"தவமும் தவம் உடையார்க்கு ஆகும்; அவம் அதனை
அஃதிலார் மேற்கொள் வது"[1]

என்றபடி, நற்சார்பு ஆவார் தவம் உடையர் ஆதலை, "தவம் செய்த நற்சார்பு" என்றார்.

கற்றார் சொல்லுதலை அவரது சூழ்ச்சிமேல் ஏற்றிக் கூறினர். ஆம், அசைநிலை.

தோற்றுவாய்

சரியை முதலியவற்றையே "தவம்" என்றது என்னை? வேதத்துட் கூறப்பட்ட வேள்வி முதலிய நற்செயல்களும் தவமாம் அன்றோ என, மீமாஞ்சகர் கொள்கை பற்றி எழும் தடையை விடுத்து, ஏதுவிற்கூறியத்னை வேறோர் எடுத்துக் காட்டால் வலியுறுத்துகின்றார்.

---

1 திருக்குறள்—460, 262.

வெண்பா-2

பசித்துண்டு பின்னும் பசிப்பானை ஒக்கும்,
இசைத்து வருவினையின் இன்பம்; - இசைத்த
இருவினை ஒப்பின் இறப்பில தவத்தால்
மருவுவனாம் ஞானத்தை வந்து.

இதன்பொருள் :

இசைத்து வருவினையின் இன்பம்—வேதத்தால் சொல்லப் பட்டு வருகின்ற வேள்வி முதலிய கருமங்கள், (அவைமட்டுமன்றி, 'இன்ன கருமத்திற்கு இன்ன பயன்' என்பதும் உடன் சொல்லப் பட்டு வருதலால்) அவற்றைச் செய்தார் அடையும் இன்பங்கள் எல்லாம்.

'பசித்து உண்டு பின்னும் பசிப்பானை ஒக்கும்—ஒருபொழுது பசித்தவன் அப்பசி தீர்தற்கு உணவை உண்டு (அதனோடு நிரம்பாமல், அடுத்த பொழுதில் பசிப்பவன் அடையும் இன்பத் தைப் போல, நிலையாது ஒழியும் இன்பங்களேயாம். (அவை அங்ஙனம் ஆதற்குக் காரணம் அவற்றைத் தரும் கருமங்கள் சிறிது காலம் நின்று தம் பயனைத் தருதலோடு அழிந்தொழிதலே யாகும். ஆகையால், அவைகள் நிலைத்து நின்று ஞானத்தைத் தர மாட்டா. அது பற்றி அவைகள் இங்குக் கொள்ளப்பட வில்லை.) சிவாகமங்களால் சொல்லப்பட்டு வரும் சரியை முதலியன பத முத்திகளைப் பயப்பதோடு அழிந்துவிடாமல், பின்னும் நிலைத்து நின்று ஞானத்தைத் தந்தே விடும். அதனால் அவை இறப்பில் தவங்களாம். ஆகவே, வேதத்திற் சொல்லப் படும் வேள்வி முதலியன, இறப்புடைய தவங்களாம், 'இங்ஙன மாயின் இறப்பில் தவங்கள் ஞானத்தை எங்ஙனம் தரும்'— எனின்,) இறப்பில தவத்தால்—முற்பிறப்பிலும், இப்பிறப்பிலும்— செய்த சரியை கிரியா யோகங்களின் திரட்சியால், இசைத்த இருவினை ஒப்பின் - அறநூல்களில் சொல்லப்பட்ட அறம், மறம் ஆகிய இருவினைகளும் (ஞானத்தைத் தாராமையே யன்றி, அது நிகழ்தற்குத் தடையுமாம் ஆதலால் இவை பொன் விலங்கும், இருப்பு விலங்கும் போல்வனவே' என்று உணர்ந்து,) அவற்றுள் ஒன்றில் விருப்பும், மற்றொன்றில் வெறுப்பும் கொள்ளாது, இரண்டையும் ஒரு நிகரனவாகக் கொண்டு பற்றற்றிருக்கும் நிலை ஒருவனுக்கு வாய்க்குமாயின், (அவன்). வந்து ஞானத்தை மருவுவன்—ஞானாசிரியரைத் தேடி அடைந்து, அவர் அருளால் ஞானத்தை அடைவான்.

விளக்கம்

'இறப்புடைத் தவங்கள் இவ்வுலகில் பசித்தவன் உண்ட உணவுபோல அப்பொழுது தம் பயனைத் தந்து அழியும்'—என்றதனால், இறப்பில் தவங்கள் தேவர் உண்ணும் அமுதம், அவர்கட்குப் பசியை நீக்கி மட்டும் ஒழியாமல், நிலைத்து நின்று நரை, திரை, மூப்பு, பிணி, சாக்காடு, என்பவற்றைத் தவிர்த்தல் போல, சாலோகம் முதலிய பத முத்திகளைத் தருதலோடு ஒழியாமல், பின்னும் நிலைத்து நின்று பெருகி ஞானத்தைத் தந்தேவிடும் என்க.

'வேதத்தால், ஆகமத்தால்' என்பன ஆற்றலால் கொள்ளப் பட்டன. அமுத உணவிற்குச் சிறந்த பயன் நரை. திரை. மூப்பு, பிணி, சாக்காடு நீங்குதலும், இடை நிலைப் பயன் பசி நீங்குதலும் ஆதல்போல, இறப்பில் தவத்திற்குச் சிறந்த பயன் ஞானமும், இடைநிலைப் பயன் சாலோகம் முதலிய பத முத்திகளும் ஆம் என்க.

''இருவினை ஒப்பின் ஞானத்தை மருவுவன்'' — எனச் சுருங்க ஓதினாராயினும் அதனுடன் மல பரிபாகம், சத்தி நிபாதம்'- என்பனவும் இடையீடின்றி ஒரு காலத்தே ஒருங்கு நிகழ, அதன் பின்னே ஞானம் நிகழும் என்க.

இருவினை யொப்பு

அவற்றுள், 'இருவினை ஒப்பாவது யாது' என்பார்க்கு சிற்சிலர் வேறு வேறு வகையான விளக்கங்களைக் கூறுவர்.

அறங்களில் மிகப் பெரியது ஒன்றும், மறங்களில் மிகப் பெரியது ஒன்றும் ஒரு காலத்தே பயன் தர வரும் நிலைமை உண்டாக, அந்நிலையில் அவை யிரண்டும் ஒன்றால் ஒன்று அடிபட்டு அழிதலே இருவினை யொப்பாகும்'' என்பார் ஒரு சிலர்.

ஈட்டப்பட்ட வினைகளுள் அறம் ஆயினவும், மறம் ஆயினவும் ஆற்றலால் சம நிலை எய்துமாயின் அவை செய்த உயிரைத் தாக்க மாட்டாது ஒழியும்; அதுவே இருவினை யொப்பாகும்'' — என்பார் வேறு சிலர்,

இரண்டு வினைகள் ஒன்றால் ஒன்று அழியுமாயினும் எஞ்சிய வினைகள் வந்து தாக்கத் தடையில்லை.

அறங்களும் மறங்களும் ஆற்றலால் சமம் ஆதல் கடலில் அலை ஓய்வதுபோல என்றும் இயலாத ஒன்றாகும்.

அதனால் அவையெல்லாம் உண்மையல்ல. அதனால் இங்கு உரையுட் கூறியவாறு "ஓடும் செம்பொன்னும் ஒக்கவே நோக்கும்" [1] சம உணர்வு எய்தப்பெற்று, வினையைச் செய்தோன் வினைகள் இரண்டின் விளைவிலும் மகிழ்ச்சியும், வாட்டமும் இன்றி நடுவு நிலையனாதலே இருவினை யொப்பாம்,

மல பரிபாகம்

உயிரை இயல்பாகவே பற்றியுள்ள ஆணவ மலம் உயிர் பல பிறப்புக்களை எடுத்து நுகர்ந்து வந்த இன்பத் துன்ப நுகர்ச்சியால் தன் வலி குன்றி, நீங்கும் நிலையை எய்துதலே மல பரிபாகம்.

சத்தி நிபாதம்

சத்தி—அருட் சத்தி, நிபாதம்—வீழ்ச்சி. அஃதாவது பதிவு.

ஆணவ மலம் பரிபாகம் அடையாத பொழுது திரோதானமாய், அஃதாவது மறைத்தலைச் செய்வதாய் இருந்த இறைவனது சத்தி, மலம் பரிபாகம் எய்தினமையால் அருட் சக்தியாக மாறி ஆன்ம அறிவில் பதிதல் சத்தி நிபாதமாம்.

அப்பதிவு மந்ததரம், மந்தம், தீவிரம், தீவிரதரம் அல்லது அதிதீவிரம் - என நால்வகைப்பட்டுப் பின் மந்ததரத்தில் மந்த தரம், மந்ததரத்தில் மந்தம் முதலாக ஒன்று நான்காய், நந்நான்கு பதினாறாய், மற்றும் அவ்வாறு அளவிறந்தனவாம். அவை யெல்லாம் ஆணவ மல பரிபாக நிலையைப் பொறுத்தனவாம்

மந்ததரம்—மிக மென்மை. தீவிர தரம். மிக விரைவு.

மந்ததரம் முதலிய நான்கு சத்தி நிபாதங்களிலும் 'சரியை, கிரியை, யோகம், ஞானம்' — என்பன முறையே நிகழும்.

---

1 பெரிய புராணம் திருமலைச் சருக்கம். திருக்கூட்டச் சிறப்பு—8

நால்நெறிப் பிரிவுகள்

சரியை முதலிய நான்கும், சரியையிற் சரியை, சரியையிற் கிரியை முதலாக ஒன்று நான்காய்ப் பதினாறாய் விரியும்,

சரியை வகைகள்

திருக்கோயில் திருவுருவங்களைத் தீண்டாது செய்யும் பணிகள் சரியையிற் சரியை.

திருவுருவங்களில் அருவுருவமாகிய இலிங்கம் அல்லாத பிற உருவத் திருமேனிகளைத் தீண்டி வழிபடுதல் சரியையிற் கிரியை,

அத்திருவுருவங்களை உள்ளத்தில் தியானித்தல் சரியையில் யோகம்.

இவற்றால் பெறும் அனுபவங்கள் சரியையில் ஞானம்.

இவற்றால் அடையும் பதமுத்திகள்

தூல அதிகார தத்துவமாகிய சுத்த வித்தியா புவனங்களில் வாழ்தலாகிய சாலோகமும், அத்தத்துவத்தின் தலைவராகிய அனந்தேசுரர்பால் பெறும் சாமீப சாரூப சாயுச்சங்களும் ஆம்.

கிரியை வகைகள்

இலிங்கத் திருமேனியை வழிபடுதற்கு வேண்டும் பொருள்களைத் திரட்டிக் கொள்ளுதல் கிரியையில் சரியை.

அத்திருமேனியைப் புறத்து வழிபடுதல் கிரியையில் கிரியை.

அத்திருமேனியை உள்ளத்திற் கருதி வழிபடுதல் கிரியையில் யோகம்.

இவற்றால் அடையும் அனுபவங்கள் கிரியையில் ஞானம்.

இவற்றால் அடையப்படும் பத முத்திகள் சூக்கும அதிகார தத்துவமாகிய ஈசுர தத்துவ புவனங்களில் சாலோகமும், அத்தத்துவத்தின் தலைவனாகிய மகேசுவரன்பால் பெறும் சாமீப சாரூப சாயுச்சங்களுமாம்.

யோகத்தின் வகைகள்

யோக உறுப்புக்கள் எட்டனுள் இயமம், நியமம், ஆசனம், பிராணாயாமம் ஆகிய நான்கும் யோகத்தில் சரியை,

பிரத்தியாகாரம், தாரணை - இரண்டும் யோகத்தில் கிரியை.

தியானம் யோகத்தில் யோகம்.

சமாதி யோகத்தில் ஞானம்,

இவற்றால் அடையும் பத முத்திகள் போக தத்துவமாகிய சதாசிவ தத்துவ புவனத்தில் சாலோகமும்: அதன் தலைவனாகிய சதாசிவ மூர்த்தியின்பால் பெறும் சாமீப சாரூப சாயுச்சங்களுமாம்.

கிரியையாளர் வழிபடுவது சதாசிவ மூர்த்தியையும் யோகிகள் வழிபடுவது அருவ மூர்த்தியையுமாக, அவர்கள் அடைவது உருவ தத்துவமும், அருவுருவ தத்துவமும் ஆதல் என்னையெனின், கிரியையாளர் புறத்து விளங்கும் அருவுருவத் திருமேனியில் மறை மொழிகளால் சதாசிவ மூர்த்தியையும், யோகிகள் அருவத் திருமேனியைப் புருவ நடுவிலும், துவாதசாந்தத்தில் கூத்தப் பெருமானையும் பாவனையால் வழிபடுவர் ஆகலின், இவர்கள் மேற்கூறிய பதமுத்திகளை அடைவர் என்க.

ஞானத்தின் வகைகள்

ஞானம் அருளாசிரியர் அருள் மொழியாலே கிடைக்கும் அவ் அருள்மொழியைக் கேட்டல், சிந்தித்தல், தெளிதல், நிட்டை கூடல் - ஆகிய இவையே ஞானத்தில் சரியை கிரியை யோக ஞானங்களாம்.

கேட்டல் சிந்தித்தல் அளவில் நின்றோர் மேற்கூறிய சரியை கிரியையாளர் அடையும் பத முத்தியையே அடைவர்.

தெளிதலைப் பெற்றோர் யோகிகள் அடையும் பயனை அடைவர்.

அங்ஙனமாயின் ஞானிகட்கும், ஏனைச் சரியையாளர் முதலிய மூவர்க்கும் இடையே ஏற்றத் தாழ்வு யாதும் இல்லையோ எனின்.

ஞானத்தில் சரியை முதலிய மூன்றனை எய்தினோர் மறுபிறப்பை அடைதல் மிகச் சிறுபான்மை, ஏனைச் சரியையாளர் முதலிய மூவரும் மறுபடியும் நிலத்தில் வந்து பிறந்து ஞான குருவால் ஞானம் பெற்றே பர முத்தியை அடைவர்.

இவர்கள் பத முத்தியில் இருந்தே பர முத்தியை அடைதல் மிக மிகச் சிறுபான்மை.

நிட்டையும் சவிகற்பம், நிருவிகற்பம் என இருவகைப்படும், சவிகற்ப நிட்டையில் நின்றோர் இலய தத்துவங்களாகிய சத்தி சிவ தத்துவ புவனங்களை ஏற்ற பெற்றியால் எய்தி, ஏற்ற பெற்றியால் வாழ்வர்.

சவிகற்ப நிட்டையில் நின்றோர் உலகியலை உணர்தல் உண்டு.

நிருவிகற்ப நிட்டையில் நின்றோரே பர முத்தியாகிய பர சாயுச்சத்தை அடைவர்.

சத்தி சிவ தத்துவங்கள் 'அபர முத்தி இடங்கள்' எனப்படும். அவற்றை அடைந்தோர் 'அபர முத்தர்கள்' எனப்படுவர்.

அதிகார தத்துவ போக தத்துவங்களில் அடையும் சாயுச் சங்கள் 'பத சாயுச்சம்' எனப்படும். அவை அவ்வத் தத்துவத் தலைவர்களது அதிகாரங்களைத் தாமே அவர் ஏவல் வழி நின்று செய்தலாம்.

சதாசிவ தத்துவ புவனத்தில் சதாசிவ மூர்த்திபால் சாயுச்சம் பெற்றோர் 'அணு சதாசிவர்' எனப் பெயர் பெறுவர்.

இனி, பாடியம் உடையார் ''பத முத்தி - எனப்படுவன எல்லாம் சீகண்ட புவனத்துள்ளனவே யன்றிச் சுத்த தத்துவ புவனத்தன அல்ல'' எனவும் ''ஞானத்தால் அன்றி ஆணவ மலம் அறாது ஆதலாலும், ஆணவம் நீங்கப் பெறாதோர் சுத்த மாயையை அடையார் ஆதலாலும் பத முத்திகளைச் சுத்த தத்துவப் பேறாகக் கொள்ளுதல் கூடாது'' எனவும் உரைத்தார்.

வழி நூலாகிய சிவஞான சித்தியார் சுபக்கம் 8-ம் சூத்திரத்துள் அவ்வாறு கூறவில்லை உரையும் அவ்வாறில்லை.

ஞானமே யன்றிச் சரியை கிரியா யோகங்களும் சிவபிரானது முதன்மையை உணர்ந்து அவனைப் பொது நீக்கி வழிபடும் வழிபாடுகளே. அங்ஙனம் வழிபடப்படும் திருமேனிகள் யாவும் சிவபெருமானது திருமேனிகளே ஆகலான் 'அவ்வழிபாடு களைச் செய்தோர் உருத்திர புவனத்தையே அடைவர்'—எனக் கூறுதல் பொருத்தம் உடையதாகத் தோன்றவில்லை.

மற்றும் சரியை, கிரியை, யோகம்--என்பனவும் ஞானத்தோடு சிறிதும் தொடர்பில்லாதவை அல்ல. அதனை அவரே, "அறிதல் ஒப்புமையால் அரும்பு, மலர், காய், கனிபோல ஞானமேயாம்" என உரைத்தார்.

அங்ஙனமாயபொழுது சரியை முதலிய மூன்றில் நின்றார் ஆணவ மலம் நீங்கப் பெறாதவராதல் எங்ஙனம்?

ஆணவ மலம் நீங்காத நிலைமை இருப்பின் அவர்களை, "சத்தி நிபாதர்" -- என்றல் பொருந்துமோ?

சத்தி நிபாதம் வாய்க்கப் பெற்று உண்மைச் சிவ புண்ணி யத்தில் நிற்பாரையும், ஏனை உலகரோடு ஒருங்குவைத் தெண்ணின், சத்தி நிபாதம் இன்றியும் சிவபிரானைப் பொது நீக்கி வழிபடும் நிலை உளதாகும் என்பது படும். அஃது உண்மை யாமாறில்லை.

இனி, சுத்த தத்துவ புவனங்கள் யாவும் அபர முத்தி நிலைகளேயாயின், அவற்றை அடைந்தோர் பர முத்தியைத் தலைப்படாது அவ் அபர முத்தி நிலைகளிலே நிற்கக் காரணம் யாது? ஆணவ மலம் நீங்கினும் அதன் வாசனை நீங்கப் பெறாமையாலன்றோ? அதனால் சுத்த தத்துவங்களில் உள்ளவர் கட்கும் ஆணவம் பற்றற நீங்காமை அறியப்படுதலால், சரியை முதலிய மூன்றில் நின்றாரும் அப்புவனங்களை யடைதல் கூடுமன்றோ?

தவ வகைகள்

'இறப்புடைத் தவம், இறப்பில் தவம்' எனத் இருவகைப் படும் - என்பதும், 'அவற்றுள் இறப்பில் தவமாவன சரியை கிரியா யோகங்கள்' என்பதும் மேலே கூறப்பட்டன.

புண்ணிய வகைகள்

இனித் தவம், 'புண்ணியம்' எனவும் சொல்லப்படும் ஆதலின் புண்ணியங்களும் இருவகைப்படுதல் சொல்ல வேண்டா. இறப்புடைத் தவங்கள் பசுக்களாகிய உயிர்களை நோக்கிச் செய்யப்படுதலின் 'பசு புண்ணியம்' என்றும், இறப்பில் தவங்களாகிய சரியை முதலிய மூன்றும் சிவபிரானை நோக்கிச் செய்யப்படுதலின், 'சிவ புண்ணியம்' அல்லது 'பதி புண்ணியம்' என்றும் சொல்லப்படும்.

அபுத்தி பூர்வ புத்தி பூர்வ சிவ புண்ணியங்கள்

யாதொரு செயலும் அறியாது செய்யப்படின், 'அபுத்தி பூர்வம்' என்றும், அறிந்து செய்யப்படின் 'புத்தி பூர்வம்' என்றும் சொல்லப்படும். அவ்வாற்றால் சிவ புண்ணியமும் அபுத்தி பூர்வம், புத்தி பூர்வம்' என இருவகைப்படும்.

'புத்தி பூர்வச் செயல்களே வலிமையுடையன. அபுத்தி பூர்வச் செயல்கள் வலியில்லனவாம்.

"யான் சிவனுக்கு இத் தொண்டினைச் செய்கின்றேன்"— என்னும் எண்ணம் இல்லாமலே ஒருவன் தன்னியல்பால் ஏதோ ஒரு செயலைச் செய்ய அது சிவன் பணியாய் முடியுமாயின் அஃது அபுத்தி பூர்வ சிவ புண்ணியமாகும்.

வாணிகம் செய்வாரிடத்தில் வாங்கிய சில பொருள்களை வாங்கினோர் சிவன் பணிக்கு ஆக்குவார்களாயின், வாணிகர் விலை பெற்றுக்கொண்டாராயினும் அவற்றைக் கொணர்ந்து கொடுத்ததனால் ஆம் அபுத்தி பூர்வ சிவ புண்ணியம் சிறிது அவர்க்கு உண்டு.

"சிவன் கோயிலில் எரிந்துகொண்டிருந்த விளக்கில் இருந்த நெய்யை உண்ண எலி ஒன்று வாயை வைத்தபொழுது விளக்குச் சுட்டமையால் வாயை இழுத்தபொழுது விளக்குத் தூண்டப்பட்டு ஓங்கி எரிய, அதன் பயனாக அவ் எலி மகாபலியாகப் பிறந்து மூவுலகையும் அரசாண்டது" என்பதும்,

"திருக்கயிலையில் சிவனும், உமையும் ஒரு வில்வ மர நிழலில் அமர்ந்திருந்தபொழுது அம் மரத்தின்மேல் இருந்த முசு ஒன்று தன்னியல்பால் சில இலைகளைப் பறித்து வீழ்த்த அவ் இலைகள் அவர்கள் மேல் வீழ்ந்தமையால் சிவார்ச்சனை செய்ததாகி, அம்முசு, 'முசுகுந்தன்' என்னும் சோழனாய்ப் பிறந்து இந்திரனுக்கும் உதவி செய்த பெருமையைப் பெற்றது"—என்பதும் புராண வரலாறுகள்.

இவை போல்வன எல்லாம் அபுத்தி பூர்வ சிவ புண்ணியங்கள்.

சிவபெருமானைத் தலைவனாக உணராமல் ஏனைத் தேவருள் ஒருவனாக எண்ணி வழிபடுவதும் அபுத்தி பூர்வ சிவ புண்ணியமேயாம்.

அபுத்தி பூர்வ சிவ புண்ணியங்கட்குப் பயன் அடுத்த பிறப்பில் புத்தி பூர்வமாகச் சிவ புண்ணியங்களில் ஈடுபடும் நிலையைப் பெறுதலேயாகும்.

'சிவபிரானே முதற் கடவுள்; அவனே உலக முதல்வன்; மற்றியாரும் தன்னொப்பார் இல்லாதான்; பிறப்பில் பெருமான்: தன் வயத்தனாதல் முதலிய எண் குணங்களை யுடையவன்' என உணர்ந்து, அவ்வுணர்வின்வழி அவனை வழிபடுதலே புத்தி பூர்வ சிவபுண்ணியமாகும்.

பொதுச் சிறப்புச் சிவ புண்ணியங்கள்

ஆசிரியர்பால் தீக்கை பெறாது தாம் அறிந்தவாற்றானே சிவனை வழிபடுதல் பொதுச் சிவ புண்ணியமாகும்.

ஆசிரியர்பால் தீக்கை பெற்று அவரது உரைவழி நின்று சிவனை வழிபடுதல் சிறப்புச் சிவ புண்ணியமாகும்.

உபாய உண்மைச் சிவ புண்ணியங்கள்

பொதுச் சிவ புண்ணியமாயினும், சிறப்புச் சிவ புண்ணியமாயினும் அவற்றை உலகப் பயன் கருதிச் செய்யின் உபாயச் சிவ

புண்ணியங்களாம். உலகப் பயன் கருதாது அன்பானே செய்யின் உண்மைச் சிவபுண்ணியங்களாம்.

உபாயப் பொதுச் சிவபுண்ணியங்கள் அவரவர் கருதிய பயனைத் தந்து, சீகண்ட புவனத்தை அடைவித்துப் பின் வரும் பிறப்பில் உண்மைச் சிவபுண்ணியங்களில் ஈடுபடச் செய்யும். இது பற்றியே அப்பர் பெருமான்,

"காமி யம்செய்து காலம் கழியாதே"[1] என அருளிச் செய்தார். காமியம்—பயன் கருதிச் செய்யும் தொண்டு.

உண்மைச் சிவபுண்ணியங்களே மேற்கூறியவாறு சாலோகாதி பயன்களை முன்னே தந்து, பின்னர் ஞானத்தைத் தரும்.

பொது உண்மைச் சிவபுண்ணியம் சிறப்பு உண்மைச் சிவ புண்ணியத்தின் வழியானே ஞானத்தைத் தரும்.

முதல் அதிகரணம் முடிந்தது

---

1. திருமுறை—5.

இரண்டாம் அதிகரணம்

[''தம்முதல் குருவுமாய் உணர்த்த'']

முன்னுரை

''வித்தியா குரு, கிரியா குரு முதலியோர் போல ஞான குருவும் நம்மனோரில் ஒருவரேயாவர்; உயிர்க்குயிராய் உள்ள முதல்வனே ஞானகுருவாய் வருவன் எனல் வேண்டா'' என்பாரது கொள்கை பற்றி எழும் தடையை நீக்கி, ''ஞான குரு ஆவான் முதல்வனே'' என நிறுவுவது இவ்வதிகரணம். அதனால் இது சற்குரு அதிகரணமாகும்.

அதிகரணம்

மேற்கோள்

இனி இவ்வான்மாக்களுக்குத் தமது முதல்தானே குருவுமாய் உணர்த்தும் - என்றது

ஏது

அவன் அன்னியமின்றிச் சைதன்னிய சொரூபியாய் நிற்றலான்.

மேற்கோள் விளக்கம்

''இவ்வான்மாக்கள்'' என்றது, 'தவம் மிகப் பெற்ற ஆன்மாக்கள்' என்றபடி.

முன் அதிகரணத்தில், 'தவ மிகுதியால் இருவினை ஒப்பு நிகழும்' எனவும், 'அது நிகழவே ஞானம் நிகழும்' எனவும் கூறின்மையால், ஓர் உயிருக்கு இருவினையொப்பு உண்டாயினமையை யார் அறிதல் கூடும்? எஞ்ஞான்றும் உயிர்க்கு உயிராய் நின்று உணர்த்தி வரும் முதல்வனே அதனை அறிதல் கூடும். அதனால், இருவினை ஒத்த நிலைமையை அறிந்து வந்து ஞானத்தை உணர்த்துபவன் முதல்வனேயல்லது பிறர் அல்லர் என்றபடி. இதனையே,

> ''அகத்துறுநோய்க்கு உள்ளின ரன்றி, அதனைச்
> சகத்தவரும் காண்பரோ தான்''

என உமாபதி தேவர் கூறினார்.

---

1. திருவருட் பயன் — 42

ஏது விளக்கம

"முதல்வனே குருவாகி வருவான்" எனக் கூறுதற்கு, 'அவன் மாயா காரியமாகிய மானுட உடம்பை அடைவான் அல்லன்' என்பது நுமது கொள்கையாதலின் அது கூடாது, 'கூடும்' எனின், அவன் அது பொழுது உயிர் இனத்தவன் ஆதல் அல்லது இறைவன் ஆதல் கூடாது. ஆகையால், எல்லா உயிர்களோடும் இயைந்து நிற்கின்ற இறைவன், மானுட உயிர் ஒன்றினை ஏவி, அது வாயிலாகவே ஞானத்தை உணர்த்துவன். அவன், தானே ஞானத்தை உணர்த்துதல் இல்லை - என அவர் மேலும் நிகழ்த்தும் தடையை விடுத்து, மேற்கோளை ஏதுவாய் நிறுவினார்.

அன்னியம் இன்றி — ஞான குரு ஆவார் சிவத்தன்மை நீங்கிச் சிவமேயானவரல்லது, பொதுப்படத் தவநெறியளவிலே நிற்பவர் அல்லர் ஆதலின் அவரிடத்து முதல்வன் பாலில் நெய்போல விளக்கம் இன்றி நில்லாது, தயிரில் நெய்போல இனிது விளங்கி, அவர் இயல்புகளைக் கீழ்ப்படுத்தித் தன் இயல்பு மேம்பட நிற்பான் ஆதலின், அவர் நம்மனோரில் ஒருவராகாது சிவனே யாவர். அதனால், "தமது முதல்தானே குருவுமாய் உணர்த்தும்" என்ப தாம்

சைதன்னியம் — அறிவுத் தன்மை. அஃது இங்கு, சுத்தான்ம சைதன்னியத்தைக் குறித்தது சொரூபி - வடிவமாக உடையவன்.

முதல்வன் சிலரை ஏவிச் செய்தல், அவரை இடமாகக் கொண்டு செய்தலாம். அவன் தானே செய்தல், ஒருவரிடத்தில் அவரது இயல்பைக் கீழ்ப்படுத்தித் தன்னியல்பு மேம்பட்டுத் தோன்ற நின்று செய்தலாம்.

இவற்றுள் முன்னையது, 'அதிட்டான பட்சம்' என்றும் பின்னையது 'ஆவேச பட்சம்' என்றும் சொல்லப்படும்.

சரியை முதலியவற்றை உணர்த்துமிடத்து இறைவன் அவ் வாசிரியரை அதிட்டித்து நின்று உணர்த்துவான். ஞானத்தை உணர்த்துமிடத்து ஞான குருவை ஆவேசித்து நின்று செய்வான். அது பற்றியே 'முதல்வனே ஞான குருவாய் வருவான்' என்பது சொல்லப்படுகின்றது.

தெய்வம் ஆவேசிக்கப்பட்டாரது செயல்கள் யாவும் அவர் செயலாகாது, தெய்வத்தின் செயலே ஆதல் போல, ஞான குருவின் செயல்கள் யாவும் சிவன் செயலேயாம்.

'இத்தகைய ஞான குருவால் அன்றி, ஞானம் வாராது'—என்பதை அருணந்தி தேவர் "ஆசான் அருளால் அடிசேர் ஞானம் வந்திடும் மற்றொன்றாலும் வாராதாகும்" எனவும், உமாபதி தேவர்

"ஞானம் இவனொழிய நண்ணியிடும், நற்கல் அனல்
பானு ஒழியப் படின்"

என்வும் வலியுறுத்தினர்.

"மறிசேர் கையினனே! மத மாவுரி போர்த்தவனே!
குறியே! என்னுடைய குருவே! உன்குற்றேவல் செய்வேன்;
நெறியே நினடியார் நினைக்கும் திருக் காளத்தியுள்
அறிவே! உன்னையல்லால் அறிந்தேத்தமாட்டேனே"

எனச் சுந்தரர் இறைவனை, "என்னுடைய குருவே" என அழைத்ததும் இக்கருத்துப் பற்றியேயாம்.

தோற்றுவாய்

'சிவன் குருவடிவாகி வந்து அருளாமலும் ஞான சம்பந்தர், அப்பர் முதலிய சிலருக்கு ஞானம் நிகழ்ந்தவாறு என்னை?',—என்னும் ஐயத்தை ஓர் எடுத்துக்காட்டால் நீக்குகின்றார்.

மெய்ஞ்ஞானம் தானே விளையும்விஞ் ஞானகலர்க்(கு);
அஞ்ஞான அச்சகலர்க்(கு) அக்குருவாய்—மெய்ஞ்ஞானம்
பின்னுணர்த்தும்; அன்றிப் பிரளயா கலருக்கு
முன்னுணர்த்தும் தான் குருவாய் முன்.

---

1. சிவஞான சித்தியார் சுபக்கம் 12ம் சூத்திரம் 6
2. திருவருட் பயன் — 50
3. திருமுறை — 7. 26, 41

இதன் பொருள்

ஆணவ பந்தத்தின் வேறுபாட்டால் உயிர்கள் மூன்று வகைப் படும் என்பது இரண்டாம் நூற்பா, இரண்டாம் அதிகரணத்து உரையில்[1] சொல்லப்பட்டது. அவற்றுள்,

விஞ்ஞானகலர்க்கு - ஆணவம் ஒன்றையே உடையராய், 'மேல் உயிர்' எனப்படும் விஞ்ஞானகலருக்கு, மெய்ஞ்ஞானம் தானே விளையும் - உண்மை ஞானமும் இறைவன் இயல்பாக உள்நின்று உணர்த்தும் முறையானே உண்டாகும்.

அஞ்ஞான அச்சகலர்க்கு அக்குருவாய் - நிலையில்லாது மாறி மாறி வரும் முக் குணங்களால் மயங்குதலை உடையராய், இங்கு விதந்து ஓதப்பட்ட ஐம்பொறிகளால் ஈர்ப்புண்டு, 'கீழ் உயிர்' எனப்படும் சகலர்க்கு இறைவன் மேற்கூறிய சைதன்னிய சொரூபி யாம் குருவாகி வந்து, மெய்ஞ்ஞானம் பின் உணர்த்தும் - உண்மை ஞானத்தை அக் குருவடிவில் நின்றே உணர்த்துவான்.

பிரளயாகலருக்கு - ஆணவம். கன்மம் ஆகிய இருமலங்களையே உடையராய், 'இடையுயிர்' எனப்படும் பிரளயாகலருக்கு, அன்றி - இவ் இரு வகையும் அல்லாமல், தான் குருவாய் முன் உணர்த்தும்- இறைவன் தன் உருவையே குருவடிவாகக் காட்டி, உண்மை ஞானத்தை உணர்த்துவான்.

முன் - இவ்வேறுபாட்டினை நீ நினைவாயாக.

விளக்கம்

'இவ்வேறுபாட்டினை நினையின், சிலர்க்கு நம்மனோர்க்குப் போலக் குருவாகி வந்து உணர்த்தாமல், வேறு வகையால் இறைவன் உணர்த்தினான்' என்பது பெறப்படும் என ஐயம் அறுத்தவாறாம். இதனால், 'பிறப்பால் சகலராயினார் சிலர், சிறப்பால் விஞ்ஞானகலர் பிரளயாகலரோடு ஒத்து நிற்பர்'- என்பது அறியப்படும்.

'எவ்வாற்றானும் உண்மை ஞானம் சிவனாலன்றித் தரப் படாது' - என்பது கருத்து.

---

1. பக்கம் — 179

''தானே விளையும்'' - என்றது, 'எளிதில் விளையும்' என்றபடி.

''தான் குருவாய்'' - என்பதில் ''தான், குரு'' என்பன இரண்டும் ஆகு பெயராய்த் தன் வடிவினையும், குருவடிவினையும் குறித்தன;

தன் வடிவென்றது 'இலயம், போகம், அதிகாரம்' என்னும் மூன்று நிலைகளுள் அதிகார நிலையில் கொள்ளப்படும் உருவத் திருமேனியை. அது நாற்றோள், முக்கண், கறைமிடறு முதலிய வற்றோடு கூடியதாகும்.

இவ்வடிவம் ஒரு கால் தோன்றி அருள் புரிந்து விரைய மறைவ தன்றி, மானுட வடிவில் நிற்கும் குருவைப் போலப் பல நாள் பயில நில்லாது. சகலர்க்குப் பல நாள் பயில நிற்றல் வேண்டும் ஆகலின், அவர்க்கு மானுட வடிவில் உள்ள குருவையே இறைவன் முன்னிட்டுக் கொண்டு அருள் புரிகின்றான். அது பற்றியே, ''பின் உணர்த்தும்'' எனக் கூறினார்.

விஞ்ஞானகலருக்கு உள்நின்றே உணர்த்துதல் 'தன்மையில் நின்று உணர்த்துதல்' என்றும். பிரளயாகலருக்கு ஒருகால் தோன்றி நின்று அருளுதல் 'முன்னிலையில் நின்று அருளுதல்' என்றும், சகலர்க்குக் குருவடிவில் நின்று அருளுதல் 'படர்க்கையில் நின்று அருளுதல்' - என்றும் சொல்லப்படும்.

குரு வழியாக இறைவன் மாணாக்கர்க்குச் செய்யும் அருட் செய்கைகள் 'தீக்கை' எனப்படும். 'அஞ்ஞானத்தை நீக்கி மெய்ஞ் ஞானத்தைத் தருதல்' - என்பது அச்சொல்லின் பொருள்.

விஞ்ஞானகலர்க்கும், பிரளாயகலர்க்கும் இறைவன் தன்மை யிலும், முன்னிலையிலும் நின்று அருளுதல் தானே செய்வது ஆதலின், 'நிராதார தீக்கை' என்றும், சகலர்க்குக் குருவடிவில் நின்று அருளுதல் 'சாதார தீக்கை' என்றும் சொல்லப்படும்.

சாதார தீக்கை 'சமயம், விசேடம், நிருவாணம், அபிடேகம்' - என நான்கு வகைப்படும். சமய தீக்கை சரியையில் நிற்கும் உரிமையைத் தரும். விசேட தீக்கை கிரியை. யோகம் இவற்றில்

நிற்கும் உரிமையைத் தரும். நிருவாண தீக்கை பாசங்களை அறுத்து, ஞானத்தைத் தரும். அதனால் அஃதே ஞானதீக்கையாம்.

∴ அபிடேகம் ஆசிரியத் தன்மையைத் தரும். அஃது எல்லார்க்கும் செய்யப்படுவதன்று. உரியவர்க்கே செய்யப்படும்.

எடுத்துக்காட்டில், ''பிரளயாகாலருக்கு'' என்பதில் வெண்டளை சிதைதலால், இதனை வெண்டுறையாகக் கொள்க.

தோற்றுவாய்

'இறைவன் எல்லார்க்கும் ஒரு முறையிலே அருள் செய்யாது, வேறு வேறு முறையில் அருள் செய்தல் ஏன் என்று எழும் வினாவிற்கு மற்றோர் எடுத்துக்காட்டால் விடை கூறுகின்றார்.

வெண்பா - 2

அறிவிக்க அன்றி அறியா உளங்கள்
செறியுமாம் முன்பின் குறைகள்; — நெறியின்;
குறையுடைய சொற்கொள்ளார் கொள்பவத்தின் வீடென்;
குறைவில்சகன் சூழ்கொள் பவர்க்கு.

இதன் பொருள்

உளங்கள் - உயிர்கள், நெறியின் அறிவிக்க அன்றி அறியா - (தாமே அறிய மாட்டாது அறிவித்தால் அறிதலேயன்றி அறிவிக்குமிடத்தும்) அது அதற்குரிய முறையில் அறிவித்தாலன்றி, எல்லாவற்றிற்கும் ஒரு முறையிலே அறிவித்தால் அறிய மாட்டா. (அதனால்) சகன் குறைவு இல் சூழ் கொள்பவர்க்கு - குருவினது குறைவற்ற அறிவுரையை இன்றியமையாது வேண்டி நிற்போராகிய பிரளயாகலர் சகலர்க்கு. குறைகள் முன் பின் செறியும் - அவ் அறிவுரை இன்மையாகிய குறைகள் முறையே முன்னிலையிலும், படர்க்கையிலும் நிறைவு பெறும். குறையுடைய சொல் கொள்ளார் - பிரளயாகலர் சகலர்க்கு வேண்டப்படும் குறையாகிய குருவின் அறிவுரையை வேண்டாத விஞ்ஞானகலர்க்கு. கொள்பவத்தின் வீடு என் - சிவன் இயல்பாகக் கொண்டுள்ள, உயிர்க்கு உயிராய் நின்று உணர்த்துதலாகிய அவ்வுண்மையானே வீடு பயக்கும் மெய்ஞ் ஞானம் உண்டாகும் என நீ அறிவாயாக.

விளக்கம்

ஆம், அசை. "கொள்பவர்க்கு" - என்பதிற்போல "கொள்ளார்" என்பதிலும் நான்கன் உருபு வரற்பாலது தொகுக்கப்பட்டது. பவம், சம்பவம், அஃது 'உண்மை' என்பதாம். குறை - இன்றியமையாப் பொருள்.

வீடு பயக்கும் ஞானத்தை, "வீடு" என்றது ஆகுபெயர்.

'உயிர்கள் படிமுறையானன்றி, ஒரு முறையிலே அறிய மாட்டா' என்பதை,

> "பந்தமும், வீடும் தெரிபொருட் பனுவல்
> படிவழி சென்று சென்று ஏறி" [1]

என்னும் திருவிசைப்பாவாலும் அறிக.

"குறைவில்சகன்" என்னும் சீரினை லகர ஒற்றுத் தள்ளி அலகிட்டுக் கொள்க.

தோற்றுவாய்

இறைவன் உயிர்க்குயிராய் உள்ளே தோன்றாத் துணையாய் நிற்பவன் ஆதலின், அவன் மேற்கூறியவாறு முன்னிலையிலும், படர்க்கையிலும் தோன்றி நிற்பானோ? என்று எழும் ஐயத்தை மற்றோர் எடுத்துக்காட்டால் நீக்கி, மேற்கூறியதனை வலியுறுத்துகின்றார்.

வெண்பா—3

> இல்லா முலைப்பாலும், கண்ணீரும் ஏந்திழைபால்
> நல்லாய்! உளஆமால்; நீர்நிழல்போல்—இல்லா
> அருஉருவாய் நின்றானை யாரறிவார், தானே
> உருவாகித் தோன்றானேல் உற்று.

இதன்பொருள் :

நல்லாய்—நன்னெறியை அடைந்த மாணாக்கனே! ஏந்திழைபால்—ஏந்திய அணிகலங்களையுடைய ஒரு பெண்ணினிடத்து,

1. கருவூர்த் தேவர் திருவிடை மருதூர் — 5

முலைப் பாலும் கண்ணீரும் இல்லா உள ஆகும்—அவள் தன் குழவியைக் காணுதற்கு முன்பு வெளிப்படாது நுண்ணியவாய் மறைந்திருப்பினும். அவள் தன் குழவியைக் கண்ட பின்பு அவை பரியமாய் வெளிப்பட்டுத் தோன்றுகின்றன. (அதுபோலவே) நீர் நிழல்போல - நீரில் உள்ள நிழல் புலப்பட்டுத் தோன்றாது மறைந்தே நிற்றல்போல. இல்லா அருவாகி நின்றானை - (உயிருக்குப் பக்குவம் வாராதபொழுது நுண்ணியனாய் உள்ளே மறைந்து நிற்பினும், பக்குவம் வந்தபொழுது பரியனாய் வெளிப் பட்டுத் தோன்றுவன்) அவனை. தானே உருவாகித் தோன்றா னேல்—அவ்வாறு அவன் ஒருகாலத்தும் பரியனாய் வெளிப்படாது நிற்பின். உற்று யார் அறிவார்—நேர்பட்டு யார் காண்பார். (ஒருவரும் காணமாட்டார்).

விளக்கம்

'ஒருவரும் ஒருகாலத்தும் காணாராயின், அவன் உயிர்க் குயிராய் நிற்றலும் பெறப்படாது' என்பதாம்.

"இல்லா" இரண்டில் முன்னது முற்றெச்சம்; பின்னது ஈறுகெட்ட எதிர்மறைக் குறிப்புப் பெயரெச்சம். ஏந்திழை, அன்மொழித் தொகை. வருவித்துரைத்தன இசையெச்சங்கள். முலைப்பாலும், கண்ணீரும் காரணம் இல்வழி வெளிப் படாமைக்கும் காரணம் உள்வழி வெளிப்படுதற்கும் உவமை யாயின, 'உரிய காலத்தில் பரியனாய்த் தோன்றுவான்' என்பதை நன்கு வலியுறுத்தற்கு, "தோன்றானேல் யார் அறிவார்" என எதிர்மறை முகத்தாற் கூறினார். இஃது எடுத்துக் காட்டுவமை.

புறத்து வீசும் ஒளி நீரின் அகத்தும் செல்லக் காணுதலால், அங்ஙனம் ஒளி சென்ற காலத்து நீரினுள் இயங்கும் உயிர்களது நிழலும் உளவாதல் அறியப்படும். ஆயினும் அந்நிழல் புறத்தில் உள்ளார்க்குப் புலனாதல் இல்லையாதலின், அதனை இறைவன் உயிர்க்கு உயிராய்த் தோன்றாது நிற்றற்கு உவமையாகக் கூறினார்.

தாய்க்குத் தன் குழவிமேல் உள்ள அன்பானே பால்சுரத்தலை,

"சுரந்த திருமுலைக்கே துய்யசிவ ஞானம்
சுரந்துண்டார் பிள்ளையெனச் சொல்லச்—சுரந்த
தனமுடையாள் தென்பாண்டி மாதேவி தாழ்ந்த
மனமுடையாள் அன்பிருந்த வாறு"[1]

என்னும் திருக்களிற்றுப்படியாராலும், அன்பு காரணமாகக் கண்ணீர் உண்டாதலை.

"அன்பிற்கும் உண்டோ அடைக்குந்தாழ்! ஆர்வலர்
புன்கணீர் பூசல் தரும்"[2]

என்னும் திருக்குறளாலும் உணர்க.

இரண்டாம் அதிகரணம் முடிந்தது

---

1. வெண்பா 54.
2. குறள் - 71

மூன்றாம் அதிகரணம்

[''ஐம்புல வேடரின் வளர்ந்து அயர்ந்தனை'']

முன்னுரை

'ஐம்பொறி முதலிய கருவிகள் உயிர் பக்குவம் அடையாத காலத்தில் அதன் அறிவைத் தம் வழியில் ஈர்த்துச் செல்லும். ஆயினும், உயிர் பக்குவம் அடைந்த காலத்தில் அவையே இறைவன்பால் செலுத்தும் ஆதலின், இறைவன் தோன்றாத நிலையினின்றும் நீங்கிக் குருவாய்த் தோன்றி நின்று ஞானத்தை உணர்த்த வேண்டுவதில்லை'—எனச் சிவ சங்கிராந்த வாதிகள் கொள்கை பற்றி நிகழும் தடைக்கு விடை கூறி, ''ஐம்புல வேடரின் அயர்ந்தனை'' என்றதை நிறுவுவது இவ்வதிகரணம். அதனால் இஃது ஐம்புல அதிகரணம் ஆகும்.

அதிகரணம்

மேற்கோள்

இனி இவ்வான்மாக்கள் ஐயுணர்வுகளான் மயங்கித் தம்மையுணரா என்றது

ஏது

அவைதாம் பளிங்கிலிட்ட வன்னம் போலக் காட்டிற்றைக் காட்டி நிற்றலான்.

மேற்கோள் விளக்கம்

இவ் ஆன்மாக்கள் - முன்னை அதிகரணத்து இறுதியில், 'இறைவன் உருவாகித் தோன்றாத பொழுது அவனை அறிய மாட்டா' எனக் கூறப்பட்ட உயிர்கள்.

ஐயுணர்வு - உருவம் முதலிய ஐம் புலன்களை உணரும் உணர்வு.

ஏது விளக்கம்

பளிங்கில் இட்ட வன்னம் - படிகத்தில் தீட்டப்பட்ட பலவகை நிறங்கள். அந்நிறங்கள் படிகத்தின் ஒளியைக் காட்டாது மறைத்துத் தம்மையே காட்டி நிற்றல் போல, ஐம்பொறிகள்

உயிரின் இயல்பைத் தோற்றுவியாது மறக்கச் செய்து, தம்மால் கவரப்பட்ட ஐம்புலன்களையே தோற்றுவித்தலால், அவற்றது துணையால் உயிர் தன்னியல்பை அறிய மாட்டாது. அது பற்றியே, ''இவ் ஆன்மாக்கள் ஐயுணர்வுகளால் மயங்கித் தம்மை உணரா'' என மேற்கோளில் சொல்லப்பட்டது.

காட்டிற்று - தம்மால் காட்டப்பட்டது. இது பளிங்கில் இட்ட வன்னத்திற்கும், ஐம்பொறிகட்கும் உள்ள பொதுத் தன்மை

''காட்டிற்று'' - என்னும் ஒருமை ஒவ்வொரு பொறிக்கும் தனித் தனிப் பொருந்துவதாகும். ஒவ்வொரு பொறியும் ஒவ்வொரு புலனையன்றி, வேறு புலனைக் காட்ட மாட்டாமையை நினைக்க.

எளிதின் விளங்குவனவாய ஐம்பொறிகளது துணையால் உயிர்கள் தம் இயல்பை உணர்தல் கூடாமை கூறவே, பிற கருவி களின் துணையாலும் உயிர்கள் தம் இயல்பை உணர மாட்டாமை தானே விளங்கும்.

கருவிகள் உயிரியல்பை உணர்த்தாது பிறவற்றையே உணர்த்தி நிற்றலால், உயிர் தன்னை அக் கருவிகளாகவே மயங்குகின்றது.

தோற்றுவாய்

'கருவிகள் உள்ள வரையில் அவற்றால் வரும் உணர்வே உயிர் கட்கு உளவாகும். கருவிகள் நீங்கினால் ஆணவத்தில் அழுந்தும் இருள் நிலையே உளதாம். ஆகவே, முதல்வன் குருவாக வந்து உணர்த்திய போதிலும் உயிர் உண்மையை உணர்தற்கு வழியில்லை யன்றோ' - என நிகழும் தடைக்கு விடை எடுத்துக்காட்டாற் கூறுகின்றார்.

வெண்பா

பன்னிறங் காட்டும் படிகம்போல் இந்திரியம்
தன்னிறமே காட்டும் தகைநினைந்து—பன்னிறத்துப்
பொய்ப்புலனை வேறுணர்ந்து பொய்பொய்யா மெய்கண்டான்
மெய்ப்பொருட்குத் தைவமாம் வேறு.

இதன் பொருள்

பல் நிறம் காட்டும் படிகம் போல் - தனது இயல்பைத் தான் காட்டாது தன்னையடுத்த பொருளின் நிறத்தையே தன் நிறமாகக்

காட்டுகின்ற பளிங்குபோல இந்திரிய நிறமே காட்டும் தகை நினைந்து - 'ஐம்பொறி முதலிய கருவிகளைப் பற்றிய பொழுது தனது இயல்பைக் காட்டாது அக் கருவிகளின் இயல்பையே தன் கண் கொண்டு காட்டும், சார்ந்ததன் வண்ணமாம் இயல்பை யுடையது உயிர்' எனத் தனது இயல்பை முன்னர்ச் சிந்தித்து உணர்ந்து, பின்னர், பல் நிறத்து—பல்வேறாய நிறங்கள் பளிங்கின் நிறத்திற்கு வேறாதல் போல, பொய்ப் புலனை வேறு உணர்ந்து - நிலையாமையை உடைய கருவிகள் தன்னின் வேறாதலை உணர்ந்து, பொய் பொய்யா மெய் கண்டான் - நிலையாமையை உடைய கருவிகள் நிலையாமையுடையனவாகவே நீங்கிப் போக, நிலைத்ததாகிய தன் இயல்பை உணரும் மெய்யுணர்வு உண்டாகவே செய்யும். அங்ஙனம் உணர்ந்த மெய்யுணர்வுடையோன், வேறு மெய்ப் பொருட்கு தைவம் ஆம் - நிலையாமையையுடைய அக்கருவி களின் வேறாய், என்றும் ஒருபெற்றித்தாம் மெய்ப் பொருளைச் சார்ந்து, அதற்கு அடியவன் ஆவான்.

விளக்கம்

இந்திரியம், இன ஒருமை. "தன் நிறம்" என்பதில் தன், சாரியை, "பன்னிறத்து" என்பதில் 'போல' என்னும் உவம உருபு தொக்கது. தைவம் 'தேவனது உடைமை' என்னும் பொருளதாகிய வடசொல்.

"மெய் கண்டான்" - என்றதனால், 'மெய்யைக் காணுதல் திண்ணம்' என்பது பெயர்த்துரை முகத்தால் பெறப்பட்டது.

இதனால், மேல் எழுந்த தடைக்கு விடை கூறப்பட்டமை காண்க.

'மெய் காண்பான்' என்றே முடித்து விடாமல், "மெய்ப் பொருட்குத் தைவமாம் வேறு" என்றது, அடுத்து வரும் அதிகரணத் திற்குத் தோற்றுவாய் செய்ததாம்.

மூன்றாம் அதிகரணம் முடிந்தது.

நான்காம் அதிகரணம்

[''விட்டு......... அரன்கழல் செலும்'']

முன்னுரை

முன்னை அதிகரணத்துள், ''பொய்ப் புலனை வேறுணர்ந்து பொய் பொய்யா மெய் கண்டான் பொய்யாகிய அக் கருவிகளின் நீங்குதலன்றி, அதற்குப் பின் அவன் மெய்ப் பொருளைச் சார்தல் இயலாது. ஏனெனின், கருவிகள் இன்றி உயிர் எதனையும் செய்ய இயலாது. ஆகையால், அவன் மெய்ப் பொருட்குத் தைவமாதல் இல்லை - என்னும் பேத வாத சைவர் முதலாயினார் கொள்கை பற்றியெழும் தடைக்கு விடைகூறி, நூற்பாவினுள், ''அரன் கழல் செலும்'' என்றதனை வலியுறுத்துவது இவ்வதிகரணம். அரன் கழல் இதனுள் ''சீபாதம்'' எனப்படுகின்றது. சீபாதம் - திருவடி. அதனால் இது திருவடிப் பேற்று அதிகரணமாகும்.

மேற்கோள்

இனி இவ்வான்மாத் தன்னை இந்திரியத்தின் வேறாவான் காணவே, தமது முதல் சீபாதத்தை அணையும் என்றது.

ஏது

ஊசல் கயிறற்றால் தாய் தரையேயாம் துணையான்.

மேற்கோள் விளக்கம்

இவ்வான்மா - முன்னை அதிகரணத்தில் கூறியபடி, பொய்ப் புலனை வேறு உணர்ந்து பொய் பொய்யா மெய்யைக் கண்ட உயிர்.

மேல் எல்லாம் கூறிவந்தது போல, இங்கும் இந்திரியம் என்றது அனைத்துக் கருவிகளையும் குறிக்கும் குறிப்புடையது.

உயிர் கருவிகளைத் தன்னின் வேறாக உணர்தல் முன்னை அதிகரணத்துட் கூறப்பட்டமையின், இங்கு, ''வேறாவான் காணவே''-என்றது, 'கண்ட பொழுது' என வழி மொழிந்ததாம்.

[8]''காணவே'' - என்னும் ஏகாரம் பிற முயற்சிகளினின்றும் பிரித்தலிற் பிரிநிலை, அதனால், 'உயிர் மெய்ப் பொருளைச் சார்தற்குக் கருவிகளை அது தன்னின் வேறாகக் காண்டலே போதும்; வேறொரு முயற்சி வேண்டா' - என்பது பெறப்பட்டது. படவே, 'கருவிகள் இன்மையின் முயற்சி கூடாமையால், வருவதொருகேடில்லை' என்பதாம்.

சிறிதாகாது, எங்குமாய் நிற்கும் பெருமையையுடைய பொருள் ஒன்றைப் பற்றுதல், விடுதல் என்பன எல்லாம். அறிவாற் பற்றுதலும், அறிவால் பற்றாது விடுதலுமேயாதல் பற்றி, 'விட' என்னாது, ''காண'' - என்றார். காண்டல் - அறிதல்.

ஏது விளக்கம்

ஊசல் - ஊசற் பலகை. அற்றால் - முற்றும் அறப் பெற்றால். இதன் பின் 'அதற்கு' என்னும் சொல்லெச்சம் வருவிக்க. தாய் - குழவியைத் தாங்கும் தாய் போலத் தாங்கும் பொருள்; உவமையாகு பெயர். ''தரையே'' என்னும் ஏகாரம் பிற பொருள்களினின்றும் பிரித்தலின் பிரிநிலை. துணையான் - உவமையால்; என்றது, 'உவமையின்படி' - என்றவாறு. 'உவமையின்படி சீபாதத்தைஅணையும்' - என மேலே காட்டி முடிக்க. அங்ஙனம் முடிக்கவே, 'கயிறு முற்றும் அறப்பெற்ற ஊசற் பலகை தரையைச் சார்தற்குப் பிறிதொரு முயற்சி வேண்டாமை போலக் கருவிகள் அனைத்தும் நீங்கப் பெற்ற உயிர் மெய்ப் பொருளைச் சார்தற்குப் பிறிதொரு முயற்சி வேண்டா' என்பது தெளிவாம். ஆகவே, கருவிகளின் நீங்கிய உயிர் மெய்ப் பொருளை அணையுமாறில்லை! எனப் பிறர் கூறும் வழக்குரைகள் மறுக்கப்பட்டனவாம்.

தோற்றுவாய்

'கருவிகளின் நீங்கிய உயிர் மெய்ப் பொருளை அணையுமாயினும், கருவிகளின் நீங்கி ஆணவ இருளை அடைந்த உயிர், பின் அவ் இருளினின்றும் மீளுதல் போலச் சிவத்தை அணைந்த உயிரும் பின்பு அதனினின்றும் மீளும் போலும்' என ஐயுறும் மாணாக்கற்கு எடுத்துக் காட்டால் விளக்கம் அளிக்கின்றார்.

வெண்பா - 1

சிறை செய்ய நின்ற செழும்புனலின், உள்ளம்
சிறைசெய் புலன்உணர்வின் தீர்ந்து - சிறைவிட்(டு)
அலைகடலிற் சென்றடங்கும் ஆறுபோல் மீளா(து)
உலைவில் அரன் பாதத்தை உற்று.

இதன் பொருள்

உள்ளம் - உயிர், சிறை செய்ய நின்ற செழும் புனலின் - அணையை உயர்த்திக் கட்டுதலால் கடலை நோக்கி ஓடாது தடைப் பட்டுத் தேங்கி நிற்கும் மிகுந்த ஆற்று நீர் போல, சிறை செய் புலன் உணர்வின் - மெய்ப் பொருளைச் சார ஒட்டாது தடுக்கின்ற கருவி யுணர்வுகளால் தடையுண்டு நின்று, சிறை விட்டு சென்று அலை கடலில் அடங்கும் ஆறு போல் - அணை உடைந்தவுடன் முடுகிச் சென்று, அலைகின்ற கடல் நீரிற் கலந்து அதனுள் அடங்கி மீளாத ஆற்று நீர் போல. தீர்ந்து - கருவி யுணர்வுகள் நீங்கிய வுடன். அரன் உலைவில் பாதத்தை உற்று மீளாது - சிவனது கெடுதல் இல்லாத அருள் ஒளியை அடைந்து அதனுள் அடங்கிப் பின் மீளுதலைச் செய்யாது.

விளக்கம்

''தீர்ந்து, விட்டு'' என வந்த செய்தென் எச்சங்களை 'தீர்த்த வழி, விட்டவழி' - எனத் திரித்துக் கொள்க.

''அடங்கும்'' - என உவமையில் வந்த வினை பொருளிலும், ''மீளாது'' - எனப் பொருளில் வந்த வினை உவமையிலும் சென்று இயைந்தன.

'ஆணவ இருளின் ஆற்றல் தேய்வுறுவது ஆதலின், அதனை அடைந்த உயிர் அதனினின்றும் மீளும். சிவனது அருளாற்றலுக்கு யாதும் கேடின்மையால், அதனை அடைந்த உயிர் மீளுமாறில்லை' எனக் காரணங் கூறி, 'மீளாது' என்பார், 'பாதம்' என வாளா கூறாது, ''உலைவில் பாதம்'' - எனச் சிறப்பித்துக் கூறினார். உலைவு - கெடுதல்.

''கற்றீண்டு மெய்ப்பொருள் கண்டார் தலைப்படுவர்
மற்றீண்டு வாரா நெறி'' [1]

எனப் பொது மறையும்,

---

1. திருக்குறள் — 356

''மீண்டு வாரா வழி அருள் புரிபவன்'' 1

எனத் திருமுறையும், 'மெய்ப் பொருளை அணைந்த உயிர் மீளுதல் இல்லை' - என்றே கூறும்.

செழும் புனலின் இன், ஒப்புப் பொருளில் வந்த ஐந்தன் உருபு, இதன் பின், உவமையில், ''நின்ற'' என்றதற்கு ஏற்ற 'நின்று' என்பது எஞ்சி நின்றது.

தோற்றுவாய்

'சிவத்தை அணைந்த உயிர் மீண்டு கருவிகளைப் பற்றுமோ' என்னும் ஐயத்தை மேற்கூறியவாற்றால் நீக்கித் தெளிவித்த பின், 'மீளாது என வலிசெய்தல் வேண்டா; ஏனெனில், கருவிகளின் வழிப் பட்டிருந்த பொழுதே உலகப் பொருள்களை வேறுபடுத்தியுணரும் சுட்டுணர்வு உயிருக்கு உளதாகும்; கருவிகளின் நீங்கிச் சிவத்தை அணைந்த பின்பு எங்கும் சிவமாகவே காணும் வியாபக உணர்வே உண்டாகும். அதனால் சிவத்தை அணைந்த உயிர் மீளினும் குற்றமில்லை' எனச் சிவாத்துவித சைவர் கொள்கை பற்றி எழும் தடைக்கு மற்றோர் எடுத்துக் காட்டால் விடை கூறுகின்றார்.

வெண்பா-2

எவ்வுருவும் தான்என்னின் எய்துவார் இல்லைதாள்;
இவ்வுருவின் வேறேல், இறையல்லன்;—எவ்வுருவும்
கண்போல் அவயவங்கள் காணா; அக் கண்ணில்லார்
கண்பேறே காண்அக் கழல்.

இதன் பொருள்

எவ் உருவும் தான் என்னின் - 'அறிவுடைப் பொருளேயன்றி, அறிவிலாப் பொருள்களும் சிவனது கலப்பால் சிவத்தன்மையுடையவே' எனக் கூறினால். தாள் எய்துவார் இல்லை - ' பாசத்தைப் பசுக்கள் விட்டுப் பதியினை அடைய முத்தி'' 2 - என்றபடி 'பாச நீக்கமே விடுதலை' என்பதின்றி, பாசத்தில் நிற்றலே வீட்டு நிலையாம். அதனால், பாசத்தை விட்டுச் சிவனது திருவடியை அடைய முயல்வார் ஒருவரும் இலராவர். (இங்ஙனம் கூறுதல் பற்றி) இவ்

---

1. திருவாசகம் - கீர்த்தித் திரு அகவல் - 117
2. சிவஞான சித்தியார் - பரபக்கம் - 295.

உருவின் வேறேல் - 'அறிவில் பொருள்களில் இவனது கலப்பு இல்லை' என யாம் கூறுவதாக எண்ண வேண்டா. (ஏனெனில், அங்ஙனம் கூறினால்,) இறை அல்லன் - சிவன், 'அவனன்றி ஓரணுவும் அசையாது' என்னும் நிலைமையை உடைய தலைமைத் தன்மை இலன் ஆவன். ('மற்று என்னையோ நீவிர் கூறுவது' எனின்)

எவ் உருவும் கண்போல் அவயவங்கள் காணா - (உருவப் பொருள்கள் யாவும் உருவமே தாமாய் நிற்றலால்) அப்பொருள் களுள் எதனையும் கண் நிறைவாகக் காணுதல் போல, ஏனைப் பொறிகள் காண மாட்டா. அக் கழல் - கண்ணிற்கு உள்ள அவ் வெற்றித் தன்மையை, அக் கண் இல்லார் கண் பேறே காண் - அத்தகைய கண்ணில்லாதவர் கண் பெற்ற பேற்றின்கண் நீ கண் டுணர்வாயாக.

விளக்கம்

இவ் உவமையால், ''எல்லாப் பொருளும் சிவனது கலப்பால் சிவத் தன்மையை உடையனவாயினும், அறிவுடைப் பொருளில் அத்தன்மை சிறந்து நிற்றலை நீ அறிவுடைய உயிர் பாசத்தால் 'பசு' எனப்படும் தன்மையின் நீங்கிச் சிவத்தன்மையை எய்திய சிவப்பேற்றின்கண் அறிவாயாக'' என்னும் பொருள் கொள்ளக் கிடந்தமையால் இஃது 'ஓட்டு' - என்னும் அணியாகும்.

'அறிவிலாப் பொருளும் சிவக் கலப்பு உடையதாயினும், அது சுட்டுணர்வையன்றி, வியாபக உணர்வைத் தாராது' - என்பது போந்தமையின், 'சிவத்தை அணைந்த உயிர் மீண்டு பாசத்திற் படுதல் குற்றம்' - என்பது வலியுறுத்தப்பட்டது

''கண்பேறு'' - என்பதன் பின் கண்ணுரு விரிக்க. ஏகாரம் தேற்றம்.

கழல், வீரர் தமது வெற்றிக்கு அறிகுறியாகக் காலில் அணியும் அணிகலம். அஃதே வெற்றியாய் நிற்கும் ஒற்றுமை பற்றி அதனை 'வெற்றி' என்றே கூறியது பான்மை வழக்கு.

தோற்றுவாய்

''ஆற்றால் அலைகடற்கே பாய்ந்தநீர் அந்நீர்மை
மாற்றிஅவ் வாற்றால் மறித்தாற்போல்''

என்றமையால், 'கடலிற் சென்று அடங்கிய நீர் மறித்து அவ் ஆற்று வழியே மீளும்' என்பதும்,

"தோற்றிப் - புலன்களெனப் போதும் புறம்பொழியின் நந்தும்
மலங்கள் அற மாற்றுவிக்கும் வந்து" [1]

என்றமையால், 'சிவத்தை அணைந்தோர் மீளுதல் உண்டு, என்பதும் பெறப்படுதலால் 'அலைகடலில் சென்று அடங்கிய நீர் மீளுதல் இல்லை' - என்றலும், 'அதுபோலச் சிவத்தை அணைந் தோர் மீறாதல் இல்லை' என்றலும் பொருந்தா - என மேலும் அவர் நிகழ்த்தும் தடைக்கு விடை மற்றோர் எடுத்துக்காட்டால் கூறுகின்றார்.

வெண்பா-3

ஐம்பொறியின் அல்லையெனும் அந்த தர! சிவனை
ஐம்பொறியை விட்டங்(கு) அணைசகலன் - ஐம்பொறியின்
நீங்கான்; நீர்ப் பாசிபோல் நீங்குமல கன்மம்வரின்
நீங்கானை நீங்கும் நீனைந்து.

இதன் பொருள்

ஐம்பொறியின் அல்லை எனும் அந்த தர - 'நீ ஐம்பொறி முதலிய கருவிகள் அல்லை' - என்னும் சித்தாந்தப் பொருளை உணர்ந்து, மேன்மை பெற்ற மாணவனே. ஐம்பொறியை விட்டு அணை சகலன் - ஐம்பொறி முதலிய கருவிகளின் நீங்கிச் சிவத்திற் சென்று பொருந்திய சகல வருக்கத்தினன். ஐம்பொறியின் நீங்கான் பின்பு ஐம்பொறி முதலிய அக் கருவிகளின் செயலால் அந்நிலையி னின்றும் நீங்குதல் பெரும்பாலும் இல்லை. நீர்ப் பாசி போல் - கல்லெறியப்பட்ட காலத்தில் நீங்கி, அக் கல்லெறி வேகம் தணிந்த பொழுது வந்து மூடுகின்ற நீர்ப்பாசிபோல, நீங்கு மல கன்மம் வரின்-மெய்ப் பொருள் உணர்வால் நீங்கிய மும்மலங்கள் அற்றம் பார்த்து ஒரோ வழி சுவட்டளவாக மெல்ல வந்து சிறுபான்மைபற்றுமாயின் (அப்பொழுதும்). நீங்கானை நினைந்து நீங்கும் - தனது அறிவை விட்டு என்றும் நீங்காதிருக்கும் சிவனை நினைவு கூர்ந்து, அம் மலங்களின் பற்றுதலினின்றும் நீங்கி விடுவான்.

விளக்கம்

அந்தம், இங்குச் சித்தாந்தம். தரம்-மேன்மை. "நீர்ப் பாசி போல்" - என்ற உவமையால், பண்டைப் பழக்கம் காரணமாக

---

1 திருக்களிற்றுப் படியார் - 11

ஒரோவழி உண்டாகும் அற்றம் பார்த்து மும்மலங்கள் வந்து பற்றுதல் பெறப்பட்டது. 'இந்நிலைமை சகலருக்கே' என்பது தோன்ற, ''அணை சகலன்'' - என்றார். ''வரின்''-என்றதனால், அவை வந்து பற்றுதல் பெரும்பான்மை நிகழாமை பெறப்பட்டது.

எனவே. 'சிவத்தை அணைந்த உயிர்க்கு மீட்சி இல்லாமையே பெரும்பான்மை. சிறுபான்மை அது நிகழின் அதற்குக் காரணம் பண்டைப் பழக்கம். அவ்வாற்றால் மீளும் நிலைமை தோன்றினும் தக்கவாற்றால் முயல, அதனினின்றும் நீங்கி, மீளாமையே நிலை பெறும்' என, மேல் எழுந்த தடைக்கு விடைகூறி, மேலது வலியுறுத்தப்பட்டது.

''நீங்கானை நினைந்து நீங்கும்'' என்றது, வருகின்ற நூற் பாவிற்குத் தோற்றுவாய் செய்ததாம். மலம், கன்மம் - இரண் டைக் கூறி, மாயை இனம் பற்றித் தழுவப்பட்டது. ''மல கன்மம்'' என்னும் உம்மைத் தொகை ஒரு சொல் நீர்மைப்பட்டு நிற்க, அதனுடன், ''நீங்கு'' என்பது இறந்த கால வினைத்தொகை நிலைப் படத்தொக்கது. ''கன்மம்வரின்'' என்னும் சீரில் மகரக் குறுக்கம் அலகு பெறாது நின்றது.

நூற்பாவின் தொகைப் பொருள்

முன்னை நூற்பாவில், 'சார்ந்ததன் வண்ணமாவது' எனக் கூறப் பட்ட உயிர், பக்குவம் இன்மையால் இயல்பிலே பதியைச் சார்ந்து பேரின்பம் உறாது பாசத்தைச் சார்ந்து, பிறப்பு இறப்புக்களை எய்திப் பெருந்துன்பத்தை அடைந்து வருகையில், சரியை, கிரியை, யோகம் என்னும் சிவ புண்ணியங்களாகிய தவச்செயல்கள் முதற் கண் அபுத்தி பூர்வமாயும், பின்பு புத்தி பூர்வமாயும் நிகழும். புத்தி பூர்வமும் முன்னர்ப் பொதுவும், பின்னர்ச் சிறப்புமாய் நிகழும் சிறப்புச் சிவ புண்ணியமும் முன்னர் உபாயமாயும், பின்னர். உண்மையாயும் நிகழும்.

உண்மைச் சிவ புண்ணிய மிகுதியால், இருவினை யொப்பு, மல பரிபாகம், சத்தி நிபாதம் ஆகியவை ஒருங்கே நிகழும். சத்தி நிபாதமும் 'மந்ததரம்' முதல் நான்கும் முறையே நிகழும். அவற்றுள் நான்காம் சத்தி நிபாதம் வந்த பொழுது, அது காறும் உயிர்க்கு உயிராய் உள்நின்று உணர்த்திவந்த இறைவன் ஆசான் மூர்த்தியை அவனே தானாய் மேம்பட்டு விளங்கி வந்து, ''நீ அறிவில் பொருளாகிய பாச இனத்தினை அல்லை; அறிவுடைப்

பொருளாகிய நம் இனத்தையாவை. தந்தையின் பொருள் முழுவதையும் முற்றப் பெறும் உரிமையுடைய மகன் போல, நம் இயல்புகள் அனைத்தையும் பெறும் உரிமையுடையை நீ'' - என்று அறிவிக்க, அதனை அறிந்த உயிர் பக்குவ மிகுதியால், பாசங்களை விட்டு நீங்கிப் பதியாகிய சிவனை அடைந்து, அவனது அருட் பேரொளியில் அடங்கி இன்புற்றிருக்கும், மீட்டும் பாசத்தின்பால் திரும்பி வாராது.

இந்நிலையை எய்திய உயிர்களுள் பக்குவத்திற் சிறிது குறை உடைய உயிர்கள் முன்னைப் பழக்கத்தால் பாசத்தை நோக்குதலும் உண்டு. அங்ஙனம் நோக்கினும் மெய்யுணர்வு பெற்ற உயிர் அருள் ஒளியை விடாது பற்றியே நிற்கும்.

என இவ்வாறு இந்நூற்பாவின் அதிகரணப் பொருள்களைத் தொகுத்துணர்ந்து கொள்ளலாம்.

எட்டாம் நூற்பா முடிந்தது

ஒன்பதாம் நூற்பா

இனி ஆசிரியர் ஒன்பதாம் நூற்பாவைப் பாடமாக ஓதியது வருமாறு :

ஊனக்கண் பாசம் உணராப் பதியை
ஞானக் கண்ணினிற் சிந்தை நாடி;
உராத்துனைத் தேர்த்தெனப் பாசம் ஒருவத்
தண்ணிழ லாம்பதி; விதி எண்ணும் அஞ் செழுத்தே

கருத்துரை

இனி அவர் சூத்திரத்தைச் சுட்டிக் கருத்துரைத்தது வருமாறு :

என்பது சூத்திரம்.
என் நுதலிற்றோ எனின்,
ஆன்ம சுத்தி பண்ணுமாறு உணர்த்துதல் நுதலிற்று.

கருத்துரை விளக்கம்

ஆன்ம சுத்தி - உயிர் மாசின் நீங்கி விளக்கம் பெறுதல். இதுவே 'திருவருட் பயனில்' 'உயிர் விளக்கம்' எனப்பட்டது.

''ஆன்மாவிற்கு மாசாவது பாசமே யாகலானும், அது, ''விட்டு அரன்கழல் செலும்'' எனவும், இவ்வான்மாத் தன்னை இந்திரியத்தின் வேறாவான் காணவே தமது முதல் சீபாதத்தை அணையும்' எனவும் முன்னை நூற்பாவிலே கூறப்பட்டது ஆகலானும் அதற்கு வேறாக இங்குச் சொல்லப்பட வேண்டிய சுத்தி யாதுளது''— எனின், அஃது உண்மையே. ஆயினும், ஆன்மாத் தன்னை இந்திரியம் முதலியவற்றின் வேறாகக் காணும் காட்சி அதிதீவிர பக்குவம் உடைய ஒரு சிலர்க்கே ஆசிரியரது அருளுரையைக் கேட்டவுடன் விரைவில் முற்றாக நிகழும். ஏனையோர்க்கு அவ்வாறு நிகழாது 'சிந்தித்தல், தெளிதல்' என்னும் படிமுறையால் மெல்லவே நிகழும். அங்ஙனம் மெல்ல நிகழப் பெறுபவர், ஊசற் கயிறு முற்றும் அறாத பொழுது ஊசற் பலகை கயிற்றிலும் நில்லாது, தரையிலும் வீழாது நிற்றல் போலச் சிவனது திருவடியையும் அடையாது, பாசத்திலும் நில்லாது அங்கும், இங்குமாய் அலமருவர். அவ்வாறின்றிப் பாசப் பற்று முற்றும் அற, உயிர்

முதல்வனது சீபாதத்தை அணையுமாற்றினை இந்நூற்பா உணர்த்துதலின், இஃதே ஆன்ம சுத்தி பண்ணுவதாம் என்க.

இதனையே வழிநூல் ஆசிரியர்,

''நேசமொடும் திருவடிக்கீழ் நீங்காதே தூங்கும்
நினைவுடையோர் நின்றிடுவர் நிலையதுவே யாகி;
ஆசையொடும் அங்குமிங்கு மாகிஅல மருவோர்
அரும்பாசம் அறுக்கும்வகை அருளின்வழி உரைப்பாம்'' [1]

எனக் கூறினார். இக் கூற்றிற்கே முன்னை நூற்பா இறுதி யதிகரணத்து இறுதியில், ''நீர்ப்பாசிபோல் - நீங்குமல கன்மம்வரின் நீங்கானை நீங்கு நினைந்து'' எனத்தோற்றுவாய் செய்யப் பட்டது.

காற்றாற் சுழன்ற காற்றாடி காற்று நின்ற பின்பும் சிறிது நேரம் சுழலும். அச்சுழற்சிக்குக் காற்றுக் காரணமாகாது, காற்றினது வேகத்தின் சுவடே காரணமாகும். அதுபோல மலம் நீங்கிய பின்னும் உயிர் அலமருதல் மலத்தின் சுவட்டினாலேயாம். இச் சுவட்டினை, 'மல வாசனை' என்றும், 'வாசனா மலம்' - என்றும் கூறுவர். அதுவும் நீங்கப் பெறுதலே ஆன்ம சுத்தி என்க.

திருவள்ளுவரும் மெய்யுணர்தலின் பின் அவாவறுத்தலைக் கூறியிருத்தலையும் அறிக.

நூற்பாவின் திரண்ட பொழிப்பு

[ஊனக் கண் பாசம் உணராப் பதியை -] இயல்பிலே குறை உடையதாகிய உயிரறிவாலும், உயிருக்குப் பாசத்தால் உண்டாகும் அறிவாலும் அறிய வாராத பதிப்பொருளை. (ஞானக் கண்ணினில் சிந்தை நாடி -) பதியினது அறிவையே அறிவாகப் பற்றி அதனாலே அப் பதிப் பொருளை உனது அறிவினுள் ஆராய்ந்து அறிவாயாக. ('அங்ஙனம் அறிதற்கு அப் பதியறிவு எவ்வாறு கிடைக்கும்' - எனின்,) [பாசம் -] இந்திரியங்கள் முதலாகிய பாசக் கூட்டம் அனைத்தையும், [உராத் துனைத் தேர்த்து என ஒருவ -] விரையத் தோன்றி விரையக்கெடுதலில் மிக்க விரைவினை உடைய பேய்த்

1. சிவஞான சித்தியார் - சுபக்கம் சூத்திரம் 8, 39

தேரோடு (கானலோடு) ஒக்கும் எனத் தெளிந்து அவற்றை நீக்கினால். [பதி தண்ணிழல் ஆம் -] அப் பதியறிவு, பிறவி வெயில் வெப்பத்திற்குக் குளிர்ந்த நிழலாய் உனது அறிவின்கண் வெளிப் பட்டுத் தோன்றும். (அங்ஙனம் தோன்றிய அஃது உன் அறிவின் கண் நிலை பெறுதற்கு) [அஞ்சு எழுத்து விதி எண்ணும் -] ''திருவைந்தெழுத்து'' எனவும், 'சிபஞ்சாக்கரம்'- எனவும் சிறப் பித்துச் சொல்லப்படும் சிவ மூல மந்திரம் இந்நிலைக்குரிய விதிப் படி அறிவாற் கணிக்கப்படும்.

விளக்கம்

உரா - முடுகித் திரிதல். 'உராதற்கண்' என ஏழன் உருபு விரிக்க. இனி, 'ஊரா' என்பது குறுகி நின்றதாக வைத்து, 'பாயா வேங்கை' - என்பதைப் போலல. 'ஊராத் தேர் - பேய்த் தேர்; கானல்' என உரைத்தலும் கூடும்.

'பசு ஞானத்தாலும், பாச ஞானத்தாலும் பதி உணர வாராது' என்றமையால், ''ஞானக் கண்'' என்றது பதி ஞானத் தையே ஆயிற்று.

'பதி, பாச ஞான பசு ஞானங்களால் உணரப் படாது' என்பதும், 'பதி ஞானத்தால் உணரப்படும்' என்பதும் ஆறாம் நூற்பாவினுள் கூறிப் போந்தமையால், 'பதியை உணர்தல் பதி ஞானத்தானே' என இங்கு வலியுறுத்தப்பட்டது. அதனால் ''உணரா பதியை'' - என்பது பாடம் அன்றாம்.

'பாசம்'' என்பதும், பின்னர் வந்த ''பதி'' என்பது ஆகு பெயராய், அந்த அந்த ஞானத்தைக் குறித்தன. ''சிந்தை'' என்பது அதற்கு முதலாகிய அறிவைக் குறித்த ஆகு பெயர்.

'சிந்தைக்கண்' - எனக் கண்ணுருபு விரிக்க.

''நாடி'' - என்பது இதர ஈற்று ஏவல் வினை முற்று. ''ஐய, சிறிதென்னை ஊக்கி''[1] என்பது போல.

''நாடி'' - என்றதனால், 'சிந்திக்க' - எனக் கூறியதாயிற்று.

முன்னை நூற்பாவில், ''தம் முதல் குருவுமாய் உணர்த்த'' என்றதனால், அது கேட்டலேயாம். 'கேள்விக்குப் பின் சிந்தித்தல் வேண்டும்' என்பது இதனால் பெறப்பட்டது.

---

1. குறிஞ்சிக் கலி - 1.

''பாசம் ஒருவ'' - என்றதனால், இங்கு அஞ்செழுத்தைக் கணிக்கும் முறையாவது, பாச - எழுத்தாகிய நகர மகரங்களை நீக்கி, ஏனை மூன்றெழுத்துக்களாகக் கணித்தலாம். இது முத்தி பஞ்சாக்கரம் எனப்படும். இதனை,

''விண்ணி னார்பணிந் தேத்த வியப்புறும்
மண்ணி னார்மற வாது 'சிவாய' என்று
எண்ணி னார்க்கிட மாஎழில் வானகம்
பண்ணி னாரவர் பாலைத் துறையரே'' 1

என அப்பர் பெருமான் அருளிச் செய்தமை காண்க.

இந்நூற்பாவை ஆசிரியர் மூன்று அதிகரணங்களாகக் கண்ணழித்துரைப்பார்.

முதல் அதிகரணம்

''ஊனக்கண் பாசம் ...... ''சிந்தை நாடி''

முன்னுரை

''பதி, பாச ஞானத்தாலும், பசு ஞானத்தாலும் அறியப்படாதாயினும் பாசம் ஒருவியபொழுது உயிர் பசுத் தன்மை நீங்கிப் பதியோடு ஒரு நிகர்த்தாம் ஆதலின், அந்நிலையில் உயிரறிவு பதியறிவோடு ஒத்ததாக, அவ்வறிவானே பதியை உயிர் உணர்தல் கூடும்; பதியினது அறிவால் அறிய வேண்டுவதில்லை'' எனக் கூறும் சிவ சமவாத சைவர் கூற்றை மறுத்து, ஞானமாவது பதியினது அறிவே' என்பதை வலியுறுத்துவது இவ்வதிகரணம். அதனால் இது ஞானாதிகரணமாகும்.

மேற்கோள்

ஈண்டு - அம்முதலை ஞானக் கண்ணினாலே காண்க - என்றது.

---

1. திருமுறை - 5, 51, 6

ஏது

அவன் வாக்குமனாதீத கோசரமாய் நிற்றலான்.

மேற்கோள் விளக்கம்

அம்முதல் - ஊசல் கயிறு அற்றவழி அதனைத் தாயாய் நின்று தாங்கும் தரைபோல்பவனாகிய முதல்வன். ''ஞானம், பதி ஞானம்'' - என்பது மேலே விளங்கிக் கிடந்தது.

பதி ஞானமாகிய கண்ணால் காணுதலாவது, முதல்வன் குருவாகி வந்து உணர்த்த உணர்ந்த மாணவன் அவ்வுணர்வின் வழியே பாசக் கூட்டங்களை நீக்கி நின்றானாயினும் தனது ஞானத்தாலே பதியைக் காண முற்படாது, பதி ஞானத்தைப் பற்றித் தனது ஞானம் அந்த ஞானமேயாகுமாறு அதன்வழி நிறுத்திக் காணுதலாம்,

''ஞானக் கண்ணினாலே'' - என்னும் ஏகாரம், பதிஞானத்தை ஏனை ஞானங்களினின்றும் பிரித்தலால் பிரிநிலை, இதனால், பதிஞானமல்லாத பிற ஞானங்களால் காணின் அவற்றால் காணப்படுவன பதியல்லாத பிற பொருள்களேயாதல் விளங்கும்.

ஏதுவில், ''அவன்'' - என்றமையால், மேற்கோளில் ''முதல்'' என்றது ஆகுபெயராய் 'முதலாய் நிற்பவன்' - எனப் பொருள் தந்தது. 'பதி' - என்றபடி.

ஏது விளக்கம்

பதி வாக்கு மனாதீத கோசரமாதல் ஆறாம் நூற்பாவினுள் இனிது விளக்கப்பட்டமையால் இங்கு அதனை ஏதுவாகக் காட்டி, 'பதிஞானம் ஒன்றற்கே முதல்வன் புலனாவன்' என நிறுவினார்.

தோற்றுவாய்

மேற்கோளை ஏதுவால் நிறுவிய பின், 'முன்னுரையிற் கூறியவாறு சிவ சமவாத சைவர் நிகழ்த்தும் தடைக்கு விடை ாது' - என்பார்க்கு விடையை எடுத்துக் காட்டால் கூறுகின்றார்.

வெண்பா—1

நாடியோ, என்போ, நரம்பு, சீக், கோழையோ
தேடி எனேஅறியேன்; தேர்ந்தவகை - நாடி அரன்
றன்னாலே தன்னையும் கண்டு தமைக்காணார்
என்நாம் எனஅறிவார் இன்று.

இதன் பொருள்

நாடியோ..... தேடி - *'நாடி, எலும்பு, நரம்பு, சீ, கோழை முதலியனவாய் உள்ள பல பொருள்களுள் நான் எப்பொருள்' என ஒவ்வொருவரும் தம்மையே தாம் தேடி நிற்கும்பொழுது, (அவற்றுள் ஒரு பொருளையும், 'நான்' எனக் கொள்ளுதல் கூடாமையால்.)* எனை அறியேன் - *'என்னை நான் அறிய வில்லையே! நான் எது' என, மேலும் அவாய் நிற்றற்கண்.* தேர்ந்த வகை நாடி - *'நான் யார்' என்னும் ஆராய்ச்சி யறிவும், 'நான் நாடி முதலிய பொருள்களுள் எதுவும் அன்று' என்னும் துணிபுணர்வும் நமக்கு உளவாயது எவ்வாறு - என ஆராய்ந்து, அவ் உணர்வுகள் உடற் கூறுகளாய்ப் புறத்தும்' அகத்தும் உள்ள கருவிகளால் உள்வாகா ஆதலின், அவை நம் அறிவுக்கு அறிவாய், உள் நின்று அறிவிக்கும் அறிவினாலே உளவாயின என்று உணருமாற்றால் பதிஞானத்தை உணர்ந்து,* அரன்றன்னாலே இன்று தன்னையும் கண்டு தமைக் காணார் - *அந்தப் பதிஞானத்தினாலே முன்னர்ப் பதியையும் கண்டு, அக் காட்சியானே பின்னர்த் தம்மைக் காணுதல் வேண்டும். அம் முறையில் தம்மைக் காணாதவர்.* இன்று நாம் என் என அறிவார் - *இம்முத்தி காலத்திலும் தம்மை எப்பொருளாக அறிவார்? (யாதொரு பொருளாகவும் அறிய மாட்டார்.)*

விளக்கம்

'பெத்த காலத்தில், 'நாம் யார்' - என நிகழ்ந்த அவாய் நிலை முத்தி காலத்தில் பதி ஞானம் கண்ணாகப் பதியைக் கண்டு, அவ னிடத்தே தம்மையும் காணுதலானே நிரம்பும் ஆதலின், பதி ஞானத்தால் பதியைக் கண்ட பின்பு அக்காட்சியிலே அறியப் படுவதாகிய உயிரினது அறிவு பதியைக் காணுதல் கூடாது' - என மேல் நிகழ்ந்த தடைக்கு விடை கூறப்பட்டதாம்.

உயிர் தன்னைத் தான் அறிதல், 'ஆன்ம ரூபம், ஆன்ம தரிசனம், ஆன்ம சுத்தி' என்னும் மூன்று வகையில் நிகழும்.

அவற்றுள் ஆன்ம ரூபம் நிருவிகற்பமாக (பொதுவாக) உணர்தலும், ஆன்ம தரிசனம் ஐயமாக உணர்தலும் ஆகும். ஆன்ம சுத்தியே தெளிவாக உணர்தலாம். ஆன்ம ரூபமும், ஆன்ம தரிசனமும் உயிர் தன் அறிவாலே தான் உணருமாயினும் ஆன்ம சுத்தியைத் தன்னறிவால் உணராது பதியறிவாலே உணரும். அங்ஙனம் உணரு மிடத்துப் பதியை முன்னர்க் கண்டு, பின் அக்காட்சி வழியே தன்னை உணரும்.

நிருவிகற்பமாகவும், ஐயமாகவும் உணர்தல் பொதுவியல்பையே. தெளிவாக உணர்தலே உண்மை இயல்பை உணர்தலாம். இதனை,

''தன்னறி வறியுந் தன்மை தன்னாலே தனையறிந்தால்
தன்னையும் தானே காணும் தான் அதுவாகி நின்றே'' [1]

எனப் புடை நூல் ஆசிரியர் இவ்வாறே கூறுதல் காண்க.

இதனானே, பதியினது உண்மை இயல்பை மட்டுமன்று; ஏனைப் பசு பாசங்களது உண்மை இயல்புகளும் பதிஞானத் தானே அறியப்படுதல் விளங்கும். அது பற்றியே பட்டினத்து அடிகள்,

''மங்கை பங்க! கங்கை நாயக! நின்
தெய்வத் திருவருள் கைவந்து கிடைத்தலின்,
மாயப் படலம் கீறித் தூய
ஞான நாட்டம் பெற்றபின் யானும்
நின்பெருந் தன்மையுங் கண்டேன்; காண்டலும்
என்னையுங் கண்டேன்; பிறரையுங் கண்டேன்''

எனவும்,

''நின்னைக் காணா மாந்தர்,
தன்னையும் காணாத் தன்மை யோரே'' [2]

எனவும் அருளிச் செய்தார்.

---

1. சிவப்பிரகாசம் - 72
2 திருமுறை-11 திருவிடை மருதூர் மும்மணிக் கோவை-13

இதனால், அவை யடக்கத்துள் ''தம்மை உணர்ந்து தமை யுடைய தன்னுணர்வார்'' - என்றது 'ஆன்ம தரிசனத்தில் சிவ ரூபத்தை உணர்தல்? - எனத் தெரிந்து கொள்க

இதனால், 'ஞானம்' எனப்படுவது பதிஞானமேயாயிற்று.

இடை, பிங்கலை, சுழுமுனை முதலிய சிறப்புடை நரம்பு களை ''நாடி'' - என்றும், ஏனைச் சிறப்பிலா நரம்புகளை யெல்லாம் ''நரம்பு'' - என்றும் கூறினார், அவற்றை அவ்வாறு வழங்குதல் வழக்காதல் பற்றி.

ஒகாரங்கள் தெரிநிலைப் பொருளன, ''நாடி'' முதலாகச் சில தாத்துவிகங்களையே கூறினாராயினும், இனம் பற்றி ஏனைத் தாத்துவிகங்களும், தத்துவங்களும் கொள்ளப்படும்.

''கோழையோ'' - என்பதன் பின்னும், ''அறியேன்'' - என்பதன் பின்னும் 'என' என்னும் சொல்லெச்சமும், ''தேர்ந்த வகை நாடி'' - என்பதன் பின், 'பெற்ற' - என்னும் சொல் லெச்சமும் வருவிக்க.

''தேர்ந்த வகை நாடி'' - என்னும் செய்தென் எச்சம், ''நாடுதலால்'' எனக் காரணப் பொருளில் வந்தது, ''அரன்'' - என்பது ஆகுபெயராய் அரனது ஞானத்தைக் குறித்து.

''அரன்றன்னாலே'' என்பதில் தன் சாரியை, ஏகாரம் பிரிநிலை, ''தன்னையும் - என்னும் உம்மை, 'காண்டற்கரிய னாகிய சிவனையும்' - எனச் சிறப்பும்மை.

தோற்றுவாய்

''மேல், ''சொன்னசிவன் கண்ணா உளம் கண்டறிந்து நிற்குங்காண்''[1] எனக் கூறியபடி, இறைவன் உயிர்க்குயிராய் நின்று அறிவிக்கப் புற நோக்கால் பிற பொருள்களை அறிகின்ற உயிர், அகமுகமாக நோக்குமாயின் தன்னையும், பதியையும் அறிதற்குத் தடை என்னை, முன் நோக்கி முன் நிற்பவற்றைக்

1. நூற்பா - 5, அதி - 2.

காண்கின்ற கண் பின் நோக்குமாயின் பின்னுள்ள பொருள் களைக் காணுதற்குத் தடையில்லாமை போல என இவ்வாறு இங்கு மாணாக்கர்க்கு நிகழும் ஐயத்தினை மற்றோர் எடுத்துக் காட்டால் நீக்குகின்றார்.

வெண்பா—2

காட்டிய கண்ணே தனைக்காணா; கண்ணுக்குக்
காட்டாய உள்ளத்தைக் கண்காணா - காட்டிய
உள்ளம் தனைக்காணா; உள்ளத்தின் கண்ணாய
கள்வன்றான் உள்ளத்திற் காண்.

இதன் பொருள்

காட்டிய கண்ணே தனைக் காணா - ஆன்மாவால் செலுத்தப் பட்டுக் கண்டு வருகின்ற அந்தக் கண்ணே பிற பொருளைக் காணுதலன்றித் தன்னைக் காணாது. (அதுவன்றியும்)

காட்டிய உள்ளத்தைக் கண் காணா - தன்னை உள்நின்று செலுத்திவரும் ஆன்மாவையும் கண் காணமாட்டாது. (அது போல).

காட்டிய உள்ளம் தனைக் காணா - சிவனால் அறிவிக்கப்பட்டு அறிகின்ற ஆன்மாப் பிற பொருள்களை அறிதலன்றித் தன்னை அறியமாட்டாது. (தனக்கு அறிவிக்கின்ற சிவனையும் அறிய மாட்டாது. (கண் ஆன்மாவை அறிய மாட்டாமைக்குக் காரணம் ஆன்மா நுண்பொருளாய் நிற்றலேயாகும். அதுபோலவே,)

தான் உள்ளத்தின் கண் ஆய கள்வன் - சிவனும் ஆன்ம அறிவிற்கு அறிவாய் அதனுள்ளே மறைந்து நிற்பவனே, (அதனால் பிறவற்றை அறிகின்ற ஆன்ம அறிவு அவனை யறிய மாட்டாது. அதனால்).

உள்ளத்தில் காண் - உனது அறிவினுள்ளே அவனை அவனது அறிவாலே அறிவாயாக.

விளக்கம்

உவமை எடுத்துக்காட்டுவமை, அதனால் விளக்கப்பட்டது, 'இறைவன் செலுத்திய வழியும் உயிர் தனது அறிவால் பிற பொருள்களை அறியுமன்றித் தன்னையும், தன்னைச் செலுத்தும் முதல்வனையும் அறியமாட்டாது' - என்பதே ஆதலின், 'உள்ளத்தில் காணுதல் அவனறிவாலே' என்பது பெறப்பட்டது. உயிர் தன்னையும், தலைவனையும் கருதலளவை பற்றிக் கருதியுணர்தல் இருவரது இருப்பாகிய பொது வியல்பையே, "இருவரது உண்மை இயல்பை அறிதல் பதியறிவாலே' - என்பது மேலேயும் கூறப்பட்டது.

மேல் ஐந்தாம் நூற்பாவிற் கூறிய பொருளை இவ் வெண்பாவில் இனிது விளக்கி வலியுறுத்தினார் "காட்டிய" - என்பது இரண்டிடத்திலும் செயப்பாட்டு வினையாய் நின்றது. "கண்ணே" என்னும் ஏகாரம் தேற்றம். "காணாது" என்னும் ஒன்றன்பால் படர்க்கை எதிர்மறை வினை முற்று மூன்றிடத்தும் துவ்வீறு கெட்டு நின்றது.

"காட்டாய உள்ளத்தைக் கண் காணா" என உவமைக்கண் கூறப்பட்டமையால், பொருட்கண்ணும், "காட்டாய முதல்வனை உள்ளம் காணா" - என்பது கொள்ளப்பட்டது. காட்டு - அறிவிக்கும் பொருள். இது வடமொழியில் 'வியஞ்சகம்' - எனப் படுகின்றது.

"உள்ளத்தின் கண்ணாய" - என்பதில் கண் - அறிவு.

மறைந்து நின்றே உணர்த்துதல் பற்றி, "கள்வன்' - என்றார். தன்னறிவாலே காண்பார்க்குக் கள்ளத் தன்மையின்றி வெளிப் பட்டுத் தோன்றுதலே,

"கள்ளரோ டில்ல முடையார் கலந்திடின்
வெள்ள வெளியாமென் றுந்தீபற" [1]

என்பதனானும் அறிக.

---

1. திருவுந்தியார் - 23.

''கள்வன்தான்'' - என்பதில் 'தான்' முதல்வன்.

'அவனறிவாலே அவனை அறிய முயலாது, பிறவாற்றால் அறிய முயல்வோர் யாவர்க்கும் அவன் கள்வனேயாய் நிற்பான்' - என்பதையும், அவன் அருள்வழி நிற்பார்க்கு அவன் வெளிப்பட்டு அருளுதலையும் ஆளுடைய அடிகள்,

''மரகதக் குவால் மாமணிப் பிறக்கம்
மின்னொளி கொண்ட பொன்னொளி திகழத்
திசைமுகன் சென்று தேடினர்க் கொளித்தும்''

என்பது முதலாகப் பல முறையாற் கூறி, இறுதியில்,

''தன்னே ரில்லோன் தானேயான தன்மை
என்னே ரனையோர் கேட்கவந் தியம்பி
அறைகூவி ஆட்கொண் டருளி''[1]

என அருளிச் செய்தார்.

சிவன் உயிர்க்குயிராய் நின்று அறிவித்தல் பெத்த காலத்தில் பாசத்தின்வழி யாதலின், அக்காலத்தில்தில் உயிர் பாச பசு ஞானங்களால் தன்னையும், தலைவனையும் பொதுவாக அன்றி, உண்மையாக அறியமாட்டாது. முத்தி காலத்தில் அவன் தான் நேரே அறிவித்தலால் அவன் அறிவால் அது தன்னையும், தலைவனையும் உண்மையாக அறிவதாம், என மாணாக்கர்க்கு ஐயம் அகற்றியவாறு அறிக.

முதல் அதிகரணம் முடிந்தது.

---

1. திருவாசகம் - திருவண்டப் பகுதி - 124 - 148.

இரண்டாம் அதிகரணம்

''உராத்துனைத் தேர்த்தெனப் பாசம் ஒருவத்
தண்ணிழலாம் பதி '

முற்றுரை

முன்னை யதிகரணத்தில், ''முதல்வனைப் பாச ஞான பசு ஞானங்கள் கண்ணாகக் காணாமல் அவனது ஞானமே கண்ணாகக் காண்க''-என்றமையால், அவனது ஞானத்தை ஆன்மாப் பெறுதல் எவ்வாறு' - என வினா எழுகின்றது. அவ் வினாவிற்குரிய விடையைக் கூறுவது இவ்வதிகரணம் ஆதலின் இது, ஞானப்பேற்றதிகரணமாகும்.

அதிகரணம்

மேற்கோள்

இனி, 'அசத்தா யுள்ள வன்ன பேதங்களை - அசத்து - என்று காண உளதாய் நிற்பது ஞான சொரூபம்' - என்று உணரற்பாற்று.

விளக்கம்

இவ் வதிகரணத்தில் ஆசிரியர் ஏதுவை வேறு வைத்து ஓதாமல், மேற்கோளோடு ஒன்றுபடுத்தியே சுருங்க ஓதினார், அதனால் அவற்றைப் பிரித்துக் காணுதல் வேண்டும்.

மேற்கோள்

அசத்தாய் உள்ள பல்வேறாய் உலகத்தையும் 'அசத்து' என்று காண உளதாய் நிற்பது ஞான சொரூபம் - என உணாற்பாற்று என்றது—

ஏது

வேற்றியல்பாகிய வன்ன பேதங்களை 'வேற்றியல்பு'—என்று கண்டு கழிக்க உளதாய் நிற்பது படிக சொரூபமாந் துணையான்.

மேற்கோள் விளக்கம்

அசத்து—நிலையாதது. காட்சிப்படும் உலகனைத்தையும் இவை 'நிலையாமை யுடையன' என அவற்றை உணர்தலைத் தவிர்ந்தால், அதன் பின் ஒன்று புலனாகும் என்பார், ''கண்டு கழிக்க உளதாய் நிற்பது''—என்றார். ஞானம்—பதிஞானம். சொரூபம்—உண்மை வடிவம்.

ஏது விளக்கம்

வன்ன பேதங்கள்—நிற வேறுபாடுகள், இஃது ஏகதேச உருவகமாய், பல்வேறான உலகத்தைக் குறித்தது.

ஞான சொரூபத்தைப் படிகமாக உருவகம் செய்யாமையால், இஃது ஏகதேச உருவகமாம்.

இவ்வுருவகத்தால், பதி ஞானத்தை உணர ஒட்டாது அதனை மறைத்து நிற்பன உலகங்கள்' என்பது விளங்கிற்று. இதனையே திருமூலர்

''மரத்தை மறைத்தது மாமத யானை;
பரத்தை மறைத்தது பார்முதல் பூதம்'' [1]

என்றார்.

இனி, ''வன்ன பேதம்''—என்றதை 'ஓவியம்' எனக் கொண்டு, பதிஞானத்தை, 'சுவர்' என்று கொள்ளுதலும் பொருந்தும்.

வன்ன பேதங்கள் படிகத்தின் நிறத்தைக் காட்டாது மறைத்தலும், ஓவியங்கள் சுவரைக் காட்டாது மறைத்தலும் ஒரு நிகரனவேயாம்.

படிகத்தின் மேல் தீட்டப்பட்ட பல நிறங்கள் படிகத்தையே பற்றுக் கோடாக உடையன. ஆகவே, படிகம் இல்லையாயின் நிறங்கள் இல்லை.

---

1 திருமந்திரம்—2290.

அதுபோலவே ஓவியங்கள் சுவர்த் தலத்தையே பற்றுக் கோடாக உடையன, அதனால் சுவர் இல்லையேல் ஓவியம் இல்லை.

இவ்வாற்றால் பல நிறங்களைக் காண்பவரும், ஓவியங்களைக் காண்பவரும் இவ்வுண்மையை உணர்ந்து, 'நிறங்களும், ஓவியங்களும் நிலையில்லாதனவாய்க் கழிய, படிகமும், சுவர்த் தலமுமே நிலையுடையன'—என உணர்வார்களாயின் அவ்வுணர்வே 'தத்துவ ஞானம்'--எனப்படும் மெய்யுணர்வாகும். அவ்வாறு உணராமல், நிறங்களையும், ஓவியங்களையும் மட்டுமே உணர்ந்து அவற்றால் மகிழ்ந்து போதல் விபரீத ஞானமாகிய திரிபுணர்வாகும்,

அது போலவே, உலகங்களைக் காண்பவர், "இவை யாவும் இறைவனது ஆற்றலை நிலைக்களமாக உடையன; இறைவனது ஆற்றல் இல்லையாயின் இவையில்லை. இவ்வுலகங்கள் அனைத்தும் நிலைபேறின்றி நீங்குவன. இறைவனது ஆற்றலே என்றும் நிலைபெற்றிருப்பது" என உணர்தலே தத்துவ ஞானமாகிய மெய்யுணர்வாம்"—என்பது தோன்ற,

"அசத்தாய் உள்ள வன்னபேதங்களை
—அசத்து—என்று காண
உளதாய் நிற்பது ஞான சொரூபம்
என்று உணரற்பாற்று"

என ஆன்மாப் பதிஞானத்தைப் பெறுமாறு கூறினார். பட்டினத்தடிகளும்,

"திருவருள் நாட்டம் கருணையிற் பெறுதலின்
யாவையும் எனக்குப் பொய்யெனத் தோன்றி,
மேவரு நீயே மெய்யெனத் தோன்றினை;
ஓவியப் புலவன் சாயல்பெற எழுதிய
சிற்ப விகற்பம் எல்லாம், ஒன்றித்
தவிராது தடவினர் தமக்குச்
சுவராய்த் தோன்றும் துணிவுபோன் றனவே"[1]

என இவ்வாறே அருளிச் செய்தார்,

1. திருமுறை—11. திருக்கழுமல மும்மணிக் கோவை—10

'' அட்டகுணம் எட்டுச் சித்தி
கோகனதன் முதல்வாழ்வு குலவுபதம் எல்லாம்
வெறுத்து, நெறி அறுவகையும் மேலொடு கீழ் அடங்க
வெறும்பொய்யென நினைந்திருக்க'' 1

என்றே வழிநூலாசிரியரும் கூறினார்.

அறிவுடைப் பொருள்கள் ஒன்றனை விடுதல் பற்றுதல்கள் அறிவினால் பற்றாது விடுதலும், அறிவினால் பற்றுதலுமே யாகலின், அசத்தென்று நீங்க'—என்னாது ''அசத்தென்று காண''—என்றார்.

''வன்ன பேதங்கள்''—என்றது உலகங்களையே யாதலாலும், ''அசத்தென்று காண''—என்றதனாலும் நூற்பாவினுள் ''பாசம்'' என்றது, 'மாயையின் ஆக்கமாகிய உலகங்களையே'—என்பதும், ''ஒருவ'' என்றது, 'அறிவினால் பற்றாது விடுதல்'' என்பதும் விளங்கும்.

தோற்றுவாய்

'வன்ன பேதங்களைத் தள்ளி நோக்கும்பொழுது பளிங்காதல் சுவர்த்தலமாதல் தோன்றுதல் உண்மை. உலகம் அனைத்தையும் தள்ளி நோக்குமிடத்து வெறும் பாழ் அன்றோ தோன்றுகிறது'—என மயங்குவாரை நோக்கி, அம்மயக்கத்தினை எடுத்துக் காட்டால் நீக்குகின்றார்.

உலகம் 'அண்டம். பிண்டம்' என இருவகைத்து ஆதலின், உலகனைத்தையும் நீக்குதல் தூல சூக்கும அதிசூக்கும உடம்பு களையும் நீக்குதலேயாம். அதனால் அவ்வுடல்களைத் தள்ளி நோக்குமிடத்து இவ்வாறான மயக்கம் உண்டாதல் இயல்பே.

வெண்பா—1

நிற்குணனாய்; நின்மலனாய் நித்தியா னந்தனாய்த்
தற்பரமாய் நின்ற தனிமுதல்வன்—அற்புதம்போல
ஆனா அறிவாய் அளவிறந்து தோன்றானோ
வானே முதல்களையின் வந்து,

1. சிவஞான சித்தியார் - சுபக்கம் : சூ. 9·6.

இதன் பொருள்

நிற்குணனாய்—மூலப் பிரகிருதிபோல முக்குணவடிவாய் இல்லாதவனாயும்

நின்மயனாய் — அசுத்த மாயைபோல ஆணவக் கலப்பு இல்லாதவனாயும்.

நித்யானந்தனாய்—சுத்க மாயை போல நிலையாத இன்பத்தை உடைய்வனாகாது நிலைத்த இன்ப வடிவினனாயும்,

தன் பரமாய் நின்ற தனி முதல்வன்—மும்மாயையும் அல்லாது அவற்றிற்கு மேற்பட்ட உயிரும் ஆகாது அதற்கும் மேலான வனாயும் உள்ளவன் மற்றாரும் தன் ஒப்பில்லா[1] முதல்வன். அதனால் அவன்.

வானே முதல் களையின்—ஆகாயம் முதலிய உலகப் பகுதிகளை எல்லாம் நீக்கியவிடத்து,

அளவு இறந்து அற்புதம்போல் வந்து—முதற்கண் சுட்டறிவுட் படாமையால், வெறும் பாழ்போலத் தோன்றி. (பின்பு)

ஆனா அறிவாய் தோன்றானோ—முன்போல வியாபகமாய் ஒற்றித்து நிற்கும் அறிவினுள்ளே என்றும் நீங்காத அறிவு வடிவாய் விளங்க மாட்டானோ. (விளங்கவே செய்வான்)

விளக்கம்

'அதனால் முதலிற் கண்ட காட்சியிலே உறைத்து நிற்க'— என்பது குறிப்பெச்சம்.

இறைவனை, 'நிற்குணன்' என்றும், 'குணாதீதன்' என்றும் கூறுதல், 'பிரகிருதி குணங்களாகிய சத்துவம் முதலிய முக்குணங்கள் இல்லாதவன்'—என்பது பற்றியே யன்றி. 'யாதொரு குணமும் இல்லாதவன்' என்னும் கருத்தினாலன்று, ஏனெனின், குணம் இல்லது பொருளாகாது ஆகலானும், 'இறைமைக் குணங்கள் தன்வயத்தன் ஆதல் முதலிய எட்டு'— எனக் கூறப்படுதலாலும் என்க.

---

1. திருமுறை—6 - 1.2.

'தன் பரன்', 'தனக்குப் பரன்' என நான்காவதன் தொகை ''தான்'' என்றது உயிரை. பரன்—மேல் உள்ளவன்.

''நின்ற தனிமுதல்வன்''—என்பது உடம்பொடு புணர்த்த லாய், 'இவ்வாறாதலின் ஒப்பிலனாய் நிற்றலின்'—எனப் பொருள் தந்தது.

அற்புதம், இங்கு 'வெறும் பாழ்' என்னும் பொருட்டாய் நின்றது.

ஆனாமை—நீங்காமை. ஆக்கச் சொற்களுள் முன் வந்த எல்லாம், 'என் தாயாகிய நீ இது செய்தல் பொருந்துமோ'—என்றாற்போல இயற்கையைச் செயற்கைபோலக் கூறும் வழக்குப் பற்றியும், இறுதியில் உள்ளது. பல்காலும் நடந்து செல்வான் ஒருவன் ஊர்தியிற் சென்ற பொழுது, 'ஊர் அணித்தாயிற்று' என்றல்போல அறிவின் புதுமை பற்றியும் வந்தன.

''வானே''—என்னும் ஏகாரம் அசைநிலை. ''வானே முதல்'[1]—என்றதனைத் தோற்ற முறை பற்றியும், ஒடுக்க முறை பற்றியும் கொள்ளத் தத்துவங்கள் அனைத்தும் அடங்குதல் அறிக.

தோற்றுவாய்

'தத்துவங்கள் அனைத்தையும் களைந்த விடத்துத் தோன்றுவது சத்தே யன்றிப் பிறிதன்று—என்பதற்குப் பிரமாணம் யாது' என்னும் தடைக்கு, மற்றோர் எடுத்துக்காட்டால் விடை கூறுகின்றார்.

வெண்பா—2

சுட்டி உணர்வதனைச் சுட்டி அசத்தெனச்
சட்ட இனிஉளது சத்தேகாண்—சுட்டி
உணர்ந்தநீ சத்தல்லை; உண்மையைத் தைவம்
புணர்ந்ததனால் பொய்விட்டுப் போம்.

இதன் பொருள்

சுட்டி உணர்வதனை— சுட்டறிவினுள் அகப்படுத்தி உணரும் பொருளை.

சுட்டி அசத்து என்ன—அவ்வாறே உணர்ந்து, 'சுட்டறிவுள் அகப்படுவதாகிய இது சத்தன்று, அசத்தே' — என ஒவ்வொன்றாக அனைத்தும் தள்ளிச் சென்றவிடத்து

இனி சட்ட உளது சத்து—அங்குச் சுட்டறிவுள் அகப்படாது வேறோராற்றால் புலனாவது அசத்தாதல் கூடாமையால் சத்தேயாகும்.

காண்—நீ அதனை அதுவாகவே அறிவாயாக.

(அசத்துக்களைத் தள்ளியவிடத்துப் புலனாவது அசத்தாகாவிடினும், சதசத்தாகிய உயிராகாதோ' எனின், ஆகாது ஏன்?)

சுட்டி உணர்ந்த நீ சத்தல்லை—சுட்டறிவுட்படுவனவற்றைச் சுட்டறிவால் சுட்டி அறிந்து அதுவேயாய் நின்ற உயிர் அசத்தின் மறுதலையாய்த் தோன்றமாட்டாது.

('அங்ஙனமாயின் அசத்தை யறிந்து அசத்தாகும் சதசத் தன்மை உயிர்க்கு ஒரு ஞான்றும் நீங்குதல் இல்லைபோலும்'— எனின், அங்ஙனமன்று.)

உண்மையைத் தைவம் புணர்ந்தனால் பொய் விட்டுப் போம்— அசத்தை அசத்தால் அறிந்து அசத்தாய் அதன்வழிப்பட்டு நிற்றலை விட்டுச் சத்தைச் சத்தால் அறிந்து சத்திற்கு அடிமையாய் அதனைச் சார்ந்த விடத்து நிலையற்ற சதசத்தாம் தன்மை உயிருக்கு இல்லையாய், அதனை விட்டு நீங்கிவிடும்.

விளக்கம்

''என்ன''—என்றது, 'என்று கண்டு கழிக்க' என்றபடி. 'சட்ட'—என்பது செம்மை குறிப்பதோர் இடைச்சொல், ''நான் சட்ட நும்மை மறக்கினும் என்னைக் குறிக்கொண்மினே,' [1] ''சட்டோ நினைக்க மனத்தமுதமாம் சங்கரனை'' [2] என்பன காண்க. இஃது இக்காலத்தில் 'சட்டம்'—என மகர ஈற்றுப் பெயர்ச் சொல்லாய் வழங்குகின்றது. இவையெல்லாம் ''கடி சொல்லில்லைக் காலத்துப் படினே''—[3] எனக் கொள்ளப்படும்.

---

1. திருமுறை—4.
2. திருவாசகம்—திருக்கோத்தும்பி—7.
3. தொல் சொல்—எச்சவியல்.

''சத்தே''—என்னும் ஏகாரம் தேற்றம்.

''சத்தல்லை'' — என்றதில், 'சத்து' என்பது' ''அசத்தின் மறுதலைப் பொருள்' எனப் பொருள் தந்தது.

'உயிர்' எனற்பாலதனை, ''நீ'' என மாணவன்மேல் வைத்துக் கூறினார்.

தைவம்—தேவனது உடைமை. 'தைவமாய்'—என ஆக்கம் வருவிக்க.

தோற்றுவாய்

'அசத்தை 'அசத்து' — என்று கண்டு கழித்தவிடத்துத் தோன்று சத்தினை உயிர் அதற்கு அடிமையாய்ப் புணருமாற்றினையும், அங்ஙனம் புணர்ந்தவழி உயிர்க்குச் சதசத்தாம் தன்மை நீங்குதலையும் இனிது விளக்கி, மேற்கூறியதனை மற்றோர் எடுத்துக்காட்டால் வலியுறுத்துகின்றார்.

வெண்பா--3

கண்டதை அன்றன் றெனவிட்டுக் கண்டசத்தா
அண்டனை ஆன்மாவில் ஆய்ந்துணரப்—பண்டணைந்த
ஊனத்தைத் தான்விடுமா றுத்தமனின் ஒண்கருட
சானத்தின் தீர்விடம்போல் தான்,

இதன் பொருள்

கண்டதை அன்று என அசத்தா கண்டு விட்டு—இயல்பான சுட்டுணர்வினால் கண்ட ஒவ்வொன்றையும், இது சத்தன்று, 'இது சத்தன்று' என அசத்தாகக் கண்டு கழித்துவிட்ட பின்பு.

அண்டனை—அவ்விடத்து வெளிப்படும் முதல்வனை;

ஆன்மாவில் ஆய்ந்து உணர—தனது அறிவினுள்ளே, ஆசிரியன் அறிவுறுத்த அருள்மொழி வழியே மாணவன் ஓர்ந்து உணர்வானாயின்.

பண்டு அணைந்த ஊனத்தை தான் உத்தமனின் விடுமாறு—தனது சதசத்தாம் தன்மையால் அனாதியே பற்றிய அசத்தை விட்டு அவன் அங்கு வெளிப்பட்ட அம்முதல்வனது அருளால் நீங்கும் முறை.

ஒண் கருட சானத்தின் தீர் விடம்போல்—ஒள்ளிய கருட தியானத் தினால் கருடனது ஆற்றலால், தியானிப்பவன் விடத்தைத் தீர்த்துக்கொள்வது போலும்.

விளக்கம்

''ஆய்ந்துணர்தல்''—என்றது சிவோகம் பாவனை செய்தலை என்பது, ''கருட சானம்'' என்ற உவமையால் விளங்கும். சானம்—தியானம்; பாவனை.

மாந்திரீகன் கருட மந்திரத்தால், 'கருடன் நானாகின்றேன்' எனப் பாவிப்பது 'கருடோகம் பாவனை'—எனப்படும். இப் பாவனை கை வரப் பெற்ற மாந்திரீகன் இதனானே விடத்தைப் போக்குபவனாவான். அதுபோல், 'இவன் நானாகின்றேன்' என சிவஞானி செய்யும் பாவனை 'சிவோகம்பாவனை'—எனப்படும். கருடோகம் பாவனையில் முதிர்ந்து நின்ற மாந்திரீகனால் விடம் நீங்குதல்போல, சிவோகம் பாவனையில் முதிர் நின் றஞானியை மலம் பற்றாது நீங்குவதாம்,

உயிர் தான் எதனைச் சார்கின்றதோ அதுவாய் நிற்கும் சார்ந்ததன் வண்ணமாம் தன்மையுடையது ஆதலின் உடம்பைச் சார்ந்த காலத்தில் உடம்பேயாய், 'யான் உடம்பு' என மயங்கி, அதனானே, 'சீவன்' எனப்படுகின்றது. ஆசிரியன் அறிவுறுக்கும் அருள் மொழியைக் கேட்டபின், 'யான் உடம்பு' எனக் கருத்தை விடுத்து 'யான் சிவனாகின்றேன'—எனப் பாவிக்குமாயின் சீவனாம் நிலையினின்றும் நீங்கிச் சிவனும் நிலையைப் பெறுதல் உறுதி, அதனையே

'பண்டு அணைந்த—ஊனத்தைத் தான் விடுமாறு
உத்தமனின்; ஒண்கருட சானத்தின்
தீர்விடம்போல்''—என்றார்.

தாயுமான அடிகளும் இதனை

''யாதொன்று பாவிக்க நான் அது
ஆதலால், உனை 'நான்' என்று
பாவிக்கின் அத்துவித மார்க்கம்
உறலாம்'' 1

1. ''எங்கும் நிறைகின்ற பொருள்'' —3

எனக் கூறினார் "யத் பாவம் தத் பவதி" என்பது வடமொழியில் வழங்கும் ஒரு தொடர். "ஒருவனுடைய பாவனை எதுவாக உள்ளதோ, அதுவாக அவன் ஆகின்றான்?—என்பது அதன் பொருள்:

உலகியலிலும், அன்றாடம் கூலிவேலை செய்து பிழைக் கின்றவன், "எனக்கு என்ன குறையிருக்கிறது? வேலை செய் கிறேன் பிழைக்கின்றேன்" என்று அமைதியுற்றிருப்பவன் குறை வற்ற பெருஞ் செல்வனேயாவன். கோடிக் கணக்கில் பொருள் ஈட்டி வைத்திருப்பவன், "இஃது எவ்வளவு? இன்னும் சேர்க்க வேண்டும்" –என்று குறைப்பட்டுக் கொள்பவன் மிக்க வறியவனே யாவன்.

'உயிரின் இயல்பு இத்தன்மையது' என்பது பற்றித்தான். உபநிடதங்கள் சில மகாவாக்கியங்களைக் கூறியுள்ளன.

அவற்றுள் "இந்த ஆன்மா பிரமம்" ("அயமாத்மா பிரஹ்ம") என்பது ஞானாசிரியர் மாணவன் ஆன்மாவை பாவிக்கச் சொல்லுவது. மாணவன் ஆன்மாவை ஆசிரியர் இவ்வாறு பாவிப்பதனால் அது பிரமாம் தன்மையைப் பெறும்.

"அது நீ ஆகின்றாய்" ("தத்துவமசி" என்பது மேற் கண்ட வாறு பாவித்த ஆசிரியர் அந்தப் பாவனையால் மாணவனுக்கு உபதேசிப்பது. (அது - பிரம்மம்)

"நான் பிரம்மம் ஆகின்றேன்" ("அஹம் பிரஹ்மாஸ்மி") என்பது ஆசிரியர் மேற்கூறியவாறு உபதேசிக்கக் கேட்ட மாணவன் அந்நிலையிலே பலகாலும் பயில்வது. அங்ஙனம் பயில்வதனால் அவன் பிரமமேயாய் நிற்பான்.

வேதம் பொது நூல் ஆதலின் அது மேற்கண்டவாறு "பிரமம்" என்றும், ,'அது" என்றும் பொதுவாகவே கூறும். சிவாகமங்கள் சிறப்பு நூல் ஆதலின் அவை அவ்வாக்கியங்களை "இந்த ஆன்மா, சிவம் ஆகின்றது,' ("சிவோயமஸ்தி") "நீ சிவமாகின்றாய்" ("சிவத்துவமசி") "நான் சிவமாகின்றேன்" ("சிவோஹமஸ்மி") எனக் கூறும்.

"அஹம்பிரஹ்மாஸ்மி"—என்பதுதான் "சோஹமஸ்மி[1]"—என்று சொல்லப்படுகின்றது. அவ்வாறு பாவிப்பது 'சோஹம் பாவனை'—எனப்படும். அதனையே "சிவோஹமஸ்மி" எனப் பாவிப்பது சிவோஹம் பாவனையாம் அந்தச் சிவோஹம் பாவனையே இவ்வெண்பாவில் கருடோஹம் பாவனையாகிய உவமையால் குறிக்கப்பட்டது.

கருடோஹம் பாவனையால் விட நீங்குதல் கண்கூடாதலின், பாவனையை, 'பொய்' என்றல் கூடாதாகின்றது.

"வழித்தலைப்படு வான்முயல் கின்றேன்;
உன்னைப்போல் என்னைப் பாவிக்க மாட்டேன்"[1]

என அருளிச் செய்தமை அறிக.

இரண்டாம் அதிகரணம் முடிந்தது.

1. திருமுறை—7.

மூன்றாம் அதிகரணம்

[''விதி எண்ணும் அஞ்செழுத்தே'']

முன்னுரை

''முன்னை நூற்பாவிற் கூறியவாறு, முதல்வன் குருவாகி வந்து உண்மையை உணர்த்தக் கேட்ட மாணாக்கன் தன்னை உலகத்தினின்றும் வேறாக ஒருவாறு அறிந்து ஒருவாறு நீங்கி. இந்நூற்பாவில் முன்னை யதிகரணங்களின் கூறியபடி சிந்தனை அறிவால் உலகத்தினின்றும் தன்னை வேறாக உணர்ந்து, மற்றும் சிவோகம் பாவனையால் சிவமேயாய் நின்றபின் அவன் செயற்பாலது ஒன்றுமில்லைபோலும்'' என மாணாக்கர்க்கு ஐயம் நிகழ்தல் இயல்பாதலின், அங்ஙனம் சிவோகம் பாவனையில் நிற்குமிடத்து அஞ்செழுத்தை முறைப்படி கணித்தல் இன்றியமையாதது' எனக் கூறி அவ் ஐயத்தை நீக்குவது இவ்வதிகரணம். அதனால் இஃது அஞ்செழுத்ததிகரணமாகும்.

அதிகரணம்

மேற்கோள்

இனி - இவ்விடத்துச் சீபஞ்சாக்கரத்தை விதிப்படி உச்சரிக்க - என்றது.

ஏது

இவ்வான்மாக்களுக்கு ஞானம் பிரகாசித்தும் அஞ்ஞானத்தை வேம்பு தின்ற புழுப்போல நோக்கிற்றை நோக்கி நிற்குமாகலின்

மேற்கோள் விளக்கம்

''இவ்விடம்' , என்றது, உராத்துணைத் தேர்த்தெனப் பரசத்தை ஒருவியவழி வெளிப்பட்ட பதிஞானத்தினாலே பதியைத் தனது அறிவினுள்ளே நாடிக் கண்ட இடத்தை.

முன்னை நூற்பாவில் ''சீ பாதம்''—எனத் தமிழாக அருளிச் செய்த ஆசிரியர் இங்கும், ''சீ பஞ்சாக்கரம்'' என் அருளிச் செய்தலல்லது, 'ஸ்ரீ பஞ்சாக்கரம்' என ஆரியமாக அருளிச்

செய்யார், அதனால் அவ்வாறான பாடம் ஏடெழுதினோரால் விளைந்ததாம். 'சீ பஞ்சாக்கரம்' — என்பதை, 'திருவைந் தெழுத்து'—என எங்கும் வழங்குதல் வெளிப்படை.

நூற்பாவினுள் "விதி"—என ஓதியவாறே இங்கும், "விதிப்படி"—எனக் குறிப்பாகவே ஓதினார், அஃது ஆசிரியர்வழி யாக அறியத்தக்கது ஆதலின்.

திருவைந்தெழுத்தைச் சிகாரம் முதலாக வைத்து நோக்கும் பொழுது அவை குறிக்கும் பொருள்.

"ஈசன், அருள், ஆவி. எழிலார் திரோதம், மலம்
ஆசில்எழுத் தஞ்சின்அடை வாம்"

எனவும்,

"சிவன் அருள், ஆவி, திரோதம், மலம் ஐந்தும்
அவனெழுத் தஞ்சின்அடை வாம்"

எனவும் உண்மை விளக்க நூல்[1] தெளிவாகவே கூறியுள்ளது.

"சிவனரு ளாய சிவன்திரு நாமம்
சிவன், அருள், ஆன்மாத், திரோதம், மலம்"[2]

எனத் திருமந்திரத்திலும்—சொல்லப்பட்டது.

அருள் - அருட் சக்தி. திரோதம்—திரோதான சத்தி. மலம் - ஆணவ மலம். மாயையும்' கன்மமும் திரோதான சத்தி செலுத்திய வழியே செல்வன அல்லது தாமாகச் செயற்படா ஆதலின் அவை திரோதான சத்தியுள் அடங்கும்.

இதனால் சிகார வகாரங்கள் பதியெழுத்தும் யகாரம் பசு எழுத்தும், நகார மகாரங்கள் பாச எழுத்தும் ஆதல் விளங்கும். அதனால் பாச எழுத்து நீங்கிய மூன்றெழுத்துக்களே முத்தி பஞ்சாக்கரம் ஆதல் விளங்கும்,

---

1, வெண்பா—41, 42,
2. மந்திரம்—2710.

''எல்லா அடிசில்களுக்கும் உப்பு இன்றியமையாததாயினும், பாலுக்கு அது வேண்டப்படாதவாறு போல, எல்லா மந்திரங் கட்கும் பிரணவம் இன்றியமையாததாயினும் முத்தி பஞ்சாக் கரத்திற்கு அது வேண்டுவதில்லை'' என்பது மரபு'

இங்ஙனமாகவும் முத்தி பஞ்சாக்கரத்தை வேறு வேறாகக் கூறும் மரபுகளும் உள்ளன. எனினும்,

''ஆசின் ந வா நாப்பண் அடையாது அருளினால்
வா சி இடை நிற்றல் வழக்கு''

என்னும் திருவருட் பயன் மேற்கூறிய மூன்றெழுத்தைத் திரும்பத் திரும்ப ஓதுதலையே குறித்தலின் 'இதுவே சித்தாந்தம்' - என்க

சிலர், ''இம் முன்றெழுத்து, ஆன்மா நிற்கும் நிலையை உணர்த்துவது. ஆயினும் ஓதுங்கால் அஞ்செழுத்தாகவே ஓதப் படும்'' - என்பர். ஓதும் முறை நீங்கும் நிலைக்குத் துணை செய்யாவிடின் அதனை ஓதுதல் எற்றுக்கு?

மந்திரங்களைக் கணிக்கும் முறை, ''உரை, முணுமுணுப்பு, நினைவு' - என மூன்றாகும். இங்கு ''எண்ணும்'' என்றது அம் மூன்றையுங் அறிதற் கணிப்பு என்க.

ஏது விளக்கம்

''பஞ்சாக்கரத்தைக் கணித்தல் சரியை கிரியா யோகங்க ளாகிய தவநிலையில் நிற்குமிடத்து, அதுவதற்கு ஏற்ற முறையில் ஓதுதல் முறையேயாம். அங்ஙனம் ஓதி வந்ததன் பயனாகச் சத்தி நிபாதம் முதிரப்பெற்று, முதல்வன் குருவாகி வந்து ஞானத்தை உணர்த்த உணர்ந்து பதியைக் கண்ட பின்னும் அதனை ஓதுதல் மிகையும், சித்த சாதனமும் ஆகுமன்றோ'' என மீட்டும் மாணாக்கர்க்கு எழும் ஐயத்தை நீக்கவே ஏதுக் கூறினார்.

'நோக்கிற்றை நோக்கி நிற்கும் வேம்பு தின்ற புழுப்போல, அஞ்ஞானத்தை நோக்கி நிற்கும் ஆகலின்' - என, 'நோக்கி நிற்கும்'' என்பதை உவமைக்கும் 'தந்து, கொண்டு கூட்டி யுரைக்க.

நோக்கிற்றை—முன்பு நோக்கியதையே, நோக்கி நிற்கும்—பின்பும் நோக்கி நிற்கும்.

வேப்ப மரத்தில் தோன்றிய புழு. அதன் இலை முதலிய வற்றையே உண்டு வாழுங்கால் அடுத்து நிற்கும் கரும்பின்மேல் வீழ்ந்து அதன் சாற்றை உண்டு மகிழ்ந்ததாயினும், முன்னைப் பழக்கத்தால் வேப்பிலை முதலியவற்றைச் சுவைக்க விரும்பும் அது போல, மாயையாகிய உலகில் பிறப்பெடுத்த உயிர் அந்த மாசு நிறைந்த மாயை இன்பத்தை நுகர்ந்து வாழ்ந்த நிலையில் ஞானம் பிரகாசித்து பதியை அடைந்து அவனது தூய இன்பத்தை நுகர்ந்ததாயினும் முன்னைப் பழக்கத்தால் உலகின்பத்தை விரும்புதல் உண்டாகும். அவ்விருப்பத்தால் அரிதிற் பெற்ற ஞானம் நீங்கிப் போகாது நிலைபெறுதற் பொருட்டு இந்நிலையிலும் பஞ்சாக்கரத்தைக் கணித்தல் இன்றியமையாது வேண்டப்படும்''—என ஐயம் அறுத்தவாறு காண்க.

பழக்கமே, 'வாசனை'—எனப்படுகின்றது. மலத்தின் வாசனை 'வாசனா மலம்' - எனப்படும். வாசனா மலம் போதற்கு இங்குப் பஞ்சாக்கரக் கணிப்பு வேண்டப்படுதலின், அது மிகையாதலும், சித்த சாதனம் ஆதலும் எங்ஙனம்? என்றபடி சித்த சாதனம் - பெற்றதைப் பெற முயலுதல்.

தோற்றுவாய்

'பஞ்சாக்கரக் கணிப்பு மல வாசனையை எவ்வாறு போக்கும்'—என்னும் வினாவிற்கு எடுத்துக்காட்டால் விடை கூறுகின்றார்.

வெண்பா—1

அஞ்செழுத்தால் உள்ளம் அரன்உடைமை கண்டரனை
அஞ்செழுத்தால் அர்சித் திதயத்தில் - அஞ்செழுத்தால்
குண்டலியில் செய்தோமம், கோதண்டம் சானிக்கில்
அண்டனாம்; சேடனுமாம் அங்கு.

இதன் பொருள்

உள்ளம் அரன் உடைமை - ஆன்மா சிவனுக்கு அடிமையாதலை

அஞ்செழுத்தால் கண்டு - அஞ்செழுத்தின் பொருளை ஆசிரியர் உணர்த்த உணரும் முறைமையால் உணர்ந்து.

அரனை இதயத்தில் அஞ்செழுத்தால் அற்சித்து - சிவனை இருதய கமலத்தில் (அஞ்செழுத்தால் எல்லா வழிபாடுகளையும் செய்து.

ஓமம் குண்டலியில் அஞ்செழுத்தால் செய்து - அக்கினி காரியத்தை குண்டலித் தானமாகிய உந்தியில் அஞ்செழுத்தால் செய்து.

கோதண்டம் (அஞ்செழுத்தால்) சானிக்கில்—புருவ நடுவில் சிவனை அஞ்செழுத்தாலே தியானித்தால்.

அங்கு அண்டம் ஆம் –தியானத்தில் விளங்கித் தோன்றுவான். (தோன்றினால்)

சேடன் ஆம்—தியானத்தைச் செய்பவன் சிவனுக்கு அடிமையாய் விடுவான்; (தான் தலைவனாய் நில்லான்,)

விளக்கம்

திருவைந்தெழுத்தில் சிவன் முதலில் நிற்க, அவன்கீழ் அருள் நிற்க, அருளின்கீழ் ஆன்மா நிற்றலால் 'ஆன்மாச் சிவனுக்கு அடிமை' என்பது விளங்கும் ஆதலின், ''அஞ்செழுத்தால் உள்ளம் அரன் உடைமை கண்டு''—என்றார்.

அஞ்செழுத்துக்களும் கூடி ஒரு தொடர்மொழியாதலேயன்றி, இவ்வாறு தனித்தனிப் பதமும் ஆதலை,

''அந்தியும் நண்பகலும் அஞ்சு பதம் சொல்லி''[1] என்னும் திருமுறையாலும் அறியலாம் ஆயினும் இவ்வாறு உபதேசிக்கும் முறை நந்தி மரபிலே உள்ளது.

''அஞ்செழுத்தால்'' – என்பதை, ''சானிக்கில்'' என்பதற்கும் கொள்க,

---

1. திருமுறை—7.

முத்தி பஞ்சாக்கரத்தில் சிகாரம் தத்பதப் பொருளையும், வகாரம் அசி பதப் பொருளையும் யகாரம் துவம் பதப் பொருளையும் தரும்.

'தத்துவமசி'—என்பது ஒரு வாக்கியம் (மகா வாக்கியம்) (ஆதலின் அதன்கண் உள்ள தனிப் பதங்கள் எங்கு நிற்பினும் வாக்கியப் பொருள் மாறாது. அது பற்றியே திருமூலர்;

''துவம்தத் அசியே''—என்றும்,
தொம்தத் அசி''—என்றும்,
தொம் பதம், தத்பதம், சொல்லும் அசிபதம்'' *

என்றும் அருளிச் செய்வாராயினார்.

முத்தி பஞ்சாக்கரத்தை இங்ஙனம் ''தத்துவமசி''—மகா வாக்கியப் பொருள்படத்தியானிக்கில், தியானம் செய்பவன் சிவமாதலை.

''வா சி அருளி யவ்வை வாழ்விக்கும்''

எனத் திருவருட் பயன் கூறிற்று. இக் கூற்றுப் பற்றிச் சிலர், ''வயசி'' என்றே தியானிக்க வேண்டும் என்பர்.

இங்குக் கூறியவாற்றால், ''உடம்பினுள் இருதயம், உந்தி, புருவ நடு ஆகியவற்றை முறையே வழிபாடு அழலோம்பல், உள்குதல் ஆகியவற்றுக்கு இடமாக முன்னர்க் கருதிக் கொள்ளல் வேண்டும்'' என்பதும், ''எல்லாச் செயல்களுக்கும் அஞ்செழுத்தையே மந்திரமாகக் கொள்ளல்வேண்டும்''—என்பதும் பெறப் படும்.

இது ஞான பூசை முறை. இஃது அகம் ஒன்றானே செய்யப் படும்.

இதற்குக் கொள்ளப்படும் எண் மலர்கள் (அட்ட புட்பங்கள்) ஆவன [1]பிற உயிரைக் கொல்ல நினையாமை, [2] ஐம்பொறி யடக்கம், [3] பொறை, (பிறர் குற்றம் பொறுத்தல்,) [4] அருள் (ஜீவ காருண்யம்) [5] அறிவு, (பகுத்தறிவு) [6] பொய்யாமை, [7] நோன்பு

* திருமந்திரம்—2571, 2573.

உண்டி சுருக்கல் முதலாக "உற்ற நோய் நோன்றல்") * [8] அன்பு தொடர்புடையார் மேல் நிகழும் உள்ள நெகிழ்ச்சி) என்பன,

குண்டலித் தானமாகிய உந்தியில் செய்யப்படும் ஓமத்திற்கு அவ்விடத்து எழுகின்ற ஞானமே நெருப்பும், விந்துத் தானமாகிய புருவ நடுவில் ஊறும் அமுதமே நெய்யும், சுழுமுனை, இடை நாடிகளே நெய்யைச் சொரியும் சுருக்குச் சுருவங்களும் (அகப்பைத் துடுப்புக்களும்) ஆகும்.

ஓமமும், தியானமும் அங்கம். வழிபாடே அங்கி என்க.

வழிபாடு 'மந்திரம், கிரியை, பாவனை' என்னும் மூன்று கூறுகளை உடையது. இந்த ஞான பூசையில் மந்திரம் திருவைந் தெழுத்து. கிரியை மேற் சொல்லிய வழிபாடும், ஓமமும் தியானமும். பாவனை சிவோகம் பாவனை.

தோற்றுவாய்

இத்தகைய ஞான பூசையால் மல வாசனையால் தாக் குண்ணாது பதிஞானம் நிலைபெறுதலை உவமை முகத்தால் மற்றோர் எடுத்துக்காட்டால் விளக்குகின்றார்.

வெண்பா — 2

இந்துவில், பானுவில்இ ராகுவைக் கண்டாங்குச்
சிந்தையில் காணின் சிவன்கண்ணாம்; உந்தவே
காட்டாக்கின் தோன்றிக் கனல்சேர் இரும்பென்ன
ஆட்டானாம்; ஓதஞ் செழுத்து.

இதன் பொருள்

இராகுவை (கேதுவை) இந்துவில்—பானுவில் கண்டாங்கு—பிற கோள்கள் போலத் தனியாகக் காணப்படாத 'இராகு, கேது'— என்னும் கோள்களை முறையே மதியிலும் கதிரிலும் அவை அவற்றாற் கோட்படும் காலத்தில் கண்டாற்போல.

---

* திருக்குறள்—261.

சிந்தையில் காணின்—(பசு பாசங்கள் போலத் தன்னின் வேறாகக் காணப்படாத சிவனை) ஆன்மாத் தனது இதயத்தில் அஞ்செழுத்தை ஓதும் முறையால் காணின்.

உந்தவே காட்டாக்கின் சிவன் தோன்றிக் கண் ஆம்—தீக்கடை கோலை நாட்டிக் கயிற்றால் முறுக வாங்கிக் கடைய அக் கோலினின்றும் நெருப்புத் தோன்றுதல்போல அவன் தோன்றி, அறிவுக் கறிவாய் விளங்கி நிற்பான். அப்பொழுது)

தான் கனல் சேர் இரும்பு என்ன ஆள் ஆம் - ஆன்மா, நெருப்பைச் சேர்ந்த இரும்பு நெருப்பேயாய்த் தன் தன்மையை இழந்து நிற்றல்போலத் தன் முதன்மையை விட்டு அவனுக்கு அடிமை யாகிவிடும். (ஆகையால்)

அஞ்செழுத்து ஓது—அஞ்செழுத்தை மேற்கூறிய முறைப்படி பற்றி ஓதுவாயாக.

விளக்கம்

சந்திர சூரியக் கிரகணங்கள் முறையே 'இராகு' என்னும் கரும் பாம்பும், 'கேது' என்னும் செம்பாம்பும் படமெடுத்து மறைக்கும் மறைப்பினால் உண்டாவதாகக் கூறினர். இக்காலத்தில் அவ் இரு பாம்புகளின் பட நிழல்களை முறையே சந்திரனது நிழலும். பூமியினது நிழலுமாகக் கூறுகின்றனர். ஏறக்குறைய இரண்டும் ஓரளவு ஒத்துள்ளன. ''இராகு கேதுக்கள் சாயாக் கிரகங்கள்''— என்பது முன்னோர் கூற்று. சாயா—சாயை; நிழல். நிழல் களைப் பாம்பாக உருவகம் செய்ததற்குச் சில கொள்கைகள் காரணமாக இருக்கலாம்.

இரண்டும் சாயாக் கிரகங்கள் ஆதலின் ஒன்றைக் கூறுவத னாலே மற்றொன்றும் கொள்ளப்படும என்னும் கருத்தினால் இங்கு இராகுவை மட்டுமே கூறினார். எனினும் இரண்டையும் கூறுதலே கருத்தென்க.

கண், இங்கு அறிவு, காட்ட அக்கினி—காட்டாக்கினி; வட மொழிப் புணர்ச்சி, 'காட்டாக்கினியின்'—என்பது குறைந்து, ''காட்டாக்கின்'' - என நின்றது. இன், ஒப்புப் பொருளில் வந்த ஐந்தாம் உருபு.

'தோன்றிக் கண் ஆம்' - என மேலே கூட்டி முடிக்க. 'தான் ஆள் ஆம்' - என மாற்றிக் கொள்க. 'ஆதலால்' என்பது சொல் லெச்சம்.

மேற்கோளிற் கூறியதனை இங்கு மீட்டும் ''ஓதஞ்செழுத்து'' எனக் கூறியது, 'கடைப்பிடித்து ஓதுக' - என வலியுறுத்தற்கு.

தோற்றுவாய்

'அண்டமும், பிண்டமும் ஆகிய அனைத்து உலகங்கட்கும் அப்பாலாய் உள்ள சிவனை உடம்பினுள் இதயத்தில் கண்டு வழிபடுதல் எவ்வாறு' - எனத் தியங்கி நிற்கும் மாணவனை மற்றோர் எடுத்துக் காட்டால் தியக்கம் நீக்கித் தெளிவுறுத்து கின்றார்.

வெண்பா — 3

மண்முதல் நாளமலர் வித்தைகலா ரூபம்
எண்ணிய ஈசர் சதாசிவமும் - எண்ணின்
கலைஉருவாம் நாதமாம் சத்திஅதன் கண்ணாம்
நிலைஅதில்ஆம் அச்சிவன்தாள்' நேர்.

இதன் பொருள்

நண்ணின் - உடற்கண் உள்ள இருதயத்தின் இயல்பினை அறியப் புகின்.

மண்முதல் நாளம் - முப்பத்தாறு தத்துவங்களுள் ஆன்ம தத்துவம் இருபத்து நான்கு உந்தியை அடியாகக் கொண்டு எட்டு விரற் கிடை அளவாக நீண்ட கொடியாகவும்.

வித்தை மலர் - வித்தியா தத்துவம் ஏழும் சிவ தத்துவத்தில் கீழ்க் கண்ணதாகிய சுத்த வித்தையும் ஆக எட்டும் எட்டு இதழ் களாகவும்.

எண்ணிய ஈசர் சதாசிவமும் கலா ரூபம் - அதற்குமேல் எண்ணப் பட்ட ஈசுரம், சாதாக்கியம் என்னும் இரண்டும் இதழ்களின் உள்ளே உள்ள அறுபத்து நான்கு கேசரங்களும்.

ஆம் சத்தி கலை உரு - அதற்கு மேலாய சத்தி தத்துவம் கேசரங்கட்கு உள்ளிருக்கும் பொகுட்டும்.

ஆம் நாதம் அதன்கண் - அதற்கு மேலாய 'சிவம்' என்னும் தத்துவம் ஐம்பத்தோரெழுத்தாம் ஐம்பத்தொரு விதைகளும்.

ஆம் - இவ்வாறு தாமரை மலர் வடிவாய் விளங்கும்.

அச்சிவன் தாள் அதில் நிலை ஆம் - தத்துவம் முப்பத்தாறினையும் கடந்த சிவனது சத்தி அத்தாமரை மலராகிய இருக்கையின் மேல் சிவனது திருமேனியாய் விளங்கும்.

நேர் - 'அத்திருமேனியை உடையவனாய்ச் சிவன் உனது வழிபாட்டினை ஏற்று அருள் புரிவான்' என்று உணர்ந்து அவனை அஞ்செழுத்தால் வழிபடு.

விளக்கம்

உலகம் ''அண்டம், பிண்டம்' - இரு வகையாய் இருப்பினும் இரண்டும் ஓரியல்பனவேயன்றி வேற்றியல்புடையன அல்ல. அஃதாவது அண்டத்தில் உள்ளன எல்லாம் பிண்டத்திலும் உண்டு. பிண்டத்தில் உள்ளன எல்லாம் அண்டத்திலும் உண்டு. இதனை உமாபதி தேவர் தமது கோயிற் புராணத்துள்:

''அண்டபிண்டம் அவைசமம் ; ஆதலால்'' [1]

என அருளிச்செய்தார்.

உலகம் முப்பத்தாறு தத்துவங்களால் ஆனது. இறைவன் உலகத்தைக் கடந்திருப்பினும் தொடர்பின் விலகிப் போகாமல் அதன் முடிவிலே விளங்கி நிற்பான். இதனை அப்பர் பெருமான்

''அண்டம் ஆரிரு ளூடு கலந்துஉமர்
உண்டோர் ஒண்சுடர்'' [2]

---

1. பதஞ்சலி சருக்கம் - 70.
2. திருமுறை - 5.

என அருளிச் செய்தார். ஆகவே இறைவன் பிண்டத்திலும் தத்துவங்களைக் கடந்து அவற்றின் முடிவிலே விளங்குதல் பெறப் படும். அங்ஙனம் அவன் தத்துவங்களின் முடிவில் விளங்கு தலையே இவ்வெண்பா இருதய கமலத்தின் அமைப்பினைக் கூறும் முகத்தால் விளக்கிற்று ஆகவே, தத்துவம் கடந்த முதல்வனை இருதயத்திற் கண்டு வழிபடுதல் இயலும் என்பதாயிற்று.

இதனுள், "வித்தை" என்றது இரட்டுற மொழிதலாய், வித்தியா தத்துவம்' எனவும், 'சுத்த வித்தை' - எனவும் இரு பொருள் தந்தது.

கலைகள் அறுபத்து நான்கு ஆதலின், "அதன் ரூபம்" - என்றது 'அறுபத்து நான்கு' எண்ணினைக் குறித்தது.

"அதன் கண்ணாம்"-என்பதைக் "கலை உரு" என்பதன்பின் கூட்டி, அவ்விரண்டையும் "நாதம். சத்தி" என்பவற்றோடு எதிர் நிரல் நிறையாக இயைக்க.

"கலை உரு" - என்பது 'கலைக்குள் உரு என விரியும். 'அதனில்' என்பது அன் சாரியை தொக்கு "அதில்" - என நின்றது.

இங்ஙனம் கூறியதனால், 'ஆன்ம தத்துவங்கள் மேல் நிற்க, வித்தியா தத்துவங்கள் அவற்றின் கீழும், சிவ தத்துவங்கள் அவற்றின் கீழும் நிற்கும்' - என மலையற்க. என்னை? 'இத் தாமரை கீழிருந்து தோன்றி மேற் செல்லாது, மேலிருந்து தோன்றிக் கீழ்ச் செல்வதொரு தெய்விகத் தாமரை' என்பது கருத்தாகலின்.

> "கருதுவார் இதயத்துக் கமலத் தூறும்
> தேனவன் காண்"

எனத் திருமுறையுள்ளும் இறைவன் இருதய கமலத்தில் அருளப் பட்டமை காண்க.

மூன்றாம் அதிகரணம் முடிந்தது.

நூற்பாவின் தொகைப் பொருள்

ஆறாம் நூற்பாவில், ''வாக்கு மனாதீத கோசரன்'' - எனக் கூறியவாறு, பதியைப் பாச ஞான பசுஞானங்கள் கண்ணாகக் காணுதல் இயலாது. அதனால் அவனது ஞானமாகிய பதிஞானம் கண்ணாகவே காணுதல் வேண்டும்.

பதிமட்டுமன்றிப் பசு பாசங்களையும் உண்மையாக அறிதல் பதிஞானம் கண்ணாகவேயாம். அதனால், பாசம் நீங்கிய பின்னும் பசு தன்னறிவாலே எந்தப் பொருளையும் அறிய இயலாது. அது பற்றியே பதிஞானத்தைப் பெற்றவரே ஞானி களாகவும், பிறரெல்லாம் அஞ்ஞானிகளாகவும் கருதப்படு கின்றனர்.

உயிர் யாதொன்றையும் இறைவன் அறிவிக்கவே அறிவ தாயினும் அங்ஙனம் அறியுமிடத்துப் புறப் பொருள்களை அறியு மன்றித் தன்னையும், தன்னைச் செலுத்தி நிற்கும் முதல் வனையும் அறியமாட்டாது. இதனை உயிராற் செலுத்தப் பட்டே பொருள்களைக் காண்கின்ற கண் அங்ஙனம் உயிராற் செலுத்தப்பட்ட விடத்துப் புறப் பொருள்களைக் காணுதலன்றித் தன்னையும், தன்னைச் செலுத்தும் உயிரையும் காண மாட் டமையில் வைத்து அறியலாம்.

பாசத்தையும், தன்னையுமே தன்னறிவால் அறிய மாட்டாத உயிர் பதியை எங்ஙனம் தன்னறிவால் அறியும்? அறியாது ஆதலின் உயிர் பதிஞானத்தைப் பெறுதலே செயற்பாலதாம்.

உயிர் பதிஞானத்தைப் பெறுதற்குப் பாசமாகிய கருவிகள் அனைத்தையும், 'இவை அசத்துக்கள்; நிலைபெறாது அழிவன, என உணர்ந்து அவற்றிற் பற்றுச் செய்யாது விடுதல் வேண்டும். அங்ஙனம் விட்டவழிப் பதியினது ஆற்றல் - அருள் விளங்கித் தோன்றும். அதுவே பதிஞானம். அதனை உயிர் தன் அறிவிற்குக் காட்டாகப் பற்றி அது கண்ணாகவே எல்லாவற்றையும் காணுதல் வேண்டும் ஆதலின், பதியையும் அந்தப் பதிஞானம் கண்ணாக வேறு காணாது தன் அறிவினுள்ளே காணுதல் வேண்டும்,

''நின் அருட் கண்ணால் நோக்காதார் அல்லாதாரே''[1] என அருளிச் செய்ததும் இங்ஙனம் காணும் காட்சியையே யாம்.

கருவிகள் அனைத்தையும் நீக்கியவிடத்துத் தோன்றுவதை 'வெறும் சூனியம்' எனக் கருதுதல் கூடாது. ஏன் எனின், உயிர் இதுகாறும் சுட்டுணர்வாற் கண்டு வந்த பாச பசுக்களைப்போலப் பதி சுட்டுணர்விற்கு அகப்படான் ஆதலின் அவன் முதற்கண் சூனியம் போலத் தோன்றினும், அக்காட்சியில் நிலைத்து நிற்கப் பின் அங்ஙனம் காணும் அறிவுக்கு அறிவாய் அதனுள் விளங்கி நிற்பான்.

படிகத்தில் தீட்டப்பட்ட வன்னங்களையும், சுவரில் தீட்டப் பட்ட ஓவியங்களையும் தள்ளி நோக்கும் பொழுது புலனாவது அவற்றிற்குப் பற்றுக்கோடாகிய படிகமும், சுவரும் அல்லது வேறாகாமைபோல, கருவிகள் அனைத்தையும் தள்ளி நோக்கிய பொழுது புலனாவது அவற்றிற்குப் பற்றுக்கோடாய் நின்ற பதியினது ஆற்றலன்றி வேறாதற்கில்லை,

இனி அது, அசத்தோடு கூடி அசத்தாய் நின்ற சதசத்தாகிய உயிரும் அன்று - இறையாற்றலே.

அவ்வாற்றலை உயிர் பற்றியவழி அதற்கு அசத்தாய் நின்ற தன்மை அறவே ஒழிய அஃது அப்பதிப் பொருட்கு அடிமையாம்.

இனி அப் பதிஞானத்தின் வழி உயிர் சீவத் தன்மை நீங்கிச் சிவமாதல் எங்ஙனமெனின், கருவிகளைக் களைந்தவிடத்துத் தோன்றும் பதிஞானத்தினாலே உயிர், 'சிவன் நான்' எனப் பாவிக்கும் பாவனையாலேயாம்,

இப்பாவனை நீங்காது நிலைபெறுதற்குத் துணை புரிவது முத்தி பஞ்சாக்கரம், அதனால், உயிர் தனது உடம்பில் இருதய கமலத்தில் சிவனை அஞ்செழுத்து வடிவில் கண்டு அஞ்செழுத்தால் வழிபடுதலும், உந்தியில் உள்ள ஞான அனலைச் சுழுமுனை இடை நாடிகளால் புருவ நடுவினின்றும் ஊறும் அமுதத்தை நெய்யாகச் சொரிந்துச், சிவனை நோக்கி ஓம்புதலும், புருவ நடுவில் முத்தி

....

1, திருமுறை - 6.

பஞ்சாக்கரத்தை மகா வாக்கியப் பொருள்பட உணர்ந்து சிவனைத் தியானித்தலும் செய்தால் உயிர் சிவமாம் தன்மையைப் பெற்றுச் சிவனுக்கு ஆளாகும்.

இவ் வழிபாடு, அனல் ஓம்பல், தியானம் - என்பன பண்டைப் பழக்கமாகிய வாசனாமலம் தாக்க, அதனால் பண்டைப் பந்த நிலைமே உண்டாகாதவாறு காப்பன ஆதலின் பதிஞானத்தைப் பெற்ற ஞானி இதனை இகழாது கடைப்பிடித்துச் செயற் பாலன்.

என, இம்மூன்று அதிகரணப் பொருளையும் ஒருவாறு தொகுத்துணர்ந்து கொள்ளலாம்.

ஒன்பதாம் நூற்பா முடிந்தது.

பத்தாம் நூற்பா

இனிப் பத்தாம் நூற்பாவை ஆசிரியர் பாடமாக ஓதியது வருமாறு :

அவனே தானே ஆகிய அந்நெறி
ஏக னாகி இறைபணி நிற்க;
மலமாயை தன்னோடு வல்வினை யின்றே.

இனிச் சூத்திரத்தைச் சுட்டிக் கருத்துரைத்தது வருமாறு :

என்பது சூத்திரம்.
என் நுதலிற்றோ எனின்,

பாசக் கயம் பண்ணுமாறு உணர்த்துதல் நுதலிற்று.

கருத்துரை விளக்கம்

முன்னை நூற்பா, "ஆன்ம சுத்தி பண்ணுமாறு உணர்த்திற்று'-எனக் கூறப்பட்டது, பாசம் மலம் ஆகலின் அது நீங்குதலே ஆன்மாவிற்குச் சுத்தியாதலின், இந்நூற்பாவால் கூறப்படும் பாச நீக்கம் வேறு யாது - எனின், அஃது உண்மை. ஆயினும் சுத்தி பண்ணுதல் செயலும், பாசம் நீங்குதல் பயனும் ஆதலின் அவ்வாற்றால் அவற்றிடையே சிறிது வேறுபாடு உண்டு. எனவே, முன்னை நூற்பாவில் ஆன்ம சுத்தி செயலாய் நிகழ்ந்து, இந்நூற்பாவில் பயனாய் முடிகின்றது என உணர்ந்துகொள்க.

> ''வையம் முழுதும் மலக்கயம் கண்டிடும்
> உய்யலந் தான்உரை உந்தீபற'' [1]

என்பதில் க்ஷயம், 'கயம்' என ஆளப்பட்டிருத்தலின், அஃதே மரபாதல் விளங்கும். அதனால் இக்கருத்துரையில் ''பாச க்ஷயம்'' என எழுதப்பட்டது ஏடெழுதினோரால் விளைந்ததாகும்.

---

1. திருவுந்தியார் - 45.

நூற்பாவின் திரண்ட பொழிப்பு :

[அவனே தானே ஆகிய அந் நெறி—] முன்னை நூற்பாவிற் கூறியவாறு, ஆசிரியன் அருள்மொழியைச் சிந்தனை வகையால் சிந்திக்குமிடத்து அச்சிந்தனை யறிவினுள்ளே விளங்கும் அம் முதல்வன் முன்பு பெத்த காலத்திலும் உளனாகியும் அவ்வுண்மை தோன்றாது ஆன்மாவேயாய் நின்றது போல.

[ஏகன் ஆகி (நிற்க) -] இம் முத்தி காலத்தில் ஆன்மா உளதாகியும் தான் முனைந்து தோன்றாது அம் முதல்வனேயாய், அவனுள் அடங்கி ஒன்றாகி நிற்றல் வேண்டும். (பின்பு)

[இறை பணி நிற்க -] அதன் பின்பு அவ்வான்மா அவன் பணியிலே நிற்றல் வேண்டும். (அவ்வாறு நிற்குமாயின்)

[மல மாயையொடு வல்வினை இன்றே -] ஆணவ மாயைக ளோடு கூடிய வலிய கன்ம மலம் தன் வாசனையும் இன்றிப் பற்றறக் கழியும்.

விளக்கம்

''அவனே'' என்னும் ஏகாரம் பிரிநிலைப் பொருளிலும், ''தானே'' என்னும் ஏகாரம் தேற்றப் பொருளிலும் வந்தன. தான் - ஆன்மா.

'அந்நெறியான்' என, மூன்றாவது விரிக்க.

''மல மாயையோடு கூடி வினை'' என்றாராகலின், ''இன்றே'' என ஒருமையாற் கூறினார், ''சிறப்பொடு பூசனை செல்லாது''[1] என்றது போல.

''அவனே தானே ஆகிய'' என உவமைக்கு ஓதியதனை பொருட்கும், ''ஏகனாகி'' - எனப் பொருட்கு ஓதியதனை உவமைக்கும் கூட்டி,

---

1. திருக்குறள் - 18.

'அவனே தானேயாய் ஏகனாகி நின்ற அந்நெறி, தானே அவனேயாய் ஏகனாகி நிற்க' - என ஓதிக்கொள்க.

''ஆன்மா இறைவனோடு ஏகன் ஆதல் எவ்வாறு'' - என வினா நிகழ்வுழி மத வாதிகள் பலரும் பலவாறு விடையிறுப்பர்.

''ஆகாயம் ஒன்றே செயற்கை வகையால் - மகாகாயம், குடாகாயம் என இரண்டாய் நின்றதாயினும் குடம் உடைந்தபின் குடாகாயம் மகாகாயத்தோடு ஒன்றாய் விடுதல் போல'' - என்பர் கிரீடாப் பிரம வாதிகள்.

''மயக்கத்தால், கயிற்றை, 'பாம்பு' என மருண்டவனுக்கு அம் மயக்கம் நீங்கிய பின்னர்ப் பாம்பு கயிறே ஆதல்போல'' என்பர் மாயா வாதிகள்.

''குடத்தைக் கண்டு, - இது மண்ணோ - என உணரும்வழி குடம் மண்ணே ஆதல் போல'' - என்பர் பிரம பரிணாம வாதிகள்.

''நீலம் சூடினாள் - என்று பிறன் சொல்லக் கேட்ட ஒருவன் - நீலப் பூச்சூடினாள்—என உணருமிடத்து நீல நிறம் நீலப்பூ ஆதல்போல'' - என்பர் விசிட்டாத்துவிதிகள்.

''காய்ந்த இரும்பில் பட்ட நீர் சுவறி இரும்பே யாதல் போல'' - என்பர் சுத்த சைவர்.

''பாவை போல்வாளை, - பாவை - என்ற விடத்து அங்ஙனம் சொல்லப்பட்ட பெண் பாவை யாதல் போல'' - என்பர் சிவ சமவாத சைவர்.

இன்னும் பலர் பலவாறாகக் கூறுவர். 'அவையெல்லாம் சித்தாந்தம் அல்ல' - என மறுத்துச் சித்தாந்தம் இது' என்றதற்கு, ''அவனே தானே ஆகிய அந்நெறி'' - என்றார்.

பெத்த காலத்தில் இறைவன் தான் முதல்வனாய் நில்லாது உயிர் வழி நிற்றலை வழி நூலாசிரியர்,

''என்னுட் கரந்துஎன் பின்வந் தருளி
....

புக்குழிப் புக்குப் பெயர்ந்துழிப் பெயர்ந்து
மிக்க போகம் விதியால் விளைத்திட்டு
எற்பணி ஆளாய், எனைப்பிரி யாதே
....
என்வழி நின்றனன் எந்தை; அன்றோ'' [1]

எனவும், புடைநூலாசிரியர்,

''பாளைப் பசும்பதத்தும், பாலனாம் அப்பதத்தும்
நாளுக்கு நாட்சகல ஞானத்து - மூள்வித்துக்
கொண்டாள ஆளக் கருவிகொடுத்து ஒக்கநின்று
பண்டாரி யான படிபோற்றி'' [2]

எனவும் விளக்கினர்.

இந்நூற்பாவை ஆசிரியர் இரண்டு அதிகரணங்களாகக் கண்ணழித்துரைப்பார்.

---

1. இருபா இருபஃது - 18. 5 - 13.
2. போற்றிப் பஃறொடை - 23, 24.

முதல் அதிகரணம்

[அவனே தானே ஆகிய அந்நெறி ஏகனாகி'']

முன்னுரை

''பாசஞான பசுஞானங்களால் அறிய் வாராத பதியை அவனது ஞானத்தாற் க்ாணுதலே பெறத்தக்க பேறாதலின் அதனைப் பெற்றபின் ஆன்மா அவனோடு ஏகனாதல் எற்றுக்கு'' - எனச் சிவ சமவாத சைவர் முதலாயினார் நிகழ்த்தும் தடைக்கு விடை கூறி, ஆன்மா இறைவனோடு ஏகனாதலை வலியுறுத்துவது இவ்வதிகரணம் அதனால் இஃது ஏகனாதல் அதிகரணமாகும்.

அதிகரணம்

மேற்கோள்

ஈண்டுப் பரமேசுரன் இவ்வான்மாவாய் நின்ற முறைமையான் அவனிடத்து ஏகனாகி நிற்க - என்றது.

ஏது

அவ்வாறு நிற்க்வே, 'யான், எனது' என்னும் செருக்கற்று, அவனது சீபாதத்தை அணையும் ஆகலான்.

மேற்கோள் விளக்கம்

'ஈண்டு என்றது' - என இயையும், ''நின்ற'' என்னும் இறந்த காலம் பெத்த காலம். என்னை? இது கூறப்படுவது முத்தி காலத்தில் ஆகலின். ஆகவே, ''நிற்க'' என்றது 'இப்பொழுது இவ்வாறு நிற்க' - என்றதாம்.

ஏது விளக்கம்

தோற்றுவாய்

மேல், சிவ சமவாத சைவர் முதலியோர் நிகழ்த்துவதாகக் கூறிய தடைக்கு விடை ஏதுவாற் கூறினார். என்னும் செருக்கு -

என்று இவ்வாறு தன்னையும், தலைவனையும் வேறு வைத்துக் காணும் மயக்க உணர்வு. அஃதாவது. 'பாச ஞான பசுஞானங்களால் அறியப்படாத முதல்வனை யான் பதிஞானத்தால் அறிகின்றேன்' - என இவ்வாறு உணர்தல்

'யான்' என அறியப்படுவது ஆன்மா. 'எனது' எனப் பற்றுச் செய்யப்படுவது அதனது அறிவு. 'பதிஞானத்தால்' - என்னுமிடத்து பதிஞானம் ஆன்ம அறிவுக்குத் துணையாய் மட்டும் நிற்கின்றது.

'' - யான் எனது அறிவால் பதிஞானத்தால் பதியை அறிகின்றேன் - என்பது மெய்யுணர்வாகாது, மயக்க உணர்வாதல் எங்ஙனம்'' எனின், பதிஞானம் கண்ணுக்கு விளக்குப்போல வேறு நில்லாது ஆன்ம அறிவினுள் அறிவாய் நின்று அறிவிப்பது ஆதலின் அதனை மறந்து வேறு நிற்பது போலவும், பதியும் அவ்வாறே அறிவினுள் அறிவாய்க் கலந்து நிற்க, அதனையும் மறந்து வேறாய் அறியப்படுவது போலவும் உணர்தல் மயக்க உணர்வேயன்றி மெய்யுணர்வாமாறில்லை.

இப்பியை, 'வெள்ளி' - என்று உணர்பவனுக்கு அந்த இப்பியன்றி, வெள்ளி கிட்டாதவாறு போல, எந்த ஒன்றையும் பதியின்றித் தானாக அறியும் அறிவாக அறிபவனுக்கு அந்த உயிரன்றிப் பதிப் பொருள் கிட்டாது. அதனால் அவன் பதியினது சீபாதத்தை அணையான். ஆகவே, 'யான் பதியை எனது அறிவாலே அறிகின்றேன்' என, தான், தன் அறிவு, அறியப்படும் பதி - இவற்றை இங்ஙனம் வேறு வேறாகப் பகுத்துக் காணுதலை விடுத்துப் பதி ஒன்றையே கண்டு நின்றவழியே பதியினது சீபாதத்தை அணைவான் ஆதலின்.

''அவ்வாறு நிற்கவே யான், எனது
என்னும் செருக்கற்று அவனது
சீபாதத்தை அணையும்''

என்றார்,

''யான்எனது என்னும் செருக்கறுப்பான் வானோர்க்கும்
உயர்ந்த உலகம் புகும்'' என்பது பொதுமறை [1]

---

1. திருக்குறள் - 346.

எனவே, அங்ஙனம் ஏகனாகி நில்லாத விடத்து யான், எனது என்னும் செருக்கு அறுதலும், முதல்வனது சீ பாதத்தை - அணைதலும் கூடா' - என்பது போந்தது.

முன்னை நூற்பாவிற் கூறியபடி, உயிர் பதியை அதன் அறிவையே தன் அறிவாகப் பெற்று அறியுமிடத்து அஃது ஒன்றை மட்டுமே அறிந்து அதனிடத்து நிற்க ஒட்டாது, 'யான், பதியை, எனது அறிவால் அறிகின்றேன்' - எனத் தன்னையும், தன் அறிவையும் உணரச் செய்வது ஆணவ மல வாசனையேயாம். அவ் வாசனை பதியோடு ஏகனாகி நிற்றல் ஒன்றானே நீங்குவ தாம். ஆகவே, 'ஏகனாகி நிற்க மலம் இன்றாம்' - என்பது பொருளாயிற்று.

உயிர் ஒன்றனை அறியுமிடத்து, 'அறிபவன், அறிவு, அறியப் படும் பொருள்' - என மூன்று பொருள்கள் இருந்தே அறிதல் தொழில் நிகழும்.

இந்நிலை எப்பொழுதும் உள்ளதே. ஆயினும் ஏகான்ம வாதிகள், ''இம்முறைமை பெத்த காலத்தில் மட்டுமே உளதாம். முத்தி காலத்தில் அறியப்படும் பொருள் ஒன்றே உளதாம்'' - என்பர். அது பொருந்தாது. ஏனெனின், உள்ளது என்றும் உள்ளதேயன்றி, உள்ளது என்றும் இல்லதாகாது.

அறிபவன், அறிவு, அறியப்படும் பொருள் - என்பன முறையே, 'ஞாதிரு, ஞானம், ஞேயம்' - என வடமொழியிற் சொல்லப்படும் அவற்றை, 'திரிபுடி' - என்பர். 'ஞாதிரு' எனினும், 'ஞாதா' - எனினும் ஒக்கும்.

யான், எனது - என்பதில், யான் - அறிபவன். எனது - அறிவு. அறியப்படும் பொருளும் அவனுக்கு உரியதாய்விடும்.

இங்ஙனம் முப்பொருளையும் உணர்தலை விடுத்துப் பதிஒன்றையே உணர்ந்து நிற்பார்க்குச் சொல் எழவும் வழி யில்லை. அந்நிலையே சிவாநுபவ நிலையாம், அதனை,

''சொல் இறந்து நின்ற தொன்மை'' 1

எனவும்,

---

1. திருவாசகம் - குயிற் பத்து - 1.

"சொற்பதத்தார் சொற்பதமும் கடந்து நின்ற
சொலற்கரிய சூழலாய் இதுஉன் தன்மை"[1]

எனவும் திருமுறைகள் வெளியிடும். அது பற்றியே,

"சொல்லும் இடம்அன்று; சொல்லப் புகும்இடம்
எல்லை சிவனுக்கென் றுந்தீபற"[2]

எனச் சாத்திரம் கூறுவதாயிற்று.

"பேசா அனுபூதி" - என்றார், அருணகிரி நாதர்.
'அவனே' தோற்றுவாய்
'யான்' என்றும், 'எனது' என்றும்

எழும் பன்மை உணர்வு மயக்க உணர்வேயாதலை எடுத்துக் காட்டால் இனிது விளக்குகின்றார்.

வெண்பா

நான் அவன் என்(று) எண்ணினர்க்கும் நாடும்உளம் உண்டாதல்
தான் என ஒன்(று) இன்றியே தான அதுவாய்,-நான் என ஒன்(று)
இல்என்று தானே எனும்அவரைத் தன் அடி வைத்(து)
இல்என்று தானாம் இறை.

இதன் பொருள்

நான் அவன் என்று எணணினர்க்கும் - 'யான் முதல்வனாகிய பதியைக் காண்கின்றேன்' - என உணர்பவர்கட்கும் (''எல்லாவற்றினும் மேலாக யான் என்னைக் காண்கின்றேன்; எனக்கு மேல் எந்த ஒன்றையும் யான் காணவில்லை'' என்று உணர்பவர்கட்கு உண்டாதல் போலவே)

நாடும் உளம் உண்டு - அவ்வாறு அறிந்து நிற்கும் தன்முனைப்பு அறிவே உளதாகும்.

ஆதல் - ஆதலால்.

---

1. திருமுறை - 6.
2. திருவுந்தியார் - 29.

இறை தான் என ஒன்று இன்றியே - இறைவன், 'யான் பதியைக் காண்கின்றேன்' - என உணர்பவரிடத்திலும், (''எனக்கு மேல் எதனையும் யான் காணவில்லை'' - என்று உணர்பவரிடத்தில்) 'தான்' என்று ஒரு முதல் தோன்றாமலே.

தான் அதுவாய் - தான் அந்தத் தன்முனைப்பு வடிவேயாய் மறைந்து நின்று.

நான் என ஒன்று இல் என்று - 'யான்' என்று ஒரு முதல் இறைவனுக்கு வேறாய்த் தோன்றவில்லையே என்றும்.

தானே எனும் அவரை - 'இறைவன் ஒருவனே எங்கும் காணப்படுகின்றான்' - என்றும் உணர்கின்ற அவரை.

தன் அடி இல் என்று வைத்து - 'தனது திருவருளே அவர்கட்கு இடம்' - என அவ்வருள் நிறைவில் அடக்கி.

தான் ஆம் - எல்லாப் பொருளும், எங்கும் தானாய் விளங்குவான்.

விளக்கம்

''ஆகையால் யான் எனது அறிவால் பதியைக் காண்கின்றேன்'' - என உணரும் உணர்வும் சிவபோதம் ஆகாது சீவபோதமேயாகிய மயக்க உணர்வே'' - என்பது குறிப்பெச்சம்,

இதனைக் கண்ணொளி விளக்கொளிகளாகிய உவமையால் விளக்குவர், அங்ஙனம் விளக்கும் வகையைக் காண்போம் ;

இருளில் காணப்படாதிருந்த பொருளை விளக்கி வந்த பொழுது கண் காண்கின்றது. எங்ஙனம் காண்கின்றது?

விளக்கொளி கண்ணிலும், பொருளிலும் பட, கண்ணொளி விளக்கொளியோடு இரண்டறக் கலந்து காண்கின்றது. ஆயினும், விளக்கொளி தனியாய்க் காணப்படுதல் போலக் கண்ணொளி தனியாய்க் காணப்படுதல் இல்லை. காணப்படாமை பற்றி, 'கண்ணொளி அக் காட்சியிடத்து இல்லை' என்றும் சொல்லுதல் கூடாது. ஏன்? விளக்கு வந்தபொழுதும் ஒளியிழந்த கண்ணுக்குக் காட்சி நிகழாது ஆகலின். ஆகவே. 'விளக்கிற்கு ஒளியிருத்தல் போலக் கண்ணிற்கும் ஒளி உண்டு? என்பதும், 'ஆயினும் விளக்

கொளி போலக் கண்ணொளி தனித்துக் காணப்படாது, விளக்கு, ஞாயிறு, திங்கள் முதலிய ஒளிகளில் வைத்தே அறியபபடும்' என்பதும் விளங்கும்.

ஏது விளக்கம்

கண்ணொளி, விளக்கொளி இரண்டு உள்ள காட்சியைக் கண்ணினது காட்சியாகக் கருதின் அதுபொழுது விளக்கொளி இருந்தும் இல்லாததாய்விடும். அவ்வாறின்றி அக்காட்சியை விளக்கினது காட்சியாகக் கருதின் அதுபொழுது கண்ணொளி இருந்தும் இல்லாததாய்விடும்.

இவ்வாறே பதியறிவும், ஆன்ம அறிவும் இரண்டறக் கலந்த வழி நிகழும் அறிவை ஆன்ம அறிவின் அறிதலாகக் கருதின் அப்பதி இருந்தும் இல்லதேயாம்.

இதனையே ஆசிரியர் இவ்வெண்பாவில்,

''நான் அவன் என்று எண்ணினர்க்கும் நாடும் உளம் [உண்டு ஆதல்
தான் என ஒன்று இன்றியே
தான் அதுவாய்''

என்றும்,

''நான் என ஒன்று இல் என்று தானே எனும் அவரைத் தன் அடி வைத்துத் தானாம்'' என்றும் கூறினார்.

''விளக்கொளி கலந்தவற்றைக் கண்ணொளி அகல நின்றே கண்டிடும்; வேறு காணாக் கண்ணொளி விளக்கின் சோதி கலந்திடும்.''1

எனப் புடை நூலாசிரியர் விளக்கினார்.

ஆன்ம அறிவும், இறை யறிவும் இரண்டறக் கலந்தவழி நிகழும் அறிவை, உயிர் தன் அறிவு தனித்து அறிதலாகக் கருதுதல் பெத்த மாதல் போலவே, தனது அறிவு இறையறிவுடன்

---

1. சிவப்பிரகாசம்—58.

கூடி யறியும் அறிதலாகக் கருதுதலும் பெத்தமேயாம். ஏனெனில் இறையறிவோடு கூடிய வழியும் தன் அறிதல் தொழிலை உயிர் அறிவின் தொழிலாகவே கருதுதலால்.

இஃதே இவ்வெண்பாவினால் வலியுறுத்தப்பட்டது.

''ஞாதிரு. ஞானம், ஞேயம்—என்னும் திரிபுடி ஞானம் நீங்கிய ஒருமை யுணர்வே உண்மை யுணர்வு'' - என்பது மெய்ந் நூல்களில் எங்கும் சொல்லப்படுவது ''அவ்வாறு சொல்லப்படு வதன் கருத்து - ஞேயம் ஒன்றே உள்ளது; ஏனை இரண்டும் இலலன; அவை மாயையின் தோற்றங்கள்'' - என்பதேயாகும். ஆகையால், அவற்றை அவ்வாறு உணர்தலே மெய்யுணர்வு'' என்பர் மாயாவாதிகள.

இல்லது என்றும் உள்ளதாய்த் தோன்றுதல் இல்லை - கயிறு பாம்பாய்த் தோனறுகின்றது - எனின், கயிற்றின்கண் பாம்பு இல்லையாயினும், பாம்போடு ஒக்கும் ஒப்புமைத் தன்மை உள்ளது. அவ்வொப்புமைத் தனமையே மாலைக் காலத்து இருளாகிய குற்றத்தோடு கூடிய கண்ணிற்குப் பாம்பாய்த் தோன்றுகின்றது. ஆகவே ஒராற்றானும் உள்ளதாகாதது உள்ளதாய்த் தோன்றுமா றில்லை - என மறுத்து, மற்றுத் திரிபுடி நீங்குதலாவது, - அறிபவன் தன்னையும், தனது அறிவையும் அறிதலை விடுத்து, அறியப்படும் பொருளை மட்டும் அறிதலே - என்பதைப் புடைநூ லாசிரியர் தமது வினா வெணபாவில.

''காண்பானும், காட்டுவதும், காண்பதுவும் நீத்துண்மை
காண்பார்கள் நன்முத்தி காணார்கள்; - காண்பானும்,
காட்டுவதும், காண்பதுவும் தண்க டந்தைச் சம்பந்தன்
வாட்டுநெறி வாரா தவர்''[1]

என நயம்பட விளக்கினார். ''மூன்று பொருள்கள் இல்லை; ஒரு பொருளே உள்ளது'' - எனக் கூறுபவரும் உண்மையை உணர்ந்திலர். ''மூன்று பொருளையும் அறிந்து நிற்றல் வேண்டும்'' எனறு கூறுபவரும் உண்மையை உணர்ந்திலர் - என்பது இங்கு அவரால் கூறப்பட்டது,

காட்டுவது - அறியப்படும் பொருள். காண்பது - அறிவு.

முதல் அதிகரணம் முடிந்தது.

---

1. வினா வெண்பா—11.

இரண்டாம் அதிகரணம்

["இறை பணி நிற்க"]

முன்னுரை

முன்னை யதிகரணத்தால் 'ஆன்மா வேறு நில்லாது முதல்வ னோடு ஏகனாகி நிற்றல் வேண்டும்' என வலியுறுத்தியவிடத்து, "எடுத்த உடம்பு நிற்குமளவும் அது நுகரற் பாலதாய பிராரத்த கன்மம் நிற்கவே செய்யும். அது நிற்குமிடத்து அதனை நுகர் தற்கு வேண்டப்படும் முயற்சி மன மொழி மெய்களால் நிகழ்தல் ஒழியாது. அதனால், ஆன்மா உடம்பொடு கூடி நிற்கும் பொழுது இறைவனோடு ஏகனாகி நிற்றல் எங்ஙனம் கூடும்"—என அகச் சமயிகளாகிய சைவர் தடை நிகழ்த்துவர். அத்தடையை விடுத் தற்கு இறை பணி நிற்றலை வலியுறுத்துவது இவ்வதிகரணம். அதனால் இஃது, இறைபணி யதிகரணமாகும்,

அதிகரணம்

மேற்கோள்

இனி—இறை பணி வழுவாது நிற்க - என்றது,

ஏது

அவனருளா லல்லது ஒன்றையும் செய்யா னாகவே அஞ்ஞான கன்மம் பிரவேசியா ஆகலான்.

மேற்கோள விளக்கம்

வழுவுதல் - சோர்வுற்று இறைவனை மறத்தல், நூற்பா வினுள், ",நிற்க" - என்றது 'வழுவாது நிற்க' - என்னும் பொருள தாதல் இங்கு அதனை விளங்கக் கூறியதனால் அறியப்படும்.

ஏது விளக்கம்

'இங்கு இறை பணியாவது யாது?' - என்னும் வினாவிற்கு விடையாகவே, " அவனருளாலல்லது ஒன்றையும் செய்யானாகவே '

எனக் கூறினார். எனவே, பிராரத்த கன்ம நுகர்ச்சி பற்றி மன மொழி மெய்களால் யாதொன்று செய்ய வரினும் அச் செயலைத் தன் செயலாக நினையாது இறைவன் பணியாகக் கொண்டு செய்தலே இங்குக் குறிக்கப்பட்ட இறைபணி என்பது விளங்கும். இவ்வாறு நிற்றல், 'தான் பணியை நீத்தல்' - என்றும், 'இதுவே ஆன்ம சுத்தியாம்' - என்றும் சிவப்பிரகாச நூல்[1] கூறுவதைக் காணலாம்.

''நெஞ்சினைத் தூய்மை செய்து
நினைக்குமா நினைப்பி யாதே
வஞ்சமே செய்தி யாலோ !
வானவர் தலைவ னேநீ''[2]

''நின்னையைப் போதும் நினையலொட்டாய்நீ :
நினையப் புகின்
பின்னைஅப் போதே மறப்பித்துப்
பேர்த்தோன்று நாடு வித்தி''[3]

''ஓதுவித்தாய் முன்; அறவுரை காட்டி
அமணரோடே
காதுவித்தாய்; கட்ட நோய்பிணி தீர்த்தாய்;
கலந்தருளிப்
போதுவித்தாய்''[4]

''குற்றம் நீ; குணங்கள் நீ; கூடலால வாயிலாய்!
சுற்றம் நீ, பிரானும் நீ: தொடர்ந்திலங்கு சோதிநீ;
கற்றநூற் கருத்து நீ; அருத்தம் இன்பம் என்றிவை
முற்றும்நீ ; புகழ்ந்துமுன் உரைப்பதென் முகம்மனே''[5]

''மான்திகழும் சங்கிலியைத் தந்துவரு பயன்களெலாம்
தோன்றஅருள் செய்தளித்தாய்''

''சங்கிலியோ டெனைப்புணர்த்த தத்துவனை''

''சார்ந்தனன் சார்ந்தனன் சங்கிலி மென்றோள்
தடமுலை
ஆர்ந்தனன் ஆர்ந்தனன் ஆமாத்தூர் ஐயன் அருளதே''[6]

---

1. செய்யுள் - 71.
2. திருமுறை—4ல் 23.9.
3. 112.4.
4. 99.1.
5. திருமுறை 3.52.3
6. திருமுறை 7.89.10; 51.11; 45.4.

"அன்றே யென்றன் ஆவியும்
உடலும் உடைமை எல்லாமும்
குன்றே யனையாய்! என்னைஆட்
கொண்ட போதே கொண்டிலையோ?
இன்றோர் இடையூறு எனக்குண்டோ?
எண்தோள் முக்கண் எம்மானே!
நன்றே செய்வாய்; பிழைசெய்வாய்;
நானோ இதற்கு நாயகமே;

நாயிற் கடையாய்க் கிடந்தேனை
நயந்து நீயே ஆட்கொண்டாய்;
மாயப் பிறவி உன்வசமே
வைத்திட் டிருக்கு மதுவன்றி,
ஆயக் கடவேன் நானோதான்?
என்ன தோஇங் கதிகாரம்?
காயத் திடுவாய்; உன்னுடைய
கழற்கீழ் வைப்பாய் கண்ணுதலே"

"கூறும் நாவே முதலாகக்
கூறும் கரணம் எல்லாம் நீ;
தேறும் வகைநீ; திகைப்புநீ;
தீமை நன்மை முழுதும் நீ;
வேறோர் பரிசிங்கு ஒன்றில்லை;
மெய்ம்மை; உன்னை விரித்துரைக்கின்,
தேறும் வகையென் சிவலோகா?
திகைத்தால் தேற்ற வேண்டாவோ!

"வேண்டத் தக்கது அறிவோய் நீ;
வேண்ட முழுதும் தருவோய் நீ;
வேண்டும் அயன்மாற்கு அரியோய் நீ;
வேண்டி என்னைப் பணிகொண்டாய்;
வேண்டி நீ யாது அருள்செய்தாய்
யானும் அதுவே வேண்டின் அல்லால்'
வேண்டும் பரிசொன்று உண்டென்னில்,
அதுவும் உன்றன் விருப்பன்றே"[1]

1. திருவாசகம் - குழைத்த பத்து - 7, 8 - 5, 6.

என்னும் அருள் மொழிகளின் அனுபவமே இங்குக் கூறப்பட்ட இறை பணி நிற்றலாகும்,

ஏகனாகி நிற்றலானே ஆணவமலம் நீங்குமாதலின் இங்கு "அஞ்ஞானம்"—என்றது மாயா மலத்தால் உளதாகும் மயக்கத்தையேயாம்,

மாயா மலம் மயக்குதல் தனு கரண புவன போகங்களாய்ப் பரிணமித்தேயாம். தனு முதலியவை, தம்மைக் காட்டி நிற்ற லல்லாது தமக்கு மேல் உள்ள ஆன்மாவையும், அதன் அறிவுக் கறிவாய் உள்ள முதல்வனையும் காட்டாமையே யன்றிக் காண ஒட்டாது தடுத்தலையும் செய்யும். அவைகளைத் தனித்து நிற்பனவாக உணராது இறைவன் சேர்ப்பிக்கச் சேர்வனவாக உணரின் அவை மயக்க மாட்டா,

இனி, சஞ்சித கன்மம் ஆசிரியர் செய்த ஞான தீக்கையானே எரி சேர்ந்த வித்துப் போலக் கெட்டொழிந்தமையால், இங்கு "கன்மம்" - என்றது பிராரத்த கன்மத்தையேயாம். அக்கன்மத்தின் பயன் விளையுமிடத்து, "துய்ப்பனவும உய்ப்பனவும் தோற்றுவாய் நீ"[1] என உணர்ந்து நிற்பின் அவை உயிரைச் சாராது உடலள வாய்ப் போய்விடும் இங்ஙனமாதல் பற்றி,

> "அவனருளல்லாது ஒன்றையும் செய்யா
> னாகவே அஞ்ஞான கன்மம் பிரவேசியா"

என்றார். அஞ்ஞான கன்மம், உம்மைத் தொகை.

இவ் உண்மை பற்றியே சைவாகமங்கள் ஒன்றனைக் கொடுப் பாரும், கொள்வாரும் "சிவார்ப்பணமஸ்து"—என்று சொல்லியே கொடுத்தலும், கொள்ளலும் வேண்டும்—என முறை வகுக் கின்றன.

'அங்ஙனம் கொடுத்தலும், கொள்ளலும் செய்யின் அவை இறை பணியாம்'—எனவும், அங்ஙனம் சொல்லாது செய்யின் கொடையால் அறமும், கொள்ளலால் மலமும் தோன்றிப் பந்த மாம்'—எனவும் உணர்க.

---

1. திருமுறை—6.

இன்னும், யாதொரு தெய்வத்தை வழிபடினும், 'அதனை ஏற்றுப் பயன் தருபவன் சிவனே' எனக் கருதி வழிபடின் அது பதி புண்ணியம் ஆகிய தவச் செயலாம் எனவும், அவ்வாறு கருதாது அத் தெய்வங்களே பயன் தருவனவாகக் கருதிச் செய்யின் அவை பசு புண்ணியமாகிய அவச் செயலாம்—எனவும் உணர்க.

இங்ஙனமாகவே, ''உடம்பொடு கூடி நிற்குமிடத்து ஆன்மா இறைவனோடு ஏகனாதல் இயலாது'—என நிகழும் தடைக்கு விடை கூறியதாயிற்று.

தோற்றுவாய்

பிராரத்தத்தின் வழியாகவே மாயையாகிய தனு கரண புவன போகங்கள் தோன்றி மயக்கும். அதனால் பிராரத்தம் விளையுமிடத்து முதல்வனது அருளை உணர்ந்து அதனால் தாக்குண்ணாது நிற்குமாற்றினை எடுத்துக் காட்டால் விளக்குகின்றார்.

வெண்பா—1

நாம் அல்ல இந்திரியம்; நம்வழியின் அல்ல; வழி
நாம்அல்ல; நாமும் அரன்உடைமை - ஆம் என்னில்
எத்தனுவில் நின்றும் இறைபணியார்க்(கு) இல்லைவினை;
முற்செய்வினை யும்தருவான் முன்.

இதன் பொருள்

இந்திரியம் நாம் அல்ல—பஞ்சேந்திரியங்கள் (ஐம்பொறிகள்) முதலிய தத்துவங்கள் (நமக்குக் கருவியாவன அல்லது) அவைகளே நாமாகிச் செயற்படுவன அல்ல. (அதனால் நாம் செயற்படுத்தினாலே அவை செயற்படும்.)

நம் வழியின் அல்ல—அவை நமக்குக் கருவியாய் உதவுதலும் நம் விருப்பத்தின் படியானது. (இறைவன் விருப்பத்தினாலேயாம்.)

வழி நாம் அல்ல—இனிப் பஞ்சேந்திரியங்கள் முதலியவற்றால் பற்றப்படும் பொருள்களும் நம்மால் நுகரப்படுவன அன்றி அவை நுகரும் பொருள்கள் ஆகா.

(நம் வழியின் அல்ல—) அவை நமக்கு நுகர்ச்சிப் பொருளாக வாய்த்தலும் நம் விருப்பப்படி அல்ல. (இறைவன் விருப்பப் படியேயாம்.)

நாமும் அரன் உடைமை—மேற்கூறிய எல்லாவற்றாலும் பயன் கொள்ளுகின்ற நாமும் (சுதந்திரம் உடையேம் அல்லேம்;) சிவனுடைய அடிமைகளே.

ஆம் என்னில்—இவையெல்லாம் முற்றிலும் உண்மை எனத் திருவருளைப் பெற்றோர் இவ்வாறு உணர்ந்து நிற்பர் ஆகலின்.

இறை பணியார்க்கு—அத்தகைய இறைபணியில் நிற்பவர்க்கு.

எத்தனுவில் நின்றும் வினை இல்லை—அவர் எவ்வகையான உடம்பில் நிற்பினும் பிராரத்த வினை பற்றி வரும் ஆகாமிய வினை உண்டாதல் இல்லை,

முன் செய் வினையும்—ஆகாமிய வினையைத் தோற்றுவித்தே வருகின்ற பிராரத்தவினையும் (தன்னை நுகர்தற்கு உரியார் மாட்டுச் செல்ல இயை பின்மையால்.)

தருவான் முன்—அதனை ஊட்டுவிக்கின்ற இறைவன் முன்னிலையில் நிகழ்வதாய்க் கழியும்.

விளக்கம்

நுகர்ச்சியாவது, நுகர்வோனுக்கு நுகரப்படும் பொருளால் உண்டாகும் இன்பத் துன்பங்களின்மேல் நிகழும் விருப்பு வெறுப் புக்களே யாதலின் அவையில்லாதார்க்குப் பிராரத்தம் நுகர்ச்சியா மாறு இல்லை. ஆயினும் வினையை ஊட்டுவிப்பவன் ஊட்டுவி யாது ஒழியான் ஆகலின் அவன் அங்ஙனம் ஊட்டுவிக்கும்பொழுது,

கருங்கற் பாறையின் மேல் அறையப்பட்ட மரமுளை பாறையின் உட்செல்லாது அறைதல் மாத்திரமாய் ஒழிதல்போல, ஊட்டுவிக்கப்படும் வினைகள் ஊட்டுவித்தல் மாத்திரமாய் உடலளவிற் கழிதலையே. ''முற்செய்வினையும் தருவான் முன்''—என்றார். 'முன்'' என்னும் இடப் பெயர் ஆகுபெயரால் முன் நிகழும் பொருளைக் குறித்தது அதன்பின் 'ஆம்' என்னும் சொல்லெச்சம் வருவிக்க.

இனி, இறை பணியில் நிற்பவரைப் பிராரத்த வினை தாக்காது காப்பவனும் இறைவனே, இறைவன் தனது திரோதான சத்தியால் வினையை ஊக்குவித்தலும், அருட் சக்தியால் அவ்வினை தாக்காமற் காத்தலும் செய்வான். 'இஃது எது போலும்' எனின், அரசன் குற்றவாளிக்கு ஒறுப்பு ஆணையால் சிறைத் தண்டம் தருதலும், குற்றவாளி சிறையிருக்குமளவும் அவன் பசி பிணிகளால் இறவாது காப்பு ஆணையால் காத்தலும் போல்வதாகும்.

இறைபணியாளரை இறைவன் பிராரத்த வினை தாக்காதவாறு காத்தலையே ஆளுடைய நம்பிகள்,

> திருவாஞ்சியத்துறையும்—ஒருவனார் அடியாரை
> ஊழ்வினை நலியஒட்டாரே'' 1

என அருளிச் செய்தார்,

'ஊழ்வினை நலிய ஒட்டாமை எவ்வாறு'—என்பார்க்கு வழிநூலாசிரியர்,

> ''சிவனும் இவன் செய்தியெல்லாம் என்செய்தி என்றும்
> செய்ததெனக்கு இவனுக்குச் செய்ததென்றும்
> பவமகல உடனாகி நின்று கொள்வன்''

எனவும், இங்ஙனமாதலின் அவர்க்கு ஆகாமியமும் இல்லை'—என்பதை,

''பாதகத்தைச் செய்திடினும் பணியாக்கி விடுமே''[2] எனவும் கூறினார்.

---

1. திருமுறை - 7
2. சிவஞான சித்தியார்—சுபக்கம். சூ - 10.1.

"பொய்ம்மாயப் பெருங்கடலிற் புலம்பாநின்ற
புண்ணியங்கள்! தீவினைகள்"[1]

என்னும் திருப்பதிகமும், "அவ்வினைக் கிவ்வினையாம் என்று சொல்லும் அஃதறிவீர்"[2] என்னும் திருப்பதிகமும் இறை பணியில் நிற்பார் மாயை கன்மங்களால் தாக்குண்ணாமையை இனிது விளக்கும்.

"எத்திசை புகினும் எமக்கொரு தீதிலை"[3]

"இன்பமே எந்நாளும்; துன்ப மில்லை"

"செறுவாரும் செறமாட்டார்;
தீமைதானும் நன்மையாய்ச் சிறப்பதே"[4]

என்றாற் போலும் திருமொழிகள் பிராரத்த வினையின் தாக்குதல் இல்லாமையை விளக்கும்.

இன வேறுபாடு, பால் வேறுபாடு முதலியன பற்றி உடம்புகள் பலவகைப் படுதல் உண்டு ஆதலின், "எத்தனுவில் நின்றும்"— என்றார்.

"முற்செய்வினை"—என்பதை யகர ஒற்று நீக்கி அலகிடுக.

தோற்றுவாய்

'வினையை ஊட்டுவித்தலில் இறைவன் செப்பம் உடையனாயினும் தன்னை அடைந்தாரை அவ்வினை தாக்காதவாறு காத்தலும், ஏனையோரை அங்ஙனம் காவாது விடுத்தலும் கோட்டமாம் அன்றோ'—என வினவுவாரை நோக்கி, அவ் ஐயத்தை மற்றோர் எடுத்துக்காட்டால் விளக்குகின்றார்.

---

1. திருமுறை—6.27,
2. திருமுறை—1.116.1
3. திருமுறை—4,17—1
4. திருமுறை—6ல் 98. 1, 4

வெண்பா—2

சார்ந்தாரைக் காத்தல் தலைவர் கடனாதல்
சார்ந்தாரைக் காத்தும் சலம் இலனாய்ச்—சார்ந்தடியார்
தாந்தானாச் செய்துபிறர் தங்கள்வினை தான்கொடுத்தல்
ஆய்ந்தார்முன் செய்வினையும் ஆங்கு.

இதன் பொருள்

சார்ந்தாரைக் காத்தல் தலைவர் கடன் ஆதல் - தம் பால் 'அடைக் கலம்' என்று சொல்லி வந்து தம்மை அடைந்தவரைக் காத்தலே உலகத்தில் தலைவராய் உள்ளார்க்குக் கடமை யாதலல்லது, 'அங்ஙனம் அடையாதவரையும் அங்ஙனம் காத்தல் வேண்டும்'—என்றல் என்ன முறைமை? ('உலகத் தலைவர்க்கு அது பொருந்தும்; இறைவனுக்கு அது பொருந் துமோ' எனின் வினையை ஊட்டுவித்தலும் கருணையே யாதல் மேற் கூறப்பட்டமையின்,)

சார்ந்தாரைக் காத்தும் சலம் இலன்—இறைவன் தன்னை அடைந் தாரையே அங்ஙனம் காத்தும் கோட்டம் இலனேயாம்.

ஆய் —அவன் அத்தகையன் ஆகி.

சார்ந்த அடியார்—தன் அடைந்த அடியார்களை,

தாம் தானா செய்து -அவர் தன்னைப் போல வினையிலர் ஆகும்படி காத்து.

பிறர் தங்கள் வினை தான் கொடுத்து—ஏனையோர்க்கு அவர் செய்த வினையின் பயனைத் தான் அவர்கள் நுகரும்படி கொடுத்தலால்.

ஆய்ந்து ஆர முன்செய் வினையும் ஆங்கு—காலம் வருமளவும் நுண்ணிதாய் இருந்து காலம் வந்தவிடத்து உருப்பட்டு வந்து பற்றும், முற்செய் வினையாகிய பிராரத்தமும் அவ்வாறு இரு நிலைமைய ஆகின்றன.

விளக்கம்

'சார்ந்தாரைக் காத்தலே தலைவர் கடன்' என்பது உலகத்தார் உடன்படுவதாகலின் அதனை முன்னர் எடுத்துக்காட்டி. 'இறைவன் இவ்வாறு செய்தல் உலகியலோடு ஒத்ததும் அன்று'' என்பதை ''சார்ந்தாரைக் காத்தும் சலம் இலனாய்'' என விளக்கினார்.

''சலம்இலன்; சங்கரன்; சார்ந்த வர்க்கலால்
நலம் இலன்; நாடொறும் நல்குவான் நலன்''[1]

என அருளிச் செய்தமை காண்க.

''மருத்துவன் உரைத்த நூலின்
வழிவரின் பிணிகள் வாரா;
வருத்திடும் பிணிகள் தப்பின்''[2]

என்றபடி உடல் நலம் பேணும் நூல்கள், 'நோய்க்குக் காரணமாவன இவை' எனவும், 'அக்காரணங்களைத் தவிர்த்து ஒழுகின் நோய்கள் வாரா' எனவும் நன்கு விளக்கிக் கூறுகின்றன. அவற்றை உணர்ந்தும் அந்நூல்வழி நில்லாது மாறி நடந்தால் நோய்கள் வந்து வருத்தத்தான் செய்யும். அஃது யாருடைய குற்றம்? அதுபோல. மெய்ந் நூல்கள் 'வினைக்குக் காரணம்—யான், எனது—என்னும் பற்றுக்களே' எனவும், அப்பற்றுக்களை முற்றவிடுத்து,—'எல்லாம் அவன் செயல்' என அருள்வழி நிற்பின் வினைகள் இல்லையாம்'' எனவும் பல வகையிலும் இனிது விளங்கக் கூறுகின்றன. அவற்றை உணர்ந்தும் பற்றுக்களை விடாதொழியின் வினைகள் வந்து வருத்தத்தான் செய்யும். அஃது யாருடைய குற்றம்?

''பற்றி விடாஅ இடும்பைகள், பற்றினைப்
பற்றி விடாஅ தவர்க்கு''[1]

என்பது மறைமொழியன்றோ!

---

1. திருமுறை—4. 11.6. 3. திருக்குறள்—347,
2. சிவஞான சித்தியார்—சுபக்கம்—சூ - 2.34

> ''நெறியைப் படைத்தான்; நெருஞ்சில் படைத்தான்!
> நெறியில் வழுவின் நெருஞ்சில்முள் பாயும்;
> நெறியில் வழுவா தியங்கவல் லார்க்கு
> நெறியில் நெருஞ்சில்முள் பாயகி லாவே''[1]

என்றார் திருமூலர். இனிப் பட்டினத்து அடிகள் பின்வருமாறு அருளிச் செய்தலை நோக்குதல் வேண்டும்.

> ''மருதிடங் கொண்ட மருத வாண!
> நின்னது குற்றம் உளதோ! நின்நினைந்(து)
> எண்ணருங் கோடி இடர்ப்பகை களைந்து
> கண்ணுறு சிற்றத்துக் காலனை வதையா,
> இறப்பையும். பிறப்பையும் இகந்து, சிறப்பொடு
> தேவர் ஆவின் கன்றெனத் திரியாப்
> பாவிகள் தமதே பாவம்! யாதெனின்
> ....
> ....
> தேன்துளி சிதறிப் பூந்துளிர் துறுமி
> வாலுகம் கிடந்த சோலை கிடப்ப
> வெள்ளிடை வெயிலில் புள்ளிவெயர் பொடிப்ப
> அடிபெயர்த் திடுவான் ஒருவன்
> நெடிது வருந்துதல் நிழல்தீங் கன்றே,''[2]

> ''தன்னை அடைந்தார் வினை தீர்ப்பதன்றோ
> தலையாயவர் தங்கட னாவதுதான்''[3]

என்று அருளினமையும் நோக்கற்பாலது.

ஆளுடைய நம்பிகள் ''அந்தணாளன் உன் அடைக்கலம் புகுத''[4] என்னும் திருப்பதிகம் முழுவதிலும் இறைவனை நோக்கி, ''உன்னை அடைந்தார் பலரை நீ காத்தமை கேட்டு நான் உன் திருவடியை அடைந்தேன்''—என, 'தம்மைக் காத்தலும் அவனுக்குக் கடன்'—என்று விண்ணப்பித்தார்.

---

1 திருமந்திரம்—1617.
2. திருமுறை—11. திருவிடைமருதூர் மும்மணிக் கோவை—16
3. திருமுறை—4 - 1·4.

தலைவர் கடன் ஆதலால்'—என உருபு விரிக்க. 'கொடுத்த லால்' என்பது, ' கொடுத்து' ,—எனத் திரிந்து நின்றது.

சலம்—வஞ்சனை; கோட்டம். 'சார்ந்த'—என்னும் பெய ரெச்சத்து ஈற்று அகரம் தொகுத்தலாயிற்று. ''தானாக'' என்பதில் ஆக்கம் உவமை குறித்து நின்றது.

இரு நிலைமையாவன, சார்ந்தாரைத் தாக்காமையும், சாராதாரைத் தாக்குதலுமாம்.

''சஞ்சித கன்மம் தீக்கையால் கெட்டொழிந்ததும், ஆகாமிய கன்மம் திருவருள் முன்னின்று பாதகத்தைச் செய்திடினும் பணியாக்கி விடுதலால் எரிசேர்ந்த வித்துப்போல மாய்தலும் போலப் பிராரத்த கன்மமும் அணுகமாட்டாது அகலும்— எனப் பொருள் தந்தமையால், ''முன் செய்வினையும்''—என்னும் உம்மை எச்சப் பொருளதாம்.

இவ்வெண்பாவில், ''தங்கள்வினை''—என்பதை ளகர ஒற்றுத் தள்ளி அலகிடுக.

தோற்றுவாய்

''அஞ்சினா லியற்றப் பட்ட
ஆக்கைபெற்று அதனுள் வாழும்
அஞ்சினா லடர்க்கப் பட்டிங்கு
உழிதரும் ஆத னேனை,''[1]
''ஐவர்கொண்டு இங்கு ஆட்ட ஆடி
ஆழ்குழிப்பட்டு அழுந்து வேனுக்கு''[2]
''தினைத்துணை யேனும் பொறேன் துயர்
ஆக்கையின் திண்வலையே''[3]

எனவும் திருமொழிகள் உள்ளன ஆதலின்,—இறை பணியில் நிற்பின் அஞ்ஞான கன்மம் பிரவேசியா—என்றல் எங்ஙனம் கூடும்—என்னும் தடைக்கு மற்றோர் எடுத்துக்காட்டால் விடை கூறுகின்றார்.

---

1. திருமுறை—4 - 26.5.
2. திருமுறை—7 - 5.1.
3. திருவாசகம்—நீத்தல் விண்ணப்பம் - 39.

வெண்பா — 3

இங்குளி வாங்கும் கலம்போல, ஞானிபால்
முன்செய் வினைமாயை மூண்டிடினும் பின்செய்வினை
மாயையுடன் நில்லாது; மற்றவன்றான் மெய்ப்பொருளே
ஆயஅத னால்உணரும் அச்சு.

இதன் பொருள்

ஞானி பால்—இறைபணியில் நிற்கும் அருளாளனிடத்தில்

முன் செய் வினை மாயை—பிராரத்த கன்மமும், அதனால் எதிர்ப்படுகின்ற உடம்பு முதலிய மாயேயங்களும்.

இங்கு உளி வாங்கும் கலம்போல மூண்டிடினும்—காயம் இருந்து எடுக்கப்பட்ட பின்பும் அக்காயத்தினின்று அதன் மணத்தை வாங்கிக்கொண்ட கொள்கலத்தில் காயம் இல்லாவிடினும் அதன் மணம் மெல்ல வீசுதல்போல, ஆணவமலம் இல்லையாயினும் அதன் வாசனை யிருத்தல் காரணமாக ஒரோவழி வந்து தாக்குமாயினும்.

பின் செய் வினை மாயையுடன் நில்லாது—பிராரத்தம் காரணமாக எழுகின்ற ஆகாமிய வினை முன்போல, உறுதிப்பட்டுப் பிறப்பிற்கு வித்தாய் நில்லாது உடம்பு அழியும் காலத்தில் அதனுடன் அழிந்துவிடும். (அஃது எங்ஙனம் எனின்,)

அவன் மற்று மெய்ப்பொருளே ஆய அதனால் அச்சு உணரும்—அவ் அருளாளன் முன்போல அசத்தாய் நில்லாது சத்தாகியே நிற்றலால் அத்தாக்குதல் காலத்திலும் அம் மெய்ப்பொருளையே உணர்ந்து நிற்பான் ஆதலின்,

விளக்கம்

'அவ் வுணர்வின்முன் ஆகாமிய வினை, எரி முன் வைத்தூறு போலும்'[1] என்பது கருத்து. அது,

"தொல்லையின் வருதல்போலத் தோன்றிரு வினையதுண்டேல்,
அல்லொளி புரையும் ஞானத் தழலுற அழிந்துபோமே"[2]

1. திருக்குறள்—435
2. சிவப்பிரகாசம் - 89.

''ஏன்ற வினைஉடலோடு ஏகும்; இடை ஏறும்வினை
தோன்றில் அருளே சுடும்'' [1]

எனவும் புடைநூலாசிரியர் கூறியவாற்றான் விளங்கும்.

ஏன்ற வினை—உடம்பு முகந்துகொண்ட வினை; பிராரத்தம். இடை எறும் வினை—பிராரத்துவத்தை முன்னிட்டு நிகழும் ஆகாமியம்.

இங்கு - காயம். உளி, நீக்கப்பொருட் கண் வரும் ஐந்தாம் வேற்றுமைச் சொல்லுருபு. அதனை, ''மந்திர விதியின் மரபுளி வழாஅ—அந்தணர் வேள்வி'' [2] என்பதனால் அறியலாம்.

''இங்குளி வாங்குங் கலம்போல''—என்பது சுட்டிக் கூறா உவமை யாகலின் அதற்கேற்ற பொதுத் தன்மை வருவித்துரைக் கப்பட்டது.

''மாயை'' இரண்டும் ஆகுபெயராய் அதன் காரியத்தை உணர்த்திநின்றன. ''நில்லாது''—என்பது, கெடும்' என்னும் பொருட்டாய் நின்றது. மற்று, வினை மாற்று,

அச்சாவது, சகடத்துச் சக்கரங்கள் கோக்கப்பட்ட இரும்பு, அஃது ஒவ்வா நிலத்தில் சக்கரம் தாறு மாறாக உருண்டபோதிலும் அதனைத் தன்கணிருந்து நீங்காதபடி கொள்ளுமாகலின், தன்னைச் சார்ந்தாரைத் தன்னின் நீங்கவிடாத மெய்ப்பொருளை அவ் அச்சாக உருவகம் செய்து கூறினார்.

எஞ்ஞான்றும் இறை பணியிலே நிற்கும் அருளாளர் எவ்வாறான இடையூறுகள் வரினும் மெய்ப் பொருளையே உணர்ந்து நிற்றலை,

''வாழினும், சாவினும் வருந்தினும்போய்
வீழினும் உனகழல் விடுவே னல்லேன்'' [3]

---

1. திருவருட் பயன்—98.
2. திருமுருகாற்றுப்படை—95, 96.
3. திருமுறை—3, 4. 2.

"கற்றுணைப் பூட்டிஓர் கடலிற் பாய்ச்சினும்
நற்றுணை யாவது நமச்சி வாயவே"[1]

"வழுக்கி வீழினும் திருப்பெய ரல்லால்
மற்று நான்அறி யேன்மறு மாற்றம்"[2]

"வெருவரேன் வேட்கை வந்தால்!
வினைக்கடல் கொளினும் அஞ்சேன்"[3]

என்றாற் போலும் திருமொழிகளான் உணர்க

இவ் வெண்பாவினுள், "பின்செய்வினை"—என்பதை யகர ஒற்று நீக்கி அலகிடுக.

தோற்றுவாய்

முன்செய் வினை மாயை மூளும் பொழுது மெய்ப் பொருளுணர்வு நிலைபெறுதல் எங்ஙனம் கூடும்"—என ஐயுறும் மாணாக்கர்க்கு அவ்ஐயத்தினை வேறோர் எடுத்துக்காட்டால் நீக்குகின்றார்.

வெண்பா—4

நண்ணனல் வேவாத நற்றவர் தம்மினும்,
பண்ணமர மாச் செலுத்தும் பாகரினும்—எண்ணி
அரனடி ஓர்பவர் ஐம்புலனிற் சென்றும்
அவர்திறன் நீங்கார் அதற்கு.

இதன் பொருள்

நள் அனல் வேவாத நல் தவர் தம்மினும்—நெருப்பின் நடுவில் இருப்பினும் அதனால் வேவாது இனிதிருக்கும் நோன்பிகள் தம் திறன் கெடாமை போலவும்.

1. திருமுறை—4, 11, 1.
2. திருமுறை—7, 54.1
3. திருவாசகம்—அச்சப் பத்து—2.

மா பண் அமர செலுத்தும் பாகரினும்—குதிரையை அது தாவும் தாவெல்லாம் பொருந்த அதனை ஊர்கின்ற வாதுவர் தம் திறன் கெடாமை போலவும்.

ஐம்புலனில் சென்றும் அரண் அடி எண்ணி ஓர்பவர் அதற்கு அவர் திறன் நீங்கார்—பிராரத்தம் காரணமாக ஐம்புல நுகர்ச்சியில் ஆழ்ந்தபோதிலும் அருள்வழி நிற்போர் அந்நுகர்ச்சியால் தம் திறன் கெடாதே நிற்பார்.

விளக்கம்

'நீளுலகெலாம்'—என்பது "நீணுலகெலாம்"[1] என மருவி வந்ததுபோல, 'நள்ளனல்' என்பது, "நண்ணனல்"—என மருவி வந்தது. நள்—நடு 'நள் பகல்'—என்பது. 'நண்பகல்'—என வழங்குதலும் காணத் தக்கது.

'நள் அனல் இருந்தும்' என ஒருசொல் வருவிக்க,

பொருளில், "திறன் நீங்கார்" என்றதனால், உவமையிலும் அது கொள்ளப்பட்டது.

மேல்,

"சார்ந்தனன் சார்ந்தனன் சங்கிலி மென்தோள் தடமுலை
ஆர்ந்தனன் ஆர்ந்தனன் ஆமாத்தூர் ஐயன் அருளதே" [2]

எனக் காட்டியபடி, அருள்வழிப் பட்டோர், வினையால் இன்பம் வரினும், துன்பம் வரினும் அவற்றை அவனருளாகவே கொண்டு நுகர்வர் ஆகலான் அவர்கட்கு எந்நாளும் இன்பமே யன்றித் துன்பம் இல்லை. ஐம்புல இன்பமாகிய சிற்றின்பமும் அவர் கட்குச் சிவனது பேரின்பமேயாய் விளையும். அதனால் எந் நிலையிலும் அவனை மறவாதிருத்தல் அவர்கட்கு அரியதொான் றன்று—என மேல் மாணாக்கர்க்கு நிகழ்ந்த ஐயம் நீக்கப்பட்ட தாம். இப்பொருளை,

---

1. திருமுறை—5 . 2 . 4
2. பக்கம்—90

"பெற்றசிற் றின்பமே பேரின்ப மாய்அங்கே
முற்ற வரும்பரி(சு) உந்தீ பற;
முளையாது மாயையென்(று) உந்தீபற"[1]

'உடம்புடைய யோகிகள்தாம் உற்றசிற் றின்பம்
அடங்கத்தம் பேரின்பத் தாக்கில், —தொடங்கி
முளைப்பதும்ஒன் றில்லை; முடிவதும்ஒன் றில்லை;
இளைப் பதும்ஒன் றில்லை இவர்"[2]

எனச் சாத்திரங்கள் இனிது விளக்கும்.

'காணும் கரணங்கள் எல்லாம்பே ரின்பமெனப்
பேணும் அடியார் பிறப்பகலக்—காணும்
பெரியானை"[3]

என்னும் திருமுறையும் காணத் தக்கது.

'இங்ஙனம் திருவருளைத் தெரிந்து, எஞ்ஞான்றும் அதனி னின்றும் பிறழாது நிற்றலே நின்மல ஞானம்' (மலம் முற்ற நீங்கிய பேரறிவு) என்பதையும், 'இஃதல்லாத பிற ஞானங்கள் ஞானமல்ல' என்பதையும் வழிநூலாசிரியர்,

"நாடுகளில் புக்குழன்றும், காடுகளில் சரித்தும்,
நாகமுழை புக்கிருந்தும், தாகம்முதல் தவிர்ந்தும்,
நீடுபல காலங்கள் நித்தராய் இருந்தும்
நின்மலஞா னத்தையில்லார் நிகழ்ந்திடுவர் பிறப்பில்;
ஏடுதரு மலர்க்குழலார் முலைத்தலைக் கே இடைக்கே
எறிவிழியின் படுகடைக்கே கிடந்தும் இறை ஞானம்
கூடுமவர் கூடரிய வீடும் கூடிக்
குஞ்சித்த சேவடியும் கும்பிட்டே யிருப்பர்"[4]

என விளக்கினார்.

....

1. திருவுந்தியார்—33.
2. திருக்களிற்றுப்படியார்—76.
3, திருவாசகம்—பண்டாய நான்மறை—6.
4. சிவஞான சித்தியார்—சுபக்கம் - 10, 5.

பண்—பண்ணுதல்; தகுதிப்படச் செய்தல். முதனிலைத் தொழிற் பெயர். அமர்தல்—பொருந்துதல். குதிரை செலுத்து வாரை, 'பாகர்' என்றது மரபு முழுவமைதி. அதற்கு—அதனின்; உருபு மயக்கம். ''சென்றும்''—என்னும் உம்மை இழிவு சிறப்பு.

தோற்றுவாய்

''சார்ந்ததன் வண்ணம் ஆதலே உயிரியல்பு—என ஏழாம் நூற்பாவில் வலியுறுத்தி, இங்கு.

''ஐம்புலனில் சென்றும் அவர்திறன் நீங்கார்''—என்றது மாறுகோள் உரை போலும்''

என்று எழும் தடைக்கு, அடுத்து வரும் எடுத்துக்காட்டால் விடை கூறுகின்றார்.

வெண்பா - 5

சதசத்தாம் மெய்கண்டான் சத்தருளிற் காணின்
இதமித்தல் பாசத்தில் இன்றிக்—கதம்மிக்(கு)
எரிகதிரின் முன்இருள்போல் ஏலா அசத்தின்
அருகணையார்; சத்தணைவார் ஆங்கு.

இதன் பொருள்

சதசத்து ஆம் மெய் கண்டான்—சார்ந்ததன் வண்ணமாம் இயல்புடைய மெய்யுணர்வினன்.

சத்து அருளின் காணின்—மெய்ப் பொருளை அதன் அருளாலே கண்டானாயின், (இல்லார்க்குக் கிழியீடு நேர்பட்டாற்போல அதனையே விரும்புதலல்லது)

பாசத்தில் இதமித்தல் இன்றி—பொய்ப் பொருளாகிய புலன்களை விரும்புதல் இலன் ஆகலானும்.

சத்து அணைவார் - மெய்ப்பொருளை அணைந்து நிற்பவர்.

கதம் மிக்கு எரி கதிரின்முன் இருள்போல் ஏலா அசத்தின் அருகு அணையார்—சீற்றம்மிக்கு எரியாநின்ற விளக்கின்முன் இருள் போலும் அசத்து நில்லாதாகலானும். அசத்தாகிய அப்புலன் களின் பக்கம் செல்வார். (மாறாக).

ஆங்கு சத்து அணைவார்—அந்நிலையிலும் அவர் மெய்ப் பொருளையே அணைந்து நிற்பார்.

விளக்கம்

'உயிர் சார்ந்ததன் வண்ணமாம் இயல்புடையதாயினும் அவ்வியல்பு பின்னர் நீங்குதலும், நீங்காமையும் சாரப்பட்ட பொருள்களின் வன்மை மென்மைகளைப் பொறுத்தனவாகும். அம் முறையில் அசத்து மென்மையுடையதும், சத்து வன்மை யுடையதும் ஆகலான் அசத்தாகிய ஐம்புலனைச் சார்ந்து அசத் தாய் நின்ற உயிர் பின் அத் தன்மையின் நின்று நீங்குதல் கூடும் ஆயினும் சத்தைச் சார்ந்து சத்தாய் நின்ற உயிர் பின் அத் தன்மையின் நின்று நீங்கமாட்டாது. ஆதலின்—இறைவனோடு ஏகமாகி அவன் பணியில் நின்றோர் வாசனை பற்றி ஒரோவழி ஐம்புலனிற் சென்றாராயினும் அவர் திறன் நீங்கார் - என்றது மாறுகோள் உரையாகாது. நேர் உரையே''—என, மேல் எழுந்த தடைக்கு விடை கூறப்பட்டமை அறிக.

இப்பொருள், மேல் எட்டாம் நூற்பா இறுதி யதிகரணத்தில், ''உலைவில் அரன் பாதம்'' - என்பதன் விளக்க உரையிலும் கூறப் பட்டது. எனவே, 'இறைவனோடு ஏகமாகி அவன் பணியில் நின்றார் ஒரோவழி ஐம்புலனிற் செல்லுதல் மல வாசனையால்'— என்பதும், 'அவ்வாசனையும் இருள் ஒளியை அடர்க்கமாட்டாமை போல இறை யுணர்வை அடர்க்க மாட்டாது' - என்பதும் விளங்கும்,

''இன்றி''—என்பது, 'இல்லையாகலான்' எனக் காரணப் பொருட்டாய் நின்றது. இதனானும், ''ஏலா அசத்து'' - என்ற தனானும் அவர் திறன் நீங்காமைக்கு இரு காரணங்களைக் கூறினார். ஏலாமை—முன்னிற்க மாட்டாமை.

''சத்து அருளிற் கண்டான் பாசத்தில் இதமித்தல் இன்றி''— என்றது பொதுப் பொருளை எடுத்துக் கூறியதும், ''அசத்தின் அருகணையார்: சத்தணைவார்''—என்றது. பொதுப் பொருளால் சிறப்புப் பொருளை நிறுவியதுமாய் வேறு வேறு முடிபாகலின், அவை ஒருமைப் பன்மை மயக்கம் ஆகாமை யறிக.

''அருளின்''—என்னும் இன், ஏதுப் பொருட்டாய ஐந்தன் உருபு.

இதம்—நன்மை; வடசொல். இப்பெயர் அடியாக, 'இருமித்தல்'—என்னும் தொழிற் பெயர் பிறந்தது. அப்பெயர் ஆகுபெயராய், நன்மைமேற்செல்லும் விருப்பத்தைக் குறித்தது.

தீக்குச் சினம் இல்லையாயினும், சினத்திற்கு உவமையாகக் கூறப்படும் ஒப்புமை பற்றி, ''கதம்மிக்கு எரி கதிர்''—என ஏற்றி உரைக்கப்பட்டது.

''சினம் என்னும் சேர்ந்தாரைக் கொல்லி,'' [1]

''எல்லையில்லவன் எரி துள்ளினால் என வெகுண்டான்'' [2]

என்பன காண்க,

''போல் அசத்து—என்பது வினைத்தொகை.

,ஏகனாகி நிற்றலானே மலம் இன்றாம்' எனவும், 'இறை பணி நிற்றலானே மாயையொடு வல்வினை இன்றாம்'—என்பதும் கூறப்பட்டமையால், ''மமமாயை தன்னொடு வல்வினை யின்றே'' என்பது வேறு தனியதிகரணம் ஆகாதாயிற்று,

இரண்டாம் அதிகரணம் முடிந்தது.

நூற்பாவின் தொகைப் பொருள்

முன்னை நூற்பாவிற் கூறியபடி பாசம் ஒருவிப் பதிஞானத்தால் பதியை அறிவினுள் ஆராய்ந்து கண்டு, அஞ்செழுத்தை விதிப்படி கணிப்பினும் அது பொழுது, 'யான் பதியைக் கான்கின்றேன்' என, காண்பான், காட்சி, காட்சிப் பொருள் என்னும் வேற்றுமை உணர்வே நிகழும் ஆதலாலும், அவ்வேற்றுமை உணர்விற்கும் காரணம் ஆணவமலத்தின் சுவடேயாதலும் அச்சுவடு நீங்குமாறு ஆன்மா இறைவனோடு ஏகனாகி நிற்றல் வேண்டும்,

---

1. திருக்குறள்—309,
2, பெரிய புராணம் - அமர்நீதி நாயனார்—26.

அங்ஙனம் ஏகனாதலாவது, பெத்த காலத்தில் இறைவன் இருந்தும் இல்லாதவனாய்த் தோன்றாது ஆன்மாவேயாய் நிற்றல்போல' முத்தி காலத்தில் ஆன்மா இருந்தும் இல்லாததாய் உணரப்படாது நிற்க, இறைவன் ஒருவனையே உணர்ந்து நிற்றலாம்.

அங்ஙனம் நிற்குமிடத்து ஆணவச் சுவடு காரணமாக வினைத் தூண்டுதலால் உடற் கருவிகள் பற்ற வருமாயின் அவற்றை, 'இவை இவ்வாறு பற்ற வருவது அவன் ஆணைவழியே' என உணர, மாயையின் சுவடு நீங்கும்.

கருவிகளின் செயல்பாட்டால் நல்லனவும், தீயனவுமாகிய முயற்சிகள் நிகழுமாயின், 'இவையும் அவன் செயல்களே; நம் செயல் அல்ல' என்று உணர, வினைகளின் சுவடு நீங்கும். இவ்வாற்றால் மும்மலங்களும் சுவடும் இல்லாது ஒழிதலே ஆன்ம சுத்தியாம்;

தம் செயலற்று, அனைத்தையும் இறை செயலாக உணர்பவர்களை வினைகள் தாக்காதவாறு இறைவன் முன்னின்று காப்பான். அங்ஙனம் அவர்களைக் காத்தலும், ஏனையோர்க்கு வினைகளைக் கூட்டுவித்தலும் இறைவனுக்குக் கோட்டம் ஆகா ஏனெனின், வினையைக் கூட்டுவித்தலும் அவர் பாச வழிப்படாது நீங்கித் தன்னையடைதற் பொருட்டேயாகலின்.

மலச் சுவட்டால் ஏகனாகி நிற்கும் நிலை பெயரவருமாயின் அப்பொழுதும் இறைவனாய் நிற்கும் நிலையினர் அவ்வுணர்வில் உறைத்து நிற்பர். அஃது எங்ஙனமெனின் அங்கித் தம்பனம் வல்லார் நெருப்பினுள் நின்றும் சுடப்படாது நிற்றல்போலவும், குதிரை ஏற்றம் வல்லார் குதிரையின் தாவுதலால் வீழாது நிற்றல் போலவுமாம்.

சார்ந்ததன் வண்ணம் ஆதலே உயிர் இயல்பாயினும் அசத்தைச் சார்ந்த உயிர் பின் அதனினின்று நீங்குதலும், சத்தைச் சார்ந்த உயிர் பின் அதனினின்று நீங்காது நிற்றலும் உடைத்தாம் ஆதலின் பாசத்தின் நீங்கிச் சிவனை அடைந்தோர் மீள அவனிடத்தினின்றும் திரும்புதல் இல்லை.

என இவ்வாறு இம்மூன்று அதிகரணப் பொருளையும் ஒருவாறு தொகுத்துணர்ந்து கொள்ளலாம்.

பத்தாம் நூற்பா முடிந்தது.

பதினொன்றாம் நூற்பா

இனி ஆசிரியர் பதினொன்றாம் நூற்பாவைப் பாடமாக ஓதியது வருமாறு :

காணும் கண்ணுக்குக் காட்டும் உளம்போல்,
காண உள்ளத்தைக் கண்டு காட்டலின்,
அயரா அன்பின் அரன்கழல் செலுமே.

இனிச் சூத்திரத்தைச் சுட்டிக் கருத்துரைத்தது வருமாறு :

என்பது சூத்திரம் ;
என் நுதலிற்றோ எனின்,

பரமேசுவரனது சீபாதங்களை அணையுமாறு உணர்த்துதல் நுதலிற்று.

கருத்துரை விளக்கம்

'முன்னை நூற்பாப் பாசக் கயம் பண்ணுமாறு உணர்த்திற்று. அதனை யடுத்து இந்நூற்பா முறையானே முதல்வன் திருவடியை அணையுமாறு உணர்த்துகின்றது' என்றபடி.

'அணைவது ஆன்மா' — என்பது மேலே பெறப்பட்டது

'இது முறைமையாயினவாறு எங்ஙனம்' என்னின், துன்புற்றவர் அது நீங்குமாறு கருதியே முதற்கண் முயல்வாராயினும், துன்பம் நீங்கியபின் இன்பம் எய்துதலையே குறிக்கோளாகக் கொண்டு முயல்வார். அஃதேபோல் இயல்பாகவே துன்பமேயான பாசத்தில் கட்டுண்ட உயிர், அதனினின்று விடுபடுதலையே முதற்கண் வேண்டி நிற்குமாயினும், அதனின்றும் விடுபட்ட பின்னர் இன்பமேயான இறைவனை அணைதலையே குறிக்கோளாகக் கொள்ளும். அதனால் பாசக்கயம் பண்ணிய பின்னர்ப் பரமேசுவரனது சீபாதங்களை அணைதல் முறைமையாதல் அறிக.

பரமேசுரன்—தன்னிலைச் சிவன்; சொரூப சிவன். இவனே, 'பரம சிவன்' — என்றும், பரசிவன்' — என்றும் சொல்லப்படுவான். இவனை அணைதலே பரமுத்தி, (முடிநிலை வீடு.)

சுத்த மாயா புவனங்களில் உருவம், அரு உருவம், அருவம்— என்னும் மூவகைத் திருமேனி கொண்டு விளங்குபவர் பொதுநிலைச் சிவர். (தடத்த சிவர்.) அவர்களில் உருவ சிவனையும், அருவுருவ சிவனையும் அணைதல் பத முத்தி, (ஆட்சிநிலை வீடு.) அருவ சிவனை அணைதல் அபர முத்தி, (அணிநிலை வீடு.)

இவற்றுள் பத முத்திகள் "தவம் செய்தார்" என்றும் தவ லோகம் சார்ந்து"[1]—என்பதனால் கூறப்பட்டன. எனவே, இந் நூற்பாப் பரமுத்தி நிலையைக் கூறுவதாம்,

நூற்பாவின் திரண்ட பொழிப்பு

(காட்ட) [காணும் கண்ணுக்கு—] உருவங்களைத் தானே காணமாட்டாது தான் காட்டிய வழியே காண்பதாகிய கண்ணிற்கு.

[காட்டி (காணும்) உளம்போல்—] அங்ஙனம் உருவங்களைக் காட்டிய ஆன்மா (ப்பின்னும்) காட்டப்பட்ட உருவத்தைக் கண் சென்று காணும் பொழுது தானும் உடன் சென்று காணுதல் போல.

(அறிவிக்க அறிவும்) [உள்ளத்தை—] எந்த ஒன்றையும் தான் அறிவிக்கவே அறிவதாகிய ஆன்மாவிற்கு.

[காட்டி காண்டலின்—] முன்னர்ப் பொருளை அறிவித்து, (பின்னும்) அஃது அறியும்வழித்தானும் உடன்நின்று அறித லாகிய 'கைம்மாறு 'கருதாத பேருதவியை இறைவன் எக் காலத்தும் ஒழியாது செய்து வருதலின் (அவ்வுதவியை உயிர்)

[அயரா அன்பின்—] (பாசப் பிணிப்பு உள்ள காலத்தில் அறியா திருப்பினும், அப்பிணிப்பு நீங்கிய காலத்தில் மறவாது அறிந்து நிற்கும் ஆதலின், அவ்வறிவினால் விளையும் கரை கடந்த அன்பினால்

[அரன் கழல் செலும்—] (பிறிதொன்றையும் நோக்காது) அவ் விறைவனது திருவடிக்கீழே சென்று புகும்.

---

1. நூற்பா—8 அதி 1.

விளக்கம்

உவமையில், "காணும் கண்ணுக்கு"—என்றமையால், பொருளில், 'அறியும் உளத்தை'— எனவும், பொருளில், "கண்டு" என்றமையால் உவமையில் 'காணுதல் போல' எனவும் ஏற்புடைய சொற்கள் வருவிக்கப்பட்டன.

"காட்டக்கண் டிடுந்தன்மை உடைய கண்ணுக்கு ஏயும் உயிர் காட்டிக்கண் டிடுமா போல,

ஈசன் உயிர்க்குக் காட்டிக் கண்டிடுவன்"[1] என வழி நூலாசிரியர் இப்பொருளை விளக்கினாராகலின், இங்கு, "கண்டு காட்டலின்"—என்பதை, காட்டிக் காண்டலின்,,—என மாற்றி வைத்து உரைத்தலே உரையாதலை அறிக, வேர்த்து வெகுளார் விழுமியோர்"[2] என்பதும் இங்ஙன் 'வெகுண்டு வேரார் விழுமி யோர் என மாற்றி உரைக்கப்படுவதாதல் காண்க.

"உள்ளத்தை"—என்பது உருபு மயக்கம். "அரன்கழல் செலும்"—எனப் பின்னர் வருதலின், 'உள்ளத்திற்குக் காட்டிக் காண்பவன் அவனே என்பது விளங்கிற்று.

இறைவன் உயிர்க்குக் காட்டிக் காணுதல் பெத்தம், முத்தி ஆகிய இரு காலங்களிலுமாம். பெத்த நிலையில் காட்டப்படுவது உலகமும், முத்தி நிலையில் காட்டப்படுபவன் பிறிதின்றித் தானேயும் என்க. எனவே,

"காண்பாரார் கண்ணுதலாய் காட்டாக் காலே"[3] என்னும் திருமொழி பெத்தம். முத்தி இருநிலை பற்றியும் எழுந்ததேயாம்.

அயர்த்தல்—மறத்தல், அயராமைக்குச் செயப்படுபொரு பொருளாகிய 'அவ்வுதவியை' என்பது எஞ்சி நின்றது.

---

1. சிவஞான சித்தியார்—சுபக்கம் சூ - 11
2. நாலடியார்—சினமின்மை—4.
3. திருமுறை —6. 95 - 3.

''அயரா''—என்னும் ஈறுகெட்ட எதிர்மறைப் பெயரெச்சம். 'அயராமையான் விளையும் அன்பு' - எனக் காரணப் பொருட்டாய் நின்றது, ஆறு சென்ற வியர்' என்பதுபோல. மேற்காட்டிய வழிநூற் செய்யுளில், ''இத்தை ஆயும் அறி வுடையனாய் அன்பு செய்ய''—எனக் கூறப்பட்டமை காண்க.

''அன்பின்'' - என்ற இன், ஏதுப் பொருட்டாய ஐந்தன் உருபு. ''அன்பின் அரன் கழல் செலும்'' - என்றதனால், 'அயராமையால் அன்பு விளைய, அன்பால் அரன் கழல் செலும்; - என, அவை ஒன்றின் ஒன்று காரண காரியத் தொடர்ச்சியாய், ஒரு பொருள்மேல் நிகழ்தல் பெறப்பட்டது.

ஆன்மா அரன் கழலில் செல்லாது. ஐம்புலனில் சென்றமை, அரனை அறிந்து அன்பு செய்யாது, ஐம்புலன்களை அறிந்து அவற்றின் மேல் அலாச் சென்றமையானேயாம். ஆன்மா அரனை அறியாமைக்குக் காரணம் பாச மறைப்பு. எனவே, பாசம் நீங்கிய விடத்து ஆன்மா அரனை அறிந்து, அவனிடத்து அன்பு மீதூரப் பெற்று, அவன் கழலில் செல்வதாம். அரன் - பாசத்தை அரிப்பவன்.

ஆகவே, ''ஞானத்தால் வீடு''[1]

என்றல், 'ஞானம் அன்பாக வடிவெடுத்தபொழுதே'' என்பது விளங்கும், எனவே, முற்றிய ஞானமானமாவது அன்பே யாயிற்று.

ஆயினும் சில மயிகள் அன்பை ஞானத்தின் வேறாக வைத்து. ஞானத்தையே உயர்த்திக் கூறுவர் ஆயினும் அது சித்தரந்த சைவமாகிய திருநெறியன்று. இதனை,

''வித்தினைத் தேடி முளையைக்கை விட்டவர்
பித்தேறி னரேர்கள்என் சந்தீபிற;
பெறுவதங் கென்பெண்ணே உந்தீபற.''

---

1. சிவஞான சித்தியார் - சுபகம். சூ. 8 27.

'சாவியோம் மற்றைச் சமயங்கள் புக்குநின்(று)
ஆவி அறாதேஎன் றுந்தீபற;
அவ்வுரை கேளாதே உந்தீபற''[1]

என்பன சாத்திர மொழி. சேக்கிழார் ஞானசம்பந்தரது திருப் பாசுரத் திருப்பதிகதிற்குக் கருத்துக் கூறுமிடத்தில்,

''-ஞானம் ஈசன்பால் அன்பே—
என்றனர் ஞானம் உண்டார்''[2]

எனக் கூறினார். இத்தகைய அன்பைக் குறித்தே திருமூலர் ''அன்பே சிவமாய் அமர்ந்திருந் தாரே'' என அருளிச் செய்தார்.[3]

''ஈறிலாப் பதங்கள் யாவையும் கடந்த
இன்பமே என்னுடை அன்பே''

என ஆளுடைய அடிகள், இறைவனை, ''என்னுடைய அன்பே'' - என விளித்ததும் இந்நிலையில் நின்றேயாம்.

முன்னை நூற்பாவில் கூறிய, 'ஏகனாகி இறைபணி நிற்றல் அருள்நிலை' - எனவும். இங்குக் கூறும் 'அயரா அன்பின் அரன் கழல் செல்லுதல் ஆனந்த நிலை' எனவும், மற்றும், 'முன்னையது ஆன்ம சுத்தி' - எனவும், 'இஃது ஆன்ம லாபம்' எனவும் உணர்க.

'அருள் நிலையை எய்தினார் அவ்வளவில் நில்லாது ஆனந்த நிலையை அடைதல் வேண்டும்' - என்பதையே புடைநூ லாசிரியர்

''இருவர் மடந்தையருக்(கு) என்பயன் உண்(டு)? உண்டாம்
ஒருவன் ஒருத்தி உறின்''

என விளக்கினார். அருள் சத்தி. ஆனந்தம் சத்திமான்.

---

1. திருவுந்தியார் - 28, 30,
2. பெரிய புராணம் - ஞானசம்பந்தர்.
3. திருமந்திரம் - 270.
4. திருவாசகம் - கோயில் திருப்பதிகம் - 1.

இனி, 'முத்தி நிலையாவது ஆன்மாவின் அறிவு யாதொன்றனையும் பற்றாதிருப்பதே' என்பர் புத்த சமயிகள். அதனை அவர்கள், 'ஆலய விஞ்ஞானம் - என்பர். 'ஒடுங்கிய பேரறிவு' என்பது அதன் பொருள். அவர்களது மதத்தையே பற்றி வேறு சிலரும், 'ஆன்மாவின் அறிவு விழைவு செயல்கள் அற்ற நிலையே முத்தி நிலை' - என்பர். அது பொருந்தாது. ஏனெனின்,

'வளியாவது யாது' - என்பார்க்கு, 'உளரும் தன்மையது (ஒரு நொடிதானும் நிலையாக நில்லாது அசைந்து கொண்டேயிருப்பது) வளி' - என்பது தான் விடையாதல் போல, 'அறிவாவது யாது' - என்பார்க்கு, 'அறிதல் தன்மை யுடையது அறிவு' என்பதுதான் விடையாகும், ஆகவே, உருவத்தினைக் காணும் தன்மையில்லையாயின் கண் கண்ணன்றாம். ஓசையைக் கவரும் தன்மை யில்லையாயின் செவி செவியன்று. அவ்வாறே யாதொன்றனையும் அறியும் தன்மை யில்லையாயின் அறிவு அறிவன்றாம். ஆதலால், ஆன்மா யாதொன்றனையும் அறியாது நிற்றல் வேண்டும்' - என்றல், ஆன்மாச் சடமாகிவிடல் வேண்டும்' எனக் கூறுவதாகவே முடியும்.

இனி, உள்ளது எப்பொழுதும் உள்ளதேயன்றிக் கெட்டொழியாது. அதனால், 'ஆன்மா அறிவுடையது' எனின் அஃது ஒரு போதும் அறிதற்குத் தடையில் வழி யாதொன்றனையும் அறியாது நில்லாது, ஆகவே மடைமாற்றமே இங்கு வேண்டப்படுவது,

அரனை மறவாது உணர்தல் அறிவின் தொழிலும், அவன் மாட்டு அன்பு செய்தல் விழைவின் தொழிலும், அவன் கழலிற் செல்லுதல் செயலின் தொழிலுமாக மூவகை ஆற்றலும் முத்தியிலும் ஒரு பொருள் மேல்வாய் நிகழ்தல் கூறப்பட்டமை காண்க.

''உள்ளத்திற்குக் காட்டிக் காண்டலின்'' என்றதனால் இறைவன், உயிர்கட்குக் காட்டும் உதவியை மட்டுமன்றிக் காணும் உதவியையும் செய்தல் விளங்கும். அஃது இனிது விளங்குதற் பொருட்டே, ''காணும் கண்ணுக்குக் காட்டிக் காணும் உளம் போல்'' - என்னும் உவமையைக் கூறினார்,

காட்டக் காண்பதாய கண்ணுக்கு ஆன்மாப் பொருள்களைக் காட்டுதலோடு நில்லாது பொருள்களைக் கண் காணுமிடத்து

ஆன்மாத் தானும் உடன் சென்று காணுதலும், அங்ஙனம் காணாத பொழுது காட்சி நிகழாமையும் அனுபவம் ஆகலான், 'அஃதேபோல இறைவனும் ஆன்மாவிற்குப் பொருள்களை அறிவித்தலோடு நில்லாது பொருள்களை ஆன்மா அறியுமிடத்துத் தானும உடன் நின்று அறிவன்' என்பதும், 'அங்ஙனம் அறியாது விடின் ஆன்மாவிற்கு அறிவு நிகழாது' - என்பதும் விளக்கினார்.

ஆசிரியர் இந்நூற்பாவை இரண்டு அதிகரணங்களாக கண்ணழித்துரைப்பார்.

[1]முதல் அதிகரணம்

[''காணும் கண்ணுக்கு......கண்டு காட்டலின்'']

முன்னுரை

''காண்பார் ஆர் கண்ணுதலாய் காட்டாக் காலே'' என்றபடி இறைவன் அறிவித்தாலன்றி உயிர் ஒன்றையும் அறியாது ஆதலின் அதன் பொருட்டு இறைவன் உயிர்கட்குக் காட்டும் உதவியைச் செய்து நிற்கின்றான். காட்டப்பட்ட பின்னர்க் காணுதற்குத் தடையாதும் இன்மையின் அதன்மேலும் காணும் உதவியைச் செய்ய வேண்டுதல் எற்றுக்கு - என நிகழும் தடைக்கு விடை கூறி அவ்வுதவியை நிறுவுவதே இவ் வதிகரணம். அதனால் இது. காணும் உதவி அதிகரணமாகும்,

அதிகரணம்

மேற்கோள்

ஈண்டு - அவனும் அவற்றது விடயங்களை உணரும் - என்றது

ஏது

இவ்வான்மாக்கள் அவனை இன்றியமைந்து ஒன்றையும் விடயியா ஆகலான்.

மேற்கோள் விளக்கம்

அவன் - முன்னை நூற்பாவில் ''அவன்'' எனப்பட்ட இறைவன், ''அவனும்'' என்னும் உம்மை, ''உணர்தல் வேண்டப் படாத முதல்வனும் ' - என' உயர்வு சிறப்பு.

அவற்றது - ஆன்மாக்களது, விடயம் - உணரப்படும் பொருள். ''அவற்றது'' - என்னும் ஆறன் உருபு 'குயவனது குடம்' - என்பதிற் போல வினைமுதற் கிழமைக்கண் வந்தது.

விடயித்தல்- அறிதல். இவ் ஏதுப் பொருள், ''உளம்போல்'' - என்ற உவமையால் விளங்கிக் கிடந்தது - என்பது கருத்து.

அஃதாவது, ஆன்மாக் கண்ணுக்குக் காட்டுதலை மட்டும் செய்து, காணுதலைச் செய்யா தொழியின் காட்சி நிகழாமை அனுபவமாகலான், அவ்வனுபவத்தானே, 'இறைவனும் உயிர்களுக்கு அறிவித்தலை மட்டும் செய்து. அறிதலைச் செய்யா தொழியின் ஆன்மா யாதொன்றனையும் அறியமாட்டாது' என்பது விளங்கும் என்பதாம் ஆகவே,

"அகர முதல எழுத்தெல்லாம்; - ஆதி
பகவன் முதற்றே உலகு"[1]

என்பதில். "உலகம் ஆதிபகவனை முதலாக உடைமை காட்சி யளவையான் அறியப்படாதாயினும், எழுத்துக்கள் எல்லாம் அகரத்தை முதலாக உடைய உவமையளவையால் அறியப்படும்" -

என நிறுவினாற்போல, ஆன்மாக்கள் ஒன்றனை அறியுமிடத்து இறைவனும் உடன்நின்று அறிதல் காட்சி யளவையால் அறியப் படாதாயினும், கண்காணும் பொழுது ஆன்மாவும் உடன் நின்று காணுதலாகிய உவமை அளவையால் அறியப்படும்" - என நிறுவியதாயிற்று. இங்ஙனம் அல்லாக்கால் நூற்பாவினுள், "காணும் கண்ணுக்குக் காட்டும் உளம்போல்" என்றதற்குப் பயன் இன்றாம் என்க.

'கண்போல ஆன்மாச் சடம் அன்று ஆதலின், ஆன்மாவிற்குக் கண்ணை உவமையாகக் கூறுதல் பொருந்தாது' - என்னும் தடைக்கு ஐந்தாம் நூற்பா இரண்டாம் அதிகரணத்துள்,

"இவ்வான்மாத் தன்னாலே உணரும்
இந்திரியங்களைப் போலத் தானும்
தன்னை உணராது நிற்றலால்"

என விடை கூறப்பட்டமையான் இங்கு அத்தடை நிகழுமா மாறில்லை.

"தொண்ட - னேன் விளம்புமா விளம்பே,
நுகருமா நுகரே"[2]

---

1. திருக்குறள்—1.
2. திருவிசைப்பா—1.

என்றாற்போலும் திருமொழிகள் இறைவன் காணுதல் உதவியைச் செய்தலை விளக்குவனவே,

காரைக்காலம்மையாரும்,

''அறிவானுந் தானே; அறிவிப்பான் தானே; எனக் கூறிய பின்,

''அறிவாய் அறிகின்றான் தானே''[1]

எனவும் அருளிச் செய்தார். இதனுள், ''அறிவானும் தானே'' - என்றது, 'சிவன் எல்லாம் அறிபவன்' - என்பதையும், ''அறிவாய் அறிகின்றான் தானே'' - என்றது அனைத்து உயிர்களையும் பொருள்களை அறியும்பொழுது அவற்றது அறிவொடு அவனும், உடன் நின்று அறிதலையும் கூறியன என உணர்க.

இவ்வதிகரணத்துக் கூறிய நுண்பொருளை உணரமாட்டாத்தார், 'இறைவன் உயிர்கட்குச் செய்யும் உதவி காட்டும் உதவி யன்றிக் காணும் உதவி யில்லை - என முரணக் கூறுவர்.

இறைவன் காட்டும் உதவி செய்தலை ஐந்தாம் நூற்பாவினுட் கூறி, காணும் உதவியை இந்நூற்பாவினுட் கூறினார்.

இதனானே, சித்தாந்த தத்துவ சுத்தாத்துவிதத்தை இரண்டாம் நூற்பாவினுள் பொதுவாகவும், ஐந்தாம் நூற்பாவினுள் ஓரளவு சிறப்பாகவும், இந்நூற்பாவினுள் முழுமையாகவும் விளக்கினமையும் காண்க.

ஆன்மாவிற்கு விடயமாவன பெத்த நிலையில் உளவேயன்றி, முத்தி நிலையில் யாதுமில்லை. அதனால், இறைவன் காட்டுதல் காணுதல்கள் பெத்தத்தினன்றி, முத்தியில் இல்லை'' என்பார் உளர். முத்தியில்,

''சுத்தஅனு போகத்தைத் துய்த்தல் அணு; மெத்தவே இன்பம் கொடுத்தல் இறை''

---

1. திருமுறை - 11. அற்புதத் திருவந்தாதி - 20.

என்பதே சித்தாந்தம் ஆகலின் இறைவன் காட்டியும் கண்டும் உதவுதல் பெத்தம், முத்தி இருநிலைகளிலுமாதலை உணர்ந்து கடைப் பிடிக்க.

தோற்றுவாய்

'இறைவன் ஆன்மாக்களுக்கு அறிவித்தல் மாத்திரமன்றி, அறிந்தும் நிற்பானாயின் அறியப்படும் பொருளால் வரும் இன்பத் துன்பங்களை உயிர் எய்துதல்போல் அவனும் எய்துவானாவன், அது பொருந்தாது ஆகவின், 'இறைவன் அறிவித்தலே யன்றி அறிதலையும் செய்வான் - என்றால் பொருந்தாது' - மீட்டும் எழும் தடையை எடுத்துக்காட்டால் விடுக்கின்றார்.

வெண்பா—1

ஐந்தையும் ஒக்க உணரா(து) அவற்றுணர்வ(து)
ஐந்தும்போல் நின்றுணரும் ஆகலான்—ஐந்தினையும்
ஒன்றொன்றாப் பார்த்துணர்வ(து) உள்ளமே; எவ்வுலகும்
ஒன்றொன்றாப் பார்க்கும் உணர்ந்து.

இதன் பொருள்

ஐந்தையும் ஒக்க உணராது—ஐந்து புலன்களையும் ஒரு காலத்தில் ஒருங்கே உணரமாட்டடது.

அவற்று உணர்வது ஐந்தும்போல் நின்று உணரும் ஆகலான்—அவற்றுள் ஒரு புலனை மட்டும உணரும் காலத்தில் தான் வேறு நின்று உணராது, ஐம்பொறிகள் ஐம்புலன்களை அது அதுவாக அழுந்தி உணர்தல் போலவே உணரும் ஆதலால்.

உள்ளமே ஒன்று ஒன்றாப் பார்த்து உணர்வது—ஆன்மாவே புலன்களை ஒவ்வொன்றாகச் சுட்டி அறியும் தன்மை யுடையது.

ஒன்று—தனி ஒரு பொருளேயாய் உள்ள முதற்பொருள் அவ்வாறின்றி.

எவ்வுலகும் ஒன்றா உணர்ந்து பார்க்கும்—அனைத்துப் புலன் களையும் ஒரு காலத்தே ஒருங்குணர்ந்து) அவ்வுணர்வி னிடையே அவ்வவ்வுயிரோடும் அவை அறியும் பொருளை அறியும்.

விளக்கம்

"ஆகலான் அறியப்படும் பொருள்களால் வரும் இன்பத் துன்பங்கள் உயிரைச் சார்தல் போல முதற் பொருளைச் சாரா" என்பது குறிப்பெச்சம், இதனால் மேல் எழுந்த தடையை விடுத்த வாறு அறிக.

'சுட்டுணர்வே அறியப்படும் பொருளில் அது அதுவாய் அழுந்தியறியும்; வியாபக உணர்வு அவ்வாறன்றி எல்லாப் பொருளையும் ஒருங்கே அழுந்தாது நின்று அறியும். உயிரே சுட்டுணர்வுடையது. முதற் பொருள் வியாபக உணர்வுடையது. அதனால், மேற்கூறியவாறு தடை எழக் காரணம் இல்லை என்பது கருத்து.

"உயிரும், இறைவனும் அறிவுடைப் பொருளேயாயினும் உயிரே ஒன்றனை அறியும் பொழுது அதுவாக அழுந்தியறியும் இறைவன் பொதுவாக் காட்சி மாத்திரமாய் அறிவான்'. என்பதனை உபநிடதம்,

"அழகிய சிறகை உடைய இரண்டு பறவைகள் இப்பொழுது ஒருங்கிணைந்தே யிருப்பன. ஒத்த தன்மை உடையன; (ஆயினும்) ஒன்று மரத்தில் உள்ள பழத்தைத் தின்று சுவையை நுகர்கின்றது. மற்றொன்று சும்மா பார்த்துக் கொண்டிருக்கின்றது"—[1] எனக் கூறிற்று.

"த்வா ஸுபர்ணா ஸயுஜா ஸகாயா ஸமாநம்
வ்ருக்ஷம் பரிஷ்வ ஜாதே ।
தயோ ரந்ய: பிப்பலம் ஸ்வாத்வ த்யநச் நந்தோ ॥

1. முண்டகோபநிடதம்—3ல் 1.1.

தோற்றுவாய்

'பெத்த காலத்தில் ஆன்மா உலகத்தை அறியும்பொழுது அதற்கு அவ்வறிவு நிகழ்தல் வேண்டி இறைவனும் அதனுடன் நின்று அறிதல் கூடும். ஆயினும், - முத்தி காலத்திலும் இறைவன் அவ்வாறு அறிவன்—என்றல் கூடாது, ஏனெனில், முத்தி காலத்தில் ஆன்மா அறிவது அவன் ஒருவனையேயன்றிப் பிறிதில்லை யாகலானும், 'ஆன்மா இறைவனை அறியுமிடத்து இறைவனும் தன்னை யறிவான்'—எனின், அறிபவனும், அறியப் படும் பொருளும் ஒன்றாதல் கூடாமையானும்—என எழும் தடையை மற்றோர் எடுத்துக்காட்டால் விடுகின்றார்.

வெண்பா—2

ஏகமாய் நின்றே இணையடிகள் ஒன்றுணரப்
போகமாய்த் தான்விளைந்த பொற்பினால்—ஏகமாய்
உள்ளத்தின் கண்ணானான் உள்குவார் உள்கிற்றை
உள்ளத்தாற் காணானோ உற்று.

இதன் பொருள்

உள்ளத்தின் ஏகமாய் நின்றே கண் ஆனான்—ஆன்மாவினிடத்து அதுவேயாய்க் கலந்து ஒன்றாகி, அதன் அறிவினின்றும் ஒரு ஞான்றும் நீங்காதவனாகிய இறைவன்.

ஒன்று இணையடிகள் ஏகமாய் நின்றே உணர - ஒரு ஞான்றும் அவனை இன்றியமையாததாகிய ஆன்மா அவனது திருவடி களை உணரும் பொழுதும் அவனோடு ஒன்றாகி நின்றே உணரும் ஆகலான்.

தான் போகமாய் விளைந்த பொற்பினால்—இறைவன் எஞ்ஞான்றும் உயிர்கள் நுகரும் நுகர்ச்சியாய் விளையும் சிறப்பினாலே—

உள்குவார் உள்கிற்றை உள்ளத்தால் உற்று காணானோ— அறிவார் அறிவதை அவரது அறிவு வழியாகப் பொருந்தி அறிவான் அல்லனோ!

விளக்கம்

ஆன்மாவை, "ஒன்று"—எனக் குறித்தார்,—மேற் குறித்த இயல்பினது—என்பது தோன்றுதற் பொருட்டு.

'ஆன்மாவின் இயல்பு அத்தன்மையது' எனக் கூறவே, 'அதனால், அறியப்படும் பொருள் யாதாயினும் அதனை இறைவன் அதன் அறிவு வழியாக அறிதல் எஞ்ஞான்றும் பிறழ் வின்றி நிகழ்வதேயாம்' என்பார், ''உள்ளத்தின் கண் ஆனான் உள்குவார் உள்கிற்றை உள்ளத்தால் உற்றுக் காணானோ''— என்றார்.

கண்ட அறிவு. ஆனாமை—நீங்காமை 'கண்ணினின்றும் ஆனான்'—என ஐந்தாம் உருபு விரிக்க.

இறைவன் உயிர்கட்குப் போகமாய் விளைதல் 'இகம். பரம்' - இரண்டினிலும் ஆம் என்றற்கு, 'இக லோகம்'—என்றாயினும், 'பரலோகம்'—என்றாயினும் சிறப்பித்துக் கூறாமல் பொதுப்பட, ''போகமாய்''—என்றார்.

இறைவன் 'தன்னையே தான் தன் அறிவால் அறிவான்'— என்னாது, ''உயிர்கட்குப் போகமாய் விளைந்த பொற்பினால்'' எனவும், உள்ளத்தால் உற்று'' எனவும் கூறியதனால், அவ்வாறு அதனை அவன் அறியுமிடத்து, அறியப்படும் போகம் அறிபவனாகிய அவனின் வேறேயாம்' - என்பது கருத்து.

முகத்திற் கண்கொண்டு பார்க்கிறவர்கள் அக்கண்ணால் தம் முகத்தைத் தாம் பார்த்தல் இயலாதாயினும், அம்முகம் கண்ணாடியில் எதிர் உருவாய்த் தோன்றுதலைப் பார்த்தலில் வைத்து இதனை அறிந்துகொள்க.

உயிர்கள் பதி ஞானத்தைப் பெறாத பொழுது பாச ஞான பசு ஞானங்களால் உலகத்தை உணர்தலால் அவ்விடத்து இறைவன் அவைகட்கு இக போகமாய் (உலகப் பயனாய்) விளைவான். அவ்விளைவு எல்லைக்கு உட்பட்டதாய் அவைகட்குப் பந்தமாய்ப் பந்திக்கும்.

பதிஞானத்தைப் பெற்ற உயிர் எல்லாவற்றையும் அந்த ஞானம் கண்ணாகவே உணர்தலால் அவ்விடத்து இறைவன் அவைகட்குப் பரலோகமாய் (வீட்டின்பமாய்) விளைவான். அவ்விளைவு எல்லையின்றிப் புதிது புதிதாய் விளைந்து கொண்டேயிருக்கும்.

சுதந்திரமாவது தான் வேண்டும் இன்பத்தை வேண்டியவாறு நுகர்தலேயாகலின், இந் நிலையே உயிர்கட்குச் சுதந்திர நிலையாகும்.

பரலோகம் எல்லை யின்றிப் புதிது புதிதாய் விளைதலை ஆளுடைய அடிகள்.

"உணர்ந்தார்க் குணர்வரி யோன்றில்லைச்
சிற்றம் பலத்தொருத்தன்
குணந்தான் வெளிப்பட்ட கொவ்வைச்செவ்
வாய்இக் கொடியிடைதோள்
புணர்ந்தால், புணருந் தொறும்பெரும்
போகம்பின் னும்புதிதாய்,
மணந்தாழ் புரிகுழ லாளல்குல்
போல வளர்கின்றதே"

எனக் காதலின்பத்தில் வைத்து உணர்த்தினார் இதனுள், "சிற்றம்பலத் தொருத்தன் - குணந்தான் வெளிப்பட்ட" என்றதனால், இவனது வரம்பில் இன்பமாகிய குணம் உயிர்களின் அறிவு அளவில் நில்லாது, அறியுந்தோறும், அறியுந்தோறும் மேலும் தோன்றிக் கொண்டே யிருத்தலைக் குறித்தது.

முதல் அதிகரணம் முடிந்தது

இரண்டாம் அதிகரணம்

[''அயரா அன்பின் அரன்கழல் செலுமே'']

முன்னுரை

''முன்னை அதிகரணத்துள்—இறைவன் முத்தி நிலையில் ஆன்மாக்கட்குப் பரபோகமாய் விளைவான்-எனக் கூறினமையின், அவன் அவ்வாறு விளைதலின் அவ்விடத்து ஆன்மாச் செயற் பாலது யாதுமில்லையாம்'' என மாணாக்கர் எய்தும் மலைவினை நீக்கி, 'ஆன்மா ஞானத்தினைக் கேட்டல் சிந்தித்தல் தெளித லோடு நில்லாது நிட்டையில் நின்றவழியே அதற்கு இறைவன் தன் திருவடி இன்பமாகிய பரபோகமாய் விளைவான்' - என்பது உணர்த்துவது இவ்வதிகரணம். அதனால் இது திருவடிப்பேற் றதிகரணமாகும்.

அதிகரணம்

மேற்கோள்

இனிப் - பத்தியினால் மறவாது ஏத்த அவனது சீபாதத்தை அணையும் - என்றது.

ஏது

அவன் அன்னியமின்றிச் செய்வோர் செய்திப் பயன் விளைத்து நிற்றலால்.

மேற்கோள் விளக்கம்

வழிநூல் ஆசிரியர், ''இத்தை ஆயும் அறிவுடையனாய் அன்பு செய்ய'' - என்றாராகலின், நூற்பாவினுட் கூறியவாறே, ''மறவாது பத்தியினால் ஏத்த''—என மாற்றிக்கொள்க.

மறவாமை, முத்தியிலும் பரபோகமாய் விளையும் கருணை யினை. அதனை அறியுந் தோறும் அவன்மாட்டு அன்பு மீதூரும் ஆகலான், 'மறவாமையால் உளதாகும் பத்தியினால்'—என்க.

இதனால் நாம் அறிவது, 'உயிரினது துன்பங்களுக்கெல்லாம் அடிப்படைக் காரணம், அஃது என்றும் உயிர்க்குயிராய் நின்று உதவி வரும் இறைவனை நினையாது மறத்தலே' என்பது. மறவாமை இல்லையேல் உயிருக்குத் துன்பம் இல்லை; இன்பமே யாம். இது பற்றியே

''புழுவாய்ப் பிறக்கினும் புண்ணியா உன்னடி
என்மனத்தே
வழுவா திருக்க வரந்தர வேண்டும்'' [1]

எனவும்,

''பிறவாமை வேண்டும் மீண்டும் பிறப்புண்டேல்
உன்னையென்றும்
மறவாமை வேண்டும்''

எனவும் வேண்டினமையை அறிகின்றோம்[2]

''துறக்கப் படாத உடலைத் துறந்துவெந்
தூதுவரோடு
இறப்பன்; இறந்தால் இருவிசும்பு ஏறுவன்;
ஏறிவந்து
பிறப்பன்: பிறந்தால் பிறையணி வார்சடைப்
பிஞ்ஞகன்பேர்
மறப்பன் கொலோ என்று என்உள்ளம் கிடந்து
மறுகிடுமே'' [3]

என அஞ்சியதைக் காண்கின்றோம்.

ஆன்மாச் சிபாதத்தை அணைதலாவது அன்பினால் விளையும் இன்பத்திலே தோய்ந்து நிற்றல்.

ஆணவ மலத்தின் சுவடு இருப்பினும் அஃது இந்நிலையி னின்றும் நீங்கச் செய்யும். அச்சுவடும் நீங்கினமையால் இங்கு, 'அணையும்'' என்றது, 'அணைந்து நீங்காதே நிற்கும்' என்ற தாம்.

---

1. திருமுறை—4' 94.8.
2. பெரிய புராணம்—காரைக்காலம்மையார்—60.
3. திருமுறை—4 - 113.8.

மலச் சுவடு காரணமாக அணைந்தும், நீங்கியும் மாறி மாறிச் செல்லுதல் 'சவிகற்ப நிட்டை' என்றும், நீங்காதே நிற்றல், 'நிருவிகற்ப நிட்டை என்றும் சொல்லப்படும்.

இங்கு, ''சீபாதத்தை அணையும்'' என்றது நிட்டை கூடுதலாகவே, எட்டாம் நூற்பாவினுள், ''தம்முதல் குருவுமாய் உணர்த்த''—என்றது கேட்டல் ஞானமும், அவ்விடத்து, ''சீபாதத்தை அணையும்''—என்றது, கேட்டல் ஞானத்தால் விளையும் சிவரூபமும், ஒன்பதாம் நூற்பாவில் ''பதியை ஞானக் கண்ணினில் சிந்தை நாடி'' - என்றது சிந்தனை ஞானமும், ''அஞ்செழுத்தால் கோதண்டம் சானிக்கில்'' என்றது சிவ தரிசனமும், பத்தாம் நூற்பாவில்

''நாமல்ல இந்திரியம்; நம்வழியின் அல்ல; வழி
நாமல்ல; நாமும் அரன் உடைமை''

என்றது தெளிதல் ஞானமும், ஏகனாகி இறைபணி நிற்றல் சிவ யோகமும், இந் நூற்பாவில் ''அயரா அன்பின் அரன்கழல் செலும்'' எனவும், ''மறவாது பத்தியினால் ஏத்த அவனது சீபாதத்தை அணையும்'' எனவும் கூறியன நிட்டை ஞானமும், நிட்டையில் அவன் பரபோகமாய் விளைய அதன்கண் திளைத்தலே சிவ போகம் எனவும் உணர்க.

இனிச் சிவரூபத்தில் ஆன்ம தரிசனமும், சிவ தரிசனத்தில் ஆன்ம சுத்தியின் தொடக்கமும், சிவ யோகத்தில் ஆன்ம சுத்தி முற்றுப் பெறுதலும் உளவாகும். சிவயோகமே ஆன்ம லாபம்.

தத்துவ தரிசனத்தில் தத்துவ ரூபமும், ஆன்ம ரூபத்தில் தத்துவ தரிசனமும், ஆன்ம தரிசனத்தில் தத்துவ சுத்தியும், சிவ ரூபத்தில் ஆன்ம தரிசனமும் கிடைக்கப் பெறும்.

தச காரியங்களை இங்ஙனம் உணர்க.

ஏழாம் நூற்பா ஆன்ம ரூபம் அதன்கண் தத்துவ தரிசனம் அடங்கிற்று.

எட்டாம் நூற்பா ஆன்ம தரிசனம். அதன்கண் தத்துவ சுத்தி அடங்கிற்று. பிறவும் காண்க.

ஏழு முதல் பதினொன்று முடிய உள்ள நூற்பாக்களை முறையே நின்மல சாக்கிரம். நின் மல சொப்பனம். நின்மல சுழுத்தி. நின்மல துரியம், நின்மல துரியாதீதம் என உணர்க. நின்மலம் 'சுத்தம்' என்றும் சொல்லப்படும். எனவே, 'கேவலம், சகலம், சுத்தம்'—என்னும் காரண அவத்தை மூன்றிலும் நிகழும் காரிய அவத்தைகளாகிய சாக்கிரம் முதலிய ஐந்தனுள் இச் சாக்கிரம் முதலிய சுத்தத்தில் நிகழும் ஐந்தவத்தைகளாம்.

நிருவிகற்ப நிட்டையிஃறிச் சவிகற்ப நிட்டையில் நிற்போர் உலகத்தாரோடு பொருந்தும் பொழுது சவிகற்ப நிட்டையாகிய சிவ யோகத்தில் நிற்றலல்லது, அதற்குக் கீழே வாரார். நால்வர் பெருமக்களும், மற்றும் நாயன்மார்களும் சவிகற்ப நிட்டையில் இருந்தவர்களே. இறுதியில் அவர்களை இறைவனே முன்னின்று தனது திருவடியிற் சேர்த்துக் கொள்ளுதல் உண்டு.

சவிகற்ப நிட்டையே, 'உபாய நிட்டை' எனப்படுகின்றது. உபாய நிட்டை 'அருள் நிலை' - எனவும் 'நிட்டை', அல்லது நிருவிகற்ப நிட்டை 'ஆனந்த நிலை' எனவும் உணர்க.

ஏது விளக்கம்

''ஆன்மா இறைவனது சீபாதத்தை அணைதல் பர முத்தி யாதலின் அதனை ஆன்மா உடம்பு நீங்கிய பின்னன்றி, அஃது உள்ள பொழுது இயலாது'' - என வழங்கிடுவாரை நோக்கி அவ் வழக்கை மறுத்து மேற்கோளிற் கூறிய பொருளை ஏதுவால் நிறுவினார்.

''அன்னியம் இன்றி - என்றது, உடம்பு உள்ள பொழுது அவன் இல்லாமல் - எங்கோ இருக்கின்றான், - என்னும் நிலைமை இல்லை. அஃதாவது, உடம்பு உள்ள பொழுதும் அவன் உடன் இருக்கவே செய்கின்றான் - என்றபடி எனவே, 'இவ் அத்துவித நிலை எப்பொழுதும் இருத்தலால், உடம்பு உள்ள பொழுதேயும் ஆன்மா அவனது சீபாதத்தை அணைதற்குத் தடையில்லை' என்றபடி இதனையே 'உண்மை' விளக்க' நூல்,

"சென்றிவன்றான் ஒன்றின் சிவபூ ரணம் சிதையும்;
அன்றிவன்றான் ஒன்றுமெனின் அன்னியமாம்; - இன்றிரண்டும்
அற்றநிலை ஏதென்னில், ஆதித்தன் அந்தன்விழிக்
குற்றம்அற நின்றதுபோற் கொள்"[1]

எனக் கூறிற்று.

"அங்ஙனமாயின் எல்லாருமே அவனது சீபாதத்தை அணையலாமன்றோ" - என, மேலும் முரணிக் கூறுவாரை மறுத்தற்கு, "செய்வோர் செய்திப் பயன் விளைத்து நிற்றலால்" என்றார்.

"நிலம், உழவர்கட்குப் பயன் விளைவிக்கும் பொழுது அவரவர் உழப்பிற்குத் தகவே விளைதல் போல, இறைவன் அவரவர் செயலுக்குத் தகவே பயன் தருவன்" என்பது இரண்டாம் நூற்பா இரண்டாம் அதிகரணத்து, "உள்ளதே தோற்ற" - என்னும் வெண்பாவினுள் சொல்லப்பட்டது. அதனால் இங்கும், "மறவாமையும்; பத்தியினால் ஏத்துதலையும் இடையறாது செய்யாதவர்கட்கே வாழ்நாள் முடிந்த பின்பு அவன் தனது சீபாதத்தை வழங்குவன், அவற்றை இடையறாது செய்பவர்கட்கு அவ்வாறின்றி அவன் தனது சீபாதத்தை அவர் உடம்போடு கூடி வாழும்பொழுதே வழங்குவன்" என மேற்கோளிற் கூறிய பொருள் நிறுவப்பட்டது.

தோற்றுவாய்

"உடம்பு உள்ள பொழுதே சிலர்க்கு இறைவன் தனது சீபாதத்தை வழங்குதல் உண்டெனின், அச்சீபாதம் அதனை வணங்கும் விண்ணவரது மகுட கோடிகளில் உள்ள மணிகளும் மழுங்குமாறு வீசும் ஒளியை உடைத்தாகலின், அவ்வொளி பக்கத்தில் உள்ளார்க்கும் புலனாதல் வேண்டும்" என வல்வழக்கிடுவார் உரையை எடுத்துக்காட்டால் மறுக்கின்றார்.

வெண்பா-1

அருக்கன்நேர் நிற்பினும் அல்லிருளே காணார்க்கு
இருட்கண்ணே பாசத்தார்க்(கு) ஈசன்;—அருட்கண்ணால்
பாசத்தை நீக்கும், பகல் அலர்த்தும் தாமரைபோல்;
நேசத்தின் தன்னுணர்ந்தார் நேர்.

1. வெண்பா - 48.

இதன் பொருள்

அருக்கன் நேர் நிற்பினும் - பகலவன் தோன்றி நேரே நின்ற விடத்தும்

காணார்க்கு அல் இருளே — படலத்தால் மறைக்கப்பட்டுக் கண்ணொளியை இழந்தவர்க்கு அவன் இரவில் உள்ள இருளே யாய் இருப்பன். (அதுபோல)

பாசத்தார்க்கு ஈசன் இருட் கண்ணே—பாசத்தால் மறைக்கப்பட்டு அறிவை யிழந்தவர்கட்கு இறைவன் இருளின்கண் உள்ள பொருளாகவே யிருப்பான். (''உடம்புடையோர் யாவரும் பாசத்துட் பட்டவரேயன்றிச் சிலர் பாசம் நீங்கினவராதல் எங்ஙனம்' எனின்,)

பகல் அலர்த்தும் தாமரை போல் - தாமரை அரும்புகள் யாவும் கூம்புதலையுடையனவே யாயினும், அவற்றுள் பக்குவம் வாய்ந்த சில அரும்புகளைப் பகலவன் கதிர்களால் கூம்புதலை நீக்கி மலரச் செய்தல் போல,

நேசத்தின் தன் உணர்தலின் நேசத்தார் நேர்—(உடம்புடையோர் யாவரும் பாசத்துட்பட்டவரே யாயினும்) தன்னை மறவாது அன்பு செய்வார் நேர்படுபவனாய்.

பரன் அருட் கண்ணால் பாசத்தை நீக்கும்—இறைவன் தனது அருட் பார்வையால் அவர்களது பாசத்தை நீக்குவான். (அதனால் அவர் உடம்போடிருந்தும் பாசம் இல்லாதவரேயாவர்.)

விளக்கம்

''அதனால் அவர் பாசம் இல்லாதவரேயாவர்'' - என்பது குறிப்பெச்சம்

உவமை—எடுத்துக்காட்டுவமை,

''அல் இருள்'' - என்றது, 'பேரிருள்'

என்றபடி - உவமையில் ''காணார்க்கு'' - என்றதனால், பொருளில் 'அறிவை இழந்தார்க்கு' - என்பதும், பொருளில்,

பாசத்தார்க்கு என்றமையால், உவமையில், படலத்தால் மறைக்கப்பட்டு' - என்பதும் பெறப்பட்டன.

இது தொழில் உவமம் ஆதலின், ''அலர்த்தும் தாமரை போல்'' என்றாராயினும், 'தாமரையை அலர்த்துதல் போல்' - என்பதே கருத்தென்க. பகல், ஆகுபெயர்.

'இருட் கண்ணன்' என்பதன் இறுதி நிலையும், 'தன்னை உணர்ந்தார்' - என்னும் இரண்டன் உருபும் தொகுக்கப்பட்டன. ஏகாரம் தேற்றம், இங்கும், ''நேசத்தின் தன் உணர்ந்தார்'' - என்பதை, 'தன் உணர்தலின் நேசத்தார்' - என மாற்றிக் கொள்க. 'நேராய்' என. 'ஆய்' என்பது வருவித்து' அதனை, ''நீக்கும்'' - என்பதனோடு முடிக்க.

உடம்பு உள்ள பொழுதே இறைவனது சீபாதத்தை அணைந்தோரே, 'அணைந்தோர்' - என்றும், 'சீவன் முத்தர்' என்றும் சொல்லப்படுவர்.

தோற்றுவாய்

''பகலவன் அலர்த்திய தாமரை அரும்பு அரும்பாகாது மலர் ஆம் ஆதலின் இறைவனால் அறிவை அலர்த்தப் பெற்றோர் பெத்தர் ஆகாது முத்தரேயாவர். ஆகவே, அந்நிலை உடம்பு உள்ளபொழுது ஆமாறில்லை'' - எனப் பிணங்குவாரது பிணக்கினை மற்றோர் எடுத்துக் காட்டால் நீக்கி, மேற்கூறியதனை வலியுறுத்துகின்றார்.

வெண்பா—2

மன்னும் இருளை மதிதுரந்த வா(று) அன்பின்
மன்னும் அரனே மலம்துரந்து - தன்னின்
வலித்திரும்பைக் கரந்தம் வசம்செய்வான் செய்தல்
சலிப்பில் விசாரிஅலன் தான்.

இதன் பொருள்

மன்னும் இருளை(மன்னும்) மதி துரந்த ஆறு - வானத்தில் நிலைபெறும் இருளை அவ்விடத்தில் நிலைபெற்ற வளர்

பிறைத் திங்கள் நாள்தோறும் தனது நிலவால் படிமுறையால் நீக்கும் முறைமைபோல.

(மன்னும்) மலம் மன்னும் அரனே அன்பின் துரந்து - உயிரின்கண் அனாதியே பற்றியுள்ள ஆணவ மலத்தை அனாதியே உயிரின் கண் நிலைபெற்றுள்ள இறைவனே தனது அருளாற்றலால் படி முறையால் நீக்கி.

இரும்பைக் காந்தம் தன்னின் வசம் செய்வான் - இரும்பைக் காந்தக் கல் ஈர்த்துத் தன் வசமாகச் செய்தல் போல.

செய்தல் சலிப்பு இல் - உயிரை ஈர்த்துத் தன் வசப்படுத்துதலில் அவனுக்கு ஒருஞான்றும் சலிப்பு உண்டாதல் இல்லை. (அவ்வாற்றானே.)

தான் விகாரி அலன் - தான் ஒருபோதும் தன் தன்மை வேறுபடு வானும் அல்லன்.

விளக்கம்

உவமையிலும், பொருளிலும் போந்த ''மன்னும்'' - என்னும் அடைகள் ஏனையிடங்களிலும் சென்று இயைந்தன.

பொருளில், ''அன்பின்'' என்றதனால், உவமையில், 'நிலவால்' - எஃபது வருவிக்கப்பட்டது.

''அன்பு'' - என்றது இங்கு அருளை, அருளாற்றற் பதிவே 'சத்தி நிபாதம்' - என்பது மேலே கூறப்பட்டது.

'மதி, வளர்பிறைத் திங்கள்' - என்பது ஏற்புழிக் கோடல்.

வளர்பிறைத் திங்களின் நிலவு போலச் சத்தி நிபாதமும் பலவாய் நிகழ்தலும் மேலே காட்டப்பட்டது.

''வளர் பிறைத்திங்கள் தனது நிலவால் இருளை நாள் தோறும் சிறிது சிறிதாக நீக்கி, இறுதியில் முழுமையாக நீக்குதல் போல, இறைவனும் தனது அருளாற்றலால் ஆணவ மலத்தைப் படிமுறையாக நீக்கி. இறுதியில் முற்ற நீக்குவன் ஆதலில் அது பற்றி ஐயம் என்னை'' - என்பது கருத்து. அதனால் ''அதிதீவிர பக்குவம் எய்தினார்க்கு அவர் உடம்பொடு கூடி வாழும்பொழுதே ஆணவ மலத்தை இறைவன் முற்ற நீக்குதற்குத் தடை

யில்லை'' என மேல் எழுந்த தடைக்கு விடை இறுக்கப் பட்டதாம்.

''காந்தம் இரும்பைத் தன்னின் வலித்து வசம் செய்வான் செய்தல் விகாரி அலன்'' என்றது, ஐந்தாம் நூற்பாவினுள் ''காந்தம் கண்டபசாசத்து அவையே'' - எனப் பெத்த நிலை பற்றிக் கூறிய தனை இங்கு முத்தி நிலைக்குப் பெயர்த்தும் கூறி 'இறைவன் யாதொரு செயலையும் கருவிகளால் செய்யாது நினைவு மாத்தி ரத்தால் செய்தலின், அவன் தன் தன்மை திரிதற்கு ஏதுவில்லை' - என வலியுறுத்தியவாறு.

''சலிப்பு இல்'' - என்றது, அவனது பேராற்றலையும் பேரருளையும் நினைவூட்டியதாம்.

'செய்வான்' - என்பது தொழிற் பெயராய் நின்றது, 'அவன் வருவான் ஏன்' என்பது போல. 'செய்வான் போல'—என உவம உருபும், 'செய்தற்கண்' - என ஏழன் உருபும் விரிக்க.

'ஆணவ மலம் பரிபாகம் எய்தியவிடத்தும், புடம் இடப்பட்ட செம்பு பக்குவம் எய்திய வழியும் இரச குளிகையைச் சேர்த்த பின்பே களிம்பு நீங்கப் பெறுதல் போல, இறைவன் தனது அருளாற்றலால் அதனை நீக்கியவழியே நீங்கும்' என்பதும் ''நீங்குதலோ, நீக்குதலோ உயிரால் ஆகாது'' என்பதும் தோன்றுதற் பொருட்டு, ''அரனே மலம் துரந்து'' - என்றார். ஏகாரம் பிரிநிலை.

இதனாலும், ''இரும்பைக் காந்தம் வசம் செய்வான் செய்தல்'' -என்றதனாலும் ''வெயிலை விட்டு நீங்கி நிழலை அடைதல் வழிப்போக்கன் செயலாதவல்லது மரத்தின் செயலா காமை போல, மலத்தின் நீங்கி இறைவன் திருவடியை அடைதல் உயிரின் செயலாதலல்லது இறைவன் செயலன்று; ஏனெனின். இறைவன் என்றும் நிலை திரியாதவன். அவன் உயிர்கட்கு மலத்தை நீக்குதல், தனது திருவடியிற் சேர்த்தல் ஆகிய செயல் களைச் செய்யின் நிலை வேறுபட்டுச் செம்மை இலனாவன்'' எனக் கூறும் ஈசுர சுவிகார வாத சைவர் கூற்றும் மறுக்கப்பட்டதாம்.

இனி, ''மலம் துரந்து, வசம் செய்வான்' செய்தல்''—என்ற தனால், ''ஒளி வந்தபின்பே இருள் நீங்குதல் போல, உயிர்

இறைவன் திருவடியைச் சேர்ந்தபின்புதான், உயிர் ஆணவமலத்து னின்றும் நீங்கும், அதற்குமுன் நீங்குதல் இல்லை'' எனச்சைவருள் சிலர் கூறும் கூற்று மறுக்கப்பட்டதாம்.

''கதிரும், கதிரவனும் போல்வலர் திருவருளும், சிவனும்'' - என்பதே சித்தாந்தம் ஆகலானும், கதிரவனை காணப்படுதற்கு முன்னே கதிர்கள் பரவுதலால் இருள் நீங்குதல் போலச் சிவனை அடைதற்கு முன்பே திருவருள் வாய்தலால் ஆணவம் நீங்குதற்குத் தடையில்லை யாகையால், மேற்காட்டியவாறு கூறுவார் திருவருட் பேறு சிவப்பேறு ஆகியவற்றின் வேற்றுமை உணராத வரே என்க.

சிவப்பிரகாச நூலுள் உமாபதி தேவர்,

''தகவிலா மலங்கள் நீத்த
அந்நிலை கரணம் ஆகா
வகைஅதில் அறி வடங்கி
மன்னிட வியாபி யாய
வான்பயன் தோன்றும் அன்றே''[1]

எனத் திருவருட் பேற்றினைக் கூறிச் சிவப் பேற்றினுக்குத் தோற்றுவாய் செய்து,

''அடைபவர் சிவமே யாகும்
அதுவன்றித் தோன்றும் என்ற
கடன்அதென் என்னின், முன்னும்
கண்டிடார் தம்மைப் பின்னும்
தொடர்வரும் அருளி னாலும்
தோன்றுமா காணா ராயின்
உடையவன் அடிசேர் ஞானம்
உணர்தலின்(று) அணைதல் இன்றே[1]

எனத் திருவருட் பேற்றின் இயல்பை இனிது விளக்கினார். இதனால் ''திருவருட் பேறாவது, கண்ணில்லான் கண்பெற்ற பேறுபோல்வது'' என்பது விளங்கும்.

---

1. செய்யுள்—78, 79.

கண்ணில்லான் கண்பெற்றதற்குப் பயன், முன்பு காணா திருந்த பொருள்களை யெல்லாம் கண்டு, அவற்றுள் வேண்டாத பொருளினின்றும் நீங்கி, வேண்டும் பொருளை அடைதலே யாகும்.

அதுபோலத் திருவருட் பேற்றின் பயன் முன்பு உள்ளவாறு அறியாதிருந்த முப்பொருள்களின் இயல்புகளை உள்ளவாறு அறிதலேயாகும். அங்ஙனம் அறிந்தபொழுதே வேண்டப் படாத உலகினின்றும் நீங்கி, வேண்டும் பொருளாகிய சிவத்தை அடைதல் கூடும். அதனையே உமாபதி தேவர் மேற்காட்டிய செய்யுளில் "முன்னும் (அஞ்ஞானத்தால்) தம்மைக் கண்டிடார் பின்னும் அருளினாலும் (மெய்ஞ்ஞானத்தினாலும்) தம்மைக் காணாராயின், உடையவன் அடிசேர் ஞானம் உணர்தல் இன்று" - என்றார்.

எவரும் எந்த ஒன்றையும் முன்னர் அறிந்துதான் பின்னர் அடைதல் வேண்டும் ஒருவரும் தாம் அறியாத பொருளை. அடைதல் இயலாது. அது பற்றியே மேற்காட்டிய செய்யுளில் உமாபதி தேவர் "உடையவன் அடிசேர் ஞானம் உணர்தல் இன்று" - எனக் கூறியபின். "அணைதல் இன்றே" என முடித்தார்.

இங்கும், 'முன்னை நூற்பா திருவருட் பேறு கூறிற்று என்பதும் இந்நூற்பா சிவப் பேறு கூறுகின்றது என்பதும் 'திருவருட் பேறு ஆன்மசுத்தி' - என்பதும், 'சிவப் பேறு ஆன்ம லாபம்' - என்பதும் மேற்கூறப்பட்டவற்றை உணர்க,

திருவருட் பயனில் ஆன்ம சுத்தி 'உயிர் விளக்கம்' - என்றும், ஆன்ம லாபம் ' இன்புறுநிலை' என்றும் கூறப்பட்டன.

"உயிருக்கு ஆணவ பந்தம் அனாதியாகலின், அதனை அவ் வுயிரின் வேறாம்படி நீக்குதல் எவ்வாற்றானும் இயலாது; அதனால், மன்னும் அரனே மலம் துரந்து - என்றது பொருள் படுமாறு எங்ஙனம்" - எனத் தடை நிகழ்த்துவோரை நோக்கி வழிநூல் ஆசிரியர்,

"நெல்லினுக்குத் தவிடுமிகள் அனாதியாயே.
நெல்லைவிட்டு நீங்கும்வகை நின்றநிலை நிகழ்த்தீர்'.

என வினாவியும், ''தவிடுமிகள் புலப்பாட்டு நிலையில் நீங்கின வாயினும், அவை புலப்படா நிலையில் உள்ளனவே'' - எனக் கொண்டது விடாது கூறுவோரை நோக்கி,

''சொல்லியிடின் துகளற்ற அரிசியின்பால்
(தவிடுமிகள்) இல்லை; (ஏனெனின்,)
தொக்கிருந்து மற்றொரு நெல்
தோன்றிடாவாம்'' [1]

என இன்மை ஏதுவால் அனுமானம் கூறியும், 'மும்மலங் களும் பற்றற நீங்கிய நிலையே முத்தி நிலை' என வலியுறுத் தினார்.

''ஒரு பொருட்குக் குணத்தோடு சில குற்றங்களும் அனாதியே உளவாயினும், குணமே என்றும் நீங்காதுருக்கக் குற்றம் பின்னர் நீங்கும்'' என்பது, நெல்லிற்குத் தவிடுமிகளும், செம்பிற்குக் களிம்பும் ஆகிய குற்றங்கள் அனாதியாயினும் அவை பின் நீங்கிப் போக அரிசியும், பொன்னாய் நிற்கும் செம்பும் நிலை பெற்றிருத் தலைக் கொண்டு அறியப்படும்'' - என்பது மேற்காட்டிய வழி நூலின் கருத்து.

தோற்றுவாய்

''இறைவன் தன்னை மறவாது பத்தியினுள் ஏத்துபவரை மலத்தை நீக்கி, இரும்பைக் காந்தம் வலித்துத் தன் வசப் படுத்துதல் போலத் தனது அருளால் ஈர்த்துத் தன் வசப்படுத்து வனாயின் அவன் வசப்பட்டபின் உயிர் எவ்வாறு நிற்கும்'' - என்னும் அவாய் நிலையை வருகின்ற எடுத்துக் காட்டால் நிரப்பு கின்றார்.

வெண்பா

நசித்தொன்றின், உள்ளம் நசித்தலால் ஒன்றா?
நசித்திதேல் ஒன்றாவ தில்லை; நசித்துமலம்
அப்பணைந்த உப்பின், உளம்அணைந்து சேடம்ஆம்;
கப்பின்றாம் ஈசன் கழல்.

---

1. சிவஞான சித்தியார் - சுபக்கம் - சூ - 11.6.

இதன் பொருள்

(''நுகர்ச்சியாவது நுகரப்படுபொருளில் அதுவேயாய் அழுந்தி நிற்றலே யாதலின் ஆன்மா முதல்வனது இன்பத்தை நுகர்தற்கு அவனோடு இரண்டறக் கலக்குமிடத்தில் தான் கெட்டு ஒன்றாகுமோ, கெடாதே ஒன்றாகுமோ'' - என வினவினார்க்கு' ''கெட்டே ஒன்றாகும்'' எனப் பரிணாம வாதிகள் கூறுவர்.)

நசித்து ஒன்றின் - அவ்வாறு கூறினால். உள்ளம் நசித்தலால் ஒன்றா(து) - (கெட்டது பின்னர்ப் பிறிதொன்றனோடு கூடுமாறு இல்லையாகலின்) ஆன்மாக் கெட்டொழிந்தபின் முதல்வனோடு கூடுதல் நிகழாது.

(இது பற்றி, ''ஆன்மாத் தான் கெடாது நின்றே முதல்வனோடு மன்றாகும்; அஃதாவது, உப்பளத்தில் வீழ்ந்த வைக்கோல், புல் முதலியன உப்பாதல் போல, மலம் நீங்கிய உயிர் முதல்வனது என் குணங்களையும் பெற்று முதல்வனேயாகும்''—என்பர் சிவ சங்கிராந்த வாத சைவர்,)

நசிதிலதேல் ஒன்றாவது இல்லை—ஆன்மாக் கெடாது வேறு நிற்குமாயின், அது முதல்வன் ஆமாறு இல்லை. (வைக்கோல் முதலியன சடப் பொருள்கள் ஆதலின், அவற்றில் உப்புச் சுவை யாகிய சடப்பொருள் ஊறி ஒன்றாகும், அறிவுப் பொருள்கள் இரண்டு அவ்வாறு ஒன்றாகமாட்டா. எனவே, இரண்டும் பொருந்தாவாயின் வேறு எவ்வகையில் ஒன்றாகும்' எனின்.)

அப்பு அணைந்த உப்பின்—நீரைச் சேர்ந்த உப்புத் தான் கெடாது' தன் கட்டித் தன்மை நீங்கியவாறு போல.

உளம் ஈசன் கழல் அணைந்து மலம் நசித்து—ஆன்மாத் தான் கெடாது முதல்வனது சீபாபத்தை அணைந்து பசுத்துவம் (சீவத் தன்மை) முழுதும் நீங்கப்பெற்று.

சேடம் ஆம்—அவனுக்கு அடிமையாகும்.

கப்பு இன்று—இந்நிலை, பின் இரண்டுபடுதல் இல்லாத ஒரு நிலையாகும்;

விளக்கம்

''நசித்து மலம்''—என்பதனை, 'மலம் நசித்து' என மாற்றி, ''நசித்து''—என்னும் செய்தென் எச்சத்தை, 'நசிக்க' எனச் செய வென் எச்சமாகத் திரித்துக்கொள்க.

''உப்பின்''—இன், ஒப்புப் பொருளில் வந்த ஐந்தாம் வேற்றுமை உருபு.

'சேடம்'—என்னும் வடசொல் உடைமை, அடிமை ஆகிய இரண்டையும் குறிக்கும், இங்கு அடிமையைக் குறித்தது.

அப்பணைந்த உப்புத் தன் கட்டித் தன்மை நீங்கினமையின், கெடாதே வேறு நிற்றல் இன்மையையும், கட்டித் தன்மையில்லை யாயினும் உவர்ப்புச் சுவை நீங்காமையின் தான் பொருள் கெடாமையும் உடைத்தாதல் போல, முதல்வனது சீபாதத்தை அணைந்த உயிர் சிவத் தன்மை நீங்கினமையால் தான் கெடாதே முதல்வனின் வேறுபட்டு நில்லாமையும், சிவத் தன்மை யில்லை யாயினும் முதல்வன் இன்பத்தைத் தருபவனாய் நிற்கத் தான் இன்பத்தைப் பெறுபவனாய் நிற்றல் நீங்காமையின் தான் பொருள் கெடாது நிற்றலும் உடைத்தாதல், ''அப்பிணைந்த உப்பின்''—என்னும் உவமையால் விளக்கப்பட்டது. இஃதே சுத்தாத்துவித சித்தாந்த பரமுத்தி நிலை என்க.

''அப்பினில் கூருமை ஆதித்தன் வெம்மையால்
உப்பெனப் பேர்பெற் றுருச்செய்த அவ்வுரு
அப்பினிற் கூடிஅ தொன்றாகு மாறுபோல்
செப்பினில் சீவன் சிவத்துள் அடங்குமே''[1]

என்றார் திருமூலரும்.

''அப்பணைந்த உப்பின்''—என்றதனால், ''குடம் உடைந்த விடத்துக் குடாகாயம் மகாகாயத்தோடு ஒன்றாதல்போல, மாயை யாகிய உபாதி நீங்கியவிடத்துச் சீவான்மா பரமான்மாவோடு ஒன்றாதலே முத்தி'' என்னும் ஏகான்ம வாத மதமும்,

---

1. திருமந்திரம்—136.

''அணை முரிந்தவிடத்து அணையில் நின்ற நீர் கடலோடு கலத்தல் போல' என வேறு உவமை கூறி ஏகான்ம வாத மதமே பற்றி ஐக்கியம் கூறும் ஐக்கிய வாத சைவர் மதமும்,

''மலம் நீங்கிய உயிர் சிவனோடு ஒத்தலின், சிவனைப் போல ஐந்தொழில் செய்து நிற்றலே முத்தி'' எனக் கூறும் சிவ சமவாத சைவர் மதமும்,

''உயிர் மலம் நீங்கி. 'யான், எனது' என்னும் செருக்கற்று முதல்வனுக்கு அடிமை செய்து நிற்றலே முத்தி; அதற்குமேல் இரண்டறக் கலத்தல் இல்லை''—எனக் கூறும் விசிட்டாத்து விதிகள், பேத வாத சைவர், சிவ சங்கிராந்த வாத சைவர்' சிவாத்துவித சைவர் முதலியோரது மதங்களும்,

''மலம் நீங்கிய உயிர் சிவனோடு சேர்ந்து சிவனாகி விடுத லல்லது தான் வேறுளதாதல் இல்லை'' எனக் கூறும் சுத்த சைவர் மதமும், பிறவும் எல்லாம் மறுக்கப்பட்டன.

''சுத்து அனுபோதத்தைத் துய்த்தல் அணு' எனவும் ''மெத்தவே இன்பம் கொடுத்தல் இறை'' [1] எனவும் உண்மை விளக்க நூல் கூறுதலைக் காண்க,

இவருள் சிவ சமவாதிகள் கூற்றுச் சிவநெறிக்குப் பெரிதும் புறம்பாதல் பற்றி அதற்கு உளவாகிய மறுப்புக்கள் மிகுதி.

> ''உம்பர்பிரான் உற்பத்தி யாதிகளுக்கு உரியன்;
> உயிர்தானும் சிவானுபவம் ஒன்றினுக்கும் உரித்தே''[2]

என வழிநூலாசிரியரும்,

> ''ஓங்குணர்வி னுள்ளடங்கி, உள்ளத்தில் இன்பொடுங்கத்
> தூங்குவர்; மற் றேதுண்டு சொல்'',
> ''ஐந்தொழிலும், காரணர்க ளாம்தொழிலும் போகம்நுகர்
> வெந்தொழிலும் மேவார் மிக'',
> ''எல்லாம் அறியும் அறிவுறினும், ஈங்கிவர்ஒன்
> றல்லா தறியார் அற''[3]—

எனப் புடைநூ லாசிரியரும் கூறினமை காண்க.

1. வெண்பா—50. 2. சிவஞான சித்தியார்-சூ-11-10
3. திருவருட் பயன்—91, 92, 93.

இனி, 'முத்தி நிலையில் சீவத்தன்மை இல்லையாம்'—என்பதற்கு, "அப்பனைந்த உப்பின்" என்னும் உவமையும், 'முத்தியில் உயிர் முதல்வனின் வேறுநிற்றல் இல்லை'—என்பதற்கு எட்டாம் நூற்பாவினுள், "அலைகடலில் சென்றடங்கும் ஆறுபோல்" என்னும் உவமையும் கூறப்பட்டனவாயினும், சுத்தாத்துவித சித்தாந்த பர முத்திக்கு, பத்தாம் நூற்பாவினுள், "அவனே தானே ஆகிய அந்நெறி" என்றதே சிறப்புடை உவமையாம். அதனைப் புடைநூலாசிரியர்,

"ஒன்றிநின் றுணரும் உண்மைக்(கு)
உவமை ஆ ணவத்தோ டொன்றே"[1]

என இனிது விளக்கினார். அஃதே பற்றித் தாயுமான அடிகள்,

"ஆணவத்தோடு அத்துவித மானபடி மெய்ஞ்ஞானத்
தாணுவினோடு அத்துவிதம் சாருநாள் எந்நாளோ"[2]

என்றார்.

இனிப் புடைநூலாசிரியர் இந்நிலை "தாடலை"—என்னும் புணர்மொழி போன்றது என்றும் கூறினார்.

"தாடலைபோற் கூடி,—அவை தான்நிகழா வேற்றின்பக்
கூடலைநீ ஏகம்எனக் கொள்"[3]

என்பது அச்செய்யுள்.

'தாள், தலை' என்னும் இரண்டும் இரண்டு தனிச் சொற்களாயினும் அவை புணர்ந்தவிடத்து இரண்டாய்க் காணப்படாமலும், ஒரு சொல்லே ஆய்விடாமலும் இருத்தல்போல, முதல்வனும், ஆன்மாவும் எனப் பொருள் இரண்டாயினும் அவை மலம் நீங்கிய பின்னர்க் கலந்த விடத்து வேறு வேறு நில்லாமலும், ஒரு பொருளேயாகி விடாமலும் இருக்கும்—என்பது கருத்து. 'தாடலை' என்பது போல, 'காறலை' என்றும் கூறுவர்.

---

1. சிவப்பிரகாசம்—87.
2. எந்நாட் கண்ணி
3. திருவருட் பயன்—74.

''முத்தியில் பசுத்துவம் நீங்கிச் சிவனது எண் குணங்களைப் பெற்று நிற்றல் பற்றி, 'உயிர் சிவ சமமாம்'—என ஆகமங்களுள் கூறப்பட்டதாயினும், உயிரினது சிறப்புத் தன்மையும், சிவனது சிறப்புத் தன்மையும் வேறு வேறாதல் முத்தியிலும் திரிதல் இல்லை'' - என்பதை வழிநூ லாசிரியர்,

''சிவன், சீவன் என்றிரண்டும் சித்து, ஒன்றாம் என்னின்,
சிவன்அருட்சித்து; இவன் அருளைச் சேரும் சித்து! அவன்றான்
பவம், கேடு-புத்தி, முத்தி பண்ணும் சித்து; இவற்றில்
படியும் சித்து, அறிவிக்கப் படும் சித்தும் இவன்றான்;
அவன் தானேஅறியும் சித்து; ஆதலினால் இரண்டும்
அணைந்தாலும் ஒன்றாகாது அநந்நியமாய் இருக்கும்''[1]

எனத் தெரித்துக் கூறினார். ''ஒன்றாகாது''—என்றது, இரண்டிற்கும் சிறப்புத் தன்மைகள் வேறு வேறு உள - என்றபடி.

இச் சிறப்புத் தன்மைகளானே, ''ஆண்டான் என்றும் ஆண்டானே; அடிமை என்றும் அடிமையே'' என்பதும் நிறுவப் பட்டதாம். அது பற்றியே இங்கு,

''உளம் அணைந்து சேடமாம்''

என்றும், ஒன்பதாம் நூற்பா இறுதி அதிகரணத்துள்,

''அண்டனாம் சேடனாம் அங்கு''

என்றும், முதல் நூற்பா இறுதி அதிகரணத்துள்,

''ஒன்றலா—ஈறேமுதல்; அதனின் ஈறலா
ஒன்று பல—வாறே தொழும்பாகும் அங்கு''

என்றும் கூறினார்.

இவற்றால் எல்லாம், 'சித்தாந்த முத்தியாவது அடிசேர் முத்தி'—என்பது விளங்கிற்று. அதனை,

''சிவனடியைச் சேரும் முத்தி
செப்புவதிங்கு யாமே'' [2]

என வழிநூ லாசிரியரும்

1, சிவஞான சித்தியார் - சுபக்கம் - சூ - 11.11.
2. ஷை. சூ - 8 - 12.

"திரிமலமும் அகல உயிர்
அருள்சேர் முத்தி"[1]

எனப் புடைநூ லாசிரியரும் விளக்கினர்.

கப்பு - பிரிவு. "கப்பு இன்றாம்" என்றதனால், 'இது சிறிதும் மாற்றம் இன்றி, என்றும் நிலை பெற்றிருக்கும் நிலை' - என்பது விளங்கும். இஃதே பொது மறையுள், "மற்றீண்டு வாரா நெறி"[2] என்றும். திருமுறையுள், "மீண்டு வாரா வழி"[3] எனறும் சொல்லப்பட்டது.

மாற்றம் எய்துவது செயற்கையும், மாற்றம் எய்தாது இயற்கையும் ஆதலால், இந்நிலையே உயிர்கட்கு இயற்கை நிலையாம் அது பற்றியே திருவள்ளுவர் இதனை, "பேரா இயற்கை"[4] என்றார்.

'முத்தி நிலையில் உயிருக்கு யாதோர் அனுபவம் இல்லை' - என்பது சில மதவாதிகளது கொள்கை. "பெத்த நிலையில் உயிருக்கு உலக அனுபவம் உளதாதல் போல, முத்தி நிலையில் சிவானுபவம் உளதாம்" என்பதும்,

உலக அனுபவம்

செடிகொள் நோய் யாக்கையும் பாம்பின்வாய்த்
தேரைவாய்ச் சிறு பறவை
கடிகொள்பூந் தேன் சுவைத்து"[5] எய்தும்

இன்பம்போலப் பேரிடர்களுக்கிடையே சிறிது உளதாய் நிலையின்றிக் கெடும் வரம்புடை இன்பமேயாக, சிவானுபவம் துன்பக் கலப்புச் சிறிதும் இன்றி, எல்லையின்றி விளையும் வரம்பில் இன்பமாம்—என்பதுமே சித்தாந்தம் ஆதலை வழிநூ லாசிரியர்,

---

1. சிவப்பிரகாசம் - 50.
2. திருக்குறள் - 356,
3. திருவாசகம் - கீர்த்தித் திருஅகவல் - 117.
4, திருக்குறள் 370.
5. திருமுறை—2. 79. 6.

"கரும்பைத் தேனைப் பாலைக் கனியமுதைக் கண்டைக்
கட்டியையொத் திருப்பன் அந்த முத்தியினிற் கலந்தே" 1

என விளக்கினார்.

"கனியினும், கட்டி பட்ட கரும்பினும்,
பனிம லர்க்குழற் பாவைநல் லாரினும்
தனிமுடி கவித் தாளும் அரசினும்
இனியன் தன்னடைந் தார்க்கிடை மருதனே" 2

"மாசில் வீணையும், மாலை மதியமும்,
வீசு தென்றலும், வீங்கிள வேனிலும்,
மூசு வண்டறை பொய்கையும் போன்றதே
ஈசன் எந்தை இணையடி நீழலே" 2

"கற்ற கல்வியினும் இனியானை" 3

"சிந்தித்தெழு வார்க்கு நெல்லிக் கனியே" 3

"நெல்லிக் கனியைத் தேனைப் பாலை
நிறையின் னமுதை அமுதின் சுவையை" 4

"பெறவே வேண்டும் மெய்யன்பு,
பேரா, ஒழியாப் பிரிவில்லா,
மறவா, நினையா, அளவிலா,
மாளா இன்ப மாகடலே" 4

என்பன முதலிய அனுபவ மொழிகளையும்.

"எல்லையில் இன்ப வெள்ளம்
எனக்கருள் செய்தாய் போற்றி" 5

என்னும் வரலாற்று மொழியையும் காண்க

---

1. சிவஞான சித்தியார் - சுபக்கம் - சூ - 11·12.
2. திருமுறை—5 - ல் 14·10, 90, 1.
3. திருமுறை—7-ல் 56, 4·. 4·3.
4. திருவாசகம்—புணர்ச்சிப் பத்து—4. பிரார்த்தனைப் பத்து - 6.
5. பெரிய புராணம்—இயற்பகையார் - 22.

முன்னை அதிகரணத்துள் "போகமாய்த் தான் விளைந்த பொற்பினால்"—என்றார் ஆகலின், இங்குக் கூறிய கப்பு இன்மைக்கு அஃதே காரணம் என்க அஃதாவது, 'இன்பம் எல்லையின்றி மேலும் மேலும் விளையும் பொழுது அதனி னின்றும் நீங்குதற்குக் காரணம் இல்லை'—என்பதாம்.

இனித் திருவள்ளுவரும்,

"இன்பம் இடையறாது ஈண்டும், அவா என்னும்
துன்பத்துள் துன்பம் கெடின்"

என முன்னர்க் கூறிப் பின்,

"ஆரா இயற்கை அவாநீப்பின் அந்நிலையே
பேரா இயற்கை தரும்"

என்றாராகலின், அவா நீங்கிய பேரா இயற்கை நிலையில் இன்பம் இடையறாது ஈண்டுதலைச் சொல்லாமே வைத்தமை அறிக.

தோற்றுவாய்

நான்காம் நூற்பாவினுள் கூறப்பட்ட, ஆன்மா அடையும் கேவல நிலையின் இயல்பையும், ஐந்தாம் நூற்பாவில் கூறப்பட்ட சகல நிலையின் இயல்பையும், இங்குக் கூறப்பட்ட சுத்த நிலையின் இயல்பையும் ஒருங்கு வைத்துணர்த்தி, "கேவல சகலங்களில் ஆன்மா அழிவின்றி யிருந்தது போலவே, சுத்த நிலையிலும் அழிவிலதாம்" என்பதனை வரும் எடுத்துக் காட்டால் வலியுறுத்து கின்றார்.

இதனானே நூற்பொருள் முழுவதையும் ஒருவாறு தொகுத்து முடிப்பதும் ஆம்.

வெண்பா--4

பொன்வாள்முன் கொண்மூவிற் புக்கொடுங்கிப் போயகலத்
தன்வாளே எங்குமாம் தன்மைபோல்—முன்வாள்
மலத்துள் மறைந்துள்ளம் மற்றுலகை யுள்ளும்;
மலத்திரித்துச் செல்லும் வரத்து.

இதன் பொருள்

பொன் முன் கொண்மூவில் புக்குநிற்கும் தன்மைபோல்)—கதிரவன் காலைப் பொழுதில் முகிற் கூட்டத்துள் புகுந்து மறைந்து நிற்கும் தன்மை போல.

உள்ளம்—ஆன்மா. **முன்**—அனாதியில்.

மலத்துள் மறைந்து—ஆணவ மலத்துள் அகப்பட்டுத் தோன்றாது நின்று.

மாள் ஒடுங்கி (நிற்கும் தன்மை போல்—(முகிற் கூட்டம் சிறிது விலகிய பொழுது) கதிரவன் தனது ஒளி சிறிது விளங்க நிற்கும் தன்மை போல. (ஆன்மா)

உலகை உண்ணும்—(தனு கரணங்களால் ஆணவ இருள் சிறிது நீங்கிய விடத்து) ஆன்மாச் சிறிது அறிவு விளங்க, உலகப் பயனை நுகரும்.

போய் அகல—(பெருங்காற்றால்) முகிற் கூட்டம் முற்றும் நீங்கிய பொழுது.

எங்கும் தன் வாளே ஆம் தன்மைபோல்—கதிரவன் தனது ஒளி எங்கும் விளங்க நிற்கும் தன்மைபோல,

மற்று மலத்து இரித்து வரத்துச் செல்லும்—ஆன்மா முதல்வன் தனது திருவருளால் மும்மலங்களையும் முற்றப் போக்கிய விடத்துத் தனது அறிவு முற்றும் விளங்கப்பெற்று அவனது திருவடிகளில் அணைந்து நிற்கும்.

விளக்கம்

பொன், ஆகுபெயராய்ப் பொன் போலும் நிறமுடைய கதிரவனைக் குறித்தது. வாள்--ஒளி.

கதிரவன் காலைப் பொழுதில் முகிற் கூட்டத்நால் மறைக்கப் பட்டுச் சிறிதும் விளங்காதிருத்தல், உயிர் அனாதியே ஆணவ இருளில் மூழ்கித் தனது அறிவு விழைவு செயல்கள் சிறிதும் விளங்காதிருந்தமைக்கு உவமை. இந்நிலை கேவலாவத்தையாம். அஃதாவது அனாதி கேவலம் என்க. இந்நிலையில் உயிருக்கு இருளன்றி வேறு அனுபவம் எதுவுமில்லை

முகிற் கூட்டம் சிறிது விலகக் கதிரவன் ஒளி மழுங்கித் தோன்றுதல்' இறைவன் கன்மத்தைக் கூட்டி, அதற்கு ஈடாகத் தனு கரணங்களை மாயையினின்றும் படைத்துக் கொடுக்க அவற்றோடு கூடிய உயிர் தனது அறிவு விழைவு செயல்கள் சிறிது விளங்கப் பெற்றுப் பல புவனங்களில் பிறந்தும், இறந்தும் உலகப் பயனாகிய இன்பத் துன்பங்களை நுகர்ந்து உழலுதற்கு உவமை. இது சகலாவத்தையாம்,

பெருங்காற்றால் அடியுண்டு முகிற் கூட்டம் முற்றும் நீங்கக் கதிரவன் தனது ஒளி எங்குமாக விளங்குதல், இங்ஙனம் உயிர் வினைகளை ஈட்டியும், நுகர்ந்தும் வருதலால் மூல மலமாகிய ஆணவம் பரிபக்குவத்தையடைய, இருவினையொப்புச் சத்திநிபாதங்களை எய்தி முதல்வன் குருவாகிவந்து தனது அருளால் மும்மலங்களையும் அறுத்து, ஞானத்தை உணர்த்த அதனைக் கேட்டும், சிந்தித்தும், தெளிந்தும் மும்மலங்களும் சுவடும் தோன்றாது நீங்க, உயிர் தனது அறிவு விழைவு செயல்கள் முற்றும் விளங்க, இறைவனையே அறிந்தும், அன்பு செய்தும், அவனது திருவடியின்பத்தில் திளைத்தற்கு உவமை, இது சுத்தாவத்தையாம்.

பொருளில், ''உலகை உண்ணும்'' என்றும், ''வரத்துச் செல்லும்'' என்றும் கூறினமையால், ''பொன் வாள்''—என்னும் உவமை அறிவு மறைதல் வெளிப்படல் அளவிற்கே கூறப்பட்டதாம். உலகும், வரமும் ஆகுபெயர்கள். வரம்—மேன்மை. அது மேனிலையாகிய பரமுத்தியைக் குறித்தது. ''வரன் என்னும் வைப்பு'' [1]—என்றார் திருவள்ளுவரும்.

''தன்மைபோல்'' என்பதனை ''புக்கு'' என்பதனோடும், ''ஒடுங்கி'' என்பதனோடும் கூட்டி, அதற்கேற்ப, 'நிற்கும்' என்னும் சொல்லெச்சம் வருவிக்க.

'மற்று' என்பது வினைமாற்றுப் பொருளில் வந்தது. 'மலத்தை'—என்னும் ஐயுருபு தொகுக்கப்பட்டது.

1. திருக்குறள்—24,

''இரித்து'—என்பதனை. 'இரிக்க' எனத் திரிக்க. 'இரித்தற்கு வினைமுதல் அரன்'—என்பது, மேல், ''மன்னும் அரனே மலம் துரந்து'' - என்றதனால் சொல்லப்பட்டது.

ஆன்மாவை மறைக்கும் மலத்திற்குப் பகலவனை மறைக்கும் முகிற் கூட்டத்தையே இங்கு உவமையாகக் கூறி, மலம் நீங்குதற்கு அது விலகிப்போதலையே எடுத்துக் காட்டினமையால், 'ஆன்மாவிற்கு மலம் நீங்குதலாவது முன்பு மறைத்து நின்ற ஆற்றல் மறைக்கமாட்டாது மடங்குதலே' - என்பதும், 'சுத்தம் எய்திய உயிரை மறையாது விடினும், அதனை எய்தாத உயிர்களை மறைத்து நிற்றலால் மலம் அழிந்திலது' என்பதும் அறியப்படும். ஆகவே, உண்மை விளக்கத்துள், ''இத்தை விளைவித்தல் மலம்''[2] என்றதற்குக் கருத்து, 'மறைத்து நின்ற மலம் மறைக்க மாட்டாது மடங்கி நின்றது என்பதேயாம்.

இது, பலருக்கு ஒருங்கே உண்டி வழங்கி விருந்தோம்புகின்ற மாளிகையின் உள்ளே சிலரைச் செல்ல ஒட்டாது வாயிலில் நின்று தடுத்த ஒருவன் அவர்களைத் தடை செய்யாது விட்டானாயின் அவ்வாறு விடப்பட்டோர் அவன் விட்டதையே தங்கட்கு உண்டி வழங்கியதாகக் கூறுதல் போல்வதாகும்.

இரண்டாம் அதிகரணம் முடிந்தது

நூற்பாவின் தொகைப் பொருள்

முன்னை நூற்பாவிற் கூறியவாறு ஆன்மா இறைவனோடு ஏகனாகி நிற்றலால் ஆணவ மலமும், தன் பணியின்றி எஞ்ஞான்றும் அவன் பணியில் நிற்றலால் மாயை கன்மங்களும் சுவடும் இன்றி நீங்கினமையால், இறைவன் எஞ்ஞான்றும் உயிர்க்குயிராய் நின்று செய்து வரும் உதவியை முன் போல மறத்தல் இன்றி எஞ்ஞான்றும் மறவாது உணர்ந்து நிற்கும்.

இறைவன் உயிர்க்குயிராய் நின்று செய்யும் உதவி, காட்டும் உதவிமட்டுமன்று; காணும் உதவியுமாம். அது கண்ணுக்கு ஆன்மாப் பொருள்களைக் காட்டுதல் மட்டும் ஆகாது; காட்டிய

2. வெண்பா 51.

பின் கண் காணுமிடத்து ஆன்மாவும் உடன் நின்றும் காண்பது போலும்.

பெத்த நிலையில் உயிர்கட்கு இறைவன் உலகப் பொருள் வழியாக நுகர்ச்சியாய் விளைதலால் அது கண் தன்னைக் கண்ணாடிவழியாகக் காணுதல் போல்வதே யாதலின், 'காணும் உதவியை இறைவன் முத்தியில் செய்தல் இயலாது' எனத் தடை நிகழமாட்டாது.

இங்ஙனம் முத்தியிலும் காட்டியும், கண்டும் செய்யும் உதவியை மறவாது உணர்தலால் அவனிடத்தே அதற்கு அன்பு மீதூரும். அவன்மீது அன்பு மீதூர ஊர, அவனது இன்பம் மேலும் மேலும் விளைந்து கொண்டேயிருக்கும். அவ்வின்பத்தில் ஆன்மா அழுந்தித் தன்னையும் மறந்திருக்கும்.

அங்ஙனம் ஆன்மா முதல்வனது திருவடியில் அழுந்தி நிற்கும் நிலை ஆன்மா முன்போல, 'பசு' என வேறு நிற்றலும், 'தான்' என்பது ஒருபொருள் இல்லாது கெட்டு முதல்வனேயாய் விடுதலும் இன்றி, அப்பொடு சேர்ந்த உப்பு வேறு காணப்படாமலும், உவர்ப்புச் சுவையாகிய தன் சிறப்பியல்பு கெடாமலும் ஒன்றுபட்டு நிற்றல் போல்வதாம்.

இந்நிலையிலும் முதல்வன் இன்பத்தைத் தருபவனும், ஆன்மா அதனைப் பெறுவதுமாகிய நிலை வேறுபடாமையாலும், முதல்வன் உடனாய் நிற்பவே நுகர்தலாலும் முதல்வன் ஆண்டானும், உயிர் அடிமையும் ஆம் நிலையில் மாற்றம் இல்லையாகும்.

இந்நிலை, இன்பம் எல்லையின்றிப் பெருகும் நிலையாதலின் இதனினின்றும் உயிர் மீளுதல் இல்லை.

என, இம்மூன்று அதிகரணங்களின் பொருள்களையும் ஒருவாறு தொகுத்து உணர்ந்துகொள்ளலாம்.

பதினொன்றாம் நூற்பா முடிந்தது.

பன்னிரண்டாம் நூற்பா

இனி ஆசிரியர் பன்னிரண்டாம் நூற்பாவைப் பாடமாக ஓதியது வருமாறு ;

செம்மலர் நோன்தாள் சேரல் ஒட்டா
அம்மலம் கழீஇ, அன்பரொடு மரீஇ,
மாலற நேயம் மலிந்தவர் வேடமும்,
ஆலயந் தானும் அரனெனத் தொழுமே.

இனி அவர் சூத்திரத்தைச் சுட்டிக் கருத்துரைத்தது வருமாறு :

என்பது சூத்திரம்.
என் நுதலிற்றோ எனின்,

அசிந்திதனாய் நின்ற பதியைச் சிந்திதனாகக் கண்டு வழிபடுமாறு உணர்த்துதல் நுதலிற்று.

கருத்துரை விளக்கம்

"முன்னை நூற்பாவிற் கூறியவாறு அயரா அன்பின் அரன் கழல் சென்ற வழியும் உயிர்க்கு ஆணவமும், சஞ்சித ஆகாமிய கன்மங்களும் இல்லாவிடினும், பிராரத்த கன்மம் இருத்தலாலும், அஃது உள்ளவரையும் உடம்பும் உளதாம் ஆதலாலும் உடல் இயல்பாகிய பசி, நீர்வேட்கை முதலியன காரணமாக, ஏனையோர்க்குப் போலல்லாது மிகச் சிறுபான்மையாகவேனும் அறிவு விழைவு செயல்கள் உலகின்பாற் செல்லுதல் உளவாமன்றோ? அங்ஙனம் சென்றவிடத்து அவை வழியாக மீட்டும் உலகியல் தொடருமன்றோ?" என நிகழும் ஐயத்திற்கு, "அவ்விடத்தும், அரன் கழலில் சென்றார் அங்கு மனமொழி மெய்களை விட்டு அவன் அறிவாலே உணர்ந்து நின்ற அவனை இங்கு மன மொழி மெய்களோடு கூடி வழிபடுதலைச் செய்வர் ஆகலான். அவரை மீள உலகியல் தொடரமாட்டாது" என விளக்கம் கூறுதல் இந்நூற்பாவின் கருத்து என்பதாம்.

அசிந்திதன் — சிந்திக்கப்படாதவன்; சிந்தைத்கு சிந்தைக்கு அப்பாற்பட்டவன் சிந்திதன் - சிந்திக்கப்படுபவன் ; சிந்தைக்கு அகப்படுபவன்.

'வழிபடுக' என்று மட்டும் கூறின், 'அஃது எங்ஙனம் இயலும்'-என மேலும் ஐயமாம் ஆதலால், வழிபடுமாறே உணர்த்தப்படுகின்றது என்க.

நூற்பாவின் பொருள்

செம்மலர் நோன் தாள் சேரல் ஒட்டா அம்மலம் கழீஇ—(அயரா அன்பின் அரன் கழல் அணைந்தோன்) அவ்விடத்தே நிலைத்திருக்க ஒட்டாது உலகின்பால் செலுத்துவனவாய்ச் சிறிதே உள்ள அந்த மும்மலங்களாகிய அழுக்கினை முதல்வனை மறவாமையாகிய நீரால் கழுவி.

அன்பரோடு மரீஇ—அத்தன்மையுடைய அடியரோடு பொருந்தி.

மால் அற நேயம் மலிந்தவர் வேடமும்—மயக்கம் நீங்கத் திருவேடத்தோடும் விளங்கும் அவரையும்.

ஆலயமும்—சிவாலயத்தில் உள்ள திருவுருவங்களையும்.

அரன் எனத் தொழுமே—'சிவன்' எனக் கண்டு வழிபட்டே வாழ்வான்.

விளக்கம்

''கழீஇ, மரீஇ, தொழும்'' —என்னும் பயனிலைகட்கு எழுவாய் முன்னை நூற்பாவினின்றும் வந்து இயைந்தது. 'கழீஇ''—என்றது குறிப்புருவகம். அதனால் 'மறவாமையாகிய நீரால்' என்பது கொள்ளப்பட்டது.

நோன் தாள்—சுமக்கின்ற திருவடி; வினைத்தொகை. உமாபதி தேவர் இறைவனை, ',எடுத்துச் சுமப்பான்''[1] என்றது காண்க. 'அடியவராகிய சுமையைச் சுமப்பவன்'—என்க.

மலம் கழுவுதல் அறிவாற்றலின் செயல்; அன்பரொடு மருவுதல் விழைவாற்றலின் செயல்; திருவேடம் உடையாரையும்,

---

1' திருவருட் பயன்—65.

திருக்கோயிலினுள் இருக்கும் திருஉருவங்களையும் 'அரன்' எனத் தொழுதல் செயலாற்றலின் செயல், ஆகவே, 'சீவன் முத்தர்க்கு இம் மூன்றாற்றலும் புறத்துக் செல்லினும் பிறவாற்றிற் செல்லாமையால் அவற்றால் அவரை உலகியல் தொடரமாட்டாது— என விளக்கியபடி. வடிவால் வேறு வேறு போலத் தோன்றினும் பொருளால் அறிவு முதலிய மூன்றும் செல்லுமிடம் ஒன்றேயாதலையும் நினைக, வேடமும், ஆலயமும் ஆகுபெயர்கள்.

''தொழும்'' என்னும் செய்யுமென் முற்று இங்கு உயர்திணை ஆண்பாற் படர்க்கையில் வந்தது 'தொழுக' எனக் கட்டளையாகக் கூறாது இங்ஙனம் கூறின்மையால் இது சீவன் முத்தரிடத்து இயல்பாகிய அணைந்தோர் தன்மை கூறியதாயிற்று, அதனைக் கூறவே, 'அந்நிலையில் நின்றார் யாவர்க்கும் அஃதே நெறி என்பது சொல்லாமே அமைந்தது.

இனி இதனை உம்மீற்று ஏவல் முற்றாக வைத்து, தொழுமின், எனப் பொருளுரைத்தலும் பொருந்துவதே. எங்ஙனம் எனின், இவ்வாறொழுகுதல் சீவன் முத்த நிலையைப் பிறழாது காக்கும் காப்பும் ஆகலான்.

இந்நூற்பாவை ஆசிரியர் மூன்றதிகரணங்களாகக் கண்ணழித்துரைத்து, அவற்றுள் இறுதியதிகரணத்தின்பின் புறனடையும் கூறி முடிப்பார்.

முதல் அதிகரணம்

["செம்மலர் நோன்தாள்......கழீஇ"]

முன்னுரை

'சீவன் முத்தர் உடம்பு உள்ள வரையில் செயற்பாலனவற்றுள் முதலாவது, ஒட்டும் பற்றுமாய மலங்களைத் துப்புரவாகக் களைதல், எனக் கூறுவது இவ் அதிகரணம். அதனால் இது துபபுரவதிகரணமாகும்,

மேற்கோள்

ஈண்டு—ஆணவம், மாயை, கான்மியம் என்னும் மலங்களைக் களைக—என்றது.

ஏது

அவைதாம் ஞானத்தை உணர்த்தாது அஞ்ஞானத்தை உணர்த்தும் ஆகலான்.

மேற்கோள் விளக்கம்

நூற்பாவில் "மலம்" என்றது, மும்மலங்களுள் ஒன்றிரண்டையே குறித்தலும் கூடுமாகலின், அது பொருளாகாமைப் பொருட்டு மும்மலங்களையும் இங்கு எடுத்தோதினார்.

இங்கு "மலங்கள்" என்றது உயிரைத் தாக்கமாட்டாது உடலளவாய்க் கழியும் பிராரத்தத்தினையும், அதனால் உயிரை மயக்குதல் செய்யாது பிராரத்துவ விளைவிற்கு வாயிலாம் அளவேயாய் நிற்கும் மாயையையும் இவ் விரண்டும் உயிரைத் தாக்கி அதன் அறிவை வேறுபடுக்கச் செய்வதாகிய தன் செயலைச் செய்யமாட்டாது இவற்றிற்கு ஏதுவாம் அளவிலே நிற்கும் ஆணவத்தையுமேயாம்.

'இவை இவ்வளவின ஆயினும் உயிர் தனது மெய்யுணர்வில் சிறிது மெலிவுற்றவழியும் உயிரைத் தாக்குமாகலின், இவற்றைக்

குறிக்கொண்டு களைதல் வேண்டும்' என ஏதுவிற் கூறினார். எடுத்துக் காட்டினாலும் கூறுவார்.

இங்கு ''மலங்கள்'' என்றது உயிரைத் தங்கமாட்டாது உடலனவாய்க் கழியும் பிராரத்த வினையையும், அதனால் உயிரை மயக்குதல் செய்யாது பிராரத்துவ வினைவிற்கு வாயிலாம் அளவேயாய் நிற்கும் மாயையையும். இவ்விரண்டும் உயிரைத் தாக்கி அதன் அறிவை வேறுபடுக்கச் செய்வதாகிய தன் செயலைச் செய்யமாட்டாது இவற்றிற்கு ஏதுவாம் அளவிலே நிற்கும் ஆணவத் தி தயுமேயாம்.

'இவை இவ்வளவின ஆயினும் உயிர் தனது மெய்யுணர்வில் சிறிது மெலிவுற்ற வழியும் உயிரைத் தாக்குமாகலின் இவற்றைக் குறிக்கொண்டு களைதல் வேண்டும் ஏதுவிற் கூறினார். எடுத்துக் காட்டினாலும் கூறுவார்.

ஏது விளக்கம்

'ஞானம்—மெய்ஞ்ஞானம். எஞ்ஞான்றும் மலங்களின் இயல் பாகலின், அவ்வியல்பு இந்நிலைமையிலும் வேறுபடாது' என்ப தனைத் தெளிவித்து, அவை எஞ்ஞான்றும் குறிக்கொண்டு கலையற்பாலன' என மேற்கோளை வலியுறுத்தினார்.

தோற்றுவாய்

'ஆணவம் முதலிய மும்மலங்களின் செயற்பாடு தோன்று மிடத்து எவ்வாறு தோன்றும்' என்பார்க்கு, 'அவை இவ்வாறு தோன்றும்' - என்பதனை எடுத்துக்காட்டால் கூறுகின்றார்.

வெண்பா

புண்ணிய பாவம் பொருந்தும்இக் கான்மியமும்,
மண்முதல் மாயைகாண் மாயையும்—கண்ணிய
அஞ்ஞானம் காட்டும்இவ் ஆணவமும் இம்மூன்றும்
மெய்ஞ்ஞானிக்(கு) ஆகா; விடு.

இதன் பொருள்

புண்ணிய பாவம் பொருந்தும் இக் கான்மியமும்—நல்வினை (யாய் இன்பம்) ஆகியும், தீவினை (யாய்த் துன்பம்) ஆகியும் வந்து பொருந்துகின்ற இவ் இயல்பினையுடைய கன்ம மலமும்,

மண்முதல் மாயை காண் மாயையும்—நிலம் முதலாக மாயா தத்துவம் ஈறாகக் காணப்படுகின்ற மாயா மலமும்,

கண்ணிய அஞ்ஞானம் காட்டும் இவ் ஆணவமும்—(முன்னெல்லாம் பொருள்களை உள்ளவாறு உணராமல திரிவுபட உணரும்) திரிபுணர்வையே தந்து வந்தமைபோலவே' இன்றும் தர எழும் ஆணவ மலமும். இம் மூன்றும்—ஆகிய இம் மூன்று மலங்களுமே. மெய்ஞ்ஞானிக்கு ஆகா— சிவத்தையே உணர்ந்து நிற்கும் மெய்யுணர்வினனைப் (பண்டு போலவே பொய்யுணர்வினன் ஆக்கிவிடும் ஆகையால்) அவனுக்குச் சிறிதும் ஏலாவாம். ஆகவே) விடு - மெய் யுணர்வைப் பெற்ற நீ அவற்றை முளையிலே களைந்தெறி வாயாக.

விளக்கம்

மும்மலங்களை மேற்கோளிற் கூறிய முறையிற் கூறாது இம் முறையிற்கூறினார். 'அவை இம் முறையில் தோன்றும்' என்பது அறிவித்தற்கு. அம்முறை வருமாறு :

மும் மலங்களுள் கன்ம மலமே முன்னர்த் தலையெடுக்கும். ஏனெனில், உடம்பு இருத்தலால், அதற்குக் காரணமாய் அதனோடு ஒட்டியிருப்பது கன்ம மலமே. அஃதாவது பிரார்த்த கன்மமாம். அது மேற்கூறியவாறு இன்பத்தைத் தருவதாயும், துன்பத்தைத் தருவதாயும் இருவகையில் முன்னர்த் தோன்றி, அவ்வின்பத் துன்பங்களில் விருப்பு வெறுப்புக்களைத் தோற்று விக்கும்.

அவ் விருப்பு வெறுப்புக் காரணமாக இன்பத் துன்பப் பொருள் களை வேறுபடுத்தி உணரும் பழைய உணர்வை மாயா மலம் தோற்றுவிக்கும்.

பின்னர் அவை பற்றி, யான், எனது என்னும் செருக்கை ஆணவ மலம் தோற்றுவிக்கும். அச் செருக்கே வினைக்குக் காரணம் ஆகலின், விருப்பு வெறுப்பின்வழி நிகழும் முயற்சிகள் ஆகாமியமாய்ப் பிறப்பிற்கு வித்தாகிவிடும் என்க.

'இவைகளை முளையிலே களையுமாறு எங்ஙனம்' எனின்,

பிராரத்த கன்மம் இன்பத் துன்பங்களாய்த் தோன்றும் பொழுதே 'இவை சிவன் கூட்டுவிக்க வருகின்றன அன்றித் தாமாக வருவன அல்ல'' — என மெய்யுணர்வால் உணர்ந்து, அவைகளில் விருப்பு - வெறுப்புக் கொள்ளாது நடுவு நிலையில் நிற்றல் வேண்டும். அவ்வாறு நிற்கவே அவ்வின்பத் துன்பங்கள் உயிர்க்கு நுகர்ச்சியாகாது உடலூழாய்க் கழியும். அங்ஙனம் கழியச் செய்தலே சீவன் முத்தன் கன்ம மலத்தைக் களைதலாம்.

பிராரத்தத்தின் பயன்கள் உயிருக்கு நுகர்ச்சியாகாமையின், அப்பயனுக்குப் பற்றுக் கோடாய் உள்ள பொருள்கள் உயிரின் அறிவிற்குப் பொருளாய்த் தோன்றா. அங்ஙனம் அவை தோன்றாது ஒழியச் செய்தலே சீவன் முத்தன் மாயா மலத்தைக் களைதலாம்.

பிராரத்துவ விளைவிற்குப் பற்றுக் கோடாய் உள்ள பொருள்கள் பொருளாய்த் தோன்றாது ஒழியவே, அவை பற்றியும் அவற்றைப் பெறவும், ஒழியவும் செய்யும் முயற்சிகளிலும் 'யான், எனது' என்னும் செருக்கு எழமாட்டாது. அச்செருக்கை எழாதபடி செய்தலே சீவன் முத்தன் ஆணவ மலத்தைக் களைதலாம்

இங்ஙனம் மும்மலங்களையும் களைதல் இவ்வாறு என்பது உணர்க.

''மும்மலங்களையும் அவை தோன்றும் பொழுதே விரைந்து களைதல்வேண்டும். இல்லையேல் பின்பு ''களையுநர் கைகொல்லும் காழ்த்த விடத்து''[1] என்றது போலக் களையப் புகுவாரை அவை களைந்துவிடும்—என வலியுறுத்தற்கு இங்கும், ''விடு''— எனக் கூறினார்.

1. திருக்குறள்—879.

"புண்ணிய பாவம்" என்னும் உம்மைத் தொகைப் பெயர் ஆகுபெயராய், அவற்றால் விளையும் பயன்களைக் குறித்தது. அதன்பின் 'ஆய்' என்னும் ஆக்கச் சொல் வருவிக்க.

'கன்மம்' என்பது மூலகன்மத்தைக் குறிக்க, அக்கன்மத்தின் காரியம் "கான்மியம்'—என்றாயிற்று. இஃது இங்கு ஏற்புழிக் கோடலால், பிராரத்த கன்மத்தையே குறித்தது. இனிக் 'காமியம்' எனப் பாடம் ஓதி, 'ஆகாமியம்' என்பது முதற்குறை யாய் வந்ததாகவும் உரைப்பர்.

"மாயை"—இரண்டனுள் முன்னது, வித்தியா தத்துவங்களில் தோற்ற முறையில் முதலாவதாகிய மாயா தத்துவத்தையும், பின்னது மாயையின் காரியமாகிய அனைத்துப் பொருள்களையும் குறித்து வந்தன. முன்னின்ற "மாயை" என்பதன் பின், 'ஈறாக' என்னும் சொல்லெச்சம் வருவிக்க. காண் மாயை, செயல்படு பொருட்டாகிய வினைத் தொகை. இம் மாயை கருவி யாகுபெயர்.

"இக்கான்மியம், இவ்வாணவம்" என்னும் சுட்டுக்கள், 'இத் தன்மையை உடைய' எனப் பொருள் தந்தன.

'மாயை கன்மங்கள் அஞ்ஞானத்தைக் காட்டுதல் ஆணவச் சார்பானே' என்பது தோன்ற, இதனுள் ஆணவத்தையே அஞ்ஞானம் காட்டுவதாகக் கூறினார்.

உம்மை எண் ஈற்றில் கட்டாயமாகத் தொகை பெறுதல் வேண்டா வாயினும், "இம் மூன்றும்" எனத் தொகை கொடுத் தார், 'அவற்றுள் ஒன்றனையும் விடாது அனைத்தையும் முற்றக் களைதல் வேண்டும்' எனவும், 'ஒன்றையேனும், சிறிதள வாயினும் களையாது விடில்,

"வினைபகை என்றிரண்டின் எச்சம் நினையுங்கால்
தீயெச்சம் போலத் தெறும்" [1]

என்றவாறு, அவை பின்னர்ப் பெருக வளர்ந்து, பெருங்கேட்டை விளைக்கும்'—என வலியுறுத்தற்கு.

முதல் அதிகரணம் முடிந்தது.

---

1. திருக்குறள்—674.

இரண்டாம் அதிகரணம்

[''அன்பரோடு மரீஇ'']

முன்னுரை

'மும்மலங்களின் தலையெடுப்பையும் நிகழ ஒட்டாது மேற் கூறியவாறு தடுத்து நிற்பார்க்கு அச்செயலில் எஞ்ஞான்றும் சலிப் பின்றி நிற்றற்கு உறுதுணையாவது அன்பர் இணக்கமே'' என்பதை வலியுறுத்துவது இவ்வதிகரணம். அதனால் இது. அன்பர் இணக்க அதிகரணம் ஆகும்.

மேற்கோள்

இனிச் - சிவபத்தரோடு இணங்குக - என்றது.

ஏது

அல்லாதார் அஞ்ஞானத்தை உணர்த்துவர் ஆகலான்.

மேற்கோள் விளக்கம்

''சான்றோர் சான்றோர் பாலர்ஆப;
சாலார் சாலார் பாலர்ஆ குபவே''[1]

என்ப ஆகலின் இங்கு, ''சிவபத்தர்'' என்றது, மேற்கூறிய, அயரா அன்பின் அரன் கழலில் சென்று அங்கு நிலைத்து நின்று, அந்நிலை யைப் பெயர்த்து எழும் மும்மலங்களையும் களைந்து நிற்பாரையேயாம்.

சீவன் முத்தராயினார் சீவன் முத்தரோடே இணங்குதல் மேற்கூறியவாற்றால் சொல்ல வேண்டாமையின், இங்கு, ''சிவ பத்தரோடு இணங்குக'' என்ற நேர்ச்சிக் கட்டளை. 'சிவபத்தர் அல்லாதாரோடு இணங்கற்க' என்னும் விலக்கின் மேலதேயாம். இதனைப் பின்வந்த ஏதுப் பற்றியும் உணரலாம்

---

1. புறநானூறு—218

ஏது விளக்கம்

''ஞானியர் ஆயினார்க்குச் சிலரிடத்தில் விருப்பும், சிலரிடத்தில் வெறுப்பும் கொள்ளுதல் தகாது ஆதலின், 'சிவபத்தரோடு இணங்குக' என்றும். அல்லாதாரோடு இணங்கற்க' எனவும் கட்டளை கூறுதல் பொருந்தாது'' என்னும் தடைக்கு விடையாகவே ஏதுக் கூறினார்.

'ஞானியர் விருப்பு வெறுப்பு இல்லாதவர்' என்பதற்குப் பொருள், 'உலகியல் பற்றி வரும் விருப்பு வெறுப்பு இல்லாதவர்' - என்பதே யன்றி 'ஞானம் பற்றி வரும் விருப்பு வெறுப்பு இல்லாதவர்' என்பதன்று. இது பற்றியே,

''ஒன்னார்த் தெறலும், உவந்தாரை ஆக்கலும்
எண்ணின் தவத்தால் வரும்'' [1]

என, தவம் செய்வார்க்கு ஒன்னாரும், உவந்தாரும் உளராதல் கூறப்பட்டது—என்பார், ''அல்லாதார் அஞ்ஞானத்தை உணர்த்துவர் ஆகலான்'' என்றார்.

அல்லாதார் அஞ்ஞானத்தை உணர்த்துமாற்றை.

''தெய்வம் என்பதோர் சித்தம்உண் டாகி,
முனிவி லாததோர் பொருளது கருதலும்
....
ஆத்த மானார் அயலவர் கூடி
நாத்திகம் பேசி நாத்தழும் பேறினர்;
சுற்றம் என்னும் தொல்பசுக் குழாங்கள்
பற்றி யழைத்துப் பதறினர் பெருகவும்,
விரத மேபர மாகவே தியரும்
சரத மாகவே சாத்திரங் காட்டினர்;
சமய வாதிகள் தத்தம் மதங்களே
அமைவ தாக அரற்றி மலைந்தனர்;
மிண்டிய மாயா வாத மென்னும்
சண்ட மாருதம் சுழித்து அடித்து ஆர்த்து
உலோகா யதன்எனும் ஒண்திறற் பாம்பின்

1. திருக்குறள்—264.

கலாபே தத்த கடுவிடம் எய்தி
அதிற்பெரு மாயை எனைப்பல சூழவும்'' 1

என்பன முதலிய திருமொழிகளால் உணர்க.

'மும்மலங்கள் அஞ்ஞானத்தை உணர்த்துதல் சீவன் முத்தர் சிறிது சோர்வடைந்த பொழுதேயாம். சீவன்முத்தர் அல்லாதார் சீவன் முத்தரை அவர் நிலையில் சோர்வடையச் செய்து அஞ்ஞானத்தைப் பலவாற்றான் உணர்த்துவர் ஆகலான், அவரை மும்மலங்களினும் மிக அஞ்சி, அவரோடு இணங்குதலை ஒழிக' என்பது கருத்து.

தோற்றுவாய்

'அஞ்ஞானத்தை உணர்த்துதல் பற்றிச் சிவபத்தர் அல்லாதாரோடு இணங்குதலைத் தவிர்த்தல் வேண்டுவதே; அதனோடு சிவபத்தரோடு இணங்குதல் வேண்டப்படுவது எற்றுக்கு'— என்னும் ஐயத்தினை எடுத்துக்காட்டால் நீக்குகின்றார்,

வெண்பா

மறப்பித்துத் தம்மை மலங்களின் வீழ்க்கும்
சிறப்பில்லார் தம்திறத்துச் சேர்வை - அறப்பித்துப்
பத்தர் இனத்தாய்ப் பரன்உணர்வி னால்உணரும்
மெய்த்தவரை மேவா வினை.

இதன் பொருள்

தம்மை—சீவன் முத்தரை. மறப்பித்து - அவர் சிவனது உதவியை மறவாது நினையும் நிலையை மாற்றி மறக்கச் செய்து, மலங்களின் வீழ்க்கும் சிறப்பில்லார் தம் திறத்துச் சேர்வை அற - (அம் மறதியானே, முன்னை யதிகரணத்தில் நீங்குவனவாகச் சொல்லப்பட்ட) மும்மலங்களாகிய படுகுழியில் வீழ்த்துபவராகிய நன்றியுணர்வு இல்லாதாரது பகுதிகளிலே தொன்று தொட்டுப்

1. திருவாசகம் –போற்றித் திரு அகவல்—42 - 58.

பழகி வந்த பழக்கம் நீங்குதற் பொருட்டு. பத்தர் இனத்துப் பித்தாய்—சிவ பத்தர் கூட்டத்தின்மேல் பேரன்பு 'உடையராய் (அக்கூட்டத்தில் சேர்ந்து, அவரால் வலுப் பெறுகின்ற) பரன் உணர்வினால் உணரும் மெய்த் தவரை—சிவஞானங் கண்ணாகப் பொருள்களை உணர்கின்ற உண்மைத் தவம் உடையவரையே. வினை மேவா - முன்னை யதிகரணத்திற் சொல்லியவாறு முதற்கண் தோன்றுவனவாகிய பிராரத்த வினைகள் வந்து பற்றமாட்டா.

விளக்கம்

'பிராரத்தம் பற்றாது ஒழியின் ஏனை மாயை ஆணவங்களும் தோன்ற மாட்டா? என்பது, முன்னையதிகரணத்திற் கூறியவாறு பற்றி அறியப்படும்.

இவ்வெண்பாவினுள், ''மறப்பித்து......... சிறப்பில்லார்', என ஏதுவிற் கூறியதனையே பெயர்த்துரைத்தார். அதன் எதிர் மறையால் சிவபத்தரது சிறப்பு விளங்குதற் பொருட்டு.

அச் சிறப்பாவது, மறவாமையை நிலைபெறுத்தி, மலங்க ளாகிய படுகுழியினின்றும் கரையேற்றுதலாம்.

நற்பண்புகள் பலவற்றுள்ளும் சிறந்தது நன்றியுணர்வு ஆதல் பற்றி அதனை, ''சிறப்பு'' என்றார்.

'பார்வை' என்பது போல, ''சேர்வை'' என்பது வகா ஐகார ஈற்றுத் தொழிற் பெயர். பரன் உணர்வு - இறையுணர்வு; சிவ ஞானம். எதனையும் சிவஞானத்தால் உணர்தலே உண்மைத் தவம் ஆகலின் அவ்வாறு உணர்பவரை ''மெய்த்தவர்'' என்றார்.

''வினை'' என்றது பிராரத்த வினையேயாதல், முன்னை யதி கரணத்தால் விளங்கும். ''வினை'' என்னும் அஃறிணை இயற் பெயர் இங்குப் பன்மையாய் நின்றது.

முதற்கண் தோன்றுவதாய பிராரத்தம் தோன்றாது ஒழியின் ஏனை மாயையும், ஆணவமும் தோன்றுதல் இல்லையாகலின், அவைகளைக் குறியாது, ''வினை மேவா'' என்று அளவே கூறினார்.

"சிறப்பில்லார் தம் திறத்துச் சேர்வை அற" எனவும், "வினை மேவா" எனவும் கூறினமையால், "சிவபத்தரோடு இணங்குதலே அல்லாதார் இணக்கம் நீங்குதற்கும், சீவன் முத்தர் தாம் எய்த விரும்பும் பயனை எய்துதற்கும் வழியாம். [ஆதலின் 'அவ் இணக்கம் கட்டாயமாக வேண்டப்படும்' எனக் கூறி மேல் எழுந்த ஐயத்தை நீக்கியவாறு அறிக.

"உறவாவார் உருத்திரபல் கணத்தார் தாமே"[1]

"அடியேன் உன் அடியார் நடுவுள் இருக்கும்
அருளைப் புரியாய்பொன் னம்பலத்தெம்
முடியா முதலே என் கருத்து
முடியும் வண்ணம் முன்னின்றே"[2]

"யாவர்கோன் என்னையும்வந் தாண்டு கொண்டான்;
யாம்ஆர்க்கும் குடியல்லோம்; யாதும் அஞ்சோம்;
மேவினோம் அவன்அடியார் அடியா ரோடும்;
மேன்மேலும் குடைந்தாடி ஆடு வோமே"[2]

என்றாற் போலும் திருமொழிகளும் அன்பர் கூட்டத்தை அடைந் திருத்தலையே சிறந்த பேறாகக் கூறுதல் அறியற் பாலது.

இரண்டாம் அதிகரணம் முடிந்தது.

---

1. திருமுறை — 6. 98. 4.
2. திருவாசகம் — கோயில் மூத்த திருப்பதிகம் - 1, திருச்சதகம் 30.

மூன்றாம் அதிகரணம்

[''மாலறநேயம்...........அரன்எனத் தொழும்'']

முன்னுரை

'முன்னை அதிகரணத்திற் கூறியவாறு அன்பரொடு மரீஇயினார் பின்பு அவரோடும் கூடிச் செயற்பாலது அடியவரையும், ஆலயங்களில் உள்ள திருவுருவங்களையும் அரனாகவே கண்டு வழிபடுதல் என்பதனை உணர்த்துவது இவ்வதிகரணம். அதனால் இது வழிபாட்டதிகரணம் ஆகும்.

மேற்கோள்

இனிப் - பத்தரது திருவேடத்தையும், சிவாலயத்தையும் 'பரமேசுரன்' எனக் கண்டு வழிபடுக என்றது.

ஏது

அவன், மற்றிவ்விடங்களில் பிரகாசமாய் நின்றே, அல்லாத இடத்து அப்பிரகாசமாய் நிற்றலான்.

மேற்கோள் விளக்கம்

திருவேடத்தின் இயல்பினை,

''தூயவெண்ணீறு துதைந்தபொன் மேனியும், தாழ்வடமும்
நாயகன் சேவடி தைவரும் சிந்தையும் நைந்துருகிப்
பாய்வது போல் அன்பு நீர்பொழி கண்ணும் பதிகச்செஞ்சொல்
மேய செவ்வாயும் உடையார் புகுந்தனர் வீதியுள்ளே''

''சிந்தையிடை யறாஅன்பும், திருமேனி தனில்அசைவும்,
கந்தைமிகை யாம்கருத்தும் கைஉழவா ரப்படையும்,
வந்திழிகண் ணீர்மழையும், வடிவிற்பொலி திருநீறும்
அந்தமிலாத் திருவேடத்து அரசும்எதிர் பந்தணைய''[1]

---

1. பெரிய புராணம் - திருநாவுக்கரசர் - 140; திருஞான. 270

''கண்டகவு ணியக்கன்றும் கருத்திற்பரவும் மெய்க்காதல்
தொண்டர்திரு வேடம்நேரே தோன்றிய தென்று
தொழுதே''[1]

என்பவற்றால் அறிக.

திருவேடம், கணிகையரது கோலம் காமுகரை அவர் கண்ட அளவிலே கவர்தல் போலச் சிவபத்தி யுடையாரை அவர் கண்ட அளவிலே கவர்தல் பற்றி, 'பத்தரை' என்னாது, ''பத்தரது திரு வேடத்தை'' என அதனையே எடுத்தோதினார். எனினும் சிவனே யாகக் காணப்படுவார் பத்தரே என்க.

திருவேடம் அத்தன்மைத் தாதலை,

''சேலும், கயலும் திளைக்குங் கண்ணாரிளங்
கொங்கையிற் செங்குங்குமம்
போலும் பொடியணி மார்பிலங் கும் என்று
புண்ணியர் போற்றிசைப்ப''[2]

என்பதனான் அறிக.

''சிவாலயம்'' - என்றதும் அதனுள் இருக்கும் திருவுருவங் களையே.

காண்டல் - வேற்றுமை சிறிதும் பாராட்டாது பரமேசுர னாகவே தெளிதல்.

''எவரேனும் தாமாக இலாடத் திட்ட
திருநீறும், சாதனமும் கண்டால் உள்கி,
உவராதே அவரவரைக் கண்ட போதே
உகந்தடிமைத் திறம் நினைந்தங்கு உவந்து நோக்கி,
'இவர்தேவர் அவர்தேவர்' என்று சொல்லி
இரண்டாட்டா(து) ஒழிந்(து) ஈசன் திறமேபேணிக்
கவாரதே தொழும் அடியார் நெஞ்சி னுள்ளே
கன்றாப்பூர் நடுதறியைக் காண லாமே''[3]

என அருளிச் செய்தமை காண்க.

---

1. பெரிய புராணம் திருஞான சம்பந்தர் - 371.
2. திருப்பல்லாண்டு - 8
3. திருமுறை—6, 61, 3

ஏது விளக்கம்

'சிவஞானியர் எப்பொருளையும் - இது, அது - என்னும் பகுப்பின்றிப் பரமேசுரனாகக் காண்டலே இயல்பாகலானும், வேதத்துள் திருவுருத்திரமும், திருமுறைகளுள் நின்ற திருத்தாண்டகம் போன்றனவும் அங்ஙனம் காணும் காட்சியையே வெளியிடுவனவாகலானும் அந்நிலைமையை விடுத்து, - திருவேடம், சிவலாயம் இவற்றையே பரமேசுரன் எனக் கண்டு வழிபடுக - என வரை செய்து ஏவுதல் முறையாகாது' - எனத் தடை நிகழ்த்துவோரது தடையை விடுத்தற்கே ஏதுக் கூறினார்.

மற்று, அசை நிலை, பிரகாசமாய் நிற்றல், தயிரில் நெய்போல விளங்கி நிற்றல். அப்பிரகாசமாய் நிற்றல், பாலில் நெய்போல விளங்காது நிற்றல். 'ஏனையிடங்களில் நிற்றல் போல இவ்விடத்தில் மறைந்து நில்லாது விளங்கியே நிற்பான்' என்பது பட வந்தமையின், ''நின்றே'' என்னும் ஏகாரம் தேற்றப் பொருட்டு. அதனால், 'சிவஞானியர் எப்பொருளைக்} காணினும் அப்பொருளைச் சிவமாகவே காணினும், வழிபடுதலை இவ்விடங்களில் மட்டுமே செய்வர்' என்றவாறு.

'திருவுருத்திரமும், நின்ற திருத்தாண்டகம் முதலியனவும் எப்பொருளையும் பரமேசுரனாகக் காண்டலையே விளக்கி நின்றன அல்லது வழிபடுதலை எய்துவிக்கவில்லை என்பது கருத்து.

தோற்றுவாய்

''திருவேடத்தில் பரமேசுரன் தயிரில் நெய்போல விளங்கி நிற்றல் எங்ஙனம்'' என அவாய் நிற்றலின், அவ் அவாய் நிலையை ஓர் எடுத்துக்காட்டால் நிரப்புகின்றார்.

வெண்பா—1

தன்உணர வேண்டித் தனதுருவைத் தான்கொடுத்துத்
தன்உணரத் தன்னுள் இருத்தலால், — தன்உணரும்
நேசத்தார் தம்பால் நிகழும் ததிநெய்போல்;
பாசத்தார்க் கின்றாம் பதி.

இதன் பொருள்

பதி - (உயிர்களால் உணர வாராதவனாகிய) இறைவன். தன் உணர வேண்டி - தன்னை அவை உணரச் செய்தலை விரும்பி. தனது உருவை தான் (நேசர்க்கு) கொடுத்து - திருநீறு, கண்டிகை முதலிய தனது திருக்கோலத்தைத் தான் தன் அன்பர்க்கு வழங்கி. தன் உணர - அவர் தன்னை மறவாது நினைத்தலால், தன்னுள் இருத்தலால் - அந்நினைப்பின் வழியாக அவரைத் தனது பெருநிறைவினுள் அடக்கிக் கொள்ளுதலால். நேசத்தார் பால்-அவ் அன்பரிடத்து. தயிர் நெய் போல் நிகழும் - தயிரில் நெய்போல விளங்கி நிற்பான். பாசத்தார்க்கு இன்று ஆம் - அன்பில்லாத ஏனைப் பாசப்பற்றுடையாரிடத்தில் அவ்வாறு விளங்குதல் இன்றிப் பாலில் நெய்போல் விளங்காது நிற்பன்.

விளக்கம்

''தன் உணர வேண்டி'' - என்றதனால், 'இறைவன் இயல்பிலே உயிர்களால் உணரப்படாது இருப்பவன்' என்பதும், 'ஆயினும் உயிர்கள் தன்னை உணர்ந்தே உய்தல் வேண்டும் ஆதலின், அது பற்றி அவன் தன்னை அவை உணருமாற்றால் விளங்குகின்றான்' என்பதும் பெறப்பட்டன. கருத்துரையுள,

''அசிந்திதனாய் நின்ற பதியைச்
சிந்தித்தனாகக் கண்டு வழிபடுமாறு''

என உரைத்ததை நோக்குக.

''தன் உணர'' என்றதில் ''உணர'' என்றது 'சிவோகம் பாவனையால் உணர' - என்றதாம். அப் பாவனையாலும், அது வழியாகச் சிவன் அவரைத் தன்னுள் அடங்கியிருக்கச் செய்தலாலும் அவர் பரமேசுவரனே யாதல் விளக்கப்பட்டது.

''பராவு சிவர்'' [1] என்றார் வழிநூலாசிரியர்.
''நடமாடக் கோயில் நம்பர்'' [2] என்பது திருமந்திரம்.

---

1. சிவஞான சித்தியர்—சுபக்கம். 8-ம் சூத்திரம் - 35.
2. மந்திரம்—1857.

தோற்றுவாய்

'பத்தரிடத்துப் பரமேசுவரன் மேற்கூறியவாற்றால்— தயிரில் நெய் போல விளங்கி நிற்பன்—என்றல் பொருந்தும்; சிவாலயங் களில் உள்ள திருவுருவங்களில் மேற்கூறிய தன்மைகள் இன்மை யால் அவைகளில் பரமேசுரன் தயிரின் நெய்போல விளக்கி நிற்றல் அவைகளில் மந்திரங்களைப் பதிக்கும் பொழுதன்றி, ஏனைக் காலங்களில் இல்லையன்றோ'' என எழும் ஐயத்தை மற்றோர் எடுத்துக்காட்டால் நீக்குகின்றார்.

வெண்பா— 2

கண்டதொரு மந்திரத்தால் காட்டத்தில் அங்குவே(று)
உண்டல்போல் நின்(று) அங்(கு) உளதாமால்;-கண்டஉருத்
தான்அதுவாய் அன்றானான் தான்அதுவாய்த் தோன்றானோ
தான்அதுவாக் காணும் தவர்க்கு.

இதன் பொருள்

கண்ட உரு தான் அதுவாய் அன்று ஆனான் - திருக்கோயிலில் உள்ள திருஉருவத்திலும் (மற்றைப் பொருள்களிற்போல்) கலப் பினால் அதுவேயாயினும், பொருள் தன்மையால் அதனின் வேறாகின்ற இறைவன். கண்டது ஒரு மந்திரத்தால்—(அனைத்துப் பொருளையும் சிவமாகக் காணமாட்டாத) கிரியை யாளர்க்கு அவர் அறிந்த ஒரு மந்திரத்தின் வழியாகவே, காட்டத்தில் அங்கி வேறு உண்டல் போல் நின்று அங்கு உளது ஆம் - கடைந்த பொழுதே வெளிப்பட்டுத் தோன்றி, (அல்லாத பொழுது தோன்றாத) விறகில் தீப்போல, மந்திரம் இல்லாதபொழுது விளங்காது நின்று, மந்திரம் உள்ளபொழுது அவ்வுருவில் தயிரில் நெய்போல விளங்கித் தோன்றும் பொருளாவான். தான் அதுவா காணும் தவர்க்கு—அனைத்துப் பொருளையும் சிவமாகக் காணும் வகையில், திருக்கோயிலில் உள்ள திருவுருவத்தையும் சிவமாகவே காணும் ஞானியர்க்கு (அவ்வாறன்றி), தான் அது வாய்த் தோன்றானோ—தான் அவ்வுருவிலே தயிரில் நெய்போல் விளங்கி நில்லானோ! (நிற்கவே செய்வான்.)

விளக்கம்

''உளது, அன்று'' என்பன, 'அவ்வத் தன்மையை உடைய பொருள்கள்' என்றவாறு. 'உண்டாதல்' என்பது, ''உண்டல்'' எனக் குறைந்து நின்றது. ஆல், அசை.

'ஞானியர்க்குத் திருவுருவத்திலும் விளங்கியே நிற்பான்' என்பதனை வலியுறுத்தற்கு, 'தோன்றுவான்' என உடன்பாட்டாற் கூறாது, ''தோன்றானோ''—என இரண்டு எதிர் மறையாற் கூறினார்.

''திருவுருவத்தைப் 'பரமேசுவரன்' எனவே கண்டு வழிபடுக''-என இங்கு ஏவியது ஞானியரை நோக்கியேயன்றி, ஏனையோரை நோக்கியன்று ஆகலின், இங்கு மேற்கூறிய தடை எழ வழியில்லை-என்றபடி.

''தான் அதுவாய் விளங்கித் தோன்றுதல் தான் அதுவாக் காணும் தவர்க்கு''—என்றமையால்' 'விறகில் தீப்போல விளங்காது நிற்றல் அங்ஙனம் காணமாட்டார்தார்க்கு'' என்பது போந்தது.

'காணப்படும் பொருள் ஒன்றாயினும் அதனைக் காண்பாரது காட்சி வேறுபாட்டால் அதன்கண் விளங்கும் இறைவனது விளக்கம் வேறுபடும்' என்பது கருத்து. இதனை வழிநூல்,

''திருக் கோயிலுள்ளிருக்கும் திருமேனி தன்னைச்
'சிவன்'எனவே கண்டவர்க்குச் சிவன் உறைவன் அங்கே;
'உருக்கோலி மந்திரத்தால்' எனநினையும் அவர்க்கும்,
'உளன்எங்கும் இலன்இங்கும் உளன்'என்பார்க்கும்
விருப்பாய வடிவாகி இந்தனத்தின் எரிபோல்
மந்திரத்தின் வந்துதித்து, மிகும்சுரபிக் கெங்கும்
உருக்காண ஒண்ணாத பால்முலைப்பால் விம்மி
ஒழுகுவது போல்வெளிப்பட் டருளுவன்அன்பர்க்கே'' 1

என இனிது விளக்கிற்று.

இலிங்கத் திருமேனியை நோக்கி,

''இதுவோ எமை ஆளுமாறு ஈவதொன் றெமக்கில்லையேல்,
அதுவோ உனது இன்னருள் ஆவடு துறைஅரனே''2

என்ற உடன் உலவரக்கிழி அருளினமை,

1. சிவஞான சித்தியார்—சுபக்கம் - சூ - 12, 4.
2. திருமுறை—3.4.

"குழை விரவு வடி காதா! கோயில் உளாயே"[1]

என வினவிய பொழுது, "உளோம்! போகீர்" என விடையிறுத்தமை முதலிய அனுபவங்களை இங்கு நினைக.

"தான் அதுவாய் அன்று ஆனான்" என்றதனால், விளங்கி நிற்றற்கு இயைபு நினைப்பிக்கப்பட்டது. 'தான் அது வாயினும்' என இழிவு சிறப்பும்மை விரிக்க.

மூன்றாம் அதிகரணம் முடிந்தது.

நான்காம் அதிகரணம்

[முன்னை யதிகரணங்களின் ஒழிபு]

முன்னுரை

"செம்மலர் நோன்தாள் சேரல் ஒட்டா அம்மலங்களைக் கழுவுதல் முதலிய மூன்றும் சிவன் முத்தரிடத்து இயல்பாகவே நிகழ்வானவாய் இருக்க, அவற்றை, எய்தாதது எய்துவிக்கும் முறையில் முன்னை யதிகரணங்களில்,—களைக, இணங்குக, வழிபடுக—என இவ்வாறு கட்டளையாகக் கூறியது பொருந்தாது போலும்" என எழும் ஐயத்தை அவ்வதிகரணங்களின் ஒழிபாகக் கொண்டு நீக்குவது இவ்வதிகரணம். அதனால் இஃது ஒழிபதிகரணமாகும்.

மேற்கோள்

இனி, - இவ்விடங்களின் வழிபடுக - என்றது,

ஏது

நரம்பு, நாடி முதலியவற்றைத் தான் அது அதுவாய் வரும் புருடன் அவை யாகாவாறு அப்புருடனும் ஆகலான்.

---

1. திருமுறை—7. 89, 1.

மேற்கோள் விளக்கம்

மேற் போந்த மூன்று அதிகரணங்களுள் அணிமைக்கண் நின்ற மூன்றாம் அதிகரணத்துள், 'சிவ பத்தர்களும், ஆலயத்தில் உள்ள திருவுருவங்களும் ஆகிய இவ்விடங்களில் வழிபடுக' எனக் கட்டளையாகக் கூறியது ஏன் எனில்' - என அவ் ஐயத்தினை வழி மொழிந்தபடி.

ஏது விளக்கம்

மேற்கோட் பொருளை வலியுறுத்துதற்கு ஏதுவை ஒட்டணி யாக வைத்து உவமையையே கூறினார். அதனால், 'நரம்பு நாடி முதலிய உடல் உறுப்புக்களில் வேற்றுமை யின்றிக் கலந்து நிற்கின்ற கலப்பினை நோக்கி அவ்வுறுப்புக்களாகவே எண்ணப்படு கின்ற உயிர், அதனது தனித் தன்மையை நோக்குமிடத்து அவை யாகாது அவற்றின் வேறாதல் போல, சிவ பத்தர்களிடத்தும், சிவாலயத்தில் உள்ள திருவுருவங்களிலும் ஏனை எல்லாப் பொருள்களிலும் போல இறைவன் இரண்டறக் கலந்து நிற்கின்ற கலப்பினை உணரும் பொழுது சிவனாகவே கண்டு வழிபடுதல் உளதாமாயினும், அவனது தனித் தன்மை பற்றி அவன் அவற்றின் வேறாதலை உணருமிடத்து வழிபடுதல் நிகழாது ஆதலின், ஏனையிடங்களிற்போல அவன் வேறாதலை இவ் விடங்களில் உணராது, ஒன்றாதலையே உணர்ந்து கட்டாயமாக வழிபடல் வேண்டும்'' எனும் பொருள் (உபமேயம்) தோன்றிற்று.

'இவ்விடங்களை' என ஒற்றுமையாகக் கூறாது, ''இவ்விடங் களில்'' என வேற்றுமையாகக் கூறியது, 'வேற்றுமை உணர்வு தோன்றியவழி வழிபாடு நிகழாது' என்பதனைக் குறித்தற்கே யாம்.

''முதலானவற்றை''—என்னும் இரண்டாம் உருபை, ''முதலானவற்றின்கண்' என ஏழாம் உருபாகத் திரித் துக்கொள்க. ''அது அதுவாய்'' என ஓதாது, 'அதுவாய்' என ஓதுவது பாடம் ஆகாமையறிக புருடன்—உயிர். ''ஆகா ஆறு'' என்பதில் ஆறு, உவம உருபு அவ்வுருபு பெயர்த் தன்மை எய்தி நிற்றலால் ''ஆகா'' என்னும் ஈறுகெட்ட எதிர்மறைப் பெயரெச் சத்திற்கு முடிபாயிற்று.

இவ் ஏதுவால், 'கட்டளைகட்குப் பயன் எய்தாதனை எய்துவித்தல் மட்டுமன்று; 'எய்தியது இகந்துபடாமற் காத்தல்,

'எய்தியதனை ஒரு மருங்கு மறுத்தல்' - என்பனவுமாகும்' அவற்றுள் இங்குக் கூறிய கட்டளை எய்தியது இகந்து படாமல் காத்ததாம்' என்பது கூறப்பட்டது.

''ஈதல் இசைபட வாழ்தல்''[1] என்றாற் போல்வன எய்தாதது எய்துவிக்கும் கட்டளைகள்.

''பரியினும் ஆகாவாம் பாலல்ல''[2] என முன்னர்க் கூறிப் பின்னர்,

' ஊழையும் உப்பக்கம் காண்பர்''[3] எனக் கூறுமிடத்து வாளா, ''உஞற்றுபவர்'' எனக் கூறிப் போகாமல், ''உலைவின்றி''எனவும், ''தாழாது'' என அடை புணர்த்துக் கூறினாற்போல்வன எய்தியது இகந்து படாமைக் காக்கும் கட்டளைகளாம்.

''அறிவினான் ஆகுவ துண்டோ, பிறதின்நோய்
தன்னோய்போல் போற்றாக் கடை'' [4]

என முன்னர்க் கூறிப் பின்னர்.

''ஆவிற்கு நீர்என்று இரப்பினும் நாவிற்கு
இரவின் இளிவந்த தில்'' [5]

என்றாற்போல்வன எய்தியது ஒருமருங்கு மறுக்கும் கட்டளைகளாம்.

மூன்றாம் அதிகரணத்தில் ''வழிபடுக''—என்ற கட்டளை வேண்டப்படுதற்குக் கூறப்பட்ட இக்காரணம், இரண்டாம் அதிகரணத்தில் '' இணங்குக '' என்ற கட்டளைக்கு நேரே பொருந்துதலும், முதல் அதிகரணத்தில் ''கழுவுக'' என்னும் கட்டளைக்கு உவமையாகக் கூறப்பட்ட பொருள் வழியாகப் பொருந்துதலும் மாட்டேற்று முறையால் அறிய நின்றன ஆதலின், அவற்றை மீள எடுத்துக் கூறாராயினார்.

தோற்றுவாய்

இறைவன் பொருள் தன்மையால் வேறாயினும், கலப்பினால் அவைரோயாதல் எல்லாப் பொருட்கும் பொதுவா யிருக்க,

---

(1) திருக்குறள்—231, (2)376, (3)620, (4)315, (5)1066

அவற்றுள் பலவற்றை விலக்கி, - இவ்விடங்களிலே வழிபடுக—என வரையறுத்துக் கூறுதல் ஏன்'' என்னும் ஐயத்தை எடுத்துக் காட்டால் நீக்குகின்றார்.

வெண்பா—1

அதுஇது என்ற(து) அது அல்லான், கண்டார்க்(கு)
அதுஇது என்றதையும் அல்லான்;—பொதுவதனின்
அத்துவித மாதல் அகண்டமும் தைவமே;
அத்துவிதி அன்பின் தொழு.

இதன் பொருள்

அத்துவிதி—பொருள்களில் இறைவன் அத்துவிதமாய் நிற்றலை உணர்ந்த மாணவனே. அத்துவிதம் ஆதல்—இறைவன் கலப்பினால் ஒன்றாயும், பொருள் தன்மையால் வேறாயும் நிற்றல் எல்லாப் பொருளிலும் உள்ளதே, அதனின் – அதனால், அகண்டமும் தைவமே — எல்லாப் பொருள்களும் அவன் வடிவே, (ஆயினும்) அன்பில் தொழு—எல்லா இடங்களிலும்விட உனக்கு அன்பு செல்லும் இடமாகிய இவ்விடங்களிலே வழிபடுவாயாக,

[முதல் இரண்டு அடிகள், மேற் கூறிப் போந்த அத்து விதத்தை இங்கு எழும் ஐயத்தைப் பெயர்த்துரைத்தற்கு மீள எடுத்துரைத்தனவாம்.]

அவற்றின் பொருள் ; கண்டார்க்கு - இறைவன் உலகத்தோடு தொடர்புற்று நிற்கும் நிலையை உணர்ந்தவர்க்கு, (அவன்) அது இது என்றது (அல்லான்) - 'அவன் இவ்வுலகமே' எனக் கூறும் ஒன்றாதலாகிய அத்தன்மையனும் அல்லனாய், அது (என்றது) அல்லான்—'அவன் அவனே' எனக் கூறும் வேறாதல் தன்மையனும் அல்லனாய், அது இது என்றதும் அல்லான்— 'அவனும் இவ்வுலகமும்' எனக்கூறும் ஒன்றும் வேறுமாம் தன்மையனும் அல்லனாய்' பொது அத்துவிதம் ஆதல்—அம் மூன்று தன்மைக்கும் பொதுவான அத்துவிதமாயே நிற்பன்,

விளக்கம்

''அது இது''—இரண்டனுள் முன்னது 'அகத்திய முனிவன்— என்பது போல இரு பெயர் ஒட்டுப் பண்புத் தொகை. பின்னது, வெள்ளைத் தாமரை என்பது போலப் பண்புந் தொகை.

''அல்லன்'' என்பதை, ''அது இது என்றது'' என்பதனோடும், ''என்றது'' என்பதை ''அது'' என்பதனோடும் கூட்டுக

''அன்பில்'' என்பதில் ''அன்பு'' என்பது அது செல்லும் இடத்தைக் குறித்தலால் ஆகுபெயர்.

ஐயுற்ற மாணாக்கனைத் தெளிவித்தற் பொருட்டு,''தொழு'' என்றாராயினும், 'தொழு'—எனக் கட்டளையாகக் கூறப்பட்டது என்பதே கருத்து.

இதனால் மேற் குறித்த ஐயம் அகற்றப்பட்டது.

தோற்றுவாய்

''ஒன்பதாம் நூற்பாவிற் கூறியவாறு உராத்துணைத் தேர்த்து—என மாயா காரியங்களைக் கழிக்கவே. பதிஞானம் விளங்கி அத்துவித ஞானத்தை நிலை நிறுத்தும் ஆதலால், அதன் பொருட்டுத் திருவேடம் உடையார், சிவாலயத்தில் உள்ள திருவுருவங்கள் ஆகிய இடங்களில் சிவனை வழிபட வேண்டுதல் எதற்கு'' - என்று எழும் ஐயத்தை மற்றோர் எடுத்துக்காட்டால் நீக்குகின்றார்.

வெண்பா - 2

வினையால் அசத்து விளைதலால், ஞானம்
வினைதீரின் அன்றி விளையா; - வினைதீர
ஞானத்தை நாடித் தொழவே அது நிகழும்;
ஆனத்தால் அன்பில் தொழு.

இதன் பொருள்

வினையால் அசத்து விளைதலால்—(மேல், 'புண்ணிய பாவம் பொருந்துமிக் கான்மியமும்'' என்னும் வெண்பாவிற் கூறியபடி) முதற்கண் பிராரத்தம் தலை எடுத்தலாலே மாயா காரியங்கள் தலையெடுத்தலின், வினை தீரின் அன்றி ஞானம் விளையா—முதற்கண் பிராரத்தம் எழாது நின்றாலல்லது மாயா காரியங்கள் அகன்று பதிஞானமும், அது வழியாக அத்துவித ஞானமும்

நிகழும்மாட்டா'' (அதனால்) வினை தீர - பிராரத்தம் எழாது நிற்றற் பொருட்டு, ஞானத்தை நாடித் தொழவே அது நிகழும்— பதிஞானத்தை விளைக்கும் இடங்களை நாடிச் சென்று வழிபடுதல் வேண்டும்; அங்ஙனம் வழிபட்டால்; முன்னர்ப் பதிஞானம் நிகழ, அது வழியாக அத்துவித ஞானம் நிகழ்தலாகிய காரண காரிய நிகழ்ச்சி நிகழும். ஆனத்தால் அன்பில் தொழு—ஆதலால், (மாணவனே!) உனக்கு அன்பை விளைக்கும் இடங்களாகிய அடியவரிடத்தும், ஆலயங்களில் உள்ள திருவுருவங்களிடத்தும் வழிபடுதலைச் செய்வாயாக.

விளக்கம்

''பிராரத்தம் ஒழிதற்கு, ஒன்பதாம் நூற்பாவிற் கூறியபடி அஞ்செழுத்தை விதிப்படி உச்சரித்தலே போதும் ஆகலின், அதன் பொருட்டு வழிபாடு எதற்கு''— என மீட்டும் ஐயுறின், ''அவ்வுச் சரிப்புச் சோர்வின்றி நிகழ்தலும் இவ்வழிபாடு உள்ள பொழுதே யாம் என்பது கருத்து.

''வினை'' என்றது இங்குப் பிராரத்தையே என்பது, பொருள் தொடர்ச்சியால் விளங்கும்.

''ஞானம்''—என்றதும் பதிஞானத்தையே. அதுவும் ஆகு பெயராய், அதனை விளைக்கும் இடங்களைக் குறித்தது.

'ஆனதனால்' என்பது ''ஆனத்தால்' என மருவி நின்றது.

தோற்றுவாய்

மேற்கூறியவாறு, 'அன்பு நிகழும் இடங்களில் வழிபடுதல் எவ்வாற்றானும் ஒழியற்பாலதன்று, என வலியுறுத்தியபின், 'அவ்விடங்களில் ஒன்றாகிய அடியவருள் ஆசிரியராயினார் சிறப் புடையர்' - என்பதைப் புறனடையாக வைத்து வலியுறுத்தி நூலை முடிக்கின்றார்.

வெண்பா - 3

தன்னை யறிவித்துத் தான்தானாச் செய்தானைப்
பின்னை மறத்தல் பிழையலது—முன்னவனே
தானேதா னாச்செய்தும் தைவமென்னும் தைவமே;
மானே தொழுகை வலி.

இதன் பொருள்

தன்னை அறிவித்து—தன்னை அறியுமாறில்லாத உயிருக்குத் தன்னை அறியுமாற்றால் அறிவித்து, தான் தானா செய்தானை—அவ்வுயிர் தானேயாகும் பேற்றினைப் பெறச் செய்த இறைவனை. பின்னை மறத்தல் பிழையலது - அங்ஙனம் செய்தபின் முன்போல மறத்தல் உய்தியுடைக் குற்றம் ஆகாது; (உய்தியில் குற்றமாம்[1] இனி,) முன்னவனே தானா தானே செய்தும்—அங்ஙனம் இறைவன் முற்பட்டு வந்து, எத்துணையும் எளிய உயிர் எத்துணையும் அரியனாகிய தானாம் வண்ணம் செய்தானாயினும், தைவம் என்றும் தைவமே—இறைவனுக்கு அடிமையாகிய உயிர் என்றும் அடிமையே (அதனால்) மான் தொழுகையே வலி—பெரியோனாகிய இறைவனை ஆகிரியனாகக் கண்டு என்றும் வழிபட்டு வாழ்வதே அணைந்தோர்க்கு அந்நிலையில் திரியாது நிற்கும் வலிமையாகும்.

விளக்கம்

இறைவன் உயிருக்குத் தன்னை அறிவித்ததும், அதனைத் தானாகச் செய்ததும் குருவாய் வந்தே யாதலின், ''அறிவித்துச் செய்தானை'' என்றது குருவடிவாய் நிற்கும் இறைவனையே யாகும்.

உயிரைச் சிவன் தானாகச் செய்தலாவது, சார்ந்ததன் வண்ணமாம் இயல்புடைய அதனை அது கருவிகளுட்பட்டு அவற்றின் வண்ணமாய் நின்ற பொழுது அவற்றினின்றும் நீக்கி தன்னைச் சார்வித்துத் தனது எண் குணங்களையும் அது பெற்றிருக்கச் செய்தலாம்.

> ''தென்றிசைக் கோன் தானே வந்து
> கோவாடிக் குற்றேவல் செய்கென் றாலும்
> குணமாகக் கொள்ளோம், எண் குளத்துளோமே''[1]

என்று அருளிச் செய்தமை காண்க.

''பின்னை மறத்தல்'' என்றமையால், முன்பு மறந்தமை பெறப்பட்டது.

---

1. திருமுறை—6. 98 - 10.

''பிழை'' என்றது, 'தீர்வு செய்யப்படும் பிழை' என்றபடி. அலது, 'அன்று' எனக் குறிப்பு வினைமுற்று. அறியாது செய்த குற்றத்திற்குத் தீர்வு செய்யப்படுமல்லது, அறிந்து செய்த குற்றத்திற்குத் தீர்வு செய்யப்படாது ஆதலின், ''பின்னை மறத்தல் பிழையலது'' என்றார்.

இனி,

''எந்நன்றி கொன்றார்க்கும் உய்வுண்டாம். உய்வில்லை,
செய்ந்நன்றி கொன்ற மகற்கு'' [1]

என்றபடி, நன்றி மறத்தல் தீர்வில்லாத ஒரு குற்றமாதல் பற்றிக் கூறியதுமாம்.

''முன்னவனே'' என்னும் ஏகாரம், ஒருவர் வலிசெய்ய வாராது இறைவன் தானே தனது அருள் காரணமாக முன்வந்ததைக் குறித்த பிரி நிலை ஏகாரம்.

''தானே என்னும் ஏகாரம் உயிரினது எளிமை உணர நின்றது.

''தைவமாவது, தேவனது உடைமை'' என்பது மேலே[2] கூறப் பட்டது.

இம் மூன்று வெண்பாக்களாலும் முறையே ''சங்கமம் (அடியார்), இலிங்கம் (திருவுருவம்), குரு - ஆகிய மூன்றிடங்களிலும் வழிபடுதலைச் சிவன் முத்தன் ஒருஞான்றும் ஒழியலாகாது'' - என்பது வலியுறுத்தப்பட்டது.

ஒன்பதாம் நூற்பாவில், ஆசிரியர், 'திருவைந்தெழுத்தை மூன்றெழுத்தாக அறிவினால் கணிக்க'—என்பதை வெளிப்படக் கூறாது, ''விதிப்படி'' எனக் குறிப்பாற் கூறினமையானே, ''பத்தாம் நூற்பாவிற் கூறியபடி ஏகனாகி இறை பணியில் நிற்கும் பொழுதெல்லாம் அது சிகார வகாரங்களாகிய இரண்டெழுத்தாக அவ்வாறு கணிக்கப்படும்'' என்பதையும், இந்நூற்பாவில் கூறியபடி ''அம்மலங் கழுவுதல், அன்பரோடு மருவியிருத்தல், திருவேடத்தையும், திருவுருவங்களையும் அரன் எனக்

1. திருக்குறல்—110.
2. 9-ம் நூற்பா—2 - ம். அதி,

கண்டு வழிபடுதல் முதலியவற்றை நிகழ்த்தும் காலங்களிலும் சிகாரமாகிய ஓரெழுத்தாக அஃது அவ்வாறு கணிக்கப்படும்'' என்பதையும் உய்த்துணர வைத்தார்.

இதனையே புடைநூலாசிரியர், சங்கற்ப நிராகரணத்துள், ''ஞாதுரு ஞான ஞேயம் என்று - இசைய மூன்றாய்ப் பசு, பதி என்று அவற்று - இரண்டாய், இரண்டும் ஒன்றின் ஒன்றாகத் திரண்டாம் பயன் எனும் திருவருள்'' என்றார்[1] ''சிவ சிவ என்கிலர் தீவுனையாளர்'' எனவும், ''நாயோட்டு மந்திரம்'' எனவும் திருமந்திரத்துள் சொல்லப்பட்டன.

நூற்பாவின் தொகைப் பொருள்

அயரா அன்பின் அரன் கழலில் சென்று அழுந்திய சீவன் முத்தன் உடம்பு உள்ளவரையில் தனது அறிவு விழைவு செயல்கள் புறத்தே செல்ல நிற்றலும் தவிர்க்க முடியாதது. ஆதலின், அவை அங்ஙனம் செல்லுங்கால் முன்பெல்லாம் சென்றதுபோல் அல்லாமல், பிராரத்தமாகிய கன்மம் இன்பத் துன்பங்களாய்த் தோன்றும் பொழுது, 'இவை நம்பால் வந்து பொருந்துதல் தாமாக அன்றி, இறைவன் பொருத்துவிக்கவே' என உணர்ந்து அவற்றில் விருப்பு வெறுப்புக் கொள்ளாதொழிந்தும், விருப்பு வெறுப்புக்களை ஒழிதலானே இன்பத்துன்பத்திற்குப் பற்றுக் கோடாகிய பொருள்களில் பற்றும், இகலும் கொள்ளாதொழிந் தும், பொருள்களில் பற்று இகல்களை ஒழிதலானே அவற்றைப் பெறுதல் நீக்குதல் ஆகிய முயற்சியில் 'யான், எனது' என்னும் செருக்கை யொழிதலும் ஆகிய செயல்களில் அறிவைச் செல்ல விடுத்தும்.

அவ்வறிவை அங்ஙனம் செலவிடுத்தலில் சோர்வை உண்டாக்கும் உலகரது தொடர்பை அன்பரோடு இணங்கும் இணக்கத்தால் ஒழித்தற்கு அவரது கூட்டத்தை விழைதலில் விழை வைச் செல்லவிடுத்தும்,

இணங்கப்படும் அன்பரும், பிறரும் ஆகிய திருவேடமுண்ட யாரையும், திருக்கோயில்களில் உள்ள சிவன் உருவங்களையும்

1. சைவ வாதி நிராகரணம்—59 - 61.

'சிவன்' எனவே கண்டு வழிபடுதலில் செயலைச் செலவிடுத்தும் வாழ்வர்.

'வாழ்வர்' என்னாது, 'வாழ்தல் வேண்டும்' எனவும் கட்டளைப்படுத்தவும் படுத்தலாம். ஏன் எனின், இவை சீவன் முத்த நிலையைப் பிறழ விடாது காக்கும் காப்பாகலின்.

உயிர்களின் வாக்கு மனங்கட்கு அகப்படாது நிற்கும் சிவன், 'அவைகட்குத்தான் அகப்படல் வேண்டும்' என்னும் அருள் காரணமாகத் தன் அடியவர்க்குத் தனது திருவேடத்தைக் கொடுத்தலானும், அவர்கள் செய்யும் சிவோகம் பாவனையால் அவர்களைத் தனது பெரு நிறைவினுள்ளே அடக்கி நிற்றலானும் அடியவர் சிவனேயாகின்றனர்.

எல்லாப் பொருளிலும் சிவன் உணர்வே தோன்றப் பெறும் சீவன் முத்தர்க்குச் சிவன் உருவங்களில் அவன் உணர்வும் சிறப்பாக நிகழும் ஆதலின் திருவுருவங்களும் சிவனேயாம்.

எல்லாப் பொருள்களிலும் சிவன் அத்துவிதமாய் நிற்பினும் ஏனையிடங்களில் அவன் விளங்காது நிற்றலால் ஏனையிடத்தில் சிவன் முத்தர்க்கு அன்பு நிகழாது அன்பரிடத்தும், திருவுருவங்களிலும் அன்பு நிகழ்தலால் இவ்விடங்களே வழிபடுதற்கு உரியனவாம்.

திருவேடம் உடையாருள் ஆசிரியர் தனி ஒரு சிறப்பை உடையர். ஏனெனில் அவரே சீவனைச் சிவமாகச் செய்தவர். அதனால் அதனை அறிந்திருந்தும் சிறப்பாகப் போற்றாது விடுதல் உய்தியில் குற்றமாகும்.

சீவன் குருவருளால் சிவனாகிய பொழுதும் அது சிவனுக்கு அடிமையேயாதலின், சீவன் சிவனாந் தன்மையை எய்திய பின்பும் அங்ஙனம் செய்த சிவனைக் குருவாகக் கண்டு வழிபடுதலே பெற்ற பேற்றைப் பேணிக்கொள்ளும் வழியாகும்.

என இந்நான்கு அதிகரணங்களின் பொருளையும் ஒருவாறு தொகுத்துணர்ந்து கொள்ளலாம்.

தற்சிறப்புப் பாயிரம்

முதற்கண் கடவுள் வாழ்த்து, அவையடக்கம் இவற்றையே தற்சிறப்புப் பாயிரமாகக் கூறிய ஆசிரியர், முடிவின்கண் 'இந்நூல் கேட்டற்குரியார் இவர்' என்பதைத் தற்சிறப்புப் பாயிரமாகக் கூறுகின்றார், 'கேட்டற்குரியார் இவர்' என்பதைப் பாயிரத்துட் கூறுதல் வடநூல் மரபாதல் பற்றி.

வெண்பா

சிவம்என்னும் அந்ததர, சிந்தைநேர் நோக்கப்
பவம்இன்றாம் கண்வச சகத்தின்—சிவம்உண்டாம்
ஒன்றும் இரண்டும் மலத்தார்க(கு); இங்(கு) ஒண்குருவால்
இன்றிந்நூல் மும்மை மலர்க்கு

இதன் பொருள்

சிவன் என்னும் அந்த தர—சீவத் தன்மை நீங்கிச் சிவமாம் தன்மையை எய்தி, 'சிவம்' என்றே மதிக்கப்படுகின்ற சித்தாந்த மாணவனே! ஒன்றும் இரண்டும் மலத்தார்க்கு—ஒருமலம் உடைய விஞ்ஞான கலரும், இருமலம் உடைய பிரளாயாகலரும் ஆகிய இவர்க்கு (முறையே) சிந்தை நேர் நோக்க—சிவன் அவரது அறிவினுள் இருந்தவாறே அருள் நோக்கத்தால் நோக்குதலாலும், கண் வாசகத்தின் — (ஒருமுறை தனது இயற்கை வடிவில் தோன்றி) திருக்கண்ணால் நோக்கிச் சிலசொற் சொல்லித் தீண்டுதலாலும், சிவம் உண்டாம்—சிவமாம் தன்மை உண்டாக. பவம் இன்று ஆம்—பிறவி இல்லையாய்விடும். (ஆகவே, அவர்க்கு நூலால் ஆகற்பாலது எதுவும் இல்லை. அதனால்) இன்று இந்நூல்—இன்று என்னால் செய்யப்பட்ட இந்த நூல் மும்மை மலர்க்கு—மும்மலங்களையுடைய சகலர்க்கு இங்கு ஒண் குருவால் (ஆம்)—இவ்வுலகத்தில் அவர் போல மானுட வடிவின னாய் வரும் ஞான குரு வழியால் பயன்தருவதாகும்.

விளக்கம்

அந்தம் — வேதாந்தம், தரம் — அதனின் மேம்பட்டது, சித்தாந்தம்.

சிந்தை, ஆகுபெயர். 'சிந்தையின்கண் நின்று' என ஏழாவதன் உருபும், பயனும் விரிக்க. நேர் நோக்குதல், மாறி நோக்கும் மறைப்பு நோக்கைவிடுத்து, அருள் நோக்காக நோக்குதல்.

கண் வாசகங்களைக் கூறவே, இனம் பற்றி மெய்யால் தீண்டுதலும் தழுவப்பட்டது. "ஒண் குரு" என்றது, 'ஞான குரு' என்றபடி.

'இன்றைய' என்பது, இறுதி குறைந்து, "இன்று" என நின்றது.

"மும்மை"—என்றது 'மூன்று' எனவே பொருள் தந்தது' 'தெரிமாண் தமிழ் மும்மைத் தென்னம் பொருப்பன்—என்பதில் "மும்மை"[1] என்றது போல.

'மலத்தார்க்கு' — என்பது அத்துத் தொகுக்கப்பட்டு, "மலர்க்கு" என வந்தது.

'விஞ்ஞானகலர் பிரளாயாகலர்—இவ்வுலகத்தார் அன்மையின், 'அவர்க்கு நூல் வேண்டா' என இங்கு விலக்க வேண்டா' எனின், இயற்கையாலன்றித் தவ முயற்சியால் விஞ்ஞானகலர் பிரளய கலரோடு ஒப்பவர் இவ்வுலகிலும் உளர் ஆதலின், விலக்கு அவரை நோக்கிற்று என்க.

தவ முதிர்ச்சியால் அத்தன்மையோர் இங்கு உளர் ஆதலை, ஆளுடைய பிள்ளையார் போன்றாராக உணர்க.

இனி இத்தற்சிறப்புப் பாயிரம் போன்றதாகவே, முதற்கண் காட்டிய, "எந்தை சனற்குமான்" என்னும் வெண்பாவையும் கொண்டு, அதனை, "ஆசிரியர் மெய்கண்ட தேரே தம்மைப் பிறர் போல வைத்துக் கூறிய நாந்திச் செய்யுள்" எனக் கூறி, அஃதே பற்றி, முதற்கண் காட்டப்பட்ட, "மலர்தலை யுலகின்" என்னும் செய்யுளும் அவரால் செய்யப்பட்டதே எனக் கூறுவாரும் உளர்,[2]

1. பரிபாடல்; (உருபு இறந்தது.)
2. தமிழ்ச் சிவஞான போதம் முதல் நூலா, வழிநூலா."

அக்கூற்று இவண் முதற்கண் உரைத்ததற் சிறப்புப் பாயிர உரையுட் கூறியவாறு வழிநூல் சார்பு நூல்களின் கூற்றோடு முரணுதலாலும், மாபாடியம் உடையார் அவ்வாறு உரையாமையாலும் அஃதொரு கற்பனையாகவே கருதப்படும் என்க.

சிவஞான போதத் திருநெறியுரை

முற்றிற்று.

